ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

ஆழ்வார்களருளிச்செய்த

நாலாயிர திவ்யப்ரபந்தம்

முதலாயிரம்

பதிப்பாளர்

R. கேசவய்யங்கார்

ஸீனியர் அட்வகேட், ஸுப்ரீம் கோர்ட்.

தேர்மறுஞ் சிட்டர்வாழ் கோட்டியூர் மாமறைத்
தாமநல் லேமவண் டாமரைத் தாட்பரற்
..மெழில் வேதநா லாயிரத் தாமுதல்
..மநன் ருட்படத் தாடபணிந் திட்டனம்.

1951

பப்ளிஷர் :
T. பார்த்தஸாரதி அய்யங்கார்
அட்வகேட், தேவகோட்டை.

5017

விலை ரூ. 2-0-0

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆழ்வார்களருளிச்செய்த
நாலாயிர திவ்யப்ரபந்தம்
முதலாயிரம்

பதிப்பாளர்

R. கேசவய்யங்கார்

ஸீனியர் அட்வகேட், ஸுப்ரீம் கோர்ட்

**தோமறுஞ் சிட்டர்வாழ் கோட்டியூர் மாமறைத்
தாமநல் லேமவண் டாமரைத் தாட்பரற்
காமெழில் வேதநா லாயிரத் தாமுதல்
தாமநன் ருட்படத் தாட்பணிந் திட்டனம்.**

1951

இடைக்குமிடம்:—
T. பார்த்தஸாரதி அய்யங்கார்
அட்வகேட், தேவகோட்டை.

ஸ்ரீ:

விண்ணப்பம்

தமிழ்மறையாகிய "நாலாயிர திவ்ய ப்ரபந்த" த்தை பூர்வாசார்யர்களின் உரைக்கிணங்க அச்சிடக்கருதி பாடம் முதலியன பரிசோதித்துத்தர வேண்டுமென்று ஸ்ரீ. ஜெகந்நாத அய்யங்காரும் திரு. பார்த்தஸாரதி அய்யங்காரும் என்னைக் கேட்டுக் கொண்டு அதுபோல் இயன்ற அளவில் பரிசோதிக்கப்பெற்று "முதலாயிரம்" முதற்பாகமாக அச்சாகி வெளியிடப் பெற்றிருக்கிறது. மிகுந்துள்ள மூன்று பாகங்களும் முன்னுரைகளுடன் சீக்கிரம் வெளிவரும். நாலாயிர திவ்ய ப்ரபந்தத்தின் மஹிமையை "அருளிச்செயல் மான்மியம்" என்னும் முன்னுரையில் விளக்கியிருக்கிறேன். இந்த சடகோபர் பணியை இறைவன் தலைக்கட்டி உகந்தருள்வாராக.

வண்ண மாடங்கள் சூழ் திருக்கோட்டியூரில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஸௌம்ய நாராயணப் பெருமாள் பாதகமலங்களில் விக்ருதி மாசி மகத்திருநாளில் (21–2–1951) இந்நூல் ஸமர்ப்பிக்கப் பெற்றது.

கேசவய்யங்கார்

ஸ்ரீ:

இவ்வெளியீடுகளுக்குப் பொருளுதவி செய்துவரும் அன்பர்கள்:

1. ஸ்ரீ R. கோபாலஸ்வாமி அய்யங்கார்,
அட்வகேட்,
14, *வைத்யராமய்யர் தெரு,*
தியாகராயநகர், மதராஸ்.

2. ஸ்ரீ A. ரங்கஸ்வாமி அய்யங்கார், *அட்வகேட்,*
இராமநாதபுரம்.

3. ஸ்ரீ S. ஸ்ரீநிவாஸய்யங்கார், *அட்வகேட்,*
தேவகோட்டை.

4. ஸ்ரீ மு. க. சு. கந்தசாமி பிள்ளை, *பாங்கர் &*
மளிகை வியாபாரம், காரைக்குடி.

ஸ்ரீ:

உள்ளுறை

பக்கம்

அருளிச்செயல் மான்மியம் ... 1–46
(1) வாழ்த்து ... 1
(2) தமிழ்வேதம் ... 2
(3) அருளிச்செயல் ... 3
(4) வேத விளக்கம் ... 4
(5) திவ்ய.ப்ரபந்தம் ... 4
(6) வேதம் : வாய்மொழி : திருவாய்மொழி ... 5
(7) வேதம என்றும் உள்ளது ... 6
(8) உபய வேதாந்தம் ... 6
(9) வேதவதாரம் இராமாயணம் : திருவாய்மொழி ... 9
(10) வான்மீகி : ஆழ்வார்கள் ... 10
(11) சடகோபர் தலைமை ... 11
(12) வேதம் : மறை ... 11
(13) வியாஸர் : சடகோபர் ... 13
(14) இறைவன் : இறைமை ... 13
(15) உலகம் ... 14
(16) படைப்பு ... 15
(17) உலக நடை ... 15
(18) உலகனைத்தும் கோயில் ... 16
(19) காவியம் ... 17
(20) இறைவன் அழகு இறைமொழி அழகு ... 19
(21) படைப்பு : சிற்பம் ... 20
(22) கவி : கோயில் ... 21
(23) இறைவன் : அடியார் : முதன்மை : தலைமை 22
(24) இராமாயணம் : அடியார் பெருமை ... 26

(25) அருளிச்செயல் : ப்ரணவம்: திருவரங்கம் ... 29
(26) ஆழ்வார் : பொருள் : ஆழ்வார் ... 31
(27) செய்யுள் : படைப்பும், கோவிலும் ... 32
(28) பகவத் விஷயம் ... 33
(29) எம்மொழிக்கும் இறைவனே உட்பொருள் 34
(30) அகத்தியர் : பாணினி : காத்யாயநர் வடமொழி : தென்மொழி ... 35
(31) அருளிச்செயல் : திவ்யப்ரபந்தம் நாலாயிரம் ... 37
(32) பெரியாரைத் துணைக்கோடல் ... 40
(33) மதுரகவி ... 42
(34) முதலாயிரம் ... 42
(35) பெரியாழ்வார் ஆண்டாள் ... 44
(36) முனி நிலை ... 46

போதுத் தனியன்கள் ... 1
முதலாயிரத் தனியன்கள் ... 3
பெரியாழ்வார் திருமொழி ... 1
திருப்பாவை ... 92
நாச்சியார் திருமொழி ...100
பெருமாள் திருமொழி ...125
திருச்சந்த விருத்தம் ...148
திருமாலை ...165
திருப்பள்ளி எழுச்சி ...171
அமலனாதிபிரான் ...174
கண்ணிநுண் சிறுத்தாம்பு ...176
பாசுர எண் விளக்கம் ...178
முதலாயிர அகராதி

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அருளிச்செயல் மான்மியம்

வாழ்த்து

மகிமுதல் மலர்ந்த மேனி மறைமுதற் கிளர்ந்த செவ்வாய்
சகமுத லளந்த வள்ளற் சதிரடி சுடரும் செவ்வி
மிகமுதல் முடிபொ லிந்து மிளிர்தமிழ் மறையு மிழ்ந்த
புகழ்முதற் பகவ னின்பப் புனிதநா வீறு போற்றி.

மனணகத் தகில் மாகு மலர்கதிர்ச் சுடரு டம்பாய்த்
தனதருள் நிறத்த வண்ணத் தண்ணளிக் கண்ண னோக்கித்
தனையவன் வனையு மாதித் தனிநிலைத் தகவு தாங்கும்
தனதிருஞ் சரண வண்ணத் தமிழ்மறை யமுது தந்தான்.

விரசையாய் விமலை யாகி விரிதுறைச் சரயு வாகிப்
புரிதமிழ்ப் புனித நீத்தப் புண்ணியப் பொன்னி யாகி
உரியதன் படைய கப்பை ருடையதன் னிடைய ரங்கன்
விரியிறைச் சுடர டிச்சீர் விரிமறை யிறைமை யோர்வாம்.

நான்முக னாவி னாறும் நான்மறைக் கோயி னாதன்
தான்முக மறைந்து தன்னற் கான்மறைக் குயிலின் கீத
வான்மிக பகவன் தானாம் வாகினும் மாற னாயே
தான்மிகு தகவி னோக்கத் தமிழ்மறைத் திருவி ரித்தான்.

ஆளுமா மறையி னாத வாயிர நாவின் தோற்றம்
நீளுமா யிரப ணாங்க ணீட்டுமா மணிக்க ரங்கள்
நாளுமே யோச்சு சேட னாதனா யிரமி சைத்துத்
தாளமேழ் வழங்கித் தந்த தமிழ்மறைச் சோதி வாழி.

2

தமிழ் வேதம்

"மாலுகந்த ஆசிரியர்"[1] என்னும் பெருந்தகையாளர்கள், "காயம் கழித்து அவன் தாளிணைக் கீழ்ப்புகும் காதலர்"[2] களாய், "நீர்நும தென்றிவை வேர்முதல் மாய்த்து"[3]க், "கூட்டரிய திருவடிக்கட் கூட்டினை நான் கண்டேனே",[4] "அத்த! நின் அடிமை யல்லால் யாதுமொன் றறிகி லேனே",[5] "ஆனபன தடியல்லதொன் றறியே னடியேனே",[6] "உறையும் இறை யடி யல்லதொன் றிறையும் அறியேனே",[7] என்ற திருக்காட்சி கண்ட நல்லுணர்வின் மூர்த்திகளாய், "நிலைபேர்க்கலாகாமை நிச்சித்திருந்தேனே"[8] என்ற திண்ணத்தில் வேரூன்றித், திருவடியோடு திருவடியாம் பாதுகமாய்ப் பிரித்தறிய வொண்ணா நெடுமாற்குப் பேரடிமை அண்ணல்களாய், அன்னவனால் மயர்வற மதிநலம் அருளப்பெற்று, வேதங்கள் மீண்ட நிலையெல்லாம் மெய்யுணர்ந்து, "அருள் கொண்டாடும் அடியவர் இன்புற"[9]ற் பொருட்டும், "அப்பொழுதைக்கப்பொழுதென் ஆராவமுதமே"[10] என்றும், "ஓதி ஓதி உணருந்தொறும் உணர்ச்சி உதவும் வேதம்"[11] என்றும் பாடப்பெற்ற புகழ்மலிந்த வேதப் பொருளை, "உணர்ந்து உணர்ந்து உணரிலும் இறைநிலை உணர்வரிது உயிர்காள்!"[12] "திண்ணம் நாம் அறியச்சொன்னோம்"[13] என்று அனைவருமே இறைநிலை தெளிந்து உணர்ந்து ஒழுகி உய்யும் பொருட்டும், ஆர்வத்தால் பாடியருளிய தமிழ்வேதம் "திவ்ய ப்ரபந்தம்" என்னப்பெறும். அதனுள் தலைமைதாங்கி நிற்பது சடகோபர் 'திருவாய்மொழி' ஆயிரமாம். சடகோபரை அவயவியாகவும் மற்றுமுள்ள ஆழ்வார்களை அவயவங்களாகவும் கூறுவது மரபு. ஆகவே சடகோபரைச் சொல்லுமிடமெல்லாம் மற்றுமுள்ள ஆழ்வார்களையும் சொல்லியதாகும்.

---

[1] தேசிக. அமிருதா. 27; [2] திருவாய், 3. 9. 8; [3] திருவாய். 1. 2. 3; [4] திருவாய். 4. 9. 9; [5] திருக்குறுந்தா. 10; [6] பெரி. திரு. 7. 9. 4; [7] பெரி. திரு. 7. 9. 3; [8] திருவாய். 10. 4. 4; [9] கண்ணி. 8; [10] திருவாய். 2. 5. 4; [11] இராமாவ. ஆர. காப்பு; [12] திருவாய். 1. 3. 6; [13] திருவாய். 10. 2. 5;

அருளிச்செயல்

திருமாலால் மதிநலம் அருளப்பெற்றுப் பாடியதாலும், திருமாலின் திருவருளைப் பாடியதாலும், உலகத்தார் நல்வாழ்ச்சியில் நிலைத்து இறைவன் திறத்தும், இறைவன் தனக்கும் உயிர் நிலையாகிய அவனது அடியார் திறத்தும், மீளாத பேரடிமைக்கு அன்புபெறும் காரணமாய், "வண்தமிழ் நூற்க நோற்றேன் அடியார்க்கு இன்பமாரியே"[14] என்று செவிக்கினிய செஞ்சொற்களால் பாடியருளியதாலும், இந்த திவ்யப்ரபந்தம் "அருளிச்செயல்" என்னும் பெயர்பெற்றது. "வளங்கொள்மந்திரம் அருளிச்செய்தவாறு"[15] என்ற அருள்மாரிபிரயோகம் கண்டு, அருளிச்செயல் என்றது செந்தமிழ்கொள் மறைமந்திரம் என்ற உண்மை தெளியலாம். அதிக்ருதாதிகாரம், ஸ்வரம், வர்ணம், முதலிய நியதிகளால் வரையறுக்கப்பெற்றுள்ள வடமொழி மறைமந்திரம் போலன்றி, ஆர்வம் ஒன்றே அதிகாரமாக "எங்ஙனே சொல்லினும் இன்பம் பயக்குமே"[16] என்ற பேரருள்மயமாயும் பேரின்பக் கடலாயும் தமிழ்மறை திகழ்கின்றது. "அருள் கொண்டாடும் அடியவரின்புற, அருளினனவ்வருமறையின் பொருள், அருள்கொண்டாயிரம் இன்தமிழ்ப்பாடினன், அருள் கண்டீரிவ்வுலகினில் மிக்கதே"[17] என்றது மதுரகவியின் அருள் முழக்கம். "செந்தமிழால் அருள்செய்த,"(1)[17] "அருளிச்செயலைக் கேட்டு ப்ரவர்த்திப்பித்தல்,"(2)[17] என்று வேதாந்த தேசிகரும், "அருளிச்செயல் வாழி,"(3)[17] "அருளிச்செயலேற்றம்,"(4)[17] என்று மணவாளமாமுனிகளும் திவ்யப்ரபந்தத்தை அருளிச்செயல் என்றே போற்றிப் பேணியுள்ளார்கள். அருள்மிக்கது கண்டு

---

[14] திருவாய். 4. 5. 10; [15] பெரி. திரு. 5. 8. 9; [16] திருவாய், 7. 9. 11; [17] கண்ணி. 8; (1)[17] தேசிக, ப்ரபந்த. 18; (2)[17] ரஹஸ்யத்ரய. 17; (3)[17] உபதேச. 3; (4)[17] உபதேச. 34;

உலகத்தார் ஆடி இன்புறுமாறு தாம் தவம் செய்து தமிழ் வேதம் கண்டமை காட்டிய தமிழ்த்தலைவர்களாய்க் "கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம் தொண்டீர்! எல்லீரும் வாரீர்......கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல் இசை பாடி எங்கும் இடம் கொண்டனவே"[18] என்று தாம் காட்ட உலகு இன்புறக் கண்டு தாம் இன்புற்ற செந்தண்மை அண்ணல்களின் செயல் ஆதலால் இது அருளிச்செயல் என்று தனிச் சிறப்புப்பெற்று ஓங்கியது.

வேத விளக்கம்

மதிநலம் பொலிந்த அருளண்ணலார்கள் இறைநிலைமெய்ம்மையை உள்ளவாறு கண்டு கண்டவாறு விண்ட பசுந்தமிழாநந்தப் பாக்களாதலால் தெளியாத மறைநிலங்கள் இவற்றால் ஐயமறத் தெளிவாயின என்று இவற்றின் பேருதவியை மூதறிஞர்கள் போற்றியுள்ளார்கள். "தோன்று உபநிடதப்பொருள் தோன்றலுற்றார் தமக்கும் சான்றும் இவை யென்றபோது மற்றென்"[19] என்று கம்பரும் "செய்யதமிழ் மாலைகள்நாம் தெளிய ஓதித், தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே" (1)[19] என்றும், "மாசில்மனம் தெளிமுனிவர் வகுத்த வெல்லாம், மாலுகந்த ஆசிரியர் வார்த்தைக் கொவ்வா, வாசிஅறிந் திவைஉரைத்தோம்"[20] என்றும், வேதாந்ததேசிகரும் தெளிவித்தார்கள்.

திவ்யப்ரபந்தம்

இவ்வருளிச்செயல் வேதமாயும் வேதவிளக்காயும் தண்டமிழ்த்துறைகள் தாங்கிநிற்கும் பேரிலக்கியக் கோயிலாயும் விளங்குதலால் "திவ்யப்ரபந்தம்" எனப் பெறும். 'திவ்யம்' என்றதால் வேதம் என்னும் கருத்தும், 'ப்ரபந்தம்' என்றதால் பேரிலக்கியம் என்னும் கருத்தும் உணர்த்தப்பெறும். "ஆரணத்தின்

---

18 திருவாய். 5. 2. 2; 19 சடகோப. 6; (1) 19 தேசிக. அதிகா. 1; 20 தேசிக. அமிருதாஸ். 27

முழ்மைத் தமிழை ஈன்றான் குருகைப்பிரான்" [21] என்றும், "இழைத்தாரொருவருமில்லாமறைகளை இன்தமிழாற் குழைத்தார்" [22] என்றும், "தென்றலைத் தோன்றும் உபநிடதம்" [23] என்றும் சடகோபரந்தாதியிலும், "என்று முள தென்தமிழியம்பி இசைகொண்டான்" [24] என்று இராமாவதாரத்திலும், கவிச்சக்ரவர்த்தி இசைத்தார். "ஆயிரம் கிளைகளையுடைய தமிழ் வேதஸம்ஹிதையைக் கண்ணன்கா தல்தத்துவமெனத்தோன்றிய இருடி (சடகோபர்) கண்டார்" [25] என்று பட்டர் ஓதினர். "மகிழ்மாலைத்திருமேனியன் கண்டதோர் ஸம்ஹிதை," [26] என்றும் "உயிர்களுய்ய அகத்தியனார்மொழி ஆரணத்தை விரித்தவர்" [27] என்றும் வேதாந்ததேசிகர் விரித்தார். இங்கு 'ஸம்ஹிதை' என்று சந்தியைச் சொல்லியவாறு. செய்யுளாதலின் சந்தியே இதன் வடிவம். சந்திவடிவத்திலும் பந்திவடிவத்திலும் அமைந்துள்ளதால் அவ்வமைப்பே அதன் வடிவம். "சந்தியும்", "பந்தியும்" [28] என்று கம்பரும், "ஸம்ஹிதா", "பங்க்தய: பங்க்திஸங்க்யா:" [29] என்று வேதாந்த தேசிகரும் இவ்வமைப்பை விளக்கினார்கள். "நாவலரும் தென்வடமொழிகற்பொருள்" [30] என்று பிள்ளையந்தாதி இருமறையின் ஒருமையைப் போற்றிற்று. "ஆழ்வார்கள் வாழி அருளிச் செயல்வாழி —ஏழ்பாரும்— உய்ய அவர்கள் உரைத்தவைகள் வாழி, செய்யமறை தன்னுடனே சேர்ந்து" [31] என்று மறைபுரந்த மணவாளமாமுனிகள். இருமறைகளின் சேர்த்தி எழிலில் ஈடுபட்டு அச்சேர்த்திக்கு வாழி ஓதினர்.

வேதம்: வாய் மொழி: திருவாய்மொழி

வேதம் என்ற வடமொழிக்கு வாய்மொழி என்றது தமிழாகும். வேதம் எனினும் திருவாய்மொழி எனினும் ஒன்றேயாம்

[21] சடகோப. 6; [22] சடகோப. 50; [23] சடகோப. 63; [24] இராமாவ. ஆர. அக. 479
[25] ஸ்ரீரங்க. 6. (தமிழ் செய்தது) [26] பாதுகா. 456; (தமிழ் செய்தது) [27] தாத்பர்யரத். 6; (தமிழ் செய்தது); [28] சடகோப. 35; [29] தாத்பர்யரத். 4. 7; பாதுகா. 456; [30] பிள்ளை. 17; [31] உபதேச. 3;

"வேதமே நல்லார்திரு." [32] என்று வேதம்தானே ஓதிற்று. ஆதலின் நல்லார் திருவாகிய வாய்மொழியே திருவாய்மொழி என்னும் பெயர் பெற்றது. 'இவர் முன்னடி தோற்றாதே மடலூரச் செய்தேயும் ப்ரபந்தமானது எழுத்தும் சொல்லும் பொருளும் அடியும் தொடையும் பாவும் இசையும் தாளமும் அந்தாதியும் சேரவிழுந்தபடி" [33] என்று பகவத்ப்ரஸாதமடியாகப் பிறந்த இந்த திவ்யப்ரபந்தத்தில் இலக்கணங்கள் தாமே சேரவிழுந்த சிறப்பை நம்பிள்ளை விளக்கினர். வேதநல்வாயராகிய சடகோபர் வாய்கொண்டு, மறை முதற்கிளந்த சோதிவாயனாகிய இறைவன் தானே உலகுய்யப் பாடியருளிய திருவாயிர வாய்மொழியே திருவாய்மொழியாம்.

வேதம் என்றும் உள்ளது

வேதத்தை ஆக்குவாரில்லை. அனைவரும் வேதத்தை நோக்குவாரே ஆவார். நோக்கிய வேதத்தை உரைப்பாரே ஆவார். வேதம் என்றுமே உள்ளது, அதை எவரும் ஆக்கியதில்லை என்ற உண்மையை உடையவர் ஸ்ரீபாஷ்யம் (தேவதாதிகரணம்) வேதாந்ததேசிகர் ஸேச்வரமீமாம்ஸை (சப்தநித்யதாதிகரணம்) முதலியவைகளில் கண்டுகொள்க.

உபய வேதாந்தம்

வடமொழி மறையும் தமிழ் மறையும் வேதம் ஆதலாலும் என்றும் ஒன்றியே ஒன்றினுக்கொன்று கைசெய்தலாலும் கண் இரண்டு காட்சி ஒன்று என்றபடி அவை இரண்டும் ஒரு பரம் பொருளையே காணும். அவை இரண்டின் நோக்கும் பொருளும் ஒன்றே. 'பாரதத்தைப் பணித்தானும் நின்றவார்த்தைக் குருகைப்பிரானும் கண்டானம்மறைப்பொருளே" [34] என்று சடகோபரந்தாதியிலும், "தென்சொற் கடந்தான் வடசொற்கலைக்

---

[32] வேதம் (தமிழ் செய்தது); [33] ஈடு. 5. 3. 11; [34] சடகோப. 41;

கெல்லை தேர்ந்தான்" [35] என்று இராமாவதாரத்திலும் இருமொழிப் பெருஞ்செல்வராகிய கவிச்சக்ரவர்த்தி கண்ட இருமறையின் ஒருமைக்காட்சி. திருவாய்மொழித் தேவராகிய சடகோபர் யாப்பை (ஸம்ஹிதையை) "இருமாமரபும் செவ்வியான் செய்த செய்யுள்" [36] என்று சிறப்பித்தார். இருமறை மரபே இருமாமரபு ஆம். ஆதலின் இருமறையும் தொன்றுதொட்டே ஒன்றிய தோர் உபயவேதாந்தம் என்று ஓதி உணரப்பெற்று வருகின்றது. "வருத்தும் புறவிருள் மாற்ற எம் பொய்கைப்பிரான் மறையின், குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி ஒன்றத், திரித்தன் றெரித்த திருவிளக்கு" [37] என்றும் "இறைவனைக்காணும் இதயத்து இருள்கெட ஞானமென்னும், நிறைவிளக் கேற்றிய பூதத்திருவடி" [38] என்றும், தேஹாத்ம மயக்கத்தைப் பொய்கையாரும், ஸ்வதந்த்ராத்ம மயக்கத்தைப் பூதத்தாரும், உபயவேதாந்தத்திருவிளக்கேற்றி மாற்றிய வாறே, "மன்னிய பேரிருள் மாண்டபின் கோவலுள் மாமலராள், தன்னொடு மாயனைக் கண்டமை காட்டும் தமிழ்த்தலைவர்" [39] (பேயாழ்வார்) என்று ஓதிய அமுதனார், தமிழ்த்தலைவராகிய முதலாழ்வார்கள் உபயவேதாந்தத்துக்கு முதலாசிரியர்கள் என்பதை விளக்கினார். மற்றுமுள்ள ஆழ்வார்களும் இருமறையின் ஒருபொருண்மையைக் கண்டு காட்டியவாற்றைச் "சீரிய நான்மறைச் செம்பொருள் செந்தமிழாலளித்த, பாரியலும் புகழ்ப் "பாண்பெருமாள்" [40] என்றும், "செந்தமிழிற் பெய்யும் மறைத் தமிழ் மாலையும் பேராத சீரரங்கத்தய்யன் கழற்கணியும் பரன்" [41] (தொண்டரடிப்பொடியாழ்வார்) என்றும், "குறையல்கலைப் பெருமான் (திருமங்கையாழ்வார்) ஒலிமிக்க பாடல்" [42] என்றும் தென்குருகைப்பிரான் பாட்டென்னும் வேதப்பசுந்தமிழ்" [43] என்றும் போற்றிய அமுதனார் திருமொழியால் உபயவேதாந்த

---

[35] அயோத்தி நகர் நீ. 140; [36] சடகோப. 9; [37] இராமாநுச. 8; [38] ஷை 9; [39] ஷை 10; [40] ஷை 11; [41] ஷை 13; [42] ஷை 88;

ஒருமை நன்கு காணலாகும். "இருக்கலந்த வேதநீதி யாகி நின்ற நின்மலா!" [44] "இருக்குவாய் முனிக்கணங்க ளேத்த யானு மேத்தினேன்" [45] "விதையாக—நற்றமிழை வித்தி என்னுள்ளத்தை நீவிளைத்தாய், கற்ற மொழியாகிக் கலந்து" [46] என்று மழிசை வந்த சோதியும், "தென்னாடும் வடநாடும் தொழநின்ற திருவரங்கத் திருப்பதியின்மேல் மெய்ந்நாவன் மெய்யடியான் விட்டுசித்தன் விரித்ததமிழ்," [47] "நால்வேதக் கடலமுதை மேலிருங்கற்பகத்தை வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கை விட்டுசித்தன் விரித்தன" [48] "இருக்கெசுச் சாமவேத நாண்மலர் கொண்டுன பாதம் நண்ணுநாளவை தத்துறுமாகில் அன்றெனக்கவை பட்டினி நாளே," [49] "தமிழ்மாலை தங்கிய நாவுடையார்" [50] என்று பெரியாழ்வாரும், "ஆயனேற்றை, அமரர்கள்தம் தலைவனை அந்தமிழினின்பப், பாவினை அவ்வட மொழியைப் பற்றற்றார்கள், பயிலரங்கத் தரவணையிற் பள்ளி கொள்ளும் கோவினை" [51] என்று குலசேகரப்பெருமாளும், "செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி", [52] "செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர்" [53] "மன்னுமறை நான்கு மானானைப், புல்லாணித் தென்னன் தமிழை வடமொழியை" [54] என்று திருமங்கை மன்னனும் இருமறையின் ஒருமை கண்டமை கண்கூடாகும்.

திருவாய்மொழி என்றுமுள்ள தென்பதையும், அதைத் தாம் கண்டார் என்பதையும் சடகோபர் தாமே "முந்தைஆயிரம்," [55] "தோற்றங்களாயிரம்," [57] என்று காட்டினார். "முந்தை ஆயிரம்" என்பதற்குப் "பழையதான வேதார்த்தத்தை அருளிச்செய்கையாலே, ஸர்வேச்வரன் இதர ஸஜாதீயனாய் அவதரித்தாப்போலே வேதமும் தமிழாய் வந்து இவர்பக்கலிலே அவத

[44] ஷை 29; [44] திருச்சந்த. 103; [45] ஷை 109; [46] நான். 81; [47] பெரியாழ். 4. 9. 11; [48] ஷை 4. 3. 11; [49] ஷை 5. 1. 6; [50] ஷை 4. 7. 11; [51] பெரு. திரு. 1. 4; [52] திருநெடு. 4; [53] பெரிய. திரு. 7. 8. 7; [54] பெரிய திரு மடல். 72; [55] திருவாய். 6. 5. 11 [56] ஷை 6. 8. 11; [57] ஷை. 6. 5. 11;

ரித்தபடி"[58] என்றும், "தோற்றங்களாயிரம்" என்றதற்கு, "பகவதவதாரம் போலே ஆவிர்ப்பவித்தன. தோற்றம்: ஆவிர்ப்பாவம். மந்திரங்களை ரிஷிகள் காணுமாபோலே 'சொல்பணிசெயாயிரம்' என்று 'ஆழ்வாருடைய வாக்கிலே புக்கு அங்கிட்டுப் பிறந்து நாம் சுத்தராய் அடிமை செய்யவேணும்' என்று அச்சொற்கள் தாம் 'என்னைக்கொள், என்னைக்கொள்,' என்று வந்தடிமை செய்கிறபடி."[59] என்றும் நம்பிள்ளை விளக்கினார்.

ஆதியாகிய அடி (தத்த்வப்ரதாந) வேதம் வான்மீகி வாயிலாய்த்தோன்றி அடைக்கல (உபாயப்ரதாந) வேதமானாற்போல் சடகோபர் வாயிலாய்த் தோன்றி அடியார் (புருஷார்த்தப்ரதாந) வேதமாகியது. இதை வேதாவதார ரஹஸ்யம் என்பர்.

வேதாவதாரம்

இராமாயணம்: திருவாய்மொழி

நான்முகக்கடவுளால் அருளப்பெற்றவர் வான்மீகி. திருமாலால் அருளப்பெற்றவர் சடகோபர். "மயர்வற மதிநலம் அருளினன்"[60] என்றும், "திருமாலால் அருளப்பட்ட சடகோபன்"[61] என்றும், "அருள்சூடி"[62] "முந்தையாயிரம்,"[63] "தோற்றங்களாயிரம்,"[64] என்ற தமிழாரணத்தைக் கண்டவர் சடகோபர் என்றதை அவர் திருவாய்மொழி காட்டிற்று. "தூய்யதாகவும், வேதங்களை ஒத்ததாகவும் உள்ளது"[65] என்று இராமாயணம் ஓதியவாறே, "தூயஆயிரம்"[66] "பொய்யில் பாடல்"[67] "முந்தைஆயிரம்"[68] என்று திருவாய்மொழி ஓதியது. "வால்மீகிః பகவாந் ரிஷிః"[69] என்று அம்மறை (இராமாயணம்) பாடியது

58 ஈடு 6. 5. 11 ;
59 ,, 6. 8. 11 ;
60 திருவாய். 1. 1. 1 ;
61 ,, 8. 8. 11 ;
62 ,, 7. 2. 11;
63 திருவாய் 6. 5. 11 ;
64 ,, 6. 8. 11;
65 இராமாய. பால. 1.9.8; (தமிழ் செய்தது)
66 திருவாய். 6. 4. 11 ;
67 திருவாய் 4. 3. 11 ;
68 ,, 6. 5. 11;
69 இராமாய. பால. 3. 37. 70;

போல், "மாலே யேறி மாலருளால் மன்னு குருகூர்ச்சடகோபன் பாலேய்தமிழரிசைகாரர் பத்தர் பரவும் ஆயிரம்," [70] "ஆதியாம் சோதிக்கே ஆராதகார்தல் குருகூர்ச் சடகோபன் ஓராயிரம்," [71] என்று இம்மறை (திருவாய்மொழி) பாடியது. "ஓதினும் பாடினும் இன்பம் பயக்கும்" [72] என்ற அம்மறைபோல், "எங்ஙனே சொல்லினும் இன்பம் பயக்குமே" [73] என்றது இம்மறை. "தேனேறு மலர்த்துளவம் திகழ் பாதன் செழும்பறவை, தானேறித்திரிவான் தன் தாளிணையென் தலைமேலே" [74] என்றும், "தாள்களை எனக்கே தலைத்தலைச் சிறப்பத்தந்த பேருதவி" [75] என்றும், சடகோபரும் சடகோடர் மறையும் தலைத்தலைச் சிறப்ப ஓங்கி விளங்காநின்றமையைத் திருவாய்மொழி விளக்காநின்றது. 'பலரடியார் முன்பருளிய' என்கிறபடியே — ஸ்ரீவால்மீகி பகவாந், முதலாழ்வார்கள் தொடக்கமானூர் உண்டாயிருக்க என்பக்கலிலே விசேஷகடாக்ஷம் பண்ணி மிகச் சிறக்கும்படி தந்த பூர்ணமாகத்தந்த என்கை." [76] என்ற நம்பிள்ளைஈடு இத்தனிச்சிறப்பை விளக்கிற்று.

வான்மீகி : ஆழ்வார்கள்

வேதம் இராமாயணம் திருவாய்மொழி என்ற மும்மறைகளும் ஒன்றித்திகழும் உண்மையும், வான்மீகியும் ஆழ்வார்களும் வேதவிளக்கேற்றிய பகவர்களாகிய ஒருதிருக்கூட்டத்தார் என்ற தன்மையும் இதனுல் காட்டப்பெற்றது. இராமாயணம் கொண்டு திவ்யப்ரபந்தப் பொருளைப் பெரியார்கள் விளக்கியிருத்தல் அவற்றின் ஒருபொருண்மைக்குத் தக்க சான்றாகும்.

---

[70] திருவாய். 7. 9. 11;
[71] ,, 2. 1. 11;
[72] இராமாயா, பால. 4. 8; (தமிழ்செய்தது)
[73] திருவாய். 7. 9. 11;
[74] திருவாய். 10. 6. 5;
[75] ,, 8. 1. 10;
[76] ஈடு. 8. 1. 10;

சடகோபர் தலைமை

பரஞ்சுடரைச் "சுடர்மிகு சுருதியுள் உளன்" [77] என்று உபநிடதச்சுடர் ஒன்றாலேயே உணர்த்தப்பெறும் பரஞ்சோதி என்றும், அச்சோதியை "வேதமயன்" [78] "வேதநீரன்" [79] "மிக்கார் வேதவிமலர் விழுங்கும் என் அக்காரக்கனி" [80] "வேதியர் முழுவேதத்தமுதம்," [81] "மறையாய நால்வேதத் துள்நின்ற மலர்ச்சுடரே" [82] என்று பரதத்துவத்தைக் கண்டு காட்டி உலகுக்கு வழங்கிப் பரதத்துவமாகிய திருவடிக்குப் பாதுகமாகிய தாம் நிரூபகமாயும், "குன்றமெடுத்த பிரானடியாரோடும் ஒன்றி நின்ற" [83] மையே தமக்கு நிரூபகமாயும் விளங்கும் செந்தமிழ்க் கழிபெருந்தெய்வமே திருவாய்மொழித்தேவர் என்னும் குருகூர்ச்சடகோபர் என்பார். இறைவன் தனது தாள்களை இவர்க்கே தலைத்தலைச்சிறப்பத்தந்தமையால் இவரே வேதத்தைத் தலைத் தலைச்சிறப்பக் கண்டு நல்கியது தானே பெறப்படும்.

வேதம்: மறை

இவ்வாறு கண்இரண்டு காட்சி ஒன்று, செவிஇரண்டு கேள்வி ஒன்று, கை இரண்டு அஞ்சலிஒன்று, என்று ஒன்றிச்சுடரும் வடமொழிமறையும் தமிழ்மறையும் வேதமாகும். இறைவன் கருத்தை மறைத்துணர்த்தும் என்றுமுள்ள எழுதாமொழித்திரள் வேதம் என்னப்பெறும். மறைத்தலால் மறை என்றும் உணர்த்துதலால் வேதம் என்றும் பெயர் பெற்றது. ஆப்புண்டு மருளும் உயிர்களின் சிறுகருத்து இறைவனுடைய பெருங்கருத்தோடு கலசாது இறைவனுடைய இனிய பெருங்கருத்தின் தூய்மையை மறைத்துக் காக்கும் இயல்புடையதே வேதம். "பத்துடையடியவர்க்கெளியவன், பிறர்களுக்கரியவித்தகன்" [83 (1)] என்றது

---

[77] திருவாய். 1. 1. 7;
[78] ,, 2. 7. 2;
[79] ,, 1. 8. 0;
[80] திருவாய். 2. 9. 8;
[81] ,, 3. 3. 5;
[82] ,, 3. 1. 10
[83] திருவாய். 7. 4. 11;
[83 (1)] ,, 1. 3. 1;

மறைப் பொருளாகிய இறைவனுக்குப்போல் இறைவன் மொழியாகிய மறைக்கும் ஒத்த இலக்கணமாகும். அப்பொருளும் அம்மொழியும் ஒக்கவே தம்மை மறைத்தும் கொள்கின்றன, காட்டியும் கொடுக்கின்றன. மறைவில் நிகழ்வது விளையாட்டு, காட்சியில் நிகழ்வது அருள். மறைகண்டார் மறைப்பொருள் கண்டாரே ஆவார். மறைப்பொருள் கண்டார் மறைகண்டாரே ஆவார். பொருளும் சொல்லும் ஒன்றியே விளங்கும். ஒன்றை ஒன்று விளக்கிக் கொண்டே விளங்கும். "சுடர்மிகு சுருதியுள் உளன்" 83 (2) என்று சொற்சுடரும், "துயரறு சுடரடி" 83 (3) என்று பொருட்சுடரும் ஒன்றி விளங்குதலைச் சடகோபர் விளக்கினர். இடையீடின்றி நேருக்கு நேராய்க்காணும் அக்காட்சியே சொற்காட்சியும் பொருட்காட்சியுமாம். இறைவன் உளனேல் இறைவன் கருத்தும் உள்ளதேயாம். கருத்து உளதேல் அதை உணர்த்தும் மொழித்தொகையும் உள்ளதேயாம். இறைவன் உள்ளான் கருத்து இல்லை, கருத்து உள்ளது மொழி இல்லை, என்பவை முரண். கருதும் இறைவனும் அநந்தன். இறைவன் கருத்தை உணர்த்தும் மொழியும் அநந்தம். மறைப்பொருளும் மறைமொழியும் எண்பெருக்கந்நலத்தனவாம். மறைப்பொருளும் மறைமொழியும் சத்தியம், ஞானம், அநந்தம், அமலம், ஆநந்தம். இவ்வைந்து குணங்களும் மறைப்பொருளுக்குப்போல் மறைமொழிக்கும் நிரூபகங்களாம். ஆதலின் மறைமொழி என்பது பொய்யாமொழி, தெருள்மொழி, அளப்பருமொழி, தூய்யமொழி, பேரின்பமொழி. "பொய்யில் பாடலாயிரம்," 84 "தெருள் கொள்ளச் சொன்ன ஆயிரம்," 85 "உன் நெடுமாமொழி இசை," 86 "தூய ஆயிரம்," 87 "இன்பமாரி," 88 என்பவை, இவ்வைங்குணங்களையும் நிரூபித்தவாறு. வேதம் ஒன்றாலேயே உணர்த்தப்படுதலின் வேதப்பரம்பொருள் இவ்வைங்குணங்

83 (2) திருவாய். 1. 1. 7;
83 (3) ,, 1. 1. 1;
84 ,, 4. 3. 11;
85 திருவாய். 2. 10. 11;
86 ,, 2. 6. 6;
87 திருவாய். 6. 4. 11;
88 ,, 4. 5. 10;

களையும் நிரூபகமாக உடையது என்றதற்கு, உணர்த்தும் வேதத்துக்கு இவ்வைங்குணங்களும் நிரூபகமாயிருத்தலே அடி என்றது தோன்றப் பரம்பொருளைச் "சுடர்மிகு சுருதியுள் உளன்,"[89] "வேதமயன்,"[90] "வேதநீரன்,"[91] என்று சடகோபர் வேதம் ஓதிற்று

வ்யாஸர் : சடகோபர்

இறைவனை வ்யாஸ பகவான் "சாஸ்த்ரயோநி"[92] என்றார், சடகோபர் "முதுவேதமுதல்வன்,"[93] "சுடர்மிகு சுருதியுள் உளன்"[94] என்றார். வேதமுதன்மையின் கண்ணும் வேதவுண்மையின் கண்ணும் நின்றது இறைவன் முதன்மையும் உண்மையும் என்றதே வ்யாஸரும் சடகோபரும் காட்டிய உண்மை. வ்யாஸர் சாஸ்த்ரயோநித்வமும் சடகோபர் முதுவேதமுதன்மையும் ஒன்றே என்றது காண்க. மறைப்பொருளுக்குத் தூய்மையும்இனிமையும் இரண்டு அடையாளம் (உபயலிங்கம்) ஆகும் என்ற வ்யாஸர் தேற்றம் மறைமொழிக்கும் அவ்விரண்டும் அடையாளம் என்ற தேற்றத்தை அடியாகக்கொண்டுள்ளது தெளிக. "இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்"[95] என்றதே தமிழ். அஃதே தமிழின் இரண்டு அடையாளம். அவ்விரண்டும் உடையதே சடகோபர் தமிழ்மறை.

இறைவன் : இறைமை

"இறைவன்" என்பான் பெரியான். இறைவன் கருத்து என்பது பெருங்கருத்து. இறைவன் மொழி என்பது பெருமொழி. அப்பொருளின் கண்ணும் அம்மொழியின் கண்ணும் நிலைத்துள்ளதே இறைமை. பொருளிறைமையும் சொல்லிறைமையுமே இறைமை யாம். பொருளிறைமையைச் சொல்லிறைமை காக்கும். சொல்லிறைமையைப் பொருளிறைமை காக்கும்.

---

[89] திருவாய். 1. 1. 7;
[90] ,, 2. 7. 2;
[91] ,, . 8. 0;
[92] ப்ரஹ்மஸூ. 3;
[93] திருவாய். . 6. 2;
[94] திருவாய். . 1. 7;
[95] பிங்க. 580;

இறைவன் மூச்சுக்காற்று வேதம் என்று வேதந்தானே ஓதிற்று. பெரிது எனினும், ப்ரஹ்மம் எனினும் ஒக்கும். ப்ரஹ்மம் என்பது பரப்ரஹ்மம் என்னும் வாச்சிய இறையும் சப்த ப்ரஹ்மம் என்னும் வாசகஇறையுமாம். எப்பொருளின், எம் மொழியின், பெருமைக்கு அளவும் முடிவும் இல்லையோ அப்பொருளே இறைப்பொருள், அம்மொழியே இறைமொழி. மறைப்பொருளுக்கும் மறைமொழிக்கும் இறைமை என்பது இயல்பு.

உலகம்

இறைவன் பெருங்கருத்தாலும் பெருமொழியாலும் எண்ணரிய பல்வேறு பேருருக்களாய் உளவாக்கப்பெற்று நிகழுமதே உலகம். அவன் பெருங்கருத்தை அவன் பெருமொழி நோக்கும். அவன் பெருமொழியை அவன் பெருங்கருத்து நோக்கும். அந் நோக்கே பெருநோக்கு. அவை இரண்டும் என்றுமே உள்ளனவாய் ஒன்றை ஒன்று பக்கநோக்கறியாது நோக்கிக் கொண்டே இருக்கும். "தன்முடிவொன்றில்லாத தண்துழாய் மாலையனை, என்முடிவு காணாதே என்னுள் கலந்தானைச், சொல்முடிவு காணேன்நான் சொல்லுவதென் சொல்லீரே" 96 என்றும், "..... "மிக்கஞான வெள்ளச் சுடர்விளக்காய்த் துளக்கற்றமுதமாய் எங்கும் பக்கநோக்கறியான் என் பைந்தாமரைக் கண்ணனே," 97 என்றும், சடகோபவாசகப்பிரமமாகிய வேதத்தைப் பைந்தாமரைக்கண்ணனாகிய பரப்பிரமம் பக்கநோக்கறியாது நோக்குமாறு காண்க. அவ்விருபெருநோக்கின் ஒருமையில் யாக்கப்பெற்றும் காக்கப்பெற்றும் நின்று நிகழுமதே இறைவன் உடைமையாகிய உலகப்பொருளாகும். இறைவன் உடைமையாயே உலகம் பொருளாகும் அவன் உடைமையே அதன். பொருண்மை. அவன் கருத்தால் நோக்கி அவன் மொழி

96 திருவாய் 2. 5. 8; 97 திருவாய். 2. 6. 2.

யால் ஆக்கி உள்ளதால், உலகமானது அவன் பொருட்டே அவன் கருத்தினடியாக அவன் மொழியால் யாக்கப்பெற்றுள்ள தன்மையில் காணற்பாலதாகும். "உலகம்" என்னும் சொல்லுக்கு அவ்வாறு காணற்பாலது என்றது பொருள். "அளியென நோக்கினன் ஒளியெனப் படைத்தான்,"[98] "பரனே உலகாய்ப் பல்குவனென்றெ ஒருதான் தானே நோக்கினனன்று"[99] என்று கேள்வி நூலும், (ஶ்ருதி) "வேதமொழி கொண்டுபல வேறுரு படைத்தான்",[100] என்று நினைவுநூலும் (ஸ்ம்ருதி) ஓதின.

படைப்பு

இறைவன் கருத்து பொருளாயும் இறைவன் மொழி யாப்பாயும் தொகுத்து வகுத்து விரித்துள்ள உலகம் இறைவன் செய்யுளாகும். தானே பொருளாயும் தன்மொழியே யாப்பாயும் தன்னிடத்தே தானும் தன்னுடைமையாகிய உயிரனைத்தும் இடம் கொள்ளுமாறு அமைத்துள்ள பெருஞ்செய்யுளே இறைவன் படைப்பு. இறைவன் பொருளாதலால் தனது படைப்பாகிய செய்யுளுள் தான் கரந்தெங்கும் பரந்துளனுயும் அச்செய்யுளைக் கடந்துளனுயும் விளங்குகின்றான்.

உலகநடை

இறைவன் மொழியால் ஆக்கிய செய்யுளாதலால் சடப்பொருள்களும் உயிர்ப் பொருள்களும் அதனுள் யாக்கப்பெற்று அவன் யாத்தவாறே சீர்கொள நின்று நடைகொள்கின்றன. அஃதே அவன் உளவாக்கிய செய்யுளின் நடை. அவன் யாப்பு நடைகொள்ளுமாறே அவை நடக்கின்றன. தனித்தொன்றுக்கும் தன்னடை யென்றதில்லை. செய்யுள் நடையே அவற்றின் நடையாகும். அச்செய்யுளின் கதி உணர்ந்தாரே உலகின் கதி உணர்ந்

98, 99 உபநி. (தமிழ் செய்தது)

100 மநு. 1. 21; பரா. வி. பு. 1. 5. 63; (தமிழ்செய்தது)

தாராவார். அவனடியால் அளக்கப்பெற்று அவனடிக் கடவாது அவனடிக்கண்ணே யாக்கப்பெற்றுள்ளதே உலகம். சுதந்திர மின்றித் தோன்றி நீங்கும் சின்னாள்பல்பிணிச் சிற்றுயிரும் பிறவும் செறிந்த சகத்துக்குத் தன்னடை யென்றதோர் தனிநடையில்லை. தனித்ததோர் தன்னடை என்பது யாப்புடன் முரணுதலும் யாப்பினின்று வழுவுதலுமேயாம். அஃதே உலக முரணுக்கும் உலகவழுப்பாட்டுக்கும் அடியாகும். முரணுதும் வழுவாதும் இறைவன்யாப்பில் நடைகொள்ளலே நல்லுலக நடையாகும். "ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை"[101] செய்தலே சடகோபர் யாப்பு. "உன்பொன்னடிக் கடவாதே வழி வருகின்ற அடியரோர்க்கருளி"[102] என்று சடகோபர் காட்டியதே இறைவன் அருள் யாப்பு. அவ்வாறு உடனாய் மன்னாது ஒலித்தல் கடலொலியும் காற்றொலியும் விலங்கொலியுமே ஆகுமல்லது நன் மக்கள் மொழியாகாது. அவ்வாறு மன்னாது ஒழுகுதல் விலங்கொழுக்கமே யாகுமல்லது நன்மக்களொழுக்கம் ஆகாது. இறைவன் யாத்தவாறு நடைகொள்ளலே நல்லுலகநடையாகும். ஆதலின் உலகம் என்றது உயர்ந்தோர் மேற்று.

உலகனைத்தும் கோயில்

சேடராகிய உயிர்கள் தொழுதற்கும் சேடியாகிய இறைவன் தொழப்பெறுதற்கும் ஒத்த இடனாகப் பல்வேறு துறைகளும் திணைகளும் அணிகளும் ஒன்றித்திகழுமாறு படைக்கப்பெற்ற உலகனைத்தும் இறைவன் திருக்கோயில்.

ஆகையால் இறைவனைக் கவிகட்குக் கவி என்று வேதம் போற்றிற்று. தானே கவியாயும் தன் அன்பர்களைத் தன்னை ஒத்த கவியாயும் செய்யும் இறைவன் என்பது அதன் பொருள். செய்தலாலும் செய்வித்தலாலும் செய்யுள் என்

---

[101] திருவாய் 3. 3. 1; [102] திருவாய். 9. 2. 2;

பது இறைவன் செயலேயாகும். உலகாக்கிய இறைவனே ஆதி. வேதம் விரித்த ஆதிகவியே இறைவன். இறைவன் மொழிந்த ஆதிகாவியமே வேதம். ஆதலால் காவியம் என்றது வேதமும் வேதம்போன்றதுமே ஆகும். அவை இரண்டும் இறைவன் செயலே. தன்வாயிலாயும் தன்னவர் வாயிலாயும் இறைவன்தானே மொழியும் சொல்லின் தொகையே கவியாகும். அக்கவியே வேதமும் வேதம்போன்றதுமாம். "மதிநலமலரும் மாக்கவி மொழியிவ் பதியவனொருவன் பல்குணம்பொலிவான்" 103 என்றது வேதம். "கவிக்கு—நிறைப்பொருளாய் நின்றானை நேர்பட்டேன் பார்க்கில், மறைப்பொருளும் அத்தனையேதான்" 104 என்று மழிசையர்கோன் தேறிய கவித்திட்பம். "இராமாயணம் வேதங்களை ஒத்துள்ளது" 105 என்றது ஆதி கவியாகிய வான்மீகி திருவாக்கு.

"காவியம்"

காவியம் என்பதற்குக் கவியின் செயல் என்று பொருள். கவி என்பதற்குக் கடந்து நோக்குவான் (முழுதும் உணர்பவன்) என்பது பொருள். இறைவன் அடிபரப்பி நிலம் அளந்து கடந்தவாறே கவியும் அடிபரப்பி நிலம் அளந்து கடத்தலே கவியின் செயலாகும். இறைவன் மாதா (அளப்பவன்). கவி என்பவன் அளப்பவனை ஒத்து அளப்பவன் (மாதாநுபங்கி). பஞ்சபூதவிகாரப்பாட்டின் வேறுபாடற்ற வீக்கத்தைக் கடந்து உயிர்ப்பொருளின் சேடத்தன்மையையும் இறைப் பொருளின் சேடித்தன்மையையும் உள்ளவாறு நோக்கி உயிரினது எல்லையற்ற சேட இயல்பாகிய அன்பும் இறையினது எல்லையற்ற சேடி இயல்பாகிய அருளும் முடிவுகாணாதே ஒன்றி நிகழும் ஒருமையின் தூய்மையும் இனிமையும் ஆர்வமடியாகக் கவியின் சோதிவாய் திறந்து சொல்லின் தொகையாய் வெள்ளமெடுத்துப் பெருகுதலே காவி

103 (தமிழ் செய்தது) 104 நான், திரு. 69; 105 ராமாய. பால. 1. 98;

யம் ஆகும். அஃதே வேதத்தை ஒக்கும். சான்றோர் கவியே வேதத்தை ஒக்கும், அஃதே வான்மீகி கண்ட இலக்கிய உண்மை, பதஞ்சலி கண்ட இலக்கண உண்மை. "புவியினுக் கணியா யான்ற பொருடந்து புலத்திற் றாகி, அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறியளாவிச், சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் தழுவிச் சான்றோர், கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்" 106 என்றும், "பாவரும் கிழமைத் தொன்மைப் பருணிதர் தொடுத்த பத்தி, நாவருங் கிளவிச் செவ்வி நடைவரும் நடை" 107 என்றும் இவ்வரிய உண்மையைக் கவிச்சக்ரவர்த்தி விளக்கினார். உயிரற்றது காவியமாகாது. அது ஓவியம் போன்றதோர் போலியேயாகும். உயிர்க்கே உற்றது எழில். ஆதலின் கட்டெழில் திகழ்வது கவி என்னும் செய்யுளின் கண்ணேயாம். உயிர்க்கட்டே யாப்பாதலாலும், அக்கட்டு உயிரின் கட்டாதலாலும் உயிர்க்கே கட்டெழில் உறும். உயிருற யாத்ததலே கவி. உயிரில் திகழ்வதும் உள்ளத்தைக் கவர்வதுமே அழகு. அஃதே கவியினழகு. யாப்பினழகும் குணத்தினழகுமே அவ்வழகாம். வடிவம் யாப்பு, வள்ளன்மை குணம். "வடிவழகாலும் குணவழகாலும் உயிர்களின் கண்ணையும் கருத்தையும் ஒருமிக்கக்கவரும் ஒருதனிவள்ளல்" 108 என்று வால்மீகி (இராம பிரானை) பாடினார். அது இராமபிரானாகிய வேதப் பொருளுக்குப் போல் இராமாயணமாகிய வேத மொழிக்கும் பொருந்தும். இராமாயணத்தை "ஸர்வஶ்ருதிமனோஹரம் 109 என்றும் இராம பிரானை "ஸர்வஸத்த்வமனோஹரன்" 110 என்றும் வான்மீகி பாடினார். தரும வீரியத்தால் அவர் கண்ட திருக்காட்சியே அவ் வேத மொழியும் அவ்வேதப்பொருளும். ஆதலின் அம்மொழி ஸர்வஶ்ருதிமனோஹரம். அப்பொருள் ஸர்வஸத்த்வமனோஹரம். ஸர்வஶ்ருதிமனோஹர மொழியே ஸர்வஸத்த்வமனோஹரப்

106 இராமாவ. ஆர. சூர். 1;
107 கிட். நாட. 64;
108 ராமா. அயோ.3. 5. 8; (தமிழ் செய்தது)
109 பால. 3. 8;
110 சுந்த. 35. 8;

பொருளை உணர்த்த வல்லது. தரும வீரியக்கண்ணே அம்மொழியைக் காணவல்லது. வேதமொழி கண்ட தெருள்வள்ளலே வான்மீகி. வேதமொழி காட்டும் அருள்வள்ளலே இராமபிரான். உலகனைத்துக்கும் அன்னவன் அருள் புரியும் வள்ளற் பேரிறைமை நோக்கிக் "கற்பார் ராமபிரானை யல்லால் மற்றும் கற்பரோ" 111 என்று சடகோபர் தமது கல்விக்கு இலக்காயும் கற்புக்கு உயிர்நிலையாயும் திகழாநின்ற அப்பரஞ்சுடர்க்கே ஆராத பெருங்காதற் கடலாய்ப் பெருகி நீத்தார்க்குத் தலைவராயினர். அவரே நாதன்பாதுகவள்ளலார். அவரது வள்ளற்பெருங் காவியமே திருவாய்மொழி. வேதத்தின் முன்செல்லும் தொல்லை மூலப்பரஞ்சுடர்க்கும் முன்செல்லவல்லதோர் தொன்மறையே அன்னவர் திருவாய்மொழி. அஃதே இறைமொழி. அஃதுணர்த்தும் பொருளே இறைப்பொருள்.

இறைவன் அழகு இறைமொழி அழகு

பொறியவித்த தூமனச்செல்வர்க்கல்லது பிறர்க்கு இறைமொழியின் அழகும் இறைப்பொருளின் அழகும் தோன்றாது. பொறியவித்த "ஐந்திரப்பரவை" யாகிய அநுமன் கண்டதே திரு. அத்திருவே இராமாயணவேதப்பொருள். பொறியவித்த தமிழ்த்தலைவராகிய பேயாழ்வார் கண்டதே திரு. அத்திருவே வேதாந்தவிழுப்பொருட்டிரு. துய்யர்க்கும் மெய்யர்க்குமே அழகு தோன்றும்; தீயர்க்கும் பொய்யர்க்கும் அழகு காணவொண்ணாது. ஊன் நுகர வெறிக்கும் தீயர் கண்ணினின்று அழகு தன்னை யறைத்துக் கொள்கின்றது. அம்மறைவே அழகின் இயல்பு. அஃதே வேதத்தின் அழகு. ஆதலில் வேதம் மறை ஆகும். அழகு காணவல்ல தூய்ய மெய்ந் நாமனக்கண்ணொளியர்க்கே வேதம் தன் எழிலைக் காட்டுகின்றது. அத்திருக்கண் அருள்ப்

111 திருவாய். 7. 5. 1;

பெறவேண்டும். பொறியவித்தார்க்கே அது அருளப்படும். "உய்யப்போமுணர்வினார்கட் கொருவனென் றுணர்ந்தபின்னை, ஐயப்பாடறுத்துத்தோன்றும் அழகன்" [112] என்றும், "போதரே என்று சொல்லிப் புந்தியில் புகுந்து தன்பால், ஆதரம் பெருக வைத்த அழகன் " [113] என்றும் தொண்டரடிப்பொடியாழ்வார் இப் பொருளை அழகுறக் காட்டினார்.

படைப்பு – சிற்பம்

மயர்வற மதிநலம் அருளப்பெற்றாரே வேதம் என்னும் திருவைக் காண்பார்கள். இழைத்தாரொருவருமில்லா எழிற் கோயிலெனக் காண்பார்கள். இறைவன் உள்ளுறை பொருளாய் இடங்கொண்டுள்ள அருள்யாப்பே வேதம். அதுவே இறைவன் செய்யுள். படைப்பும் அவ்வாறே. சொல்லனைத்தையும், பொருளனைத்தையும் யாத்தும் காத்தும் அவற்றின் உட்பொருளாய்த் தானே இடங்கொண்டும் அவற்றை அளந்து மிகுந்து ஆண்டு ஆட்கொண்டு விளங்கும் வேதப்பொருளே பரம்பொருள். உயிரளிக்கும் கருணைக்கடலாகிய பரம்பொருளின் செயலே செய்யுள். உயிருறாச் செயல் படைப்பாகாது. உயிருறாச் செய்யுள் கவியாகாது. குயவன் தச்சன்செம்மான் முதலியோர் செய்யும் பானை கதவு செருப்பு முதலியன படைப்பாகா. சடப்பொருளைத் துவைத்துத் தறித்துக் குத்தி ஒரு வடிவத்தில் அமைக்கும் செயல் கைத்தொழில் என்னும்சிற்பத்தொழிலாகுமேயல்லது படைப்பாகாது. உயிர்ப்பொருளனைத்துக்கும் தானே உள்ளுயிராய் நின்று அவற்றைத் தன் வயத்தனவாய் நடத்தி ஆண்டு காத்து ஆட்கொள்ளும் இறைவன் செயலே செய்யுளும் படைப்புமாம். குயவன் மண் கொண்டுபானைவனைவான். தச்சன் மரம்கொண்டு கதவிழைப்பான். செம்மான் தோல் கொண்டு செருப்புக் குத்துவான். சித்திரி மை கொண்டுஓவியம் வரைவான். அத்தொழிலில் அவர் கைதேர்ந்த வல்லவரே. ஆயினும் அவரது செயல் உயிர்ப்பொருளாகாது. அவர் செய்யும் பொருளை உயிர்ப்பொருளாக்கி, அப்பொருளுக்குத் தாம்

---

[112] திருமா. 45 ; [113] திருமா. 16 ;

உள்ளுயிராய் நின்று அவற்றை நடத்தி ஆண்டு காத்து ஆட்கொள்ளும் திறமையற்றவர். ஆதலின் அவர் செயல்கைத்தேர்ச்சியாகுமல்லது படைப்பாகாது, சிற்பத்திறனே யாகுமல்லது கவித்திறனாகாது. உயிருறுது சொற்களைத் தொடுத்தல் சித்திரம் வரைதலாகுமே யல்லது கவியாத்தலாகாது. உண்மை நோக்கி அறம் காத்து நன்மை கடைப்பிடித்துத் துறவின்கண் தம்மை அழிய மாறி "அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்[114] என்ற புத்துயிர்ப் பேற்றின் உறுதிப்பாட்டில் அலையா நிலையுற்றுப்பரம்பொருள் உள்கலந்து ஒன்றுமாறு உள்ளி உணர்ந்து ஊக்கம் மிகுந்து ஆர்வம் விஞ்சி இறைவன் உவக்கத் தாம் உவந்து சூடிக்கொடுக்கும் . கற்புடைப் புனிதரின் சொல்மாலையே கவியாகும். அப்புனிதர்களே இறைவனுக்குச் சூடிக்கொடுத்த நாச்சியார்களாவார். அவர்கள் கற்பின் கடலிற் படிந்து கிடக்கும் பாற்கடற்பள்ளியே பரமன் கொள்ளும் பேரருட் பள்ளி. அவர்கள் நூற்கும் அன்புமொழியே திருப்பாடல், அவர்கள் நோற்கும் இன்பநோன்பே திருப்பாவை. அவற்றினும் தூய்ய தோர் மொழியுமில்லை, இனியதோர்நோன்புமில்லை. அம்மொழியும் நோன்புமே கவியாகும். "முழுதுணர்நீர்மையினோர் மதிநல உணர்வையே வித்தை என்றும் ஞானம் என்றும் மற்றதைச் "சிற்பத்தேர்ச்சி"[115] என்றும் பராசரர்பணித்தார். இதற்கு பகவத்விஷயத்தை யொழியக் கற்றவையெல்லாம் செருப்புக் குத்தக் கற்றவோபாதி" என்று நம்பிள்ளையும், "வகுத்த விஷயத்தில் ஞானமே ஞானமாவது; அல்லவை அஞ்ஞான ஸமூநம். வித்யாங்யா சில்பநைபுணம். செருப்புக்குத்தக் கற்ற வோபாதியிறே இதரஞானங்கள்"[116] என்று பெரியவாச்சான் பிள்ளையும் உரைத்தார்கள்.

கவி: கோயில்

வேதமும் வேதம் போன்ற சான்றோர்கவியுமே இறைவன் கோயில். அக்கோயில் ஸ்வயம்வ்யக்தம் (தான்தோன்றி). முன் மறைவாயிருந்தது இப்பொழுது தோற்றமாயிற்று என்றது ஸ்வயம்வ்யக்தம் என்பதன் பொருள். மறைவு வ்யங்க்யம்.

---

114 திருச்சந்த. 64; 115 வி. பு. 1. 19. 41; 116 ஈடு. மஹாப்ர. முதல்

தோற்றம் வ்யக்தம். மறைவை நோக்கத்தோற்றம், தோற்றத்தை நோக்க மறைவு. ஆதலின் அது மறையும் தோற்றமுமாம். "முந்தை ஆயிரம்" "தோற்றங்களாயிரம்" என்றதால் என்றும் உள்ள தமிழ்மறையின் தோற்றமே சடகோபர் திருவாய்மொழி என்ற உண்மை தானே தோன்றும். உலகயாப்பையும் வேதயாப்பையும் "உடன்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்" [117] என்றும், "நாவினுள் நின்று மலரும் ஞானக் கலைகளுக் கெல்லாம் ஆவியும் ஆக்கையும் தானே" [118] என்றும், ஆவியும் ஆக்கையுமாய் ஒன்றியதோர் உயிர்யாப்பு என்று சடகோபர் ஓதினர். வேதத்துக்கு ஆவி பொருள், ஆக்கை சொல். உலகத்துக்குச் சேதநாசேதநங்கள் உடல், இறைவன் உயிர். இவ்வுண்மையும் அழகும் ஆயிரம் செய்யுளாக அந்தாதித்துத் திகழும் நாதன் திருக்கோயிலே திருவாய்மொழி. நாதன் பாதமும் பாதுகமும் ஒன்றிக் கோயில்கொண்டுள்ள திருப்பதியே திருவரங்கம். அக்கோயிலில் களிநடம் புரியும் திருவே வேதம் என்னும் திருநாமகள். அந்நாமகளின் பெயரே கற்பு. வேதம் இறைவன் பாற் செய்யும் கற்பு களிநடம் புரியும் அரங்கமே திருவரங்கம். "நாமகள் களிநடம் புரியு மரங்கம்" [119] என்று வேதாந்ததேசிகர் ஓதினர். கற்பு என்னும் பெயர்க்குத் தானே பொருளாய் ஸர்வசேஷியாகிய அழகிய மணவாளனுக்கு அதிசேடனாகிய சடகோபநாயகியாய் பாதமும் பாதுகையுமாக ஒன்றித் திகழும் திருவரங்கமே திருக்கோயில். அத்திருவே வேதத் திரு, சடகோபத்திரு.

இறைவன்: அடியார்: முதன்மை: தலைமை

திருவரங்கத்தில் "நம்சடகோபருக்கு" முதன்மை, தலைமை. வைகுந்தத்தில் "நம்பெருமாளுக்கு" முதன்மை

---

117 திருவாய் 1. 1. 7; 118 திருவாய் 1. 9. 8; 119 பாதுகா. 1000;

தலைமை. இவ்விரு முதன்மையுள்ளும் இவ்விரு தலைமையுள்ளும், இறைவனாகிய பரன் முதன்மை பெரிதா காதலனாகிய புருடோத்தமன் தலைமை பெரிதா, அல்லது, அடியாராகிய சடகோபர் முதன்மை பெரிதா, காதலியாகிய சடகோபநாயகியின் தலைமை பெரிதா, என்றது தான் சேடியாகிய இறைவனும் சேடராகிய சடகோபரும் வேதமூர்த்திகளாய் ஒன்றிச் செய்யும் முடிவு காணுதற்கோர் ஆநந்தமீமாஞ்சை (பேரின்ப ஆராய்ச்சி). அருளில் சேடனோடு ஒன்றிய சேடியின் பெருமை மிக்கதா, அன்பில் சேடியோடு ஒன்றிய சேடனின் பெருமை மிக்கதா? சேடிக்குச் சேடன் ஆருயிராகும் அருமை மிக்கதா? சேடனுக்குச் சேடி ஆருயிராகும் அருமை மிக்கதா? சேடி இறைமையில் உலகம் யாத்துள்ளதா? சேடன் அடிமையில் உலகம் யாத்துள்ளதா? இறைவன் நல்கும் அபயம் மிக்கதா? அடியார் புரியும் அஞ்சலி மிக்கதா? ஈதே அவ்வாராய்ச்சி. ஒன்றோடொன்று நிலைபேர்க்கலாகாது ஒன்றிநிலைத்துள்ளதால் அவ்விருமையின் ஒருமையே தேற்றம். அஃதே விசிட்ட ஒருமை. அத்தேற்றம் தெளிதற்கே அவ்வாராய்ச்சி. "உடனுயிருவரும் காக்குவாம், உடனுயிருவரும் நுகர்வாம், உடனுயிருவரும் வீரியம் செய்வாம், யாமோதுமிதே தேசுடைத்தாக, இருவரும் அன்பே செய்யக்கடவோம்"[120] என்று மயர்வற மதிநலம் அருளும் குருவாயும் அருளப்பெறும் சீடனாயும் உபநிடதம் தானே செய்யுமோர் ஆநந்தமீமாஞ்சை ஈதே. "புவியும் இருவிசும்பும் நின்னகத்த நீயென், செவியின் வழிபுகுந்து என்னுள்ளாய்—அவிவின்றி—யான்பெரியன் நீபெரியை என்பதனை யாரறிவார், ஊன்பருகு நேமியாய் உள்ளு"[121] "ஆரென்னை ஆராய்வார்......நங்கண்ணனும் வாரானால்"[122] என்று சடகோபரும், "ஞானியெனப் பெறுவானென்ன தாருயிர், தானிது வென்மதம் தானென்றுமே"[123]

---

120 உபநி. (தமிழ் செய்தது)

121 பெரிய. திருவந் 75;

122 திருவாய் 5. 4. 5;

123 கீதை 7, 18; (தமிழ் செய்தது)

"ஞானியெனப்பெறு மாமனப் பெரியோன் பெறுதற்கரிய வென் பெரும்பேறேயாம்",[124] என்று பரம் பொருளும் சேர்ந்து செய்யும் மீமாஞ்சை அதுவாகும். சேடப்பெருஞ்சோதி என்னும் அநந்தன் ஒருவன். சேடிப்பெருஞ்சோதி என்னும் அநந்தன், ஒருவன். அவ்விரு பெருஞ்சோதிகளும் அநந்தரே. இருவரிடத்திலும் நின்றது பரத்துவம். பரத்துவம் என்றதற்கு அளவுகடந்தமை, அளவின்மை, என்பது பொருள். அளவு இல்லாமையே அநந்தம். காத்தற்கும் பூரித்தற்கும் அளவுகடந்துள்ளமையே பரத்துவம், ஆநந்தியம். ஒருவரிடத்து நின்றது சேடபரத்துவம், சேட ஆநந்தியம், மற்றொருவரிடத்து நின்றது சேடிப்பரத்துவம், சேடி ஆநந்தியம். அது அன்பின் பரத்துவம், இது அருளின் பரத்துவம். அது தொண்டின் பரத்துவம், இது இறைமையின் பரத்துவம். உயிரினுடைய சேடத்துவம் எல்லையற்றது. அது அன்பினெல்லையின்மை. இறைவனுடைய சேடித்துவம் எல்லையற்றது. அது அருளின் எல்லையின்மை. ஆதலில் சேடனும் அநந்தன் சேடியும் அநந்தன். இவ்விருதிருவநந்தரில் எவரது அநந்தம் மிக்கது, இனிது, என்றதுதான் ஆராய்ச்சி. வேதமும் இறைவனும்வான்மீகியும் சடகோபரும் செய்யும் ஆராய்ச்சி அஃதே. "ஒன்றுண்டு செங்கண்மால் யானுரைப்பது உன்அடியார்க், கென் செய்வ னென்றே இருத்திநீ—நின்புகழில்—வைகுந்தம் சிந்தையினும் மற்றினிதோ நீயவர்க்கு, வைகுந்தமென் றருளும்,வான்" [125] என்று சடகோபரும், "மெய்ம்மை சொல்லில் வெண்சங்க மொன்றேந்திய கண்ண! நின்தனக்கும் குறிப்பாகில் கற்கலாம் கவியின் பொருள்தானே" [126] என்று மங்கையர்கோனும் பாடியருளிய பேரன்பு ஆராய்ச்சி. பேரன்பின் வடிவாகிய பெரியாழ்வார் பேரருளாளனைப் பெற்றுப் பேரிட்டுச் சீராட்டிப் பல்லாண்டுபாடிப் பேணினர். "அடியோமோடும் நின்னோடும்

---

[124] கீதை. 7. 19;
[125] பெரிய திருவந். 53;
[126] பெரிய திருமொ. 7. 10. 10;

பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு" [127] என்று பிள்ளைத்தமிழ்ப் பேரிலக்கியப் பெருமானாராகிய அன்னவர் பாடிப் பெருக்கிய சோபனம் (பல்லாண்டு). அடிமையாகிய அன்பு ஈன்ற அருங் குழவியே இறைமையாகிய அருள் என்ற உண்மை விளங்கவே உபநிடதமும் ஆழ்வார்களும் இறைவனோடு ஒன்றிச்செய்த ஆநந்த மீமாஞ்சை. அஃதே ஆழ்வாரும் இறைவனும் செய்து கொண்ட மாலைமாற்று. அஃதே ஆழ்வார் மறையும் இறைவன் மறையும் செய்துகொண்ட மாலைமாற்று. சடகோபர் உவந்த மாலை என்றதால் இறைவன் மாலைக்கு ஏற்றம். இறைவன் உவந்த மாலை என்றதால் சடகோபர் மாலைக்கு ஏற்றம். அத்தகையதோர் மாலை மாற்றே பெரியாழ்வார் பிள்ளைத்தமிழ், சுகர் பிள்ளையாரியம். பெரியாழ்வாரும் சுகரும் ஆண்டாளும் கோவியரும் ஒருமுறையும் ஒருதுறையும்பட்ட சேடத்திருச்சோதிகள் என்ற உண்மை காண்க. சுகரது 'கோபிகாகீதம்' எதுகை மோனைகளோடு கலிவிருத்தமா மாறு யாத்துத்திகழ்தல் நோக்கத்தக்கது. துறவின்கண் நிகழும் மாலைமாற்று என்னும் இவ்வொருமையின் நீர்மையும் இனிமையும் நன்கு உணரவேண்டும். "உன்னைக்கொண்டு என்னுள் வைத்தேன் என்னையும் உன்னிலிட்டேன்" [128] என்று பெரியாழ்வாரும் இறைவனும், "உன்னதென்ன தாவியும் என்னதுன்ன தாவியும்" [129] என்று சடகோபரும் இறைவனும் உள்கலந்து புரிந்த மாலை மாற்றின் பூரிப்பு. "என்னுள்கலந்தவன்—தன்னுள் கலவாத தெப்பொருளும் தானில்லையே" [130] என்று அளவுகடந்த ஆநந்தப் பூரிப்பு. ஒருவர் திருமொழியும் திருமனமும் மற்றவர தாமாறு கலந்து ஒன்றிய பூரிப்பு. இருவரும் "மாறிப்புக்கு இதய மெய்திய" [130 (1)] திருக்காதல். துறக்கவே இருவரும் தோன்றுகின்றார்கள். "துறப்பதே தொழிலாகத் தோன்றிய" [130(2)] இருவரும் புரியும் அம்மாலை மாற்றே அவர்கள் துறவு. அடியார்

127 பெரியாழ் திரு. 1.1.2;
128 ,, 5.4,5;
129 திருவாய் 4.3.8;
130 திருவாய். 2.5.3;
130 (1) கமப இராமாவ பால மிதிலை. 37;
130 (2) கம்ப இராமாவ ஆர விராத. 15;

துறவே அன்பு. இறைவன் துறவே அருள். அடிமையாகிய அன் பின்கண் பிறந்து வளருமதே இறைமையாகிய அருள். அவ் வன்பே பெரியாழ்வார். அவ்வருளே கண்ணன். இறைவனை அடியார்கள் பிள்ளையாகப் பெற்றுப் பேணிச்சீராட்டலே அடியார் புரியும் அன்பு என்னும் துறவு. அடியாரிடத்தில் முதல் தனிவித்தாகிய இறைவன் தானே பிள்ளையாக அடங்கிச் சோப னம் பாடிக் காப்பிடப்பெறுதல் இறைவன் புரியும் அருள் என்னும் துறவு. இத்துய்யபெருநீர்த் துறை தாங்கி நிற்குமதே மறைப்பிள்ளைத் தமிழ். "அருள் என்னும் அன்பீன்குழவி" 131 என்று குறளாசிரியர் விளக்கினர். அன்பினுக்கு அவதி யில்லை. அவதியற்ற சேடனுடைய அன்பின்கண் படிந்து ஒடுங் குமதே அவதியற்ற சேடியின் அருள். சேடனுடைய அன்புக்கு அவதி காணுதே சேடனுள் கலந்து ஒடுங்கும் இறைமையே அருள். "என் முடிவு காணாதே என்னுள் கலந்தான்" 132 என்றபடி தன்முடிவு காணுதே தன்னுள் கலந்த சேடி அநந்தன் விரிவிற்பெருகிய ஆநந்தமே திருவாய்மொழி.

இராமாயணம் : அடியார்பெருமை

அவ்வாறே இராமாயணமும் வான்மீகி செய்த மீயாஞ்சை. பேரன்பராகிய விச்வாமித்ரருக்கும் பேரருளாளனாகிய இராம பிரானுக்கும் வாசி காணகில்லாத் திருக்கண் அருளப்பெற்று இறை நிலையாகிய திருப்பாதத்துக்கும் அது காக்கும் அடிநிலையாகிய திருப்பாதுகத்துக்கும் உற்ற ஒருமைக் காட்சி கண்டு, அடிதன் னையும் தாங்கிநிற்பது அடிநிலை என்றும், அடிநிலையே உலகனைத் தையும் காத்து அளிக்கும் வேதப்பரம்பொருள் என்றும் விளம்பி அடிநிலைக்கு முடிசூட்டிய முதுமறைமுதற்கவிஞரோ வான்மீகி என்பார். பேரன்பராகிய விச்வாமித்ரருக்கும் பேரருளாளனாகிய இராமபிரானுக்கும் வாசி காணுது, "இவனேயாவன் வல்லற

[131] குறள். 757; [132] திருவாய் 2. 5. 8;

மூர்த்தி, இவனேயாவன் வீரியர்தலைவன், இவனேமதியால் அதி கன் நிலையில், இவனே தவத்தி னிருங்கதியாவான், தாவரசங்கமத் தாரினிவனே, அறிவானத்திர மனைபலபலவே, இவனையறிந்தா ரொருபிறரில்லை, இவனையறிவா ரெவருமில்லை, இமையவரிருடிக ளெவருமே அறியார், அசுரரிராக்கத ரவர்களும்அறியார், கந்த ருவரியக்கர் கிந்நரருரகர், என்பவரிவனை என்றுமே அறியார் ....முன்னில யாவையும் உன்னிப்படைக்க வல்லவனிவனே நல்லறமதிபோன், இந்துணைத்திறலோன் நிறையொளியண்ணல் விசுவாமித்திரப் பெரும்புகழோனே" 133 என்று வசிட்டர் வாயி லாய், பேரன்பு என்னும் விசுவாமித்திரர் காத்துப் பேணுமதே பேரருளாம் இராமபிரான் என்னும் உபநிடத உண்மையை விளக் கினர். "தவமயா! தவவரு! தவகரு! தவநலா! தவஒளி சுடர் பரஞ் சுடர்பரம் புருடனே! அறிகிறே னிறையிறைப் பரமனே அரியுனை, உனதுடம் பெனவிதா முலகெலாம் தெரிகிறேன், நிறை யநா தியஒரு வரையிலா இறைவனே! அடியனேன் சரணுனை அடைகிறேன் நெடியனே!" 134 என்ற மறைமொழியால் நெடி யோனை விசுவாமித்திரர் ஞானக்கண்ணால் கண்டு சரணமடைந்து, தன்சீடனாய் விளங்கும் கருணாகரமூர்த்தியாகிய அன்னவனையே "உயிர்கட்கிறைவா! எழுந்தருளாயே" 135 என்று பள்ளி உணர்த்தினர். உணர்த்திய அம்முனிவன் பேரன்பில் அடங்கிய பேரருட் பரமன்தானே "தொண்டரோம் அடியோம் இருவரிங் குற்றோம், ஏவிப்பணிகொள் முனிகட்கிறைவா!" 136 என்று இளையபெருமாளோடும் முனிவன் திருமுன்பே அடியோம் என்று அருள்மயனாய் எதிரொலியாநின்றான். முனிவன் இறை வனை "நரசார்த்தூல!" (உயிர்கட்கிறைவ!) என்று புரிந்த பேரன்பின் விளியே பேரருளின் வாயிலாய் "முநிசார்த்தூல!"

---

133 ராமாய. பால. 21.10.19; (தமிழ செய்தது)

134 ,, 29.10.12;

135 ராமாய. பால. 23. 2. (தமிழ் செய்தது)

136 ,, 31. 4;

(முனிகட்கிறைவ!) என்ற பேரருளின் இறைவிளியாய்ப் பொலியாநின்றது. இவ்விரு சார்த்தூலங்களுள்ளும் (இறைவர்களுள்ளும்) எந்த சார்த்தூலத்தின் பெருமை மிக்கது என்றது தான் மீமாஞ்சை. அன்பு கூப்பும் அஞ்சலி மிக்கதா, அருள் நல்கும் அபயம் மிக்கதா? அடியார் நோக்கு மிக்கதா, இறைவன் நோக்கு மிக்கதா? என்ற ஆநந்த மீமாஞ்சை விளங்கிய அம்பலமே சித்திரகூடம். ஆதலில் பரதனை "ஆநந்தம் ஏறி ஏறினான் தேரில்" [137] என்று பாதுகம் புனைந்து தேரேறிய பரதனை வான்மீகி புகழ்ந்தார். அஞ்சலியிற் பாதுகம் பெறும் தவத்தன் பரதன். அருளிற் பாதுகம் நல்கும் தவத்தன் பரமன். இருவருமே பெருந்தவவள்ளலார். அன்பு பரதன் தவம். அருள் பரமன் தவம். அன்பும் அருளும் ஒன்றற்கே பக்கநோக்கறியாது ஒன்றை ஒன்று நோக்குகின்றது. அந்நோக்கே தவநோக்கு, தூநோக்கு, பெருநோக்கு, முழுநோக்கு. அந்நோக்கில் பரதன் பரமனையும் பரமன் பரதனையும் நோக்கி ஒன்றாநின்றார். "வீற்றிருந் தூடசமொன்றில் வீறுடைச் சடைபொறுத்த, போற்றொரு குருவிராமப் பரமனை யொருமுகூர்த்தம், நோற்றொரு பரதநம்பி நோக்க நன்றொன்ற நன்றே, சாற்றிய தவத்தின் மூர்த்தி சாலவே நோக்கிக் கண்டான்." [138] என்றது பரதன் நோக்கு. "மாண்சடை மிளிர்ந்த சென்னி மரவுரி தரித்த மேனி, வாணெடு முடி கவித்த வணத்திரு கரத்தின் கூப்புச், சேணடி வீழ்ச்சி யொன்றிற் செறிநிலைப் பரத னென்னும், காணரு மவனை யூழி மணியெனப் பரமன் கண்டான்" [139] என்றது இராமபிரான் நோக்கு. இருவரும் சடை புனைந்தவர், மரவுரி தரித்தவர். அவ்வாற்றால் இருவருக்கும் ஒப்புமை. அஞ்சலியாலும் அடிவீழ்ச்சியாலும் பரதனுக்குப் பெருமை. அவ்விரண்டும் இறைமைக்கு இல்லை. தனக்கில்லாத அஞ்சலியையும் அடிவீழ்ச்சியையும் தன்பாற் புரிந்து தன்னடிக்கண் வேரூன்றித் தனக்கு நல்லாராம்

[137] ராமாய.அயோ.113.1; (தமிழ் செய்தது)
[138] ராமாய.அயோ.99.25; (தமிழ் செய்தது)
[139] ராமாய.அயோ.100.1; (தமிழ் செய்தது)

அடியாரின் வள்ளன்மை நோக்கி அடியார்க்குத் தான் நல்லானும் பேரருளாளனுன இறைவன், "தம்மையே தமர்க்கு நல்கி" 140 யும், "தமதனைத்து மவர்தமக்கு வழங்கியும்," 141 "என் வழங்கிகேனும்" என்று "மிக்வெள்கும்" வள்ளற்திருக் கண்களால் தன்னடியாரைத் தனக்கு ஆருயிர் என்று நோக்கி அவிரவற உள்கலக்கும் பெருமையே இறைவன் பெருமை என்றும், ஆதலின் திருவடியின் பெருமை தன்னையும் தாங்கி நிற்கும் திருவடிநிலையின் பெருமை, இறைவன் உவக்குமாற்றுனே மிக்கதென்றும் கண்டு களித்த மறைக்கண்ணரே வான்மீகி.

அருளிச்செயல் : ப்ரணவம் : திருவரங்கம்

அடியாரும் இறைவனும் பாதுகமும் பாதமுமாய் ஒன்றித் திகழும் திருக்கோயிலே திருவாய்மொழி, இராமாயணம். அஃதே ப்ரணவப்பொருள் விளங்கும் திருக்கோயில். சேடி சேடன் என்ற இருபெருஞ்சோதிகளும் ஒன்றியவாறு விளங்கும் திருக் கோயில். இருவரும் அநந்தர்கள். சேடி இயல்வாலும் இறைமையாலும் அநந்தன். சேடன் இயல்வால் அணுவாயினும் அடிமையால் அநந்தன். அவ்வடிமையே அன்பு. அஃதே கற்பு. கற்பநந்தனே சேடன். அக்கற்பில் அடங்குவானே சேடி. கற்பில் திகழும் பெருஞ்சோதி சேடன். கற்பில் படியும் பெருஞ்சோதி சேடி. இவ்விருபெருஞ் சோதிகள் ஒன்றினுக்கொன்று நிருபகமாயும் பாதந்திரமாயும் நிகழும் அருமையும் ஒருமையும் விளங்கும் திருக்கோயிலே ப்ரணவம், வேதம், இராமாயணம், திருவாய்மொழி. அத்திருக்கோயிலே திருவரங்கம். ப்ரணவ யாப்பே திருவரங்கயாப்பு. ஆதலின் அக்கோயிலே "ஆராத அருளமுதம் பொதிந்த கோயில், அம்புயத்தோனயோத்தி மன்னர்க் களித்த கோயில், தோராத தனிவீரன் தொழுத கோயில், துணையான வீடணற்குத் துணையாம் கோயில், சேராத பயனெல்லாம்

---

140 கம்ப. இராமாவ. கிட்கி. வாலி. 71; 141 தேசிக. அடை. 7;

சேர்க்கும் கோயில், செழுமறையின் முதலெழுத்துச் சேர்ந்த கோயில், தீராத வினை அனைத்தும் தீர்க்கும் கோயில், திருவரங்க மெனத்திகழும் கோயில் தானே" [142] என்று வேதாந்ததேசிகர் போற்றிப்பாடினார். சேடப்பெருஞ்சோதி சேடிப்பெருஞ் சோதிக்கு நிரூபகமாய் விளங்குமாறு சேடியின் திருவருள் மிகுந்து திகழும் திருக்கோயிலே திருவரங்கம் என்றது அதன் பொருள். "இருளிரியச் சுடர்மணிக ளிமைக்கும் நெற்றி, இனத் துத்தி யணிபணமா யிரங்க ளார்ந்த, அரவரசப் பெருஞ்சோதி அநந்த னென்னும், அணிவிளங்கு முயர்வெள்ளை அணையை மேவித், திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி, திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும், கருமணி" [143] என்ற குலசேகரப்பெருமாள் எடுப்பு நோக்கி இம்மறைக் கருத்துத் தெளிக. இதையே "தன் சேஷித்வத்தின் எல்லையைக் காட்டி என்னை சேஷத்வத்தின் எல்லையில் நிறுத்தினவன்" [144] என்றும், "ஸௌபரியைப்போலே அநேகம் வடிவு கொண்டா யிற்று இவரை (சடகோபரை) அனுபவிக்கிறது. முத்தன் தன்னை அனுபவிக்கும்போது படுமாபோலே தான் என்னை அனுபவிக்கப் பலவடிவு கொள்ளாநின்றான்" [145] என்றும் நம்பிள்ளை உரைத் தார். சேட அநந்தராகிய சடகோபரைச் சேடி அநந்தனாகிய இறைவன் உள்கலந்து நுகரும் மலர்ச்சியின் பெருமையைத் "தொல்லிறைவன் முனந்துவரை வயங்கு மோரை, ஒருபதினா றுயிரவர்க் கொவ்வோர் மேனி, ஒல்லவிலொவ் வொருவருட னுளம் கலந்த, உத்தமனவ் வொத்தனணி யேறு நின்சீர், வல்லரியின் வரிகளென விளங்கு கல்லின், வளரொளிமீ தெதிர் விளங்கு முறையில் வள்ளல், பல்லுருவம் படைத்தரியா தொருத்தி நின்கண், படிந்தொருதன் படிக்கேழில் பரி தெரிப் பான்" [146] என்று வேதாந்ததேசிகர் பாடினார். மூவகை அளவு

---

142 தேசிக. அதிகார 42;
143 பெருமாள். 1. 1;
144 ஈடு. 2. 5. 8;
145 ஈடு 2. 5. 6;
146 பாதுகை. 729; (தமிழ் செய்தது)

பாடில்லாத இறைவனையும் "தன்மடியில் ஏகதேசத்தில் வைக்கும் படியான வைபவத்தை உடையனுகையாலே அநந்தன் என்னும் திருநாமத்தை உடையவன்" 147 என்று வேதாந்த தேசிகர் 'அநந்தன்' என்ற சேடப்பரஞ்சுடர்ப் பொருளை விளக்கினர். சுடர்மிகுசுருதியாகிய சேடச்சுடருள் அதன்வயமாயும் அதன் மயமாயும் துயரறுசுடரடியாகிய சேடிச்சுடர் விளங்குதலே ஆதுவாம். அது விளங்க என்றுமே யாத்துள்ள ஸ்வயம்வ்யக்த மொழியே வேதம், திருவாய்மொழி. அம்மொழியே ஆழ்மொழி. அஃது உணர்த்தும் பொருளே ஆழ்பொருள். வேதம் மொழிப் பரஞ்சுடர். இறைவன் பொருட்பரஞ்சுடர். இறைப்பொருளைப் பூரணமொழியாகிய வேதம் புல்லறிவினின்றும் புன்மொழியி னின்றும்மறைத்துக் காக்கின்றது. "இறைவனுகிய அவன்தானுமே அவனது இறைநிலைமாட்சியை அறிவானே அறியானே" 148 என்று வேதமும், "தனக்கும் தன்தன்மை அறிவரியான்" 149 என்று திருவாய்மொழியும் அரிதுணர்பான்மையதாகிய இறை நிலைஉண்மையை மறைத்துக் காட்டின. இறைநிலை உணர்வு தெளியத்தெளிய ஆழும், ஆழஆழத் தெளியும். அவதி இல்லாது என்றுமே ஆழ்ந்து ஆழ்ந்து தெளிவதாலும் தெளிந்து தெளிந்து ஆழ்வதாலும், தெளிவும் ஆழ்வும் அந்தாதித்து முடிவில்லாது என்றுமே "அப்பொழுதைக்கப்பொழுதென் ஆராவமுதமே" 150 என்று நிகழ்தலாலும், "முழுதுணர்நீர்மையினேர் என்றுமேகாண் கின்றார்" 151 என்று வேதம் தனது வேதத்தன்மையாகிய காட்டி. மறைத்தலையும் மறைத்துக்காட்டலையும் ஒருமிக்கக் காட்டிற்று.

ஆழ்வார்: பொருள்: ஆழ்வார்

ஆழமுற்றதாலும் அவதியற்றதாலும் வேதமொழியும் வேதப்பொருளும் கடல் என்னப்படும். ஆதலால் வேதமொழி

---

147 பரமபதஸோ. பரு. 8
148 வேதம் (தமிழ் செய்தது)
149 திருவாய் 8.4.6;
150 ,, 2.5.8;
151 வேதம் (தமிழ் செய்தது)

கடல்வண்ணம், வேதப்பொருள் கடல்வண்ணன். ஆழநிறத் துள்ளதால் அவற்றின் நிறம் ஆழிநிறம். அந்நிறமே "ஆரருள் சுரக்கும் நீதி அறநிறம்." 152 "ஊழி தோறூழி உருவும் பேரும் செய்கையும் வேறவன் வையம் காக்கும் ஆழிநீர் வண்ணன்" 153 என்ற அருட்கடல் வண்ணனே அன்னவன். அக்கடலில் ஆராத பெருங்காதல் வண்ணராய் ஆழ்வாரே ஆழ்வார். "ஈறிலின்பத் திருவெள்ளம் யான் மூழ்கினன்" 154 என்று ஆழ்ந்தாரே ஆழ்வார். அவ்வெள்ளமே வேதமொழியின் தெருள் வெள்ளம், வேதப்பொருளின் அருள்வெள்ளம். தீமனம் மாய்த்த பூரணத் திருமனத்தார்க்கே பூரணத் திருமொழியாகிய வேதம் பூரணப்பரம்பொருளைக் காட்டித் தருகின்றது. பூரணமனத் தார்க்கே காட்டியும் காட்டியே பூரணமனத்தராக்கியும் பொலி கின்றது. அழுக்குடம்புடையராகிய மானிடவர்மொழி இறைப் பொருளை உணர்த்தாது. அழுக்காறு சிறுமனத்தால் இறைநிலை எண்ணவொண்ணாது. ஆப்பும் மூப்பும், பசியும், பிணியும், பகை மையும், கொடுமையும், பற்றும் மற்றும் முற்றிப்போந்த பஞ்ச பூதஉடம்பையே காக்கும் பூதங்களுடைய கண்ணுக்கும் கருத்துக்கும் புலப்படாததே பரம்பொருள். திகைத்துக் குமைக்கும் சிறுமனம் கருதும் கருத்துக்கள் அச்சிறுமை யாலேயே ஒன்றோடொன்று முரணுநிற்கும். அவை ஒற்றுமையும் ஒருமையும் ஏற்கா. சிறுமனம் கருதுவது கண்டமும் துண்டமு மேயாம். உணரப்படவேண்டியதும் மொழியப்படவேண்டியதும் முயலப்படவேண்டியதும் பூரணமே. பூரணஉணர்வும், பூரண மொழியும், பூரணமுயற்சியுமே திரு. அத்திருவே வேதத்திரு, திருவாய்மொழித்திரு. அஃதே இறைவன் செய்யுள் திரு.

"செய்யுள்: படைப்பும், கோவிலும்"

செய்யுள் என்பது உயிராகிய பொருளுக்கு உடம்பென இடனாக யாக்கப்பெறும் கவியின் செயல் என்றும், அது இறைவன் விளங்கும் கோயில்போன்றதொன்றென்றும் மேற்கூறிய பொருள் இருமாமரபினரும் கண்டுணர்ந்து போற்றிவரும்

---

152 கம்ப இராமாவ உயுத். வீடண 137 ; 153 திருவாய் 7. 3.11; 154 திருவாய் 2. 6. 8

பேருண்மை. "பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல, சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின், வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்" [155] *என்ற பத்தழகோடும் யாத்துநிகழும் பல்கலைக்குரிசில் பவணந்திமுனிவர் நன்னூலும், "மல்லுறச் சந்திபொருத்தித் தகுஞ்சீர்கெடா தடுக்கிப், புந்திமகிழற்புத வணித்தாமுந்தையோர், செய்யுள்போற்செய்த திருக்கோயிலுள் ளிருந்தெம், பையுள் போக்கிற்கும் பரஞ்சோதி"* [156] *என்ற பெரும்புலமைத் துறைமங்கலம் சிவப்பிரகாசமுனிவர் "திருவெங்கையுலா" வும் இவ்வுண்மையை விளக்கும்.*

பகவத் விஷயம்

இந்த திவ்யப்ரபந்தம் இத்துணை மாட்சி யுடையதாதலின், இதை "பாவளருந்தமிழ்" [157] *"பண்ணமருந்தமிழ்"* [158] *"சந்தமிகுதமிழ்,"* [159] *"செந்தமிழ்,"* [160] *"முத்தமிழ்,"* [161] *"செய்யதமிழ்,"* [162] *"துய்யதமிழ்,"* [163] *என்று வேதாந்ததேசிகர் போற்றிப் பேணினர். இத்தமிழ்மறை அறிந்தாரைப் "பண்ணமருந் தமிழ்வேத மறிந்த பகவர்களே"* [164] *என்று புகழ்ந்தேத்தினர். ஆதலின் இம்மறை பகவத் விஷயம் என்ற தனிச்சிறப்புப் பெற்றது. இறைமை என்ற வேதமுதன்மையை உள்ளவாறு கண்டு அறத்திற்றிரியா வழிபாட்டில் ஒழுகி ஒழுக்கத்து நீத்தாராய், இறைவன் நடைகொள்ளத் தாம் பாதுகமாய் முன்னடைகொள் ளும் செந்நடையராகிய சடகோபர் முதலியவர் பொய்யாமொழித் தொகை உலகினை அறத்தில் நிறுத்தி உயிர்கட்கு ஆருயிர் அளித்துப் பேரின்பம் பயக்கும் வள்ளன்மை யுடையதாகும். சடகோபர் போன்ற தவத்திருமூர்த்திகளின் தூமொழிகள் பொன்னேபோல் போற்றத் தக்கனவாம். எந்நாட்டிலும் எம்*

---

155 நன்னூல். பொப. 268;
156 திருவெங்கையுலா. தலவிசேடம். 66;
157 தேசிக. அமிருதா. 35;
158 தேசிக. அதிகார. 22;
159 ,, ப்ரபந்தஸாரம் 18;
160 ,, நவமணிமாலை 10;
161 ,, அதிகார. 40;
162 தேசிக. அதிகார. 1;
163 ,, ப்ரபந்தஸாரம். 17;
164 ,, அதிகார. 22;

மொழியிலும் இறைவன் திருவருளால் அவனது தன்மையையும் நன்மையையும் உள்ளவாறு கண்டு உணர்த்தியுள்ள பற்றற்ற பெரியார்களின் வாக்கை நல்லார் உள்ளத்துக் கொள்வார்.

எம்மொழிக்கும் இறைவனே உட்பொருள்

உலகம் அனைத்தும் எவ்வாறு இறைவனதோ அவ்வாறு மொழியனைத்தும் இறைவனதே. மொழி அனைத்துக்கும் இறைவனே பொருள். உணர்த்தப்படும் பொருளின் பெருமையே மொழியின் பெருமைக்கு அடி. பொருளை ஒழித்து மொழி என்ற ஒன்றுக்கே பெருமை கூறவொண்ணாது. ஆர்வத்தோடு எம்மொழியில் இறைவனை உணர்த்திலும் உணர்த்தப்படும் பொருள் இறைவனாதலின் அப்பொருளின் பெருமை நோக்கி அம்மொழி போற்றப்பெறும். எம்மொழியில் இறைவனை இறைஞ்சிக் கூவினும் என் என்று அருள்மாரியாய் அவன்தானே முன்தோன்றிக் காத்து ஆட்கொள்ளும் விரதம் பூண்டுள்ளான். முன்னொருநாள் யானை ஒன்று துயர் பொறாது அதன் மொழியால் "முதலே!" என ஓலமிட்டது. இறைவனாலேயே உயிர்களின் துயரம் தீர வேண்டியதாலும், யானைக்கும் உள்ளுயிர் இறைவனே யாதலாலும், யானையின் மொழிக்கும் உட்பொருள் இறைவனே யாதலாலும், தன்னை நினைந்து ஓலமிட்ட யானையின் குறிப்புத் தன்னுள் மருவுமாற்றைத் தானே உணர்ந்து அதன் விளியின் ஆர்வத்துக்கு உருகி, வேதமயனான கருடன் தானும் பறக்கமாட்டாதும், திருவாய்மொழிமயமான பாதுகம் தானும் பதியமாட்டாதும் அவைகளும் பின்தாங்குமாறு தனது இறைக்கதியில் தன்னவ்னை அந்த யானையின் முன்தோன்றித் துயரம் தீர்த்த பேரருட் பரஞ்சுடர்க்கு, இவ்வுயிர் அவ்வுயிர், இத்திணை அத்திணை, இம்மொழி அம்மொழி, இந்நாடு அந்நாடு, என்ற வாசி யாதுமே இலாதாகும். தன்னைச் சரணமடைந்த எவர்க்கும் எவைக்கும் ஒக்கவே முகம்கொடுத்து அபயம் நல்கித் தன்னையே ஒப்பா

ரெனத் தோழமை கொள்ள வல்லதோர் தொல்லைமூலத் திரு வருளே இறைவன் என்ற மறைமுடிஉண்மையை இவ்வேழத் திருக்கதை நன்கு விளக்கும். "ஏழையோர் பேதநாத! நினக் கிலே, வேழமானுட வேற்றுமை யாதுமே" 165 என்று இவ்வுண் மையை வேதாந்ததேசிகர் பாடியருளினார். அந்த யானை கஜேந் திர ஆழ்வான் என்று தொழுதற்கொத்ததாயிற்று. ஆதலின் இறைவன் பால் தம்மை அறத்துறந்து விளங்கும் மெய்ஞ்ஞானி யர்களின் மொழி வேதமொழிபோல் போற்றிக் கொள்ளத்தக்க தேயாம். எந்நாட்டிலும் எம்மொழியிலும் நல்லடியார்கள் மொழிந் துள்ள நறுமொழி வேதத்தை ஒத்ததோர் வழிமொழி என்றது சான்றோர் தேறிய திண்ணமாயிற்று.

அகத்தியர்: பாணினி: காத்யாயனர்: வடமொழி: தென்மொழி

வடமொழியும் தமிழ்மொழியும் ஆரிட இலக்கணமுடையன வாதலால் அவ்விருமொழியினும் வேதம் விளங்கற்காகும் என் பது முன்னோர் துணிபு. பொருளை மொழிகாப்பதுபோல் மொழியை இலக்கணம் காக்கும். ஆரிடக்கண்ணுக்கே பொய்யா மொழியாகிய வேதத்தின் இலக்கணம் தோற்றும். ஆரிட இலக் கணம் ஒன்றிய இலக்கியமே வேதம். இலக்கிய இலக்கணங்கள் வ்யாகரணம். என்று காத்தியாயனர் வார்த்திகம் ஓதினார். இவ் வார்த்திகமுனிவர் தென்னாட்டவரே. ஆரியமும் தமிழும் அத் திறவ்யாகரணம். பாகதத்தை (ப்ராகிருதத்தை) "நாமகளின் முத்தமொழி" என்று 'சம்பு ரகசியமும்', 'விலாஸமொழி' 166 என்று வேதாந்ததேசிகர் அச்சுதசதகம் என்னும் பாகதநூலும் காட்டியுள்ளதால் அதுவும் சங்கத (ஸம்ஸ்கிருத) மொழியேயாம் வடமொழியும் தென்மொழியும் ஆரிட இலக்கணம் காக்கும் சங்கதத்தூமொழிகளாம். அகத்தியர் தென்மொழிக்கும் பாணினி வடமொழிக்கும் இலக்கணம் வகுத்த பேரிருடிகளாவார். இவ்

---

165 வரதராஜ. 40; (தமிழ் செய்தது) 166 அச்சுத. 2;

விருடிகளுக்கு முன்னமே அவ்விலக்கணம் கண்டு விரிக்கப் பெற்றிருப்பினும் இவ்விருவர்களால் இவ்விருமொழியும் சிறந்து விரிந்தமை தோற்ற இவ்விருவரையும் ஆன்றோர் சிறப்பித்து எடுத்தோதினார்கள். இருவரும் கண்ணுதற்கடவுளால் அருளப்பெற்ற பேரிருடிகள். எண்ணில் அகத்தியர் பின்னும் சிறப்புடையார் என்பர். "நீண்ட தமிழாலுலகை நேமியினளந்தான்" 167 என்றும், "நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கண் தழற்புரைசுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான்" 168 என்றும், "எண்டிசையு மேழுலகு மெவ்வுயிரு முய்யக், குண்டிகையினிற்பொருவில் காவிரி கொணர்ந்தான்" 169 என்றும், "தமிழெனு மளப்பருஞ் சலதி தந்தவன்" 170 என்றும் இவரது பெருமாட்சியைக் கம்பர் பாடினார். இறைவனுக்கு வரிவில் நல்கியவர் இத்தமிழ் முனிவரே. "வண்டமிழ் மாமுனி கொடுத்த வரிவில் வாங்கி" 171 என்ற குலசேகரப்பெருமாள் திருமொழியால் இராமபிரானுக்கு வரிவில் அளித்த இம்மாமுனியே 'வண்தமிழ் மாமுனி' என்ற திண்ணம் காண்க. "விந்த மடக்கிய விந்தையொடுங்கொரு சிந்துவு றிஞ்சியுடன், வந்தழி மாயர்கள் மாய்ந்தழி தீயென வாண்மைவ ளர்ந்தெழுமா, சிந்தனெ னுங்குட முந்தன்மொ ழித்திரு வென்றமி தொன்று ளதென், றந்தமு தன்மறை பாதுகை யச்சட கோபவ ணத்து மிழ்வாய்" 172 என்று வேதாந்த தேசிகர் விளக்கினார். அகத்தியரை "வண் தமிழ் மாமுனி" என்றதுபோல், விசுவாமித்திரரை "மந்திரம் கொள் மறைமுனிவன்" 173 என்று குலசேகரப்பெருமாள் போற்றினார். இம்மறைமுனி இறைவனுக்கு நல்கியது படைக்கலம். இதை "மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்தன சடையன் வெண்ணெய், அண்ணல்தன் சொல்லே யன்னப் படைக்கலம் அருளினானே" 174 என்று கவிச்சக்ரவர்த்தி விளம்பினார். "சடையன் அண்ணல்" என்றது யாரை என்று இவ்வரும் பாடல் கொண்டு தெளிக. வடமொழி மறைமுனி தந்தது படைக்கலம்.

---

167 இராமாவ. ஆர. அகத்திய. 36;
168 ,, 41;
169 ,, 46;
170 இராமாவ. பால. தாடகை 38;
171 குலசேகர. பெருமாள. திரு. 10. 5;
172 பாதுகா. .... 29; (தமிழ் செய்தது)
173 குலசேகர. பெருமாள். திரு. 10. 2;
174 இராமாவ. பால. வேள்வி 1;

வண்டமிழ்மாமுனி தந்தது வரிவில். இவ்வாறு இருமாமறைமுனி வரும் தந்தது படைக்கலமும் வரிவில்லும் என்றது நோக்கி ஆரியவேதமும் தமிழ்மறையும் படைக்கலமும் வில்லும்போல் ஒன்றியே தொழில் செய்து பயன் பயக்கும் என்ற குறிப்புக் காண்க. "புல்லாணித் தென்னன் தமிழும் வடமொழியும்"[175] என்றே ஒன்றிய இருமறைப் ப்ரஹ்மமாய் மங்கையர்கோனுக்குப் புல்லாணித்தெய்வச் சிலைப் பரமன் தன்னைக் காட்டியருளினான்.

அருளிச்செயல்: திவ்யப்ரபந்தம்: நாலாயிரம்

இவ்வாறு ஆரிட இலக்கணமொன்றிய தமிழ் யாப்பில் திருவாய்மொழியாயும் திருமொழியாயும் கட்டெழில் திகழும் வேதமாகிய நாலாயிரம் என்னும் இந்த திவ்யப்ரபந்தம் தண்டமிழ்த்துறைகள் தாங்கித் திகழும் திருக்கோயிலாகும். "பா, தாழிசை, துறை, விருத்தங்களாலாக்கப்பட்ட அறம், பொருள், இன்பம், வீடு, என்னுமவற்றின் மெய்ம்மையறிந்து விழுப்ப மெய்தி இம்மை மறுமை வழுவாமல் நிகழ்வாராதலின் இருமைக்கும் உறுதிபயப்பது யாப்பு"[176] என்று யாப்பாராய்ச்சியின் நன்மையையும் அது பயக்கும் பயனையும் குணசாகரர் விளக்கினார்

அத்திறயாப்புக்குப் படிச்சந்தமாய்த் திகழ்வது சடகோபர்·திருவாய்மொழி என்றது பெரியார் கண்டுள்ள திருக்காட்சி "ஆரணத்தின் படியெடுத்துக்கொண்டுநின்ற மாறன்"[177] என்றும், "ஆயிரமாமறைக்கும் அலங்கார மருந்தமிழ்க்குப், பாயிரம் நாற்கவிக்குப் படிச்சந்தம் பனுவற்கெல்லாந், தாயிரு நாற்றிசைக்குந் தனித்தீபம் தண்ணங்குருகூர்ச், சேயிருமாமரபுஞ் செவ்வியான்செய்த செய்யுட்களே."[178] என்றும், திருவாய்மொழி நாற்கவிக்குப் படிச்சந்தமாயும் பனுவற்கெல்லாம் தாயா

[175] பெரிய. திருமடல் 72; [177] சடகோப. 28; [178] சடகோப. 9;
[176] யாப்பருங். உரை.

யும் விளங்கும் தலைமையைக் கவித் தலைவராகிய கம்பர் பாடினுர். "தாய்மொழி" என்பது சடகோபர் திருவாய்மொழியின் திரு நாமம் ஒன்ருகும். "சந்தங்க ளிங்கோரு காந்தத்து நந்தச், சிந்திக்கு மையங்கள் சேதித்து நற்பா, துந்துன்னி ரேகைக்கண் ஒன்ரேன்று நோக்கித், தந்தந்த வேதங்கள் தாயோலை நீயே." 179 என்று இதன் தாய்மொழித் தன்மையையும், தொன்மையையும் வேதாந்த தேசிகர் போற்றினுர். திருக்குறள் பணித்தபின், திருவள்ளுவரும் ஔவையாரும் இடைக்காடரும் சந்தித்தபோது திருக்குறள் எத்தன்மைத்து என்றதைப்பற்றி அவர்கள் முறையே பாடியதாகக் கூறிவரும் ஐதிகப்பாடல்களும் இக் கருத்தை உட்கொண்டுள்ளது நோக்கத்தக்கது. "குறுமுனி வன் முத்தமிழும் என்குறளும் நங்கை, சிறுமுனிவன் வாய் மொழியின் சேய்" என்று திருவள்ளுவர் பாட, அதுகேட்ட ஔவையார் "ஐம்பொருளும் நாற்பொருளும் முப்பொருளிற் பெய்தமைத்த, செம்பொருளை எம்மறைக்கும் சேட்பொருளைத்—தண்குருகூர்ச்—சேய்மொழிய தென்பர்சிலர் யானிவ் வுலகின், தாய்மொழிய தென்பேன் தகைந்து" என்ன, அது கேட்ட இடைக்காடர், சேய்மொழியோ தாய்மொழியோ செப்பி லிரண்டுமொன்றவ், வாய்மொழியை யாரு மறையென்ப—வாய் மொழிபோ—லாய்மொழிகள் சால வுளவேனினு மம்மொழி யின், சாய்மொழி என்பேன்யான் தகைந்து" என்ருர், என்றது ஐதிகம். "பனுவற்கெல்லாந் தாய்", "தண்ணங்குருகூர்ச்சேய்" என்ற கல்வியிற் பெரிய கவிச்சக்ரவர்த்தியின் வழிமொழிதல் நோக்கி, இவ்வைதிகம் யாப்புறுத்தும் கருத்து அன்று தொட்டே சான்ருேர் உடன்பட்டுள்ளது காணலாகும். "திருவாய்மொழித்தேவர்" என்ற சடகோபருடைய தனிப் புகழ்த்திருநாமம் அவரது ஆரணத்தின் மும்மைத்தமிழ்வழங்கிய பேரிலக்கியவள்ளன்மைக்கு சிலாசாஸனம்போல் கல்லின்

---

179 பாதுகா. 820; (தமிழ் செய்தது)

மேலிட்ட கலமாய் விளங்காநின்றது. குறுமுனி இலக்கண முனி ஆயதுபோல் குருகூர்முனி இலக்கியமுனி ஆயினர். "இலக்கியமின்றி இலக்கணமின்றே" என்றது பேரகத்தியச் சூத்திரமாய்க் கையாளப்பட்டு வருகின்றது. பொதியமலைக்கும் பொருநையாற்றுக்கும் உற்ற தொடர்பின் உண்மைபோன்றது அவ்விரு முனிவர்களின் இலக்கண இலக்கியத் தொடர்பின் உண்மை. இதைக் கவிச்சக்ரவர்த்தி "தென்தமிழ்நாட் டகன் பொதியிற் றிருமுனிவன் தமிழ்ச்சங்கம் சேர்கிற் பீரேல், என்று மவ னுறைவிடமா மாதலினு னம்மலையை யிறைஞ்சி யேகிப், பொன்றிணிந்த புனல் பெருகும் பொருநையெனும் திருநதியின் பொழிய நாகக், கன்றுவளர் தடஞ்சாரல் மகேந்திரமா நெடுவரை யுங் கடலுங் காண்டிர்" [180] என்று இராமாவதாரத்திலும், "சந் தனச்சோலைக் குருகைப்பிரான்" [181] "பொதியந்தரு நதியங்குரு கூரெந்தை" [182] "இன்னுக்கலியின் சினம் பாழ்படுத்த நின்றான் சடகோபன் குன்று" [183] என்று சடகோபரந்தாதியிலும் குறிப் பிட்டார். அந்தாதித்தொடையில் செந்தமிழாயிரத்திருவிருத்தங் கள் பாடியருளிய பொய்யாமொழிப்பெருந்தேவே குருகூர்ச்சட கோபர். "ஒண்டமிழ்ச்சடகோபன்" [184] என்றும் "தேவுமற்றறி யேன்" [185] என்றும் மதுரகவியார் போற்றிய ஒண்டமிழ்ப் பெருந் தேவரே சடகோபர். முருகதாஸர் பாடிய புலவர் புராணத்து அகத்தியரை முதற்சருக்கத்திலும் அடுத்து சடகோபரை இரண் டாம் சருக்கத்திலும் பாடியுள்ளது இவ்விருமாமுனிவரின் இலக் கண இலக்கியத் தொடர்பை வலியுறுத்தும். தமிழிலக்கணம் ஐந்துக்கும், பேரிலக்கியமாய் அவியகத்துறைகள் தாங்கி ஐந் திணைநெறியளாவிச் சவியுறத்தெளிந்து திகழும் செய்யதமிழ்ப் பனுவற்கெல்லாம் தாயாய்த்திகழும் சுடர்மிகு சுருதிச்சோதியே சடகோபர் திருவாய்மொழி. "பண்ணுந் தமிழும் தவஞ் செய்தன பழநான்மறையும், மண்ணும் விசும்புந் தவஞ் செய்தன மகிழ்

---

180 கிட்கிந்தா. நாட. 31; 182 சடகோப. 71; 184 கண்ணிநுண். 7;
181 சடகோப. 34; 183 ,, 88; 185 ,, 2;

மாறன் செய்யுள், எண்ணுந் தகைமைக்குரிய மெய்யோகியர் ஞானமென்னுங், கண்ணும் மனமுஞ் செவியுந் தவஞ் செய்த காலத்திலே"[186] என்றும், "சுருதிப்பசுக்கள் சுரவாதவற்றைச் சுரப்பித்து அவை சொரியும் பொருட்பால் கரவாதுதவிய மாறன்"[187] என்றும் "குருகைப்பிரான் தமிழாற் சுருதிப் பொருளைப் பணித்தான்"[188] என்றும் சடகோபர் சோதிவாய் திறந்து சுரவாதவேதப்பசுக்களைச் செந்தமிழாற் சுரப்பித்து உதவிய பேரருளாளர் என்றும் கம்பர் விளக்கினார்.

பெரியாரைத் துணைக்கோடல்

திவ்யப்ரபந்தமாகிய இம்மறைக்குப் பெரியாரைத் துணைக் கோடல் என்ற பேரறத்தை விளக்குவதில் முக்கியநோக்கு. ஆதலின் இம்மறையில் அடியார்க்கு முதன்மை. மேலே கூறிய முறையாலே இருமறைக்கும் இறைவனைத் துணைக்கோடலினும் பெரியாரைத்துணைக்கோடலினும் நோக்கேயாயினும், அவ்விரு நோக்கும் ஒருநோக்கே யாயினும், ஒன்று ஒன்றை வலியுறுத் தும் நோக்குடையது. இறைவனுக்கு அடிமையை அம்மறை வலியுறுத்தும். அடியார்க்கடிமையை இம்மறை வலியுறுத்தும். வேதம் ஓதும் அந்தணர்கள் 'ஹரி' நாமம் உறுங்கால் கைகூப்பித் தொழுவார்கள். திருவாய்மொழி ஓதும் அவ்வந்தணர்களே 'சடகோபர்' நாமம் உறுங்கால் கைகூப்பித் தொழுவார்கள். சான்றோர் ஒழுக்கம் இவ்வாறு தொன்றுதொட்டே நடந்தேறிவருதல் இவ்வுண்மையடியாக நிகழ்ந்துவருமொன்றாகும். "கொடியெடுத் துக் கொண்டு நின்றேன்...........மாறனென்றால் பதுமக்கரங் கள் முடியெடுத்துக்கொண்ட அந்தணர் தாள் என்முடி யெனவே"[189] என்று இவ்வுண்மையைக் கம்பர் குறிப்பிட்டார். இறைவன்பாற் செய்யும் காதல் இறைவனடியாரளவும் பெருகாது

---

[186] சடகோப. 39; [187] சடகோப. 67; [188] சடகோப. 56;
[189] சடகோப. 58;

நில்லா என்ற உண்மை விளங்கும் திருமறையே திவ்யப்ரபந்தம். இறைவன்தானே தனக்கு ஆருயிர் என்று தோள்களாரத் தழுவித் தன்னையே நல்கி உகக்கும் அடியாரிடத்துக் காதல் செய்யாதார் இறைவன்பால் காதல் செய்தல் என்பது மெய்க் காதலாகாது. அடியாரளவாய்ச் செய்யும் இறைவன்பாற் காதன் மையே இறைவன்பாற் செய்யும் மெய்க்காதன்மையாகும். இல் லையேல் அது கள்ளக்காதலேயாம். கள்ளக்காதலை அறுப்பாரே சடகோபர். கள்ளக்காதலே சடம். சடத்தை முனிந்தாரே சட கோபர். ஈதே சூசித்து, சடகோபர், என்ற சொல்லின் பொருள். திருமாலையில் "கள்ளமேகாதல்செய்து" என்றதற்கு "க்ருத் ரிமபக்தி" என்றும் கண்ணிநுண்சிறுத்தாம்பில் "சடகோபன் என்நம்பியே என்றதற்கு "சடகோபன்" என்பக்கல் சாட்யத் தைப் போக்கினவர்.........இப்பாட்டில் "'சடகோபன்' என்று ரிறே, தோஷத்தைப் போக்கினபடியாலே" என்று க்ருத்ரிம பக்தியாகிய சாட்யத்தைப் (கள்ளக்காதலாகிய சடத்தை) போக்கி யதால் சடகோபர் என்ற பொருளைப் பெரியவாச்சான்பிள்ளை யும், "என்னுளக் களக்காதலை வென்றதால், பன்னு மெய்ப் பொருளுணர்களாம். புகழ், மன்னு மால்பதமம்முனி யந்நிலை, என்னு மச்சட சித்துக ளோத்துவன்" [190] என்று வேதாந்த தேசிகரும் விளக்கினார்கள். "விளக்காகி வேங்கடவெற்பினில் வாழும் விரைமலராள், வளக்காதல் கொண்டுறை மார்பன் திறத் துமுனதடியார், துளக்காதலில்லவர் தங்கள் திறத்திலுந் தூய்மை யெண்ணிக், களக்காதல் செய்யும் நிலை கடியாய் தூப் புற்காவலனே" [191] என்று பிள்ளையந்தாதி இக்கருத்தை பின் னும் விரித்தது. தான் தனது என்னும் அகப்புறப்பற்றும், தானே பெரியன் என்ற மருட்சியும் வேர்முதல் மாய்க்கும் அறமே அடியார்க்கடியாராய்த் துறந்து நிற்கும் பேரறம். வணக் கமும் ஒடுக்கமும் வழக்கமும் ஒழுக்கமும் கைவந்த மாசற்ற

---

[190] பாதுகா. 21. (தமிழ் செய்தது) [191] பிள்ளையந்தாதி. 16.

மறைவல்லார்க்கே இப்பேறாறநிலை உறும். இவ்வறனை வலியுறுத்தும் மறையே அருளிச்செயல், திவ்யப்ரபந்தம்.

மதுரகவி

சடகோபன் பொன்னடியையே மேவி இப்பேர்றத்துக்கு வழிகாட்டியாய் விளங்கும் அடியார்க்கு நல்லாரே மதுரகவியாழ்வார். "துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும், தொல்வழியே நல்வழிகள் துணிவார் கட்கே" [192] என்றது வேதாந்ததேசிகர் பணிப்பு. ஆதலின் இவர்மொழி நன்மொழி, இவர்கவி, மதுரகவி.

முதலாயிரம்

அருளிச்செயல், திவ்யப்ரபந்தம், என்னும் தமிழ்மறை நாலாயிரத்துள் இது முதலாயிரத்தின் வெளியீடு. இதில் அமைந்துள்ள ப்ரபந்தங்கள் ஒன்பது. பெரியாழ்வார் திருமொழி 473. ஆண்டாள்திருப்பாவை 30. நாச்சியார் திருமொழி 143. குலசேகராழ்வார் பெருமாள் திருமொழி 105. திருமழிசையாழ்வார் திருச்சந்தவிருத்தம் 120. தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலை 45. திருப்பள்ளியெழுச்சி 10. திருப்பாணாழ்வார் அமலனாதிபிரான் 10. மதுரகவியாழ்வார் கண்ணிநுண்சிறுத்தாம்பு 11. ஆக முதலாயிரம் மொத்தம் தொகை 947. திருவடியும் திருப்பாதுகமும் மாலைமாற்றில் ஒன்றி நிலைபேர்க்கலாகாது நிலைத்துள்ள தூய்மையும் இனிமையும் விளங்குமாறு இவ்வாயிரத்துக் கண்டுகொள்க.

அன்பில் அருள் அடங்கு மாற்றைப் பெரியாழ்வார் திருமொழியிலும் திருச்சந்த விருத்தத்திலும் திருப்பள்ளியெழுச்சியிலும், அருளில் அன்பு அடங்கு மாற்றைத் திருப்பாவையிலும் நாச்சியார் திருமொழியிலும் அமலனாதிபிரானிலும் திருமாலை

---

192 தேசிக. அதிகா. 2;

யிலும் கண்ணிநுண்சிறுத்தாம்பிலும், இரண்டும் ஒன்றினுள் ஒன்று அடங்குமாற்றைப் பெருமாள் திருமொழியிலும், கண்டு கொள்க. இறைவனும் அடியாரும், பாதமும் பாதுகமுமாய் ஒன்றும் ஒருமையின் பொதுமையை முதல் எட்டு ப்ரபந்தங்களும், அப்பொதுமையின் சிறப்பாயே அடியார் சேடியும் அடியார்க் கடியார் சேடருமாய் ஒன்றி நிலைகொள்ளல் என்ற உண்மையையும் அச்சிறப்பே இறைவன் சால உகந்த ஒருமை என்ற உண்மையையும் ஒன்பதாம் ப்ரபந்தமாகிய கண்ணிநுண்சிறுத்தாம்பு விளக்கும். அடியார்க்கடிமையே ப்ரணவம் விளக்கும் பேருண்மை. இவ்வுண்மையைச் சால விளக்கும் வேதமே திவ்யப்ரபந்தம். "வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற் காளென்று உள் கலந்தார் அடியார்தம்மடியார் எம்மடிகளே"[193] என்றும் "முனி மாப்பிரமமுதல் வித்தாய் உலகம் மூன்றும் முளைப்பித்த, தனிமாத் தேய்வத் தளிரடிக் கீழ்ப்புகுதலன்றி அவனடியார், நனிமாக்கலவி இன்பமேநாளும் வாய்க்க நங்கட்கே."[194] என்றும் சடகோபரும், "உற்றது முன்னடியார்க்கடிமை மற்றெல்லாம் பேசிலும் நின் திருவெட்டெழுத்தும் கற்று"[195] என்று திருமங்கையாழ்வாரும், "அடியார்க்கென்னை யாட்படுத்த விமலன்"[196] என்று திருப் பாணாழ்வாரும், இவ்வுண்மையை விளக்கினார்கள். அவற்றின் விளக்கமே கண்ணிநுண் சிறுத்தாம்பு. இறைவனை நோக்கச் சடகோபர் அடியார். அடியாரை நோக்கச் சடகோபர் இறைவர். இறைவனுக்கடியார் அடியார்க்கிறைவர் என்ற துணிபே அடியார் துணிபு, அடியார் வேதமாகிய திவ்யப்ரபந்தத்தின் துணிபு. "தேவு மற்றறியேன்" என்றதே அத்துணிபு. திருமழிசை ஆழ்வார் திருச்சந்த விருத்தத்தில் "அன்பிலன்றி ஆழியானை யாவர்காண வல்லரே"[197] என்று திண்ணம் தேறியதுபோல், நான்முகன் திருவந்தாதியில் "ஒரும் — பொருள்முடிவு

---

193 திருவாய். 3. 7. 9; 195 பெரிய.திரு. 8. 10. 3; 197 திருச்சந்த. 76;
194 ,, 8. 10. 7; 196 அமல. 1;

மித்தனையே எத்தவம் செய்தார்க்கும் அருள்முடிவு அது ஆழியான்பால்" 198 என்று திண்ணம் தேறினார்.

பெரியாழ்வார் : ஆண்டாள்

அருளென்னு மன்பின் குழவித்தமிழே பெரியாழ்வார் திருமொழி. அது ஆண்பாற்பிள்ளைத்தமிழ். "கேசவ நம்பியைக் கால்பிடிப்பாள் என்னு மிப்பேறு எனக்கு அருள்கண்டாய்" 199 "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் கண்டாய்" 200 என்று அருளின் பால் துறந்த அன்பின் தமிழே ஆண்டாள் பிள்ளைத்தமிழ். அது பெண்பாற்பிள்ளைத்தமிழ். இருபிள்ளைப் பருவமும் ஏழாவது ஆண்டுவரை நிகழும். எட்டாவது ஆண்டு முதல் ஆணுக்கு மாணவப்பருவம். பெண்ணுக்குப் பெதும்பைப் பருவம். அவ்விருபிள்ளைப்பருவம் பாடும் கவியே பிள்ளைக்கவி. தோற்றம், பாதாதிகேசம், காட்சி, தாலாட்டு, செங்கீரை, சப்பாணி, தளர்நடை, அச்சோ, புறம்புல்கல், அப்பூச்சிகாட்டல், அம்மமூட்டல், காதுகுத்தல், நீராட்டல், குழல்வாரல், பூச்சூட்டல், காப்பிடல், பிள்ளைவிளையாடல், அயலகத்தார்முறைபாடு, குழலூதல், உந்திபறத்தல், சுவடுரைத்தல், முதலியன பாடுதல் ஆண்பிள்ளைக்கவி. நீராடல், காமனைத்தொழுதல், சிற்றிலிழைத்தல், கூடலிழைத்தல், கனாக்கூறல், சுற்றமாக்கல், மணவிலக்கு, தூது, காட்சிப்பழகல், காட்சி, முதலியன கூறுதல் பெண்பிள்ளைக்கவி. "மதிதனில் ததும்பி மதலையாய் நின்று, பின்னரோர் முனியாய்ப் பரங்கதி பெறுக" 201 என்ற உபநிடதத்தூமொழியும், "ஆளுமா ணிறைவன் வையம் யாவுமாம் பாவை சாலும்" 202 என்ற அருமைக்கேள்விநூலின் முறையீடும் ஓதி உணர்ந்து ஒழுக்கம் கைவந்தாருடைய தூய்ய மதலைத்திருப்பருவமே பிள்ளைப்பருவம். மறைமுடி உணர்ந்த மதிநலப்பெரியார் தமது

198 நான்முகன். 2; 200 நாச்சியார். 1. 5; 202 (தமிழ் செய்தது)
199 நாச்சியார். 1. 8; 201 வேதம். (தமிழ் செய்தது)

நிலை உணர்ந்து சிறுமாமனிசராய்த் தாழ்மைப்பெருந்தவத்தில் நிலையூன்றி நிற்கும் பேரறப்பருவமே பேதைப்பருவம். அப் பேரறமே துறவு. துறவு நிகழ்வது உபநிடதமோதிய பக்கநோக் கறியாத் தூய்யபெருங்காமத்தின் கண்ணே யாம். "தன்னையுந் துறக்கும் தன்மை காமத்தே தங்கிற்றன்றே" 203 என்றார் கம்பர். அத்துறவின் வண்ணமே பிள்ளை, பேதை. சேடியும் சேடனும் பிள்ளையும் பேதையுமாய் மாலைமாற்றிக் கொள்ளும் கவியே பிள்ளைக்கவி. அப்பிள்ளையே கண்ணன் அப்பேதையே கோதை. பெதும்பைப்பருவம் தோன்றுமுன் பேதைப்பருவத்தே ஐந்தாம் ஆண்டுமுதல் ஆண்டுகாறும் அழகிய மணவாளனைப் பெறுதற் குக் காமனை நோக்கித் தவம் செய்தலைக் கூறுதல் பெண்பிள்ளைக் கவியின் உறுப்பில் ஒன்றாகும். அவ்வுறுப்புக்கு ஏற்கச் சில உறுப்பு வருணனை பாடுவது கவிமரபு. ஞானத்தையும் பத்தியை யும் உறுப்பாக்கும் மரபு அதுவாகும். அம்மரபு உணராது அவ் வருணனை பிள்ளைப்பருவத்துக்கு ஏற்காததென்றும் ஆதலின் அவ்வுறுப்புடைய பேதையைப் பெதும்பை என்றும் மங்கை என்றும் மடந்தை என்றும் அரிவை என்றும் கூறுவாரும் உளர். இது, ஏழாம் ஆண்டுக்குள்ளேயே பேதைப்பருவத்தில் ஆண்டு காறும் நிகழக்கூறிய நிலங்களின் இலக்கண அருமை உணராத தாகும். முந்தையோர் இலக்கணம் உணர்ந்தார்க்கே பிள்ளைப் பருவத்து நிகழக்கூறிய இத்திறமறைநிலங்களின் நுண்மையும் அவை உணர்விக்கும் பேருண்மையும் நுகர்விக்கும் பேரின்பமும் காணலாகும். "ஆன்ற பொருள் தந்த புலத்திற்றாகி அவியகத் துறைகள் தாங்கி" 204 என்று கவிச்சக்ரவர்த்தி இந்நுண் பொருளைச் "சவியுறத்" 205 தெளிவித்தார். ஆதலின் ஆண்டாள் திருப்பாவையை "உபநிஷத்" என்று வேதாந்ததேசிகர் விளம் பினார். ஆண்டாளைப் "பிஞ்சாய்ப்பழுத்தாள்" 206 என்று மண

203 இராமாவ. பால. உண்டாட்டு. 57; 204 இராமாவ. ஆரணி சூர்ப். 1; 205 இராமாவ. ஆரணி. சூர்ப் 1; 206 உப. ரத். 24;

வாளமாமுனிகள் விளக்கினர். பிஞ்சிற் பழுக்கச்செய்யும் கவியின் விசித்திரப்படைப்பே அதுவாகும். பேதைப்பருவத்தில் வீடென்னும் பேரின்பத்தை இறைவன் அருளும் திருவிருத்தமே அக்கவி. பேரின்பத்துறைகட்கே இலக்கணம் உறும். சிற்றின்பத்துக்குத் துறையுமில்லை முறையுமில்லை. துறையற்றதும் முறையற்றதுமாய் அறத்திற்றிரியும் வெறிக்கு இலக்கணம் உறாது. காயம் கழித்தார் காதலே மெய்க்காதல். அஃதே பேரின்பம். அறத்திற் பெருகும் பேரின்பத்துக்கே துறைகளும் முறைகளும் உற்றுள்ளன. பொறியவித்த தூயர் தவஞ்செய்து பெறும் நிறைமனம் கொண்டு பேரின்பத்துறைகள் நுகரப்படவேண்டும். "வண்டமிழ் நூற்க நோற்றேன் அடியார்க்கு இன்பமாரியே" 207 என்றது சடகோபர் தூய்ய திருவாய்மொழி. "வம்மின் புலவீர்" 208 என்றும் "சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவன்" 209 என்றும் புலவர்கள் நன்கு உணருமாறு ஒரு திருப்பதிகம் கொண்டு இதை விளக்கி அருளினர். சடகோபர் போன்ற பெரும் புனிதர் தூமொழியே தண்டமிழ்த்துறைகள் தாங்கி விளங்கும் பேரிலக்கியமாகும்.

முனிநிலை

சடகோபர் நிலை பிள்ளையினும் மேம்பட்டதென்று உபநிடதம் ஓதிய முனிநிலையும் அதன் மகுடமாகிய திருவடிநிலையுமாதலின் திவ்யப்ரபந்தத்துக்குத் தலைமை தாங்கி நிற்பது அவரது திருவாய்மொழியாம்.

> ஆறிய பொறிய ராய அடியரே புரியுங் காதல்
> ஏறிய திரும னத்தர்க் கெனவுணர் வூட்டும் வேதம்
> தேறிய தெருளி னின்பம் தெளிதமிழ் மகிழின் மாலை
> நாறிய மாற னுமை நான்மறை நாதன் வாழி.

—— **R. கேசவய்யங்கார்.**

207 திருவாய். 4. 5. 10; 208 திருவாய். 3. 9. 6; 209 திருவாய். 3. 9. 1;

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

நாலாயிர திவ்யப்ரபந்தம்

பொதுத்தனியன்கள்

ஸ்ரீவேதாந்ததேசிகர்

रामानुजदयापात्रं ज्ञानवैराग्यभूषणम् ।
श्रीमद्वेङ्कटनाथार्यं वन्दे वेदान्तदेशिकम् ॥

ராமாநுஜதயாபாத்ரம் ஜ்ஞாநவைராக்யபூஷணம்-
ஸ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேசிகம்.

ஸ்ரீமணவாளமாமுனிகள்

श्रीशैलेशदयापात्रं धीभक्त्यादिगुणार्णवम् ।
यतीन्द्रप्रवणं वन्दे रम्यजामातरं मुनिम् ॥

ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்-
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்.

குருபரம்பரை

लक्ष्मीनाथसमारम्भां नाथयामुनमध्यमाम् ।
अस्मदाचार्यपर्यन्तां वन्दे गुरुपरम्पराम् ॥

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம்-
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம்.

எம்பெருமானார்

यो नित्यमच्युतपदाम्बुजयुग्मरुक्म-
व्यामोहतस्तदितराणि तृणाय मेने ।
अस्मद्गुरोर्भगवतोऽस्य दयैकसिन्धोः
रामानुजस्य चरणौ शरणं प्रपद्ये ॥

யோ நித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம-
வ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாய மேநே-
அஸ்மத்குரோர்பகவதோஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே

நம்மாழ்வார்

माता पिता युवतयस्तनया विभूतिः
सर्वं यदेव नियमेन मदन्वयानाम् ।
आद्यस्य नः कुलपतेर्वकुलाभिरामं
श्रीमत्तदङ्घ्रियुगलं प्रणमामि मूर्ध्ना ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூதி:
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்,
ஆத்யஸ்ய ந: குலபதேர்வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா.

ஆழ்வார்கள் எம்பெருமானா

भूतं सरश्च महदाह्वयभट्टनाथ-
श्रीभक्तिसारकुलशेखरयोगिवाहान ।

भक्ताङ्घ्रिरेणुपरकालयतीन्द्रमिश्रान्
श्रीमत्पराङ्कुशमुनिं प्रणतोऽस्मि नित्यम् ॥

பூதம் ஸரஸ்ச மஹதாஹ்வயபட்டநாத
ஸ்ரீபக்திஸாரகுலசேகரயோகிவாஹாந்-
பக்தாங்க்ரிரேணுபரகாலயதீந்த்ரமிச்ராந்
ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம்.

முதலாயிரத்தனியன்கள்

பெரியாழ்வார் திருமொழி

गुरुमुखमनधीत्य प्राह वेदानशेषान्
नरपतिपरिक्लृप्तं शुल्कमादातुकामः ।
श्वशुरममरवन्द्यं रङ्गनाथस्य साक्षात्
द्विजकुलतिलकं तं विष्णुचित्तं नमामि ॥

குருமுகமநதீத்ய ப்ராஹ வேதாநசேஷாந்
நரபதிபரிக்லுப்தம் சுல்கமாதாதுகாம:-
ச்வசுரமமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி.

இருவிகற்பநேரிசை வெண்பா

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூ ரென்றொருகால்
சொன்னார் கழற்கமலஞ் சூடினோம்—முன்னாள்
கிழியறுத்தா னென்றுரைத்தோம் கீழ்மையினிற்சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே வந்து.

பாண்டியன்கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்
றீண்டிய சங்க மெடுத்தூத—வேண்டிய
வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று.

திருப்பாவை

नीलातुङ्गस्तनगिरितटीसुप्तमुद्बोध्य कृष्णं
पारार्थ्यं स्वं श्रुतिशतशिरस्सिद्धमध्यापयन्ती ।
स्वोच्छिष्टायां स्रजि निगलितं या बलात्कृत्य भुङ्क्ते
गोदा तस्यै नम इदमिदं भूय एवास्तु भूयः ॥

நீளாதுங்கஸ்தந கிரிதடீஸுப்தமுத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்யம் ஸ்வம் ச்ருதிசதசிரஸ்ஸித்தமத்யாபயந்தீ-
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே
கோதா தஸ்யை நம இதமிதம் பூய ஏவாஸ்து பூய:

இருவிகற்பநேரிசை வெண்பா

அன்னவயற் புதுவை யாண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம்—இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள்நற் பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே தொல்பாவை
பாடி யருளவல்ல பல்வளையாய்— நாடிநீ
வேங்கடவற் கென்னை விதியென்ற விம்மாற்றம்
நாங்கடவா வண்ணமே நல்கு.

நாச்சியார் திருமொழி

இருவிகற்பநேரிசை வெண்பா

அல்லிநாட் டாமரைமே லாரணங்கி னின்துணைவி
மல்லிநா டாண்ட மடமயில்—மெல்லியலாள்
ஆயர் குலவேந்த னாகத்தாள் தென்புதுவை
வேயர் பயந்த விளக்கு.

கட்டளைக்கலித்துறை

கோலச் சுரிசங்கை மாயன்செவ் வாயின் குணம்வினவும்
சீலத் தனள்தென் திருமல்லி நாடி செழுங்குழல்மேல்
மாலைத் தொடைதென் னரங்கருக் கீயும் மதிப்புடைய
சோலைக் கிளியவள் தூயநற் பாதம் துணைநமக்கே.

பெருமாள் திருமொழி

இருவிகற்பநேரிசை வெண்பா

இன்னமுத மூட்டுகே னிங்கேவா பைங்கிளியே
தென்னரங்கம் பாடவல்ல சீர்ப்பெருமாள்—பொன்னஞ்
சிலைசேர் நுதலியர்வேள் சேரலர்கோன் எங்கள்
குலசே கரனென்றே கூறு.

கட்டளைக்கலித்துறை

ஆரங் கெடப்பர னன்பர்கொள் ளாரென் றவர்களுக்கே
வாரங் கொடுகுடப் பாம்பிற்கை யிட்டவன் மாற்றலரை
வீரங் கெடுத்தசெங் கோற்கொல்லி காவலன் வில்லவர்கோன்
சேரன் குலசே கரன்முடி வேந்தர் சிகாமணியே.

திருச்சந்தவிருத்தம்

தரவுகொச்சகக்கலிப்பா

தருச்சந்தப் பொழில்தழுவு தாரணியின் துயர்தீரத்
திருச்சந்த விருத்தம்செய் திருமழிசைப் பரன்வருமூர்
கருச்சந்தும் காரகிலும் கமழ்கோங்கும் மணநாறும்
திருச்சந்தத் துடன்மருவு திருமழிசை வளம்பதியே.

இருவிகற்பநேரிசை வெண்பா

உலகும் மழிசையு முள்ளுணர்ந்து தம்மில்
புலவர் புகழ்க்கோலால் தூக்க—உலகுதன்னை
வைத்தெடுத்த பக்கத்தும் மாநீர் மழிசையே
வைத்தெடுத்த பக்கம் வலிது.

திருமாலை

இருவிகற்பநேரிசை வெண்பா

மற்றொன்றும் வேண்டா மனமே மதிளரங்கர்
கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழ்—உற்ற
திருமாலை பாடும் சீர்த்தொண்ட ரடிப்பொடியெம்
பெருமானை எப்பொழுதும் பேசு.

திருப்பள்ளியெழுச்சி

तमेव मत्वा परवासुदेवं रङ्गेशयं राजवदर्हणीयम् ।
प्राबोधकीं योऽकृत सूक्तिमालां भक्ताङ्घ्रिरेणुं भगवन्तमीडे ॥

தமேவ மத்வா பரவாஸுதேவம்
ரங்கேசயம் ராஜவதர்ஹணீயம்-

ப்ராபோதகீம் யோக்ருத ஸூக்திமாலாம்
பக்தாங்க்ரிரேணும் பகவந்தமீடே.

மண்டங் குடியென்பர் மாமறையோர் மன்னியசீர்
தொண்ட ரடிப்பொடி தொன்னகரம்—வண்டு
திணர்த்தவயல் தென்னரங்கத் தம்மானைப் பள்ளி
உணர்த்தும் பிரானுதித்த ஊர்.

அமலனாதிபிரான்

आपादचूडमनुभूय हरिं शयानं मध्ये कवेरदुहितुर्मुदितान्तरात्मा ।
अद्रष्टृतां नयनयोर्विषयान्तराणां यो निश्चिकाय मनवै मुनिवाहनं तम् ।

ஆபாதசூடமநுபூய ஹரிம் சயாநம்
மத்யே கவேரதுஹிதுர்முதிதாந்தராத்மா-
அத்ரஷ்ட்ருதாம் நயநயோர்விஷயாந்தராணாம்
யோ நிச்சிகாய மநவை முநிவாஹநம் தம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

காட்டவே கண்ட பாத கமலநல் லாடை யுந்தி
தேட்டரு முதர பந்தம் திருமார்பு கண்டம் செவ்வாய்
வாட்டமில் கண்கள் மேனி முனியேறித் தனிபுகுந்து
பாட்டினாற் கண்டு வாழும் பாணர்தாள் பரவினோமே.

கண்ணிநுண்சிறுத்தாம்பு

अविदितविषयान्तरश्शठारेरुपनिषदामुपगानमात्रभोगः ।
अपि च गुणवशात्तदेकशेषी मधुरकविर्हृदये ममाविरस्तु ॥

அவிதிதவிஷயாந்தர: சடாரேருபநிஷதாமுபகாநமாத்ரபோக:
அபிச குணவசாத்ததேகசேஷீ மதுரகவிர் ஹ்ருதயே மமாவிரஸ்து

இருவிகற்பநேரிசை வெண்பா

வேறொன்றும் நானறியேன் வேதந் தமிழ்செய்த
மாறன் சடகோபன் வண்குருகூர்—ஏறெங்கள்
வாழ்வாமென் றேத்தும் மதுரகவி யாரெம்மை
ஆள்வா ரவரே யரண்.

முதலாயிரத்தனியன்கள் முற்றும்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பெரியாழ்வார் திருமொழி

முதற்பத்து

திருப்பல்லாண்டு

குறள் வெண்செந்துறை

1 பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல்கோடி நூறாயிரமும்
மல்லாண்டதிண்டோள் மணிவண்ணா உன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு. 1

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்

2 அடியோமோடும்நின்னோடும்பிரிவின்றியாயிரம்பல்லாண்டு
வடிவாய்நின்வலமார்பினில்வாழ்கின்றமங்கையும்பல்லாண்டு
வடிவார்சோதிவலத்துறையுஞ்சுடராழியும்பல்லாண்டு
படைபோர்புக்குமுழங்குமப்பாஞ்சசன்னியமும்பல்லாண்டே. 2

3 வாழாட்பட்டுநின்றீருள்ளீரேல்வந்துமண்ணும்மணமுங்கொண்மின்
கூழாட்பட்டுநின்றீர்களையெங்கள்குழுவினிற்புகுதலொட்டோம்
ஏழாட்காலும்பழிப்பிலோம்நாங்களிராக்கதர்வாழிலங்கை
பாழாளாகப்படைபொருதானுக்குப்பல்லாண்டுகூறுதுமே. 3

4 ஏடுநிலத்திலிடுவதன்முன்னம்வந்தெங்கள்குழாம்புகுந்து
கூடுமனமுடையீர்கள்வரம்பொழிவந்தொல்லைக்கூடுமினோ
நாடுநகரமுநன்கறியநமோநாராயணாயவென்று
பாடுமனமுடைப்பத்தருள்ளீர்வந்துபல்லாண்டுகூறுமினே. 4

5 அண்டக்குலத்துக்கதிபதியாகியசுரரிராக்கதரை
இண்டக்குலத்தையெடுத்துக்களைந்தவிருடீகேசன்றனக்குத்
தொண்டக்குலத்திலுள்ளீர்வந்தடிதொழுதாயிரநாமஞ்சொல்லிப்
பண்டைக்குலத்தைத்தவிர்ந்துபல்லாண்டுபல்லாயிரத்தாண்டென்மினே. 5

6 எந்தைதந்தைதந்தைதந்தைதம்மூத்தப்பனேழ்படிகால்தொடங்கி
வந்துவழிவழியாட்செய்கின்றோம்திருவோணத்திருவிழவில்

அந்தியம்போதிலரியுருவாகியரியையழித்தவனைப்
பந்தனைதீரப்பல்லாண்டுபல்லாயிரத்தாண்டென்றுபாடுதுமே. 6

7 தீயிற்பொலிகின்றசெஞ்சுடராழிதிகழ்திருச்சக்கரத்தின்
கோயிற்பொறியாலேயொற்றுண்டுநின்றுகுடிகுடியாட்செய்கின்றோம்
மாயப்பொருபடைவாணனையாயிரந்தோளும்பொழிகுருதி
பாயச்சுழற்றியவாழிவல்லானுக்குப்பல்லாண்டுகூறுதுமே. 7

8 நெய்யிடைநல்லதோர்சோறும்நியதமுமத்தாணிச்சேவகமும்
கையடைக்காயுங்கழுத்துக்குப்பூணொடுகாதுக்குக்குண்டலமும்
மெய்யிட நல்லதோர்சாந்தமுந்தந்தென்னைவெள்ளுயிராக்கவல்ல
பையுடைநாகப்பகைக்கொடியானுக்குப்பல்லாண்டுகூறுவனே.

9 உடுத்துக்களைந்தநின்பீதகவாடையுடுத்துக்கலத்ததுண்டு
தொடுத்ததுழாய்மலர்சூடிக்களைந்தனசூடுமித்தொண்டர்களோம்
விடுத்ததிசைக்கருமந்திருத்தித்திருவோணத்திருவிழவில்
படுத்தபைந்நாகணைப்பள்ளிகொண்டானுக்குப்பல்லாண்டுகூறுதமே.

10 எந்நாளெம்பெருமான் உன்றனக்கடியோமென்றெழுத்துப்பட்ட
அந்நாளேயடியோங்களடிக்குடில்வீடுபெற்றுய்ந்ததுகாண்
செந்நாள்தோற்றித் திருமதுரையுள்சிலைகுனித்தைந்தலைய
பைந்நாகத்தலைப்பாய்ந்தவனேஉன்னைப்பல்லாண்டுகூறுதுமே.

11 அல்வழக்கொன்றுமில்லாவணிகோட்டியர்கோனபிமானதுங்கன்
செல்வனைப்போலத்திருமாலேநானுமுனக்குப்பழவடியேன்
நல்வகையால்நமோநாராயணாவென்றுநாமம்பலபரவிப்
பல்வகையாலும்பவித்திரனேஉன்னைப்பல்லாண்டுகூறுவனே.

12 பல்லாண்டென்றுபவித்திரனைப்பரமேட்டியைச்சார்ங்கமென்னும்
வில்லாண்டான்றன்னைவில்லிபுத்தூர்விட்டுசித்தன்விரும்பியசொல்
நல்லாண்டென்றுநவின்றுரைப்பார்நமோநாராயணாயவென்று
பல்லாண்டும்பரமாத்மனைச்சூழ்ந்திருந்தேத்துவர்பல்லாண்டே. 12

அடி வரவு :— பல் அடி வாழ் ஏடு அண்டம் எந்தை தீ நெய் உடுத்து எந்நாள் அல்வழக்கு பல்லாண்டு வண்ணம்.

[ஆதி கூறுதும் அநந்தரம் கூறுமின் அண்டம்என்மின் எந்தை பாடுதும் தீ உடுத்து எந்நாள் கூறுதும் நெய்யும் அல்லும் கூறுவனே.]

2. வண்ணமாடங்கள்

கண்ணன் திருவவதாரம்

கலிவிருத்தம்

13 *வண்ணமாடங்கள்சூழ்திருக்கோட்டியூர்*
கண்ணன்கேசவன்நம்பிபிறந்தினில்
எண்ணெய்சுண்ணமெதிரெதிர்தூவிடக்
கண்ணன்முற்றம்கலந்தளறாயிற்றே. 1

14 *ஓடுவார்விழுவாருகந்தாலிப்பார்*
நாடுவார்நம்பிரானெங்குற்றானென்பார்
பாடுவார்களும்பல்பறைகொட்டநின்
றாடுவார்களுமாயிற்றாய்ப்பாடியே. 2

15 *பேணிச்சீருடைப்பிள்ளைபிறந்தினில்*
காணத்தாம்புகுவார்புக்குப்போதுவார்
ஆணொப்பாரிவன்நேரில்லைகாண்திரு
வோணத்தானுலகாளுமென்பார்களே. 3

16 *உறியைமுற்றத்துருட்டிநின்றாடுவார்*
நறுநெய்பால்தயிர்நன்றாகத்தூவுவார்
செறிமென்கூந்தலவிழத்திளைத்தெங்கும்
அறிவழிந்தனராய்ப்பாடியாயரே. 4

17 *கொண்டதாளுறிகோலக்கொடுமழுத்*
தண்டினர்பறியோலைச்சயனத்தர்
விண்டமுல்லையரும்பன்னபல்லினர்
அண்டர்மிண்டிப்புகுந்துநெய்யாடினார். 5

18 *கையுங்காலும்நிமிர்த்துக்கடாரநீர்*
பையவாட்டிப்பசுஞ்சிறுமஞ்சளால்
ஐயநாவழித்தாளுக்கங்காந்திட
வையமேழுங்கண்டாள்பிள்ளைவாயுளே. 6

19 *வாயுள்வையகங்கண்டமடநல்லார்*
ஆயர்புத்திரனல்லனருந்தெய்வம்
பாயசீருடைப்பண்புடைப்பாலகன்
மாயனென்றுமகிழ்ந்தனர்மாதரே. 7

20 *பத்துநாளும்கடந்தவிரண்டாநாள்*
எத்திசையும்சயமரம்கோடித்து
மத்தமாமலைதாங்கியமைந்தனை
உத்தானம்செய்துகந்தனராயரே. 8

21 *கிடக்கில்தொட்டில்கிழியவுதைத்திடும்*
எடுத்துக்கொள்ளில்மருங்கையிறுத்திடும்
ஒடுக்கிப்புல்கிலுதரத்தேபாய்ந்திடும்
மிடுக்கிலாமையால்நான்மெலிந்தேன்நங்காய். 9

22 *செந்நெலார்வயல்சூழ்திருக்கோட்டியூர்*
மன்னுநாரணன்நம்பிபிறந்தமை
மின்னுநூல்விட்டுசித்தன்விரித்தவிப்
பன்னுபாடல்வல்லார்க்கில்லைபாவமே. 10

வண்ணம் ஓடுவார் பேணி உறியை கொண்ட கை வாயுள்
பத்து கிடக்கில் செந்நெல் சீதக்கடல்.

3. சீதக்கடல்

கண்ணன்திருப்பாதாதிகேசம்

கலித்தாழிசை

23 *சீதக்கடலுள்ளமுதன்னதேவகி*
கோதைக்குழலாளசோதைக்குப்போத்தந்த
பேதைக்குழவிபிடித்துச்சுவைத்துண்ணும்
பாதக்கமலங்கள்காணீரேபவளவாயீர்வந்துகாணீரே. 1

24 *முத்தும்மணியும்வயிரமும்நன்பொன்னும்*
தத்திப்பதித்துத்தலைப்பெய்தாற்போலெங்கும்
பத்துவிரலும்மணிவண்ணன்பாதங்கள்
ஒத்திட்டிருந்தவாகாணீரேயொண்ணுதலீர்வந்துகாணீரே. 2

25 பணைத்தோளிளவாய்ச்சிபால்பாய்ந்தகொங்கை
அணைத்தாரவுண்டுகிடந்தவிப்பிள்ளை
இணைக்காலில்வெள்ளித்தளைநின்றிலங்கும்
கணைக்காலிருந்தவாகாணீரேகாரிகையீர்வந்துகாணீரே. 3

26 உழந்தாள்நறுநெய்யோரோதடாவுண்ண
இழந்தாளெரிவினாலீர்த்தெழில்மத்தின்
பழந்தாம்பாலோச்சப்பயத்தால்தவழ்ந்தான்
முழந்தாளிருந்தவாகாணீரேமுகிழ்முலையீர்வந்துகாணீரே. 4

27 பிறங்கியபேய்ச்சிமுலைசுவைத்துண்டிட்டு
உறங்குவான்போலேகிடந்தவிப்பிள்ளை
மறங்கொளிரணியன்மார்வைமுன்கீண்டான்
குறங்குகளைவந்துகாணீரேகுவிமுலையீர்வந்துகாணீரே. 5

28 மத்தக்களிற்றுவசுதேவர்தம்முடை
சித்தம்பிரியாததேவகிதன்வயிற்றில்
அத்தத்தின்பத்தாநாள்தோன்றியவச்சுதன்
முத்தமிருந்தவாகாணீரேமுகிழ்நகையீர்வந்துகாணீரே. 6

29 இருங்கைமதகளிறீர்க்கின்றவனைப்
பருங்கிப்பறித்துக்கொண்டோடும்பரமன்றன்
நெருங்குபவளமும்நேர்நாணும்முத்தும்
மருங்குமிருந்தவாகாணீரேவாணுதலீர்வந்துகாணீரே. 7

30 வந்தமதலைக்குழாத்தைவலிசெய்து
தந்தக்களிறுபோல்தானேவிளையாடும்
நந்தன்மதலைக்குநன்றுமழகிய
உந்தியிருந்தவாகாணீரேயொளியிழையீர்வந்துகாணீரே. 8

31 அதிரும்கடல்நிறவண்ணனையாய்ச்சி
மதுரமுலையூட்டிவஞ்சித்துவைத்துப்
பதறப்படாமேபழந்தாம்பாலார்த்த
உதரமிருந்தவாகாணீரேஒளிவளையீர்வந்துகாணீரே 9

32 பெருமாவுரலில்பிணிப்புண்டிருந்தங்
கிருமாமருதமிறுத்தவிப்பிள்ளை

குருமாமணிப்பூண்குலாவித்திகழும்
திருமார்பிருந்தவாகாணீரேசேயிழையீர்வந்துகாணீரே. 10

33 நாள்களோர்நாலைந்துதிங்களளவிலே
தாளைநிமிர்த்துச்சகடத்தைச்சாடிப்போய்
வாள்கொள்வளையெயிற்றாருயிர்வவ்வினான்
தோள்களிருந்தவாகாணீரேசுரிகுழலீர்வந்துகாணீரே. 11

34 மைத்தடங்கண்ணியசோதைவளர்க்கின்ற
செய்த்தலைநீலநிறத்துச்சிறுப்பிள்ளை
நெய்த்தலைநேமியும்சங்கும்நிலாவிய
கைத்தலங்கள்வந்துகாணீரேகனங்குழையீர்வந்துகாணீரே. 12

35 வண்டமர்பூங்குழலாய்ச்சிமகனாகக்
கொண்டுவளர்க்கின்றகோவலர்குட்டற்கு
அண்டமும்நாடுமடங்கவிழுங்கிய
கண்டமிருந்தவாகாணீரேகாரிகையீர்வந்துகாணீரே. 13

36 எந்தொண்டைவாய்ச்சிங்கம்வாவென்றெடுத்துக்கொண்
டந்தொண்டைவாயமுதாதரித்தாய்ச்சியர்
தந்தொண்டைவாயால்தருக்கிப்பருகுமிச்
செந்தொண்டைவாய்வந்துகாணீரேசேயிழையீர்வந்துகாணீரே. 14

37 நோக்கியசோதைநுணுக்கியமஞ்சளால்
நாக்குவழித்துநீராட்டுமிந்நம்பிக்கு
வாக்குநயனமும்வாயுமுறுவலும்
மூக்குமிருந்தவாகாணீரேமொய்குழலீர்வந்துகாணீரே. 15

38 விண்கொளமரர்கள்வேதனைதீரமுன்
மண்கொள்வசுதேவர்தம்மகனாய்வந்து
திண்கொளசுரரைத்தேயவளர்கின்றான்
கண்களிருந்தவாகாணீரேகனவளையீர்வந்துகாணீரே. 16

39 பருவம்நிரம்பாமேபாரெல்லாமுய்ய
திருவின்வடிவொக்கும்தேவகிபெற்ற
உருவுகரியவொளிமணிவண்ணன்
புருவமிருந்தவாகாணீரேபூண்முலையீர்வந்துகாணீரே. 17

40 மண்ணும்மலையும்கடலுமுலகேழும்
உண்ணுந்திறத்துமகிழ்ந்துண்ணும்பிள்ளைக்கு
வண்ணமெழில்கொள்மகரக்குழையிவை
திண்ணமிருந்தவாகாணீரேசேயிழையீர்வந்துகாணீரே. 18

41 • முற்றிலும்தூதையும்முன்கைம்மேல்பூவையும்
சிற்றிலிழைத்துத்திரிதருவோர்களைப்
பற்றிப்பறித்துக்கொண்டோடும்பரமன்றன்
நெற்றியிருந்தவாகாணீரேநேரிழையீர்வந்துகாணீரே. 19

42 அழகியபைம்பொன்னின்கோலங்கைக்கொண்டு
கழல்கள்சதங்கைகலந்தெங்குமார்ப்ப
மழகன்றினங்கள்மறித்துத்திரிவான்
குழல்களிருந்தவாகாணீரேகுவிமுலையீர்வந்துகாணீரே. 20

தரவு கோச்சகக்கலிப்பா

43 சுருப்பார்குழலியசோதைமுன்சொன்ன
திருப்பாதகேசத்தைத்தென்புதுவைப்பட்டன்
விருப்பாலுரைத்தவிருபதோடொன்றும்
உரைப்பார்போய்வைகுந்தத்தொன்றுவர்தாமே. 21

சீதம் முத்து பணை உழந்தாள் பிறங்கிய மத்த இருங்கை வந்த அதிரும் பெருமா நாள்கள் மை வண்டு எம் நோக்கி விண் பரவும் மண் முற்றில் அழகிய சுருப்பார் மாணிக்கம்.

---

4. மாணிக்கங்கட்டி

கண்ணன் திருத்தாலாட்டு: தாலப்பருவம்

கலித்தாழிசை

44 மாணிக்கங்கட்டிவயிரமிடைகட்டி
ஆணிப்பொன்னாற்செய்தவண்ணச்சிறுத்தொட்டில்
பேணியுனக்குப்பிரமன்விடுதந்தான்
மாணிக்குறளனேதாலேலோவையமளந்தானேதாலேலோ. 1

45 உடையார்கனமணியோடொண்மாதளம்பூ
இடைவிரவிக்கோத்தவெழில்தெழ்கினோடு
விடையேறுகாபாலியீசன்விடுதந்தான்
உடையாயழேலழேல்தாலேலோவுலகமளந்தானே தாலேலோ. 2

46 எந்தம்பிரானாரெழில்திருமார்வற்குச்
சந்தமழகிய தாமரைத்தாளற்கு
இந்திரன்றானுமெழிலுடைக்கிண்கிணி
தந்துவனாய்நின்றான்தாலேலோதாமரைக்கண்ணனே தாலேலோ. 3

47 சங்கின்வலம்புரியும்சேவடிக்கிண்கிணியும்
அங்கைச்சரிவளையும்நாணுமரைத்தொடரும்
அங்கண்விசும்பிலமரர்கள்போத்தந்தார்
செங்கட்கருமுகிலேதாலேலோதேவகிசிங்கமேதாலேலோ. 4

48 எழிலார்திருமார்வுக்கேற்குமிவையென்று
அழகியவைம்படையுமாரமுங்கொண்டு
வழுவில்கொடையான்வயிச்சிராவணன்
தொழுதுவனாய்நின்றான்தாலேலோதூமணிவண்ணனேதாலேலோ. 5

49 ஓதக்கடலிலொளிமுத்தினாரமும்
சாதிப்பவளமுமசந்தச்சரிவளையும்
மாதக்கவென்றுவருணன்விடுதந்தான்
சோதிச்சுடர்முடியாய்தாலேலோசுந்தரத்தோளனேதாலேலோ. 6

50 கானார்நறுந்துழாய்கைசெய்தகண்ணியும்
வானார்செழுஞ்சோலைக்கற்பகத்தின்வாசிகையும்
தேனார்மலர்மேல்திருமங்கைபோத்தந்தாள்
கோனேஅழேலழேல்தாலேலோகுடந்தைக்கிடந்தானேதாலேலோ. 7

51 கச்சொடுபொற்சுரிகைக்காம்புகநகவளை
உச்சிமணிச்சுட்டியொண்டாள்நிரைப்பொற்பூ
அச்சுதனுக்கென்று அவனியாள்போத்தந்தாள்
நச்சுமுலையுண்டாய்தாலேலோநாராயணாஅழேல்தாலேலோ. 8

52 மெய்திமிருநானப்பொடியோடுமஞ்சளும்
செய்யதடங்கண்ணுக்கஞ்சனமும்சிந்தூரமும்
வெய்யகலைப்பாகிகொண்டுவளாய்நின்றாள்
ஐயாவழேலழேல்தாலேலோஅரங்கத்தணையானேதாலேலோ. 9

தரவுகோச்சகக்கலிப்பா

53 வஞ்சனையால்வந்தபேய்ச்சிமுலையுண்ட
அஞ்சனவண்ணனையாய்ச்சிதாலாட்டிய
செஞ்சொல்மறையவர்சேர்புதுவைப்பட்டன்சொல்
எஞ்சாமைவல்லவர்க்கில்லையிடர்தானே. 10

மாணிக்கம் உடை. எம் சங்கின் எழில் ஓதம் காணார் கச்சொடு மெய் வஞ்சனையால் தன்.

---

5. தன்முகத்து

அம்புலிப்பருவம்

கலிநிலைத்துறை

54 தன்முகத்துச்சுட்டிதூங்கத்தூங்கத்தவழ்ந்துபோய்
பொன்முகக்கிண்கிணியார்ப்பப்புழுதியளைகின்றான்
என்மகன்கோவிந்தன்கூத்தினையிளமாமதீ
நின்முகம்கண்ணுளவாகில்நீயிங்கேநோக்கிப்போ. 1

55 என்சிறுக்குட்டனெனக்கோரின்னமுதெம்பிரான்
தன்சிறுக்கைகளால்காட்டிக்காட்டியழைக்கின்றான்
அஞ்சனவண்ணனோடாடலாடவுறுதியேல்
மஞ்சில்மறையாதேமாமதிமகிழ்ந்தோடிவா. 2

56 சுற்றுமொளிவட்டம்சூழ்ந்துசோதிபரந்தெங்கும்
எத்தனைசெய்யிலுமென்மகன்முகம்நேரொவ்வாய்
வித்தகன்வேங்கடவாணனுன்னைவிளிக்கின்ற
கைத்தலம்நோவாமேயம்புலீகடிதோடிவா. 3

57 சக்கரக்கையன்தடங்கண்ணால்மலரவிழித்து
ஒக்கலைமேலிருந்துன்னையேசுட்டிக்காட்டுங்காண்
தக்கதறிதியேல்சந்திராசலம்செய்யாதே
மக்கட்பெறாதமலடனல்லையேல்வாகண்டாய். 4

58 அழகியவாயிலமுதவூறல்தெளிவுற
மழலைமுற்றாதவிளஞ்சொல்லாலுன்னைக்கூவுகின்றான்

குழகன்சிரீதரன்கூவக்கூவநீபோதியேல்
புழையிலவாகாதேநின்செவிபுகர்மாமதீ. 5

59 தண்டொடுசக்கரம்சார்ங்கமேந்தும்தடக்கையன்
கண்டுயில்கொள்ளக்கருதிக்கொட்டாவிகொள்கின்றான்
உண்டமுலைப்பாலறாகண்டாயுறங்காவிடில்
விண்டனில்மன்னியமாமதீவிரைந்தோடிவா. 6

60 பாலகனென்றுபரிபவம்செய்யேல்பண்டொருநாள்
ஆலினிலைவளர்ந்தசிறுக்கனவனிவன்
மேலெழப்பாய்ந்துபிடித்துக்கொள்ளும்வெகுளுமேல்
மாலைமதியாதேமாமதீமகிழ்ந்தோடிவா. 7

61 சிறியனென்றென்னிளஞ்சிங்கத்தையிகழேல்கண்டாய்
சிறுமையின்வார்த்தையைமாவலியிடைச்சென்றுகேள்
சிறுமைப்பிழைகொள்ளில்நீயுமுன்தேவைக்குரியைகாண்
நிறைமதீநெடுமால்விரைந்துன்னைக்கூவுகின்றான். 8

62 தாழியில்வெண்ணெய்தடங்கையாரவிழுங்கிய
பேழைவயிற்றெம்பிரான்கண்டாயுன்னைக்கூவுகின்றான்
ஆழிகொண்டுன்னையெறியும்ஐயுறவில்லைகாண்
வாழவுறுதியேல்மாமதீமகிழ்ந்தோடிவா. 9

63 மைத்தடங்கண்ணியசோதைதன்மகனுக்கிவை
ஒத்தனசொல்லியுரைத்தமாற்றமொளிபுத்தூர்
வித்தகன்விட்டுசித்தன்விரித்ததமிழிவை
எத்தனையும்சொல்லவல்லவர்க்கிடரில்லையே. 10

தன் என் சுற்றும் சக்கரம் அழகிய தண்டொடு
பாலகன் சிறியன் தாழியில் மை உய்ய.

---

6. உய்யவுலகு

செங்கீரைப்பருவம்

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

64 உய்யவுலகுபடைத்துண்டமணிவயிறா
ஊழிதோறூழிபலவாலினிலையதன்மேல்

பையவுயோகுதுயில்கொண்டபரம்பரனே
பங்கயநீணயனத்தஞ்சனமேனியனே
செய்யவள்நின்னகலம்சேமமெனக்கருதிச்
செல்வுபொலிமகரக்காதுதிகழ்ந்திலக
ஐயவெனக்கொருகாலாடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறேயாடுகவாடுகவே. 1

65 கோளரியின்னுருவங்கொண்டவுணனுடலம்
குருதிகுழம்பியெழக்கூருகிரால்குடைவாய்
மீளவவன்மகனைமெய்ம்மைகொளக்கருதி
மேலையமரர்பதிமிக்குவெகுண்டுவரக்
காளநன்மேகமவைகல்லொடுகால்பொழியக்
கருதிவரைக்குடையாக்காலிகள்காப்பவனே
ஆளவெனக்கொருகாலாடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறேயாடுகவாடுகவே. 2

66 நம்முடைநாயகனேநான்மறையின்பொருளே
நாவியுள்நற்கமலம்நான்முகனுக்கொருகால்
தம்மனையானவனேதரணிதலமுழுதும்
தாரகையின்னுலகும்தடவியதன்புறமும்
விம்மவளர்ந்தவனேவேழமுமேழ்விடையும்
விரவியவேலைதனுள்வென்றுவருமவனே
அம்மவெனக்கொருகாலாடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறேயாடுகவாடுகவே. 3

67 வானவர்தாம்மகிழவன்சகடமுருள
வஞ்சமுலைப்பேயின்நஞ்சமுதுண்டவனே
கானகவல்விளவின்காயுதிரக்கருதிக்
கன்றதுகொண்டெறியும்கருநிறவென்கன்றே
தேனுகனும்முரனும்திண்திறல்வெந்நரகன்
என்பவர்தாம்மடியச்செருவதிரச்செல்லும்
ஆனையெனக்கொருகாலாடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறேயாடுகவாடுகவே. 4

68 மத்தளவும்தயிரும்வார்குழல்நன்மடவார்
வைத்தனநெய்களவால்வாரிவிழுங்கியொருங்

கொத்தவிணைமருதமுன்னியவந்தவரை
ஊருகரத்தினொடுமுந்தியவெந்திறலோய்
முத்தினிளமுறுவல்முற்றவருவதன்முன்
முன்னமுகத்தணியார்மொய்குழல்களலைய
அத்தவெனக்கொருகாலாடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறேயாடுகவாடுகவே. 5

69 காயமலர்நிறவாகருமுகில்போலுருவா
கானகமாமடுவில்காளியனுச்சியிலே
தூயநடம்பயிலுஞ்சுந்தரவென்சிறுவா
துங்கமதக்கரியின்கொம்புபறித்தவனே
ஆயமறிந்துபொருவானெதிர்வந்தமல்லை
அந்தரமின்றியழித்தாடியதாளிணையாய்
ஆயவெனக்கொருகாலாடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறேயாடுகவாடுகவே. 6

70 துப்புடையாயர்கள்தம்சொல்வழுவாதொருகால்
தூயகருங்குழல்நற்றோகைமயிலனைய
நப்பினைதன்திறமாநல்விடையேழவிய
நல்லதிறலுடையநாதனுமானவனே
தப்பினபிள்ளைகளைத்தனமிகுசோதிபுகத்
தனியொருதேர்கடவித்தாயொடுகூட்டியவென்
அப்பவெனக்கொருகாலாடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறேயாடுகவாடுகவே. 7

71 உன்னையுமொக்கலையில்கொண்டுதமில்மருவி
உன்னொடுதங்கள்கருத்தாயினசெய்துவரும்
கன்னியரும்மகிழக்கண்டவர்கண்குளிரக்
கற்றவர்தெற்றிவரப்பெற்றவெனக்கருளி
மன்னுகுறுங்குடியாய்வெள்ளறையாய்மதிள்சூழ்
சோலைமலைக்கரசேகண்ணபுரத்தமுதே
என்னவலங்களைவாயாடுகசெங்கீரை
ஏழுலகும்முடையாயாடுகவாடுகவே. 8

72 பாலொடுநெய்தயிரொண்சாந்தொடுசண்பகமும்
பங்கயம்நல்லகருப்பூரமும்நாறிவரக்

கோலநறும்பவளச்செந்துவர்வாயினிடைக்
கோமளவெள்ளிமுளைப்போல்சிலபல்லிலக
நீலநிறத்தழகாரைம்படையின்நடுவே
நின்கனிவாயமுதமிற்றுமுறிந்துவிழ
ஏலுமறைப்பொருளேயாடுகசெங்கீரை
ஏழுலகும்முடையாயாடுகவாடுகவே. 9

73 செங்கமலக்கழலில்சிற்றிதழ்போல்விரலில்
சேர்திகழாழிகளும்கிண்கிணியுமரையில்
தங்கியபொன்வடமும் தாளநன்மாதுளையின்
பூவொடுபொன்மணியும்மோதிரமும்கிறியும்
மங்கலவைம்படையும்தோள்வளையும்குழையும்
மகரமும்வாளிகளும்சுட்டியுமொத்திலக
எங்கள்குடிக்கரசேயாடுகசெங்கீரை
ஏழுலகும்முடையாயாடுகவாடுகவே. 10

74 அன்னமும்மீனுருவுமாளரியும்குறளும்
ஆமையுமானவனே ஆயர்கள்நாயகனே
என்னவலம்களைவாயாடுகசெங்கீரை
ஏழுலகும்முடையாயாடுகவாடுகவென்
றன்னநடைமடவாளசோதையுகந்தபரி
சானபுகழ்ப்புதுவைப்பட்டனுரைத்ததமிழ்
இன்னிசைமாலைகளிப்பத்தும்வல்லாருலகில்
எண்டிசையும்புகழ்மிக்கின்பமதெய்துவரே. 11

உய்ய கோளரியின் நம்முடை வானவர் மத்து காய துப்பு உன்னை பாலொடு செங்கமலம் அன்னம் மாணிக்கக் கிண்கிணி.

7. மாணிக்கக்கிண்கிணி

சப்பாணிப்பருவம்

கலித்தாழிசை

75 மாணிக்கக்கிண்கிணியார்ப்பமருங்கின்மேல்
ஆணிப்பொன்னாற்செய்தவாய்ப்பொன்னுடைமணி

பேணிப்பவளவாய்முத்திலங்கப்பண்டு
காணிகொண்டகைகளால்சப்பாணி
கருங்குழற்குட்டனேசப்பாணி. 1

76 பொன்னரைநாணொடுமாணிக்கக்கிண்கிணி
தன்னரையாடத்தனிச்சுட்டிதாழ்ந்தாட
என்னரைமேல்நின்றிழிந்துங்களாயர்தம்
மன்னரைமேல்கொட்டாய்சப்பாணி
மாயவனேகொட்டாய்சப்பாணி. 2

77 பன்மணிமுத்தின்பவளம்பதித்தன்ன
என்மணிவண்ணனிலங்குபொற்றோட்டின்மேல்
நின்மணிவாய்முத்திலங்கநின்னம்மைதன்
அம்மணிமேல்கொட்டாய்சப்பாணி
ஆழியங்கையனேசப்பாணி. 3

78 தூநிலாமுற்றத்தேபோந்துவிளையாட
வானிலாவம்புலீசந்திராவாவென்று
நீநிலாநின்புகழாநின்றவாயர்தம்
கோநிலாவக்கொட்டாய்சப்பாணி
குடந்தைக்கிடந்தானேசப்பாணி. 4

79 புட்டியிற்சேறும்புழுதியும்கொண்டுவந்து
அட்டியமுக்கியகம்புக்கறியாமே
சட்டித்தயிரும்தடாவினில்வெண்ணெயுமுண்
பட்டிக்கன்றேகொட்டாய்சப்பாணி
பற்பநாபாகொட்டாய்சப்பாணி. 5

80 தாரித்துநூற்றுவர்தந்தைசொற்கொள்ளாது
போருய்த்துவந்துபுகுந்தவர்மண்ணாளப்
பாரித்தமன்னர்படப்பஞ்சவர்க்கன்று
தேருய்த்தகைகளால்சப்பாணி
தேவகிசிங்கமேசப்பாணி. 6

81 பரந்திட்டுநின்றபடுகடல்தன்னை
இரந்திட்டகைம்மேலெறிதிரைமோதக்

கரந்திட்டுநின்றகடலைக்கலங்கச்
சரந்தொட்டகைகளால்சப்பாணி
சார்ங்கவிற்கையனே சப்பாணி. 7

82 குரக்கினத்தாலேகுரைகடல்தன்னை
நெருக்கியணைகட்டிநீணீரிலங்கை
அரக்கரவியவடுகணையாலே
நெருக்கியகைகளால்சப்பாணி
நேமியங்கையனே சப்பாணி. 8

83 அளந்திட்டதூணை அவன் தட்டவாங்கே
வளர்ந்திட்டுவாளுகிர்ச்சிங்கவுருவாய்
உளந்தொட்டிரணியனொண்மார்வகலம்
பிளந்திட்டகைகளால்சப்பாணி
பேய்முலையுண்டானே சப்பாணி. 9

84 அடைந்திட்டமரர்களாழ்கடல்தன்னை
மிடைந்திட்டுமந்தரமத்தாகநாட்டி
வடம்சுற்றிவாசுகிவன்கயிறாகக்
கடைந்திட்டகைகளால்சப்பாணி
கார்முகில்வண்ணனே சப்பாணி. 10

தரவுகொச்சகக்கலிப்பா

85 ஆட்கொள்ளத்தோன்றியஆயர்தங்கோவினை
நாட்கமழ்பூம்பொழில்வில்லிபுத்தூர்ப்பட்டன்
வேட்கையால்சொன்னசப்பாணியீரைந்தும்
வேட்கையினால்சொல்லுவார்வினைபோமே. 11

மாணிக்கம் பொன் பன் தூநிலா புட்டியில் தாரித்து பரந்து
குரக்கினம் அளந்து அடைந்து ஆட்கொள்ளத் துடர்.

---

8. துடர்ச்சங்கிலிகை

தளர்நடைப்பருவம்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

86 துடர்ச்சங்கிலிகைசலார்பிலாரென்னத்தூங்குபொன்மணியொலிப்பப்
படுமும்மதப்புனல்சோரவாரணம்பையநின்றூர்வதுபோல்

உடன்கூடிக்கிண்கிணியாரவாரிப்பவுடைமணிபறைகறங்கத்
தடந்தாளிணைகொண்டுசார்ங்கபாணி தளர்நடைநடவானோ. 1

87 செக்கரிடைநுனிக்கொம்பில்தோன்றும்சிறுபிறைமுளைப்போல்
நக்கசெந்துவர்வாய்த்திண்ணைமீதேநளிர்வெண்பல்முளையிலக
அக்குவடமுடுத்தாமைத்தாலிபூண்டவநந்தசயநன்
தக்கமாமணிவண்ணன் வாசுதேவன் தளர்நடைநடவானோ. 2

88 மின்னுக்கொடியுமோர்வெண்டிங்களுஞ்சூழ்பரிவேடமுமாய்ப்
பின்னல்துலங்குமரசிலையும்பீதகச்சிற்றாடையொடும்
மின்னில்பொலிந்ததோர்கார்முகில்போலக்கழுத்தினில்காறையொடும்
தன்னில்பொலிந்தவிருடீகேசன் தளர்நடைநடவானோ. 3

89 கன்னற்குடம்திறந்தாலொத்தூறிக்கணகணசிரித்துவந்து
முன்வந்துநின்றுமுத்தந்தருமென்முகில்வண்ணன் திருமார்வன் [ன்
தன்னைப்பெற்றேற்குத்தன்வாயமுதம்தந்தென்னைத்தளிர்ப்பிக்கின்றா
தன்னெற்றுமாற்றலர்தலைகள்மீதே தளர்நடைநடவானோ. 4

90 முன்னலோர்வெள்ளிப்பெருமலைக்குட்டன்மொடுமொடுவிரைந்தோட
பின்னைத்தொடர்ந்ததோர்கருமலைக்குட்டன்பெயர்ந்தடியிடுவதுபோல்
பன்னியுலகம்பரவியோவாப்புகழ்ப்பலதேவனென்னும்
தன்நம்பியோடப்பின்கூடச்செல்வான் தளர்நடைநடவானோ. 5

91 ஒருகாலில்சங்கொருகாலிற்சக்கரமுள்ளடிபொறித்தமைந்த
இருகாலுங்கொண்டங்கங்கெழுதினாற்போலிலச்சினைபடநடந்து
பெருகாநின்றவின்பவெள்ளத்தின்மேல்பின்னையும்பெய்துபெய்து
கருகார்க்கடல்வண்ணன்காமர்தாதை தளர்நடைநடவானோ. 6

92 படர்பங்கயமலர்வாய்நெகிழப்பனிபடுசிறுதுளிபோல்
இடங்கொண்டசெவ்வாயூறியூறியிற்றிற்றுவீழநின்று
கடுஞ்சேக்கழுத்தின்மணிக்குரல்போலுடைமணிகணகணெனத்
தடந்தாளிணைகொண்டுசார்ங்கபாணி தளர்நடைநடவானோ. 7

93 பக்கம்கருஞ்சிறுப்பாறைமீதேயருவிகள்பகர்ந்தனைய
அக்குவடமிழிந்தேறித்தாழஅணியல்குல்புடைபெயர
மக்களுலகினில்பெய்தறியாமணிக்குழவியுருவின்
தக்கமாமணிவண்ணன்வாசுதேவன் தளர்நடைநடவானோ. 8

94 வெண்புழுதிமேற்பெய்துகொண்டளைந்ததோர்வேழத்தின்கருங்கன்று
தெண்புழுதியாடித்திரிவிக்கிரமன்சிறுபுகர்படவியர்த்து [போல்
ஒண்போதலர்கமலச்சிறுக்காலுறைத்தொன்றும்நோவாமே
தண்போதுகொண்டதவிசின்மீதேதளர்நடைநடவானோ. 9

95 திரைநீர்ச்சந்திரமண்டலம்போல்செங்கண்மால்கேசவன்றன்
திருநீர்முகத்துத்துலங்குசுட்டிதிகழ்ந்தெங்கும்புடைபெயரப்
பெருநீர்த்திரையெழுகங்கையிலும்பெரியதோர்தீர்த்தபலம்
தருநீர்ச்சிறுச்சண்ணந்துள்ளஞ்சோரத்தளர்நடைநடவானோ. 10

96 ஆயர்குலத்தினில்வந்துதோன்றியஅஞ்சனவண்ணன்றன்னைத்
தாயர்மகிழவொன்னார்தளரத்தளர்நடைநடந்ததனை
வேயர்புகழ்விட்டுசித்தன்சீரால்விரித்தனவுரைக்கவல்லார்
மாயன்மணிவண்ணன்றாள்பணியும்மக்களைப்பெறுவர்களே. 11

துடர் செக்கர் மின்னும் கன்னல் முன்னல் ஒருகாலில்
படர் பற்றும் வெண் திரை ஆயர் பொன்.

---

9. பொன்னியல்

அச்சோப்பருவம்

கலித்தாழிசை

97 பொன்னியல்கிண்கிணிசுட்டிபுறங்கட்டித்
தன்னியலோசைசலன்சலனென்றிட
மின்னியல்மேகம்விரைந்தெதிர்வந்தாற்போல்
என்னிடைக்கோட்டராவச்சோவச்சோ
எம்பெருமான்வாராவச்சோவச்சோ. 1

98 செங்கமலப்பூவிற்றேனுண்ணும்வண்டேபோல்
பங்கிகள்வந்துன்பவளவாய்மொய்ப்பச்
சங்குவில்வாள்தண்டுசக்கரமேந்திய
அங்கைகளாலேவந்தச்சோவச்சோ
வாரத்தழுவாய்வந்தச்சோவச்சோ. 2

99 பஞ்சவர்தூதனாய்ப்பாரதம்கைசெய்து
நஞ்சுமிழ்நாகம்கிடந்தநற்பொய்கைபுக்கு
அஞ்சப்பணத்தின்மேல்பாய்ந்திட்டருள்செய்த
அஞ்சனவண்ணனேயச்சோவச்சோ
ஆயர்பெருமானேயச்சோவச்சோ. 3

100 நாறியசாந்தம்நமக்கிறைநல்கென்னத்
தேறியவளும்திருவுடம்பில்பூச
ஊறியகூனினையுள்ளேயொடுங்கவன்
றேறவுருவினாயச்சோவச்சோ
எம்பெருமான்வாராயச்சோவச்சோ. 4

101 கழல்மன்னர்சூழக்கதிர்போல்விளங்கி
எழலுற்றுமீண்டேயிருந்துன்னைநோக்கும்
சுழலைப்பெரிதுடைத்துச்சோதனனை
அழலவிழித்தானேயச்சோவச்சோ
ஆழியங்கையனேயச்சோவச்சோ. 5

102 போரொக்கப்பண்ணியிப்பூமிப்பொறைதீர்ப்பான்
தேரொக்கவூர்ந்தாய்செழுந்தார்விசயற்காய்க்
காரொக்கும்மேனிக்கரும்பெருங்கண்ணனே
ஆரத்தழுவாய்வந்தச்சோவச்சோ
ஆயர்கள்போரேறேயச்சோவச்சோ. 6

103 மிக்கபெரும்புகழ்மாவலிவேள்வியில்
தக்கதிதன்றென்றுதானம்விலக்கிய
சுக்கிரன்கண்ணைத்துரும்பால்கிளறிய
சக்கரக்கையனேயச்சோவச்சோ
சங்கமிடத்தானேயச்சோவச்சோ. 7

104 என்னிதுமாயமென்னப்பனறிந்திலன்
முன்னையவண்ணமேகொண்டளவாயென்ன
மன்னுநமுசியைவானில்சுழற்றிய
மின்னுமுடியனேயச்சோவச்சோ
வேங்கடவாணனேயச்சோவச்சோ. 8

தன்கணத்தாலேசதிராநடந்துவந்து
என்கண்ணனென்னைப்புறம்புல்குவான்
எம்பிரானென்னைப்புறம்புல்குவான். 2

110 கத்தக்கதித்துக்கிடந்தபெருஞ்செல்வம்
ஒத்துப்பொருந்திக்கொண்டுண்ணாதுமண்ணாள்வான்
கொத்துத்தலைவன்குடிகெடத்தோன்றிய
அத்தன்வந்தென்னைப்புறம்புல்குவான்
ஆயர்களேறென்புறம்புல்குவான். 3

111 நாந்தகமேந்திய நம்பிசரணென்று
தாழ்ந்ததனஞ்சயற்காகித்தரணியில்
வேந்தர்களுட்கவிசயன்மணித்திண்டேர்
ஊர்ந்தவனென்னைப்புறம்புல்குவான்
உம்பர்கோனென்னைப்புறம்புல்குவான். 4

112 வெண்கலப்பத்திரங்கட்டிவிளையாடிக்
கண்பலபெய்தகருந்தழைக்காவின்கீழ்
பண்பலபாடிப்பல்லாண்டிசைப்பப்பண்டு
மண்பலகொண்டான்புறம்புல்குவான்
வாமனனென்னைப்புறம்புல்குவான். 5

113 சத்திரமேந்தித்தனியொருமாணியாய்
உத்தரவேதியில்நின்றவொருவனைக்
கத்திரியர்காணக்காணிமுற்றுங்கொண்ட
பத்திராகாரன்புறம்புலகுவான்
பாரளந்தானென்புறம்புல்குவான். 6

114 பொத்தவுரலைக்கவிழ்த்ததன்மேலேறித்
தித்தித்தபாலுந்தடாவினில்வெண்ணெயும்
மெத்தத்திருவயிறாரவிழுங்கிய
அத்தன்வந்தென்னைப்புறம்புல்குவான்
ஆழியானென்னைப்புறம்புல்குவான். 7

115 மூத்தவைகாணமுதுமணற்குன்றேறிக்
கூத்துவந்தாடிக்குழலாலிசைபாடி

வாய்த்தமறையோர்வணங்கவிமையவர்
ஏத்தவந்தென்னைப்புறம்புல்குவான்
எம்பிரானென்னைப்புறம்புல்குவான். 8

116 கற்பகக்காவுகருதியகாதலிக்கு
இப்பொழுதீவனென்றிந்திரன்காவினில்
நிற்பனசெய்துநிலாத்திகழ்முற்றத்துள்
உய்த்தவனென்னைப்புறம்புல்குவான்
உம்பர்கோனென்னைப்புறம்புல்குவான். 9

தரவுகோச்சகக்கலிப்பா.

117 ஆய்ச்சியன்றாழிப்பிரான்புறம்புல்கிய
வேய்த்தடந்தோளிசொல்விட்டுசித்தன்மகிழ்ந்து
ஈத்ததமிழிவையீரைந்தும்வல்லவர்
வாய்த்தநன்மக்களைப்பெற்றுமகிழ்வரே. 10

வட்டு கிண்கிணி கத்த நாந்தகம் வெண்கலம் **சத்திரம்** பொத்த மூத்தவை கற்பக ஆய்ச்சி மெச்சூது.

இரண்டாம் பத்து

1. மெச்சூது

அப்பூச்சி காட்டல்

கலித்தாழிசை

118 மெச்சூதுசங்கமிடத்தான்நல்வேயூதி
பொய்ச்சூதில்தோற்றபொறையுடைமன்னர்க்காய்ப்
பத்தூர்பெறாதன்றுபாரதங்கைசெய்த
அத்தூதனப்பூச்சிகாட்டுகின்றா
னம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். 1

119 மலைபுரைதோள்மன்னவரும்மாரதருமற்றும்
பலர்குலையநூற்றுவரும்பட்டழியப்பார்த்தன்
சிலைவளையத்திண்டேர்மேல்முன்னின்றசெங்க
ணலவலைவந்தப்பூச்சிகாட்டுகின்றா
னம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். 2

120 காயுநீர்புக்குக்கடம்பேறிக்காளியன்
தீயபணத்தில்சிலம்பார்க்கப்பாய்ந்தாடி
வேயின்குழலூதிவித்தகனாய்நின்ற
ஆயன்வந்தப்பூச்சிகாட்டுகின்றா
னம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். 3

121 இருட்டில்பிறந்துபோயேழைவல்லாயர்
மருட்டைத்தவிர்ப்பித்துவன்கஞ்சன்மாளப்
புரட்டியந்நாள்எங்கள்பூம்பட்டுக்கொண்ட
அரட்டன்வந்தப்பூச்சிகாட்டுகின்றா
னம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். 4

122 சேப்பூண்டசாடுசிதறித்திருடிநெய்க்
காப்பூண்டுநந்தன்மனைவிகடைதாம்பால்
சோப்பூண்டுதுள்ளித்துடிக்கத்துடிக்கவன்
றாப்பூண்டானப்பூச்சிகாட்டுகின்றா
னம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். 5

123 செப்பிளமென்முலைத்தேவகிநங்கைக்குச்
சொப்படத்தோன்றித்தொறுப்பாடியோம்வைத்த
துப்பமும்பாலும்தயிரும்விழுங்கிய
அப்பன்வந்தப்பூச்சிகாட்டுகின்றா
னம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். 6

124 தத்துக்கொண்டாள்கொலோதானேபெற்றாள்கொலோ
சித்தமனையாளசோதையிளஞ்சிங்கம்
கொத்தார்கருங்குழற்கோபாலகோளரி
அத்தன்வந்தப்பூச்சிகாட்டுகின்றா
னம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். 7

125 கொங்கைவன்கூனிசொற்கொண்டுகுவலயத்
துங்கக்கரியும்பரியுமிராச்சியமும்
எங்கும்பரதற்கருளிவன்கானடை
அங்கண்ணனப்பூச்சிகாட்டுகின்றா
னம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். 8

126 பதகமுதலைவாய்ப்பட்டகளிறு
கதறிக்கைகூப்பியென்கண்ணாகண்ணாவென்ன
உதவப்புள்ளூர்ந்தங்குறுதுயர்தீர்த்த
அதகன்வந்தப்பூச்சிகாட்டுகின்றா
னம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான்

தரவுகொச்சகக்கலிப்பா

127 வல்லாளிலங்கைமலங்கச்சரந்துரந்த
வில்லாளனைவிட்டுசித்தன்விரித்த
சொல்லார்ந்தஅப்பூச்சிப்பாடலிவைபத்தும்
வல்லார்போய்வைகுந்தம்மன்னியிருப்பரே. 10

மெச்சு மலை காயும் இருட்டில் சேப்பூண்ட செப்பு தத்து
கொங்கை பதகம் வல்லாள் அரவணையாய்.

---

2. அரவணையாய்

அம்மமுண்ண வழைத்தல்

கலிவிருத்தம்

128 அரவணையாயாயரேறேயம்மமுண்ணத்துயிலெழாயே
இரவுமுண்ணாதுறங்கிநீபோயின்றுமுச்சிகொண்டதாலோ
வரவும்காணேன்வயிறசைந்தாய்வனமுலைகள்சோர்ந்துபாயத்
திருவுடையவாய்மடுத்துத்திளைத்துதைத்துப்பருகிடாயே. 1

129 வைத்தநெய்யுங்காய்ந்தபாலும்வடிதயிரும்நறுவெண்ணெயும்
இத்தனையும்பெற்றறியேனெம்பிரான்நீபிறந்தபின்னை
எத்தனையுஞ்செய்யப்பெற்றாயேதுஞ்செய்யேன்கதம்படாதே
முத்தனையமுறுவல்செய்துமூக்குறிஞ்சிமுலையுணாயே. 2

130 தந்தம்மக்களழுதுசென்றால்தாய்மாராவார்தரிக்ககில்லார்
வந்துநின்மேற்பூசல்செய்யவாழவல்லவாசுதேவா
உந்தையாருன்திறத்தரல்லருன்னைநானொன்றுரப்பமாட்டேன்
நந்தகோபனணிசிறுவாநான்சுரந்தமுலையுணாயே. 3

131 கஞ்சன்றன்னால்புணர்க்கப்பட்டகள்ளச்சகடுகலக்கழியப்
பஞ்சியன்னமெல்லடியால்பாய்ந்தபோதுநொந்திடுமென்று

அஞ்சினேன்காண்அமரர்கோவேஆயர்கூட்டத்தளவன்றாலோ
கஞ்சனையுன்வஞ்சனையால்வலைப்படுத்தாய்முலையுணாயே. 4

132 தீயபுந்திக்கஞ்சனுன்மேல்சினமுடையன்சோர்வுபார்த்து
மாயந்தன்னால்வலைப்படுக்கில்வாழகில்லேன்வாசுதேவா [டா
தாயர்வாய்ச்சொல்கருமங்கண்டாய்சாற்றிச்சொன்னேன்போகவேண்
ஆயர்பாடிக்கணிவிளக்கேயமர்ந்துவந்தென்முலையுணாயே. 5

133 மின்னனையநுண்ணிடையார்விரிகுழல்மேல்நுழைந்தவண்டு
இன்னிசைக்கும்வில்லிபுத்தூரினிதமர்ந்தாயுன்னைக்கண்டார்
என்னநோன்புநோற்றாள்கொலோவிவனைப்பெற்றவயிறுடையாள்
என்னும்வார்த்தையெய்துவித்தவிருடீகேசாமுலையுணாயே. 6

134 பெண்டிர்வாழ்வார்நின்னொப்பாரைப்பெறுதுமென்னுமாசையாலே
கண்டவர்கள்போக்கொழிந்தார்கண்ணிணையால்கலக்கநோக்கி
வண்டுலாம்பூங்குழலினாருன்வாயமுதமுண்ணவேண்டிக்
கொண்டுபோவான்வந்துநின்றார்கோவிந்தாநீமுலையுணாயே. 7

135 இருமலைபோலெதிர்ந்தமல்லரிருவரங்கமெரிசெய்தாயுன்
திருமலிந்துதிகழ்மார்வுதேக்கவந்தென்னல்குலேறி
ஒருமுலையைவாய்மடுத்தொருமுலையைநெருடிக்கொண்டு
இருமுலையும்முறைமுறையாயேங்கியேங்கியிருந்துணாயே. 8

136 அங்கமலப்போதகத்திலணிகொள்முத்தம்சிந்தினாற்போல்
செங்கமலமுகம்வியர்ப்பத்தீமைசெய்திம்முற்றத்தூடே
அங்கமெலாம்புழுதியாகவளையவேண்டாவம்மவிம்ம
அங்கமரர்க்கமுதளித்தவமரர்கோவேமுலையுணாயே. 9

137 ஓடவோடக்கிண்கிணிகளொலிக்குமோசைப்பாணியாலே
பாடிப்பாடிவருகின்றாயைப்பற்பநாபனென்றிருந்தேன்
ஆடியாடியசைந்தசைந்திட்டதனுக்கேற்றகூத்தையாடி
ஓடியோடிப்போய்விடாதேயுத்தமாநீமுலையுணாயே. 10

138 வாரணிந்தகொங்கையாய்ச்சிமாதவாவுண்ணென்றமாற்றம்
நீரணிந்தகுவளைவாசம்நிகழநாறும்வில்லிபுத்தூர்
பாரணிந்ததொல்புகழான்பட்டர்பிரான்பாடல்வல்லார்
சீரணிந்தசெங்கண்மால்மேல்சென்றசிந்தைபெறுவர்தாமே. 11

அரவணையாய் வைத்த தந்தம் கஞ்சன் தீய மின் பெண்டிர்
இருமலை அங்கமல ஓட வாரணிந்த போய்ப்பாடு.

3. போய்ப்பாடு

காது குத்தல்

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

139 போய்ப்பாடுடையநின் தந்தையும்தாழ்த்தான்
பொருதிறல்கஞ்சன் கடியன்
காப்பாருமில்லைகடல்வண்ணா உன்னைத்
தனியேபோய் எங்குந்திரிதி
பேய்ப்பால்முலையுண்டபித்தனே
கேசவநம்பீ உன்னைக்காதுகுத்த
ஆய்ப்பாலர்பெண்டுகளெல்லாரும்வந்தார்
அடைக்காய்திருத்திநான்வைத்தேன். 1

140 வண்ணப்பவளமருங்கினிற்சாத்தி
மலர்ப்பாதக்கிண்கிணியார்ப்ப
நண்ணித்தொழுமவர்சிந்தைபிரியாத
நாராயணாஇங்கேவாராய்
எண்ணற்கரியபிரானே திரியை
யெரியாமேகாதுக்கிடுவன்
கண்ணுக்குநன்றுமழகுமுடைய
கனகக்கடிப்புமிவையா. 2

141 வையமெல்லாம்பெறும்வார்கடல்வாழும்
மகரக்குழைகொண்டுவைத்தேன்
வெய்யவேகாதில்திரியையிடுவன்
நீவேண்டியதெல்லாம்தருவன்
உய்யவிவ்வாயர்குலத்தினில்தோன்றிய
ஒண்சுடராயர்கொழுந்தே
மையன்மைசெய்திளவாய்ச்சியருள்ளத்து
மாதவனேஇங்கேவாராய். 3

142 வணநன்றுடையவயிரக்கடிப்பிட்டு
வார்காதுதாழப்பெருக்கிக்
குணநன்றுடையஇக்கோபாலபிள்ளைகள்
கோவிந்தாநீசொல்லுக்கொள்ளாய்

இணைநன்றழகியவிக்கடிப்பிட்டா
லினியபலாப்பழந்தந்து
சுணைநன்றணிமுலையுண்ணத்தருவன்நான்
சோத்தம்பிரானிங்கேவாராய். 4

143 சோத்தம்பிரானென்றிரந்தாலுங்கொள்ளாய்
சுரிகுழலாரொடுநீபோய்க்
கோத்துக்குரவைபிணைந்திங்குவந்தால்
குணங்கொண்டிடுவனோநம்பீ
பேர்த்தும்பெரியனவப்பம்தருவன்
பிரானேதிரியிடவொட்டில்
வேய்த்தடந்தோளார்விரும்புகருங்குழல்
விட்டுவேநீயிங்கேவாராய். 5

144 விண்ணெல்லாங்கேட்கவழுதிட்டாயுன்
வாயில்விரும்பியதனைநான்நோக்கி
மண்ணெல்லாங்கண்டென்மனத்துள்ளேயஞ்சி
மதுசூதனேயென்றிருந்தேன்
புண்ணேதுமில்லையுன்காதுமறியும்
பொறுத்திறைப்போதிருநம்பீ
கண்ணாவென்கார்முகிலேகடல்வண்ணா
காவலனேமுலையுணாயே. 6

145 முலையேதும்வேண்டேனென்றோடி
நின்காதிற்கடிப்பைப்பறித்தெறிந்திட்டு
மலையையெடுத்துமகிழ்ந்துகல்மாரிகாத்துப்
பசுநிரைமேய்த்தாய்
சிலையொன்றிறுத்தாய்திரிவிக்கிரமா
திருவாயர்பாடிப்பிரானே
தலைநிலாப்போதேயுன்காதைப்பெருக்காதே
விட்டிட்டேன்குற்றமேயன்றே. 7

146 என்குற்றமேயென்றுசொல்லவும்வேண்டாகா
ணென்னைநான்மண்ணுண்டேனாக
அன்புற்றுநோக்கியடித்தும்பிடித்து
மனைவர்க்குங்காட்டிற்றிலையே

வன்புற்றரவின்பகைக்கொடிவாமனநம்பீ
யுன்காதுகள்தூரும்
துன்புற்றனவெல்லாம்தீர்ப்பாய்பிரானே
திரியிட்டுச்சொல்லுகேன்மெய்யே. 8

147 மெய்யென்றுசொல்லுவார்சொல்லைக்கருதித்
தொடுப்புண்டாய்வெண்ணெயையென்று
கையைப்பிடித்துக்கரையுரலோடென்னைக்
காணவேகட்டிற்றிலையே
செய்தனசொல்லிச்சிரித்தங்கிருக்கில்
சிரீதராவுன்காதுதூரும்
கையிற்றிரியையிடுகிடாயிந்நின்ற
காரிகையார்சிரியாமே. 9

148 காரிகையார்க்குமுனக்குமிழுக்குற்றென்
காதுகள்வீங்கியெரியில்
தாரியாதாகில்தலைநொந்திடுமென்று
விட்டிட்டேன்குற்றமேயன்றே
சேரியிற்பிள்ளைகளெல்லாருங்காது
பெருக்கித்திரியவுங்காண்டி
ஏர்விடைசெற்றிளங்கன்றெறிந்திட்ட
விருடீகேசாவென்றன்கண்ணே. 10

149 கண்ணைக்குளிரக்கலந்தெங்குநோக்கிக்
கடிகமழ்பூங்குழலார்கள்
எண்ணத்துளென்றுமிருந்துதித்திக்கும்
பெருமானேயெங்களமுதே
உண்ணக்கனிகள்தருவன்கடிப்பொன்றும்
நோவாமேகாதுக்கிடுவன்
பண்ணைக்கிழியச்சகடமுதைத்திட்ட
பற்பநாபாவிங்கேவாராய். 11

150 வாவென்றுசொல்லியென்கையைப்பிடித்து
வலியவேகாதிற்கடிப்பை
நோவத்திரிக்கிலுனக்கிங்கிழுக்குற்றென்

காதுகள்நொந்திடும்கில்லேன்
நாவற்பழங்கொண்டுவைத்தேனிவையாணாய்
நம்பீமுன்வஞ்சமகளைச்
சாவப்பாலுண்டுசகடிறப்பாய்ந்திட்ட
தாமோதராவிங்கேவாராய். 12

151 வார்காதுதாழப்பெருக்கியமைத்து
மகரக்குழையிடவேண்டிச்
சீராலசோதைதிருமாலைச்சொன்னசொல்
சிந்தையுள்நின்றுதிகழப்
பாரார்தொல்புகழான்புதுவைமன்னன்
பன்னிருநாமத்தால்சொன்ன
ஆராதவந்தாதிபன்னிரண்டும்வல்லா
ரச்சுதனுக்கடியாரே. 13

போய்ப்பாடு வண்ண வையம் வணம் சோத்தம் விண்
முலை என்குற்றம் மெய் காரிகை கண்ணை வாவென்று
வார்காது வெண்ணெயளந்த.

4. வெண்ணெயளந்த

நீராட்டல்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

152 வெண்ணெயளைந்தகுணுங்கும்விளையாடுபுழுதியுங்கொண்டு
திண்ணெனவிவ்விராவுன்னைத்தேய்த்துக்கிடக்கநானொட்டேன்
எண்ணெய்ப்புளிப்பழங்கொண்டிங்கெத்தனைபோதுமிருந்தேன்
நண்ணலரியபிரானேநாரணாநீராடவாராய். 1

153 கன்றுகளோடச்செவியில்கட்டெறும்புபிடித்திட்டால்
தென்றிக்கெடுமாகில்வெண்ணெய்திரட்டிவிழுங்குமாகாண்பன்
நின்றமராமரம்சாய்த்தாய்நீபிறந்ததிருவோணம்
இன்றுநீநீராடவேண்டும்எம்பிரானோடாதேவாராய். 2

154 பேய்ச்சிமுலையுண்ணக்கண்டுபின்னையும்நில்லாதென்னெஞ்சம்
ஆய்ச்சியரெல்லாருங்கூடியழைக்கவும்நான்முலைதந்தேன்

காய்ச்சினநீரொடுநெல்லிகடாரத்தில்பூரித்துவைத்தேன்
வாய்த்தபுகழ்மணிவண்ணாமஞ்சனமாடநீவாராய். 3

155 கஞ்சன்புணர்ப்பினில்வந்தகடியசகடமுதைத்து
வஞ்சகப்பேய்மகள்துஞ்சவாய்முலைவைத்தபிரானே
மஞ்சளும்செங்கழுநீரின்வாசிகையும்நாறுசாந்தும்
அஞ்சனமும்கொண்டுவைத்தேனழகனேநீராடவாராய். 4

156 அப்பங்கலந்தசிற்றுண்டியக்காரம்பாலில்கலந்து
சொப்படநான்சுட்டுவைத்தேன்தின்னலுறுதியேல்நம்பி
செப்பிளமென்முலையார்கள்சிறுபுறம்பேசிச்சிரிப்பர்
சொப்படநீராடவேண்டும்சோத்தம்பிரானிங்கேவாராய். 5

157 எண்ணெய்க்குடத்தையுருட்டியிளம்பிள்ளைகிள்ளியெழுப்பிக்
கண்ணைப்புரட்டிவிழித்துக்கழகண்டுசெய்யும்பிரானே
உண்ணக்கனிகள்தருவனொலிகடலோதநீர்போலே
வண்ணமழகியநம்பி மஞ்சனமாடநீவாராய். 6

158 கறந்தநற்பாலுந்தயிரும்கடைந்துறிமேல்வைத்தவெண்ணெய்
பிறந்ததுவேமுதலாகப்பெற்றறியேனெம்பிரானே
சிறந்தநற்றாயலர்தூற்றுமென்பதனால்பிறர்முன்னே
மறந்துமுரையாடமாட்டேன்மஞ்சனமாடநீவாராய். 7

159 கன்றினைவாலோலைகட்டிக்கனிகளுதிரவெறிந்து
பின்றொடர்ந்தோடியோர்பாம்பைப்பிடித்துக்கொண்டாட்டினாய்போ
நின்றிறத்தேனல்லேன்நம்பீநீபிறந்ததிருநன்னாள் [லும்
நன்றுநீநீராடவேண்டும்நாரணாவோடாதேவாராய். 8

160 பூணித்தொழுவினிற்புக்குப்புழுதியளைந்தபொன்மேனி
காணப்பெரிதுமுகப்பனாகிலுங்கண்டார்பழிப்பர்
நாணித்தனையுமிலாதாய்நப்பின்னைகாணிற்சிரிக்கும்
மாணிக்கமேஎன்மணியேமஞ்சனமாடநீவாராய். 9

161 கார்மலிமேனிநிறத்துக்கண்ணபிரானையுகந்து
வார்மலிகொங்கையசோதைமஞ்சனமாட்டியவாற்றைப்
பார்மலிதொல்புதுவைக்கோன்பட்டர்பிரான்சொன்னபாடல்
சீர்மலிசெந்தமிழ்வல்லார்தீவினையாதுமிலரே. 10

வெண்ணெய் கன்றுகள் பேய்ச்சி கஞ்சன் அப்பம் எண்ணெய்
கறந்த கன்றினை பூணி கார்மலி பின்னை.

5. பின்னைமணாளன்

குழல்வாரக் காக்கையை வாவெனல்

கலித்தாழிசை

162 பின்னைமணாளனைப்பேரில்கிடந்தானை
முன்னையமரர்முதல்தனிவித்தினை
என்னையுமெங்கள்குடிமுழுதாட்கொண்ட
மன்னனைவந்துகுழல்வாராயக்காக்காய்
மாதவன்றன்குழல்வாராயக்காக்காய். 1

163 பேயின்முலையுண்டபிள்ளையிவன்முன்னம்
மாயச்சகடுமருதுமிறுத்தவன்
காயாமலர்வண்ணன் கண்ணன் கருங்குழல
தூய்தாகவந்துகுழல்வாராயக்காக்காய்
தூமணிவண்ணன்குழல்வாராயக்காக்காய். 2

164 திண்ணக்கலத்தில்திரையுறிமேல்வைத்த
வெண்ணெய்விழுங்கிவிரையவுறங்கிடும்
அண்ணலமரர்பெருமானையாயர்தம்
கண்ணனைவந்துகுழல்வாராயக்காக்காய்
கார்முகில்வண்ணன்குழல்வாராயக்காக்காய். 3

165 பள்ளத்தில்மேயும்பறவையுருக்கொண்டு
கள்ளவசுரன்வருவானைத்தான்கண்டு
புள்ளிதுவென்றுபொதுக்கோவாய்கீண்டிட்ட
பிள்ளையைவந்துகுழல்வாராயக்காக்காய்
பேய்முலையுண்டான்குழல்வாராயக்காக்காய். 4

166 கற்றினம்மேய்த்துக்கனிக்கொருகன்றினைப்
பற்றியெறிந்தபரமன்திருமுடி
உற்றனபேசிநீயோடித்திரியாதே
அற்றைக்கும்வந்துகுழல்வாராயக்காக்காய்
ஆழியான்றன்குழல்வாராயக்காக்காய். 5

167 கிழக்கில்குடிமன்னர்கேடிலாதாரை
அழிப்பான்நினைந்திட்டவ்வாழியதனால்
விழிக்குமளவிலேவேரறுத்தானைக்

குழற்கணியாகக்குழல்வாராயக்காக்காய்
கோவிந்தன்றன்குழல்வாராயக்காக்காய். 6

168 பிண்டத்திரளையும்பேய்க்கிட்டநீர்ச்சோறும்
உண்டற்குவேண்டிநீயோடித்திரியாதே
அண்டத்தமரர்பெருமானழகமர்
வண்டொத்திருண்டகுழல்வாராயக்காக்காய்
மாயவன்றன்குழல்வாராயக்காக்காய். 7

169 உந்தியெழுந்தவுருவமலர்தன்னில்
சந்தச்சதுமுகன்றன்னைப்படைத்தவன்
கொந்தக்குழலைக்குறந்துபுளியட்டித்
தந்தத்தின்சீப்பால்குழல்வாராயக்காக்காய்
தாமோதரன்றன்குழல்வாராயக்காக்காய். 8

170 மன்னன்றன்தேவிமார்கண்டுமகிழ்வெய்த
முன்னிவ்வுலகினைமுற்றுமளந்தவன்
பொன்னின்முடியினைப்பூவணைமேல்வைத்துப்
பின்னேயிருந்துகுழல்வாராயக்காக்காய்
பேராயிரத்தான்குழல்வாராயக்காக்காய். 9

தரவுகோச்சகக்கலிப்பா

171 கண்டார்பழியாமேயக்காக்காய்கார்வண்ணன்
வண்டார்குழல்வாரவாவென்றவாய்ச்சிசொல்
விண்டோய்மதிள்வில்லிபுத்தூர்க்கோன்பட்டன்சொல்
கொண்டாடிப்பாடக்குறுகாவினைதானே. 10

பின்னை பேயின் திண்ணம் பள்ளத்தில் கற்றினம் கிழக்கில் பிண்டம் உந்தி மன்னன் கண்டார் வேலி.

---

6. வேலிக்கோல்

கோல்கோடுவர விளம்பல்

கலித்தாழிசை

172 வேலிக்கோல்வெட்டிவிளையாடுவில்லேற்றித்
தாலிக்கொழுந்தைத்தடங்கழுத்தில்பூண்டு

பீலித்தழையைப்பிணைத்துப்பிறகிட்டுக்
காலிப்பின்போவாற்கோர்கோல்கொண்டுவா
கடல்நிறவண்ணற்கோர்கோல்கொண்டுவா. 1

173 கொங்குங்குடந்தையுங்கோட்டியூரும்பேரும்
எங்குந்திரிந்துவிளையாடுமென்மகன்
சங்கம்பிடிக்குந்தடக்கைக்குத்தக்கநல்
அங்கமுடையதோர்கோல்கொண்டுவா
அரக்குவழித்ததோர்கோல்கொண்டுவா. 2

174 கறுத்திட்டெதிர்நின்றகஞ்சனைக்கொன்றான்
பொறுத்திட்டெதிர்வந்தபுள்ளின்வாய்கீண்டான்
நெறித்தகுழல்களைநீங்கமுன்னோடிச்
சிறுக்கன்றுமேய்ப்பாற்கோர்கோல்கொண்டுவா
தேவபிரானுக்கோர்கோல்கொண்டுவா. 3

175 ஒன்றேயுரைப்பானொருசொல்லேசொல்லுவான்
துன்றுமுடியான்துரியோதனன்பக்கல்
சென்றங்குப்பாரதம்கையெறிந்தானுக்குக்
கன்றுகள்மேய்ப்பதோர்கோல்கொண்டுவா
கடல்நிறவண்ணற்கோர்கோல்கொண்டுவா. 4

176 சீரொன்றுதூதாய்த்துரியோதனன்பக்கல்
ஊரொன்றுவேண்டிப்பெறாதஉரோடத்தால்
பாரொன்றிப்பாரதங்கைசெய்துபார்த்தற்குத்
தேரொன்றையூர்ந்தாற்கோர்கோல்கொண்டுவா
தேவபிரானுக்கோர்கோல்கொண்டுவா. 5

177 ஆலத்திலையானரவினணைமேலான்
நீலக்கடலுள்நெடுங்காலம்கண்வளர்ந்தான்
பாலப்பிராயத்தேபார்த்தற்கருள்செய்த
கோலப்பிரானுக்கோர்கோல்கொண்டுவா
குடந்தைக்கிடந்தாற்கோர்கோல்கொண்டுவா. 6

178 பொற்றிகழ்சித்திரகூடப்பொருப்பினில்
உற்றவடிவிலொருகண்ணுங்கொண்டவக்
கற்றைக்குழலன்கடியன்விரைந்துன்னை

மற்றைக்கண்கொள்ளாமேகோல்கொண்டுவா
மணிவண்ணநம்பிக்கோர்கோல்கொண்டுவா. 7

179 மின்னிடைச்சீதைபொருட்டாவிலங்கையர்
மன்னன்மணிமுடிபத்துமுடன்வீழத்
தன்னிகரொன்றில்லாச்சிலைகால்வளைத்திட்ட
மின்னுமுடியற்கோர்கோல்கொண்டுவா
வேலையடைத்தாற்கோர்கோல்கொண்டுவா. 8

180 தென்னிலங்கைமன்னன்சிரந்தோள்துணிசெய்து
மின்னிலங்குபூண்விபீடணநம்பிக்கு
என்னிலங்குநாமத்தளவுமரசென்ற
மின்னலங்காரற்கோர்கோல்கொண்டுவா
வேங்கடவாணற்கோர்கோல்கொண்டுவா. 9

தரவுகொச்சகக்கலிப்பா

181 அக்காக்காய்நம்பிக்குக்கோல்கொண்டுவாவென்று
மிக்காளுரைத்தசொல்வில்லிபுத்தூர்ப்பட்டன்
ஒக்கவுரைத்ததமிழ்பத்தும்வல்லவர்
மக்களைப்பெற்றுமகிழ்வரிவ்வையத்தே. 10

வேலி கொங்கு கறுத்திட்டு ஒன்றே சீரொன்று ஆலத்து பொற்றிகழ் மின்னிடை தென்னிலங்கை அக்காக்காய் ஆநிரை.

---

7. ஆநிரை

பூச்சூட்டல்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

182 ஆநிரைமேய்க்கநீபோதியருமருந்தாவதறியாய்
கானகமெல்லாம்திரிந்துன்கரியதிருமேனிவாடப்
பானையில்பாலைப்பருகிப்பற்றாதாரெல்லாம்சிரிப்பத்
தேனிலினியபிரானேசெண்பகப்பூச்சூட்டவாராய். 1

183 கருவுடைமேகங்கள்கண்டாலுன்னைக்கண்டாலொக்கும்கண்கள்
உருவுடையாயுலகேழுமுண்டாகவந்துபிறந்தாய்
திருவுடையாள்மணவாளா திருவரங்கத்தேகிடந்தாய்
மருவிமணம்கமழ்கின்றமல்லிகைப்பூச்சூட்டவாராய். 2

184 மச்சொடுமாளிகையேறிமாதர்கள்தம்மிடம்புக்குக்
கச்சொடுபட்டைக்கிழித்துக்காம்புதுகிலவைகீறி
நிச்சலும்தீமைகள்செய்வாய்நீள்திருவேங்கடத்தெந்தாய்
பச்சைத்தமனகத்தோடுபாதிரிப்பூச்சூட்டவாராய். 3

185 தெருவின்கண்நின்றிளவாய்ச்சிமார்களைத்தீமைசெய்யாதே
மருவும்தமனகமும்சீர்மாலைமணம்கமழ்கின்ற
புருவம்கருங்குழல்நெற்றிபொலிந்தமுகிற்கன்றுபோலே
உருவமழகியநம்பீயுகந்திவைசூட்டநீவாராய். 4

186 புள்ளினைவாய்பிளந்திட்டாய்பொருகரியின்கொம்பொசித்தாய்
கள்ளவரக்கியைமூக்கொடுகாவலனைத்தலைகொண்டாய்
அள்ளிநீவெண்ணெய்விழுங்கஅஞ்சாதடியேனடித்தேன்
தெள்ளியநீரிலெழுந்தசெங்கழுநீர்சூட்டவாராய். 5

187 எருதுகளோடுபொருதியேதுமுலோபாய்காண்நம்பீ
கருதியதீமைகள்செய்துகஞ்சனைக்கால்கொடுபாய்ந்தாய்
தெருவின்கண்தீமைகள்செய்துசிக்கெனமல்லர்களோடு
பொருதுவருகின்றபொன்னேபுன்னைப்பூச்சூட்டவாராய். 6

188 குடங்களெடுத்தேறவிட்டுக்கூத்தாடவல்லவெங்கோவே
மடங்கொள்மதிமுகத்தாரைமால்செய்யவல்லவென்மைந்தா
இடந்திட்டிரணியன்நெஞ்சையிருபிளவாகமுன்கீண்டாய்
குடந்தைக்கிடந்தவெங்கோவேகுருக்கத்திப்பூச்சூட்டவாராய். 7

189 சீமாலிகனவனோடுதோழமைக்கொள்ளவும்வல்லாய்
சாமாறவனைநீயெண்ணிச்சக்கரத்தால்தலைகொண்டாய்
ஆமாறறியும்பிரானேஅணியரங்கத்தேகிடந்தாய்
ஏமாற்றமென்னைத்தவிர்த்தாயிருவாட்சிப்பூச்சூட்டவாராய். 8

190 அண்டத்தமரர்கள்சூழஅத்தாணியுள்ளங்கிருந்தாய்
தொண்டர்கள்நெஞ்சிலுறைவாய்தூமலராள்மணவாளா

உண்டிட்டுலகினையேழுமோராலிலையில்துயில்கொண்டாய்
கண்டுநானுன்னையுகக்கக்கருமுகைப்பூச்சூட்டவாராய். 9

191 செண்பகமல்லிகையோடுசெங்கழுநீரிருவாட்சி
எண்பகர்பூவும்கொணர்ந்தேனின்றிவைசூட்டவாவென்று
மண்பகர்கொண்டானையாய்ச்சிமகிழ்ந்துரைசெய்தவிம்மாலை
பண்பகர்வில்லிபுத்தூர்க்கோன்பட்டர்பிரான்சொன்னபத்தே. 10

• ஆநிரை கரு மச்சொடு தெரு புள் எருது குடங்கள் சீமாலி
அண்ட செண்பக இந்திரன்.

---

8. இந்திரனோடு

காப்பிடல்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

192 இந்திரனோடுபிரமனீசனிமையவரெல்லாம்
மந்திரமாமலர்கொண்டுமறைந்துவராய்வந்துநின்றார்
சந்திரன்மாளிகைசேரும்சதுரர்கள்வெள்ளறைநின்றாய்
அந்தியம்போதிதுவாகும்அழகனேகாப்பிடவாராய். 1

193 கன்றுகளில்லம்புகுந்துகதறுகின்றபசுவெல்லாம்
நின்றொழிந்தேனுன்னைக்கூவிநேசமேலொன்றுமிலாதாய்
மன்றினில்லேலந்திப்போதுமதிள்திருவெள்ளறைநின்றாய்
நன்றுகண்டாயென்றன்சொல்லுநானுன்னைக்காப்பிடவாராய். 2

194 செப்போதுமென்முலையார்கள்சிறுசோறுமில்லும்சிதைத்திட்டு
அப்போதுநானுரப்பப்போயடிசிலுமுண்டிலையாள்வாய்
முப்போதும்வானவரேத்தும்முனிவர்கள்வெள்ளறைநின்றாய்
இப்போதுநானொன்றும்செய்யேனெம்பிரான்காப்பிடவாராய். 3

195 கண்ணில்மணற்கொடுதூவிக்காலினால்பாய்ந்தனையென்றென்று
எண்ணரும்பிள்ளைகள்வந்திட்டிவரால்முறைப்படுகின்றார்

கண்ணனேவெள்ளறைநின்றாய்கண்டாரோடேதீமைசெய்வாய்
வண்ணமேவேலையதொப்பாய்வள்ளலேகாப்பிடவாராய். 4

196 *பல்லாயிரவரிவ்வூரில்பிள்ளைகள்தீமைகள்செய்வார்*
எல்லாமுன்மேலன்றிப்போகாதெம்பிரான்நீஇங்கேவாராய்
நல்லார்கள்வெள்ளறைநின்றாய்ஞானச்சுடரேஉன்மேனி
சொல்லாரவாழ்த்திநின்றேத்திச்சொப்படக்காப்பிடவாராய். 5

197 *கஞ்சன்கறுக்கொண்டுநின்மேல்கருநிறச்செம்மயிர்ப்பேயை*
வஞ்சிப்பதற்குவிடுத்தானென்பதோர்வார்த்தையுமுண்டு
மஞ்சுதவழ்மணிமாடமதிள்திருவெள்ளறைநின்றாய்
அஞ்சுவன்நீயங்குநிற்கஅழகனேகாப்பிடவாராய். 6

198 *கள்ளச்சகடும்மருதும்கலக்கழியவுதைசெய்த*
பிள்ளையரசேநீபேயைப்பிடித்துமுலையுண்டபின்னை
உள்ளவாறொன்றுமறியேனொளியுடைவெள்ளறைநின்றாய்
பள்ளிகொள்போதிதுவாகும்பரமனேகாப்பிடவாராய். 7

199 *இன்பமதனையுயர்த்தாயிமையவர்க்கென்றுமரியாய்*
கும்பக்களிறட்டகோவேகொடுங்கஞ்சன்நெஞ்சினிற்கூற்றே
செம்பொன்மதிள்வெள்ளறையாய்செல்வத்தினால்வளர்பிள்ளாய்
கம்பக்கபாலிகாணங்குகடிதோடிக்காப்பிடவாராய். 8

200 *இருக்கொடுநீர்சங்கிற்கொண்டிட்டெழில்மறையோர்வந்துநின்றார்*
தருக்கேல்நம்பிசந்திநின்றுதாய்சொல்லுக்கொள்ளாய்சிலநாள்
திருக்காப்புநானுன்னைச்சாத்தத்தேசுடைவெள்ளறைநின்றாய்
உருக்காட்டுமந்திவிளக்கின்றொளிகொள்ளவேற்றுகேன்வாராய். 9

201 *போதமர்செல்வக்கொழுந்துபுணர்திருவெள்ளறையானை*
மாதர்க்குயர்ந்தயசோதைமகன்றன்னைக்காப்பிட்டமாற்றம்
வேதப்பயன்கொள்ளவல்லவிட்டுசித்தன்சொன்னமாலை
பாதப்பயன்கொள்ளவல்லபத்தருள்ளார்வினைபோமே. 10

இந்திரனோடு கன்றுகள் செப்பு கண்ணில் பல்லாயிரவர் கஞ்சன் கள்ளம் இன்பமதனை இருக்கொடு போதமர் . வெண்ணெய் விழுங்கி.

9. வெண்ணெய்விழுங்கி

பாலக்ரீடை

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

202 வெண்ணெய்விழுங்கிவெறுங்கலத்தை
வெற்பிடையிட்டதனோசைகேட்கும்
கண்ணபிரான்கற்றகல்விதன்னைக்
காக்ககில்லோமுன்மகனைக்காவாய்
புண்ணிற்புளிப்பெய்தாலொக்குந்தீமை
புரைபுரையாலிவைசெய்யவல்ல
அண்ணற்கண்ணானோர்மகனைப்பெற்ற
அசோதைநங்காயுன்மகனைக்கூவாய். 1

203 வருகவருகவருகவிங்கே
வாமனநம்பீவருகவிங்கே
கரியகுழல்செய்யவாய்முகத்தெங்
காகுத்தநம்பீவருகவிங்கே
அரியனிவனெனக்கின்றுநங்காய்
அஞ்சனவண்ணா அசலகத்தார்
பரிபவம்பேசத்தரிக்ககில்லேன்
பாவியேனுக்கிங்கேபோதராயே. 2

204 திருவுடைப்பிள்ளைதான்தீயவாறு
தேக்கமொன்றுமிலன்தேசுடையன்
உருகவைத்தகுடத்தொடுவெண்ணெ
யுறிஞ்சியுடைத்திட்டுப்போந்துநின்றான்
அருகிருந்தார்தம்மையநியாயஞ்செய்து
தான்வழக்கோஅசோதாய்
வருகவென்றுன்மகன்றன்னைக்கூவாய்
வாழவொட்டான்மதுசூதனனே. 3

205 கொண்டல்வண்ணாவிங்கேபோதராயே
கோயிற்பிள்ளாயிங்கேபோதராயே
தெண்டிரைசூழ்திருப்பேர்க்கிடந்த
திருநாரணாவிங்கேபோதராயே

உண்டுவந்தேனம்மமென்றுசொல்லி
யோடியகம்புகஆய்ச்சிதானும்
கண்டெதிரேசென்றெடுத்துக்கொள்ளக்
கண்ணபிரான்கற்றகல்விதானே. 4

206 பாலைக்கறந்தடுப்பேறவைத்துப்
பல்வளையாளென்மகளிருப்ப
மேலையகத்தேநெருப்புவேண்டிச்சென்
றிறைப்பொழுதங்கேபேசிநின்றேன்
சாளக்கிராமமுடையநம்பி
சாய்த்துப்பருகிட்டுப்போந்துநின்றான்
ஆலைக்கரும்பின்மொழியனைய
வசோதைநங்காயுன்மகனைக்கூவாய். 5

207 போதர்கண்டாயிங்கேபோதர்கண்டாய்
போதரேனென்னாதேபோதர்கண்டாய்
ஏதேனுஞ்சொல்லியசலகத்தா
ரேதேனும்பேசநான்கேட்கமாட்டேன்
கோதுகுலமுடைக்குட்டனேயோ
குன்றெடுத்தாய்குடமாடுகூத்தா
வேதப்பொருளேயென்வேங்கடவா
வித்தகனேயிங்கேபோதராயே. 6

208 செந்நெலரிசிசிறுபருப்புச்
செய்தவக்காரம்நறுநெய்பாலால்
பன்னிரண்டுதிருவோணமட்டேன்
பண்டுமிப்பிள்ளைபரிசறிவன்
இன்னமுகப்பன்நானென்றுசொல்லி
யெல்லாம்விழுங்கிட்டுப்போந்துநின்றான்
உன்மகன்றன்னையசோதைநங்காய்
கூவிக்கொள்ளாயிவையும்சிலவே. 7

209 கேசவனேயிங்கேபோதராயே
கில்லேனென்னாதிங்கேபோதராயே
நேசமிலாதாரகத்திருந்து
நீவிளையாடாதேபோதராயே

தூசனம்சொல்லும்தொழுத்தைமாரும்
தொண்டரும்நின்றவிடத்தில்நின்று
தாய்சொல்லுக்கொள்வதுதன்மங்கண்டாய்
தாமோதராவிங்கேபோதராயே. 8

210 கன்னலிலட்டுவத்தோடுசீடை
காரெள்ளினுண்டைகலத்திலிட்டு
என்னகமென்றுநான்வைத்துப்போந்தேன்
இவன்புக்கவற்றைப்பெறுத்திப்போந்தான்
பின்னுமகம்புக்குறியைநோக்கிப்
பிறங்கொளிவெண்ணெயும்சோதிக்கின்றான்
உன்மகன்றன்னையசோதைநங்காய்
கூவிக்கொள்ளாயிவையும்சிலவே. 9

211 சொல்லிலரசிப்படுதிநங்காய்
சூழலுடையனுன்பிள்ளைதானே
இல்லம்புகுந்தென்மகளைக்கூவிக்
கையில்வளையைக்கழற்றிக்கொண்டு
கொல்லையில்நின்றுங்கொணர்ந்துவிற்ற
அங்கொருத்திக்கவ்வளைகொடுத்து
நல்லனநாவற்பழங்கள்கொண்டு
நானல்லேனென்றுசிரிக்கின்றானே. 10

212 வண்டுகளித்திரைக்கும்பொழில்சூழ்
வருபுனல்காவிரித்தென்னரங்கன்
பண்டவன்செய்தகிரீடையெல்லாம்
பட்டர்பிரான்விட்டுசித்தன்பாடல்
கொண்டிவைபாடிக்குனிக்கவல்லார்
கோவிந்தன்றன்னடியார்களாகி
எண்டிசைக்கும்விளக்காகிநிற்பார்
இணையடியென்தலைமேலனவே. 11

வெண்ணெய் வருக திரு கொண்டல் பாலை போதர் செந்நெல் கேசவனே கன்னல் சொல்லில் வண்டு ஆற்றி விருந்து.

10. ஆற்றிலிருந்து

அயலகத்தார் முறைபாடு

கலித்தாழிசை

213 ஆற்றிலிருந்துவிளையாடுவோங்களைச்
சேற்றாலெறிந்துவளைதுகில்கைக்கொண்டு
காற்றிற்கடியனாயோடியகம்புக்கு
மாற்றமுந்தாரானாலின்றுமுற்றும்
வளைத்திறம்பேசானாலின்றுமுற்றும். 1

214 குண்டலம்தாழக்குழல்தாழநாண்தாழ
எண்டிசையோருமிறைஞ்சித்தொழுதேத்த
வண்டமர்பூங்குழலார்துகில்கைக்கொண்டு
விண்தோய்மரத்தானாலின்றுமுற்றும்
வேண்டவும்தாரானாலின்றுமுற்றும். 2

215 தடம்படுதாமரைப்பொய்கைகலக்கி
விடம்படுநாகத்தைவால்பற்றியீர்த்துப்
படம்படுபைந்தலைமேலெழப்பாய்ந்திட்டு
உடம்பையசைத்தானாலின்றுமுற்றும்
உச்சியில்நின்றானாலின்றுமுற்றும். 3

216 தேனுகனாவிசெகுத்துப்பனங்கனி
தானெறிந்திட்டதடம்பெருந்தோளினால்
வானவர்கோன்விடவந்தமழைதடுத்து
ஆனிரைகாத்தானாலின்றுமுற்றும்
அவையுய்யக்கொண்டானாலின்றுமுற்றும். 4

217 ஆய்ச்சியர்சேரியளைதயிர்பாலுண்டு
பேர்த்தவர்கண்டுபிடிக்கப்பிடியுண்டு
வேய்த்தடந்தோளினார்வெண்ணெய்கொள்மாட்டாதங்
காப்புண்டிருந்தானாலின்றுமுற்றும்
அடியுண்டழுதானாலின்றுமுற்றும். 5

218 தள்ளித்தளர்நடையிட்டிளம்பிள்ளையாய்
உள்ளத்தினுள்ளேஅவளையுறநோக்கிக்

கள்ளத்தினால்வந்தபேய்ச்சிமுலையுயிர்
துள்ளச்சுவைத்தானாலின்றுமுற்றும்
துவக்கறவுண்டானாலின்றுமுற்றும். 6

219 மாவலிவேள்வியில்மாணுருவாய்ச்சென்று
மூவடிதாவென்றிரந்தவிம்மண்ணினை
ஓரடியிட்டிரண்டாமடிதன்னிலே
தாவடியிட்டானாலின்றுமுற்றும்
தரணியளந்தானாலின்றுமுற்றும். 7

220 தாழைதண்ணாம்பல்தடம்பெரும்பொய்கைவாய்
வாழுமுதலைவலைப்பட்டுவாதிப்புண்
வேழம்துயர்கெடவிண்ணோர்பெருமானாய்
ஆழிபணிகொண்டானாலின்றுமுற்றும்
அதற்கருள்செய்தானாலின்றுமுற்றும். 8

221 வானத்தெழுந்தமழைமுகில்போலெங்கும்
கானத்துமேய்ந்துகளித்துவிளையாடி
ஏனத்துருவாயிடந்தவிம்மண்ணினைத்
தானத்தேவைத்தானாலின்றுமுற்றும்
தரணியிடந்தானாலின்றுமுற்றும். 9

தரவுகொச்சகக்கலிப்பா

222 அங்கமலக்கண்ணன்றன்னையசோதைக்கு
மங்கைநல்லார்கள்தாம்வந்துமுறைப்பட்ட
அங்கவர்சொல்லைப்புதுவைக்கோன்பட்டன்சொல்
இங்கிவைவல்லவர்க்கேதமொன்றில்லையே. 10

ஆற்றில் குண்டலம் தடம் தேனுகன் ஆய்ச்சி தள்ளி மாவலி தாழை வானத்து அங்கமலம் தன்னேர்.

மூன்றாம் பத்து.

1. தன்னேர்

கண்ணனையறிந்துகொண்டன்னை அம்மந்தரவஞ்சல்

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

223 தன்னேராயிரம்பிள்ளைகளோடு
தளர்நடையிட்டுவருவான்

பொன்னேய்நெய்யொடுபாலமுதுண்டொரு
புள்ளுவன்பொய்யேதவழும்
மின்னேர்நுண்ணிடைவஞ்சமகள்கொங்கை
துஞ்சவாய்வைத்தபிரானே
அன்னேஉன்னைஅறிந்துகொண்டே
னுனக்கஞ்சுவனம்மந்தரவே. 1

224 பொன்போல்மஞ்சனமாட்டியமுதூட்டிப்
போனேன்வருமளவிப்பால்
வன்பாரச்சகடமிறச்சாடி
வடக்கிலகம்புக்கிருந்து
மின்போல்நுண்ணிடையாளொருகன்னியை
வேற்றுருவஞ்செய்துவைத்த
அன்பாவுன்னையறிந்துகொண்டே
னுனக்கஞ்சுவனம்மந்தரவே. 2

225 கும்மாயத்தொடுவெண்ணெய்விழுங்கிக்
குடத்தயிர்சாய்த்துப்பருகி
பொய்ம்மாயமருதானவசுரரைப்
பொன்றுவித்தின்றுநீவந்தாய்
இம்மாயம்வல்லபிள்ளைநம்பி
உன்னைஎன்மகனேயென்பர்நின்றார்
அம்மாஉன்னையறிந்துகொண்டே
னுனக்கஞ்சுவனம்மந்தரவே. 3

226 மையார்கண்மடவாய்ச்சியர்மக்களை
மையன்மைசெய்தவர்பின்போய்க்
கொய்யார்பூந்துகில்பற்றித்தனிநின்று
குற்றம்பலபலசெய்தாய்
பொய்யாஉன்னைப்புறம்பலபேசுவ
புத்தகத்துக்குளகேட்டேன்
ஐயா உன்னையறிந்துகொண்டே
னுனக்கஞ்சுவனம்மந்தரவே. 4

227 முப்போதுங்கடைந்தீண்டியவெண்ணெயி
னோடுதயிரும்விழுங்கிக்

கப்பாலாயர்கள்காவில்கொணர்ந்த
கலத்தொடுசாய்த்துப்பருகி
மெய்ப்பாலுண்டழுபிள்ளைகள்போல
நீவிம்மிவிம்மியழுகின்ற
அப்பாவுன்னையறிந்துகொண்டே
னுனக்கஞ்சுவனம்மந்தரவே. 5

228 கரும்பார்நீள்வயல்காய்கதிர்ச்செந்நெலைக்
கற்றாநிரைமண்டித்தின்ன
விரும்பாக்கன்றொன்றுகொண்டு
விளங்கனிவீழவெறிந்தபிரானே
சுரும்பார்மென்குழல்கன்னியொருத்திக்குச்
சூழ்வலைவைத்துத்திரியும்
அரம்பாஉன்னைஅறிந்துகொண்டேன்
னுனக்கஞ்சுவனம்மந்தரவே. 6

229 மருட்டார்மென்குழல்கொண்டுபொழில்புக்கு
வாய்வைத்தவ்வாயர்தம்பாடி
சுருட்டார்மென்குழல்கன்னியர்வந்துன்னைச்
சுற்றுந்தொழநின்றசோதீ
பொருட்டாயமிலேனெம்பெருமானுன்னைப்
பெற்றகுற்றமல்லால்மற்றிங்
கரட்டாவுன்னையறிந்துகொண்டே
னுனக்கஞ்சுவனம்மந்தரவே. 7

230 வாளாவாகிலுங்காணகில்லார்
பிறர்மக்களைமையன்மைசெய்து
தோளாலிட்டவரோடுதிளைத்து நீ
சொல்லப்படாதனசெய்தாய்
கேளாராயர்குலத்தவரிப்பழி
கெட்டேன்வாழ்வில்லைநந்தன்
காளாயுன்னையறிந்துகொண்டே
னுனக்கஞ்சுவனம்மந்தரவே. 8

231 தாய்மார்மோர்விற்கப்போவர்தமப்பன்மார்
கற்றாநிரைப்பின்புபோவர்

நீயாய்ப்பாடி இளங்கன்னிமார்களை
நேர்படவேகொண்டுபோதி
காய்வார்க்கென்றுமுகப்பனவேசெய்து
கண்டார்கழறத்திரியும்
ஆயா உன்னை அறிந்துகொண்டே
னுனக்கஞ்சுவனம்மந்தரவே. 9

232 தொத்தார்பூங்குழல்கன்னியொருத்தியைச்
சோலைத்தடங்கொண்டுபுக்கு
முத்தார்கொங்கைபுணர்ந்திராநாழிகை
மூவேழுசென்றபின்வந்தாய்
ஒத்தார்க்கொத்தனபேசுவருன்னை
யுரப்பவேநானொன்றும்மாட்டேன்
அத்தா உன்னையறிந்துகொண்டே
னுனக்கஞ்சுவனம்மந்தரவே. 10

233 காரார்மேனிநிறத்தெம்பிரானைக்
கடிகமழ்பூங்குழலாய்ச்சி
ஆராவின்னமுதுண்ணத்தருவன்நா
னம்மந்தாரேனென்றமாற்றம்
பாரார்தொல்புகழான்புதுவைமன்னன்
பட்டர்பிரான்சொன்னபாடல்
ஏராரின்னிசை மாலைகள்வல்லார்
இருடீகேசனடியாரே. 11

தன்னேர் பொன் கும்மாயம் மையார் முப்போது கரு
மருட்டார் வாளா தாய்மார் தொத்தார் காரார் அஞ்சனம்.

2. அஞ்சனவண்ணனை

கண்ணனை அன்னை காலிப்பின் போக்கியதெண்ணிக்கழறல்

கலிநிலைத்துறை

234 அஞ்சனவண்ணனையாயர்கோலக்கொழுந்தினை
மஞ்சனமாட்டிமனைகடோறுந்திரியாமே

கஞ்சனைக்காய்ந்த கழலடிநோவக்கன்றின்பின்
என்செய்யப்பிள்ளையைப்போக்கினேனெல்லேபாவமே. 1

235 பற்றுமஞ்சள்பூசிப் பாவைமாரொடுபாடியில்
சிற்றில்சிதைத்தெங்கும் தீமைசெய்துதிரியாமே
கற்றுத்தூளியுடை வேடர்கானிடைக்கன்றின்பின்
எற்றுக்கென்பிள்ளையைப்போக்கினேனெல்லேபாவமே. 2

236 நன்மணிமேகலைநங்கைமாரொடுநாடொறும்
பொன்மணிமேனிபுழுதியாடித்திரியாமே
கன்மணிநின்றதிர்கானதரிடைக்கன்றின்பின்
என்மணிவண்ணனைப்போக்கினேனெல்லேபாவமே. 3

237 வண்ணக்கருங்குழல்மாதர்வந்தலர்தூற்றிடப்
பண்ணிப்பலசெய்திப்பாடியெங்கும்திரியாமே
கண்ணுக்கினியானைக்கானதரிடைக்கன்றின்பின்
எண்ணற்கரியானைப்போக்கினேனெல்லேபாவமே. 4

238 அவ்வவ்விடம்புக்கவ்வாயர்பெண்டிர்க்கணுக்கனாய்க்
கொவ்வைக்கனிவாய்கொடுத்துக்கூழைமைசெய்யாமே
எவ்வும்சிலையுடைவேடர்கானிடைக்கன்றின்பின்
தெய்வத்தலைவனைப்போக்கினேனெல்லேபாவமே. 5

239 மிடறுமெழுமெழுத்தோடவெண்ணெய்விழுங்கிப்போய்ப்
படிறுபலசெய்திப்பாடியெங்கும்திரியாமே
கடிறுபலதிரிகானதரிடைக்கன்றின்பின்
இடறவென்பிள்ளையைப்போக்கினேனெல்லேபாவமே. 6

240 வள்ளிநுடங்கிடைமாதர்வந்தலர்தூற்றிடத்
துள்ளிவிளையாடித்தோழரோடுதிரியாமே
கள்ளியுணங்குவெங்கானதரிடைக்கன்றின்பின்
புள்ளின்தலைவனைப்போக்கினேனெல்லேபாவமே. 7

241 பன்னிருதிங்கள்வயிற்றிற்கொண்டவப்பாங்கினால்
என்னிளங்கொங்கையமுதமூட்டியெடுத்தியான்
பொன்னடிநோவப்புலரியேகானிற்கன்றின்பின்
என்னிளஞ்சிங்கத்தைப்போக்கினேனெல்லேபாவமே. 8

242 குடையும்செருப்பும்கொடாதேதாமோதரனைநான்
உடையும்கடியனவூன்றுவெம்பரற்களுடைக்
கடியவெங்கானிடைக்காலடிநோவக்கன்றின்பின்
கொடியேனென்பிள்ளையைப்போக்கினேனெல்லேபாவமே. 9

243 என்றுமெனக்கினியானையென்மணிவண்ணனைக்
கன்றின்பின்போக்கினேனென்றசோதைகழறிய
பொன்திகழ்மாடப்புதுவையர்கோன்பட்டன்சொல்
இன்தமிழ்மாலைகள்வல்லவர்க்கிடரில்லையே. 10

அஞ்சன பற்று நன்மணி வண்ணம் அவ்வவ்விட மிடறு
வள்ளி பன்னிரு குடை என்றும் சீலை.

---

3. சீலைக்குதம்பை

காலிப்பின் கண்ணன் வரவுகண்டன்னை யுகத்தல்

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

244 சீலைக்குதம்பையொருகாதொருகாதுசெந்நிறமேற்றோன்றிப்பூக்
கோலப்பணைக்கச்சும்கூறையுடையும்குளிர்முத்தின்கோடாலமும்
காலிப்பின்னேவருகின்றகடல்வண்ணன்வேடத்தைவந்துகாணீர்
ஞாலத்துப்புத்திரனைப்பெற்றார்நங்கைமீர்நானேமற்றாருமில்லை. 1

245 கன்னிநன்மாமதிள்சூழ்தருபூம்பொழில்காவிரித்தென்னரங்கம்
மன்னியசீர்மதுசூதனாகேசவாபாவியேன்வாழ்வுகந்து [தேன்
உன்னையிளங்கன்றுமேய்க்கச்சிறுகாலேயூட்டியொருப்படுத் [தம்தா.
என்னில்மனம்வலியாளொருபெண்ணில்லையென்குட்டனேமுத் 2

246 காடுகளூடுபோய்க்கன்றுகள்மேய்த்துமறியோடிக்கார்க்கோடற்பூச்
சூடிவருகின்றதாமோதராகற்றத்தூளிகாணுன்னுடம்பு
பேடைமயிற்சாயல்பின்னைமணாளாநீராட்டமைத்துவைத்தேன்
ஆடிஅமுதுசெய்அப்பனுமுண்டிலனுன்னோடுடனேயுண்பான். 3

247 கடியார்பொழிலணிவேங்கடவாகரும்போரேறேநீயுகக்கும்
குடையும்செருப்பும்குழலும்தருவிக்கக்கொள்ளாதேபோனாய்மாலே
கடியவெங்கானிடைக்கன்றின்பின்போனசிறுக்குட்டச்செங்கமல
அடியும்வெதும்பிஉன்கண்கள்சிவந்தாயசைந்திட்டாய்நீயெம்பிரான். 4

248 பற்றார்நடுங்கமுன்பாஞ்சசன்னியத்தைவாய்வைத்தபோரேறேஎன்
சிற்றாயர்சிங்கமேசீதைமணாளாசிறுக்குட்டச்செங்கண்மாலே

சிற்றாடையும்சிறுப்பத்திரமுமிவைகட்டிலின்மேல்வைத்துப்போய்க்
கற்றாயரோடுநீகன்றுகள்மேய்த்துக்கலந்துடன்வந்தாய்போலும். 5

249 அஞ்சுடராழியுன்கையகத்தேந்துமழகாநீபொய்கைபுக்கு
நஞ்சுமிழ்நாகத்தினோடுபிணங்கவும்நானுயிர்வாழ்ந்திருந்தேன்
என்செய்யவென்னைவயிறுமறுக்கினாயேதுமோரச்சமில்லை [டாய்
கஞ்சன்மனத்துக்குகப்பனவேசெய்தாய்காயாம்பூவண்ணங்கொண் 6

250 பன்றியுமாமையுமீனமுமாகியபாற்கடல்வண்ணாவுன்மேல்
கன்றினுருவாகிமேய்புலத்தேவந்தகள்ளவசுரர்தம்மைச்
சென்றுபிடித்துச்சிறுக்கைகளாலேவிளங்காயெறிந்தாய்போலும்
என்றுமென்பிள்ளைக்குத்தீமைகள்செய்வார்கள்அங்ஙனமாவர்களே.7

251 கேட்டறியாதனகேட்கின்றேன்கேசவாகோவலரிந்திரற்குக்
காட்டியசோறும்கறியும்தயிரும்கலந்துடனுண்டாய்போலும்
ஊட்டமுதலிலேனுன்றன்னைக்கொண்டொருபோதுமெனக்கரிது
வாட்டமிலாப்புகழ்வாசுதேவாஉன்னையஞ்சுவனின்றுதொட்டும். 8

252 திண்ணார்வெண்சங்குடையாய்திருநாள்
திருவோணமின்றேழுநாள்முன்
பண்ணேர்மொழியாரைக்கூவிமுளையட்டிப்
பல்லாண்டுகூறுவித்தேன்
கண்ணாலம்செய்யக்கறியும்கலத்த
தரிசியுமாக்கிவைத்தேன்
கண்ணாநீநாளைத்தொட்டுக்கன்றின்பின்போகேல்
கோலஞ்செய்திங்கேயிரு. 9

253 புற்றரவல்குலசோதைநல்லாய்ச்சிதன்
புத்திரன்கோவிந்தனைக்
கற்றினம்மேய்த்துவரக்கண்டுகந்தவள்
கற்பித்தமாற்றமெல்லாம்
செற்றமிலாதவர்வாழ்தருதென்புதுவை
விட்டுசித்தன்சொல்
கற்றிவைபாடவல்லார்கடல்வண்ணன்
கழலிணைகாண்பார்களே. 10

சீலை கன்னி காடு கடி பற்றார் அஞ்சுடர் பன்றி கேட்டு
திண் புற்றர தழை.

4. தழைகளும்

காலிப்பின்வருங் கண்ணனைக்கண்டு கன்னியர்காமுறல்

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

254 தழைகளும்தொங்கலும் ததும்பியெங்கும்
தண்ணுமையெக்கம்மத் தளிதாழ்பீலி
குழல்களுங்கீதமுமாகியெங்கும்
கோவிந்தன்வருகின்றகூட்டங்கண்டு
மழைகொலோவருகின்றதென்றுசொல்லி
மங்கைமார்சாலகவாசல்பற்றி
நுழைவனர்நிற்பனராகியெங்கும்
முள்ளம்விட்டுண்மறந்தொழிந்தனரே. 1

255 வல்லிநுண்ணிதழன்னவாடைகொண்டு
வசையறத்திருவரைவிரித்துடுத்துப்
பல்லிநுண்பற்றாகவுடைவாள்சாத்திப்
பணைக்கச்சுந்திப்பலதழைநடுவே
முல்லைநன்னறுமலர்வேங்கைமல
ரணிந்துபல்லாயர்குழாம்நடுவே
எல்லியம்போதாகப்பிள்ளைவரும்
எதிர்நின்றங்கினவளையிழவேன்மினே. 2

256 சுரிகையும்தெறிவில்லும்செண்டுகோலும்
மேலாடையும்தோழன்மார்கொண்டோட
ஒருகையாலொருவன்றன்தோளையூன்றி
ஆநிரையினம்மீளக்குறித்தசங்கம்
வருகையில்வாடியபிள்ளைகண்ணன்
மஞ்சளும்மேனியும்வடிவும்கண்டாள்
அருகேநின்றாளென்பெண்நோக்கிக்கண்டாள்
அதுகண்டிவ்வூரொன்றுபுணர்க்கின்றதே. 3

257 குன்றெடுத்தாநிரைகாத்தபிரான்
கோவலனாய்க்குழலூதியூதிக்
கன்றுகள்மேய்த்துத்தன்தோழரோடு
கலந்துடன்வருவானைத்தெருவிற்கண்டு

என்றுமிவளையொப்பாரைநங்காய்
கண்டறியேனேடிவந்துகாணாய்
ஒன்றுநில்லாவளைகழன்று
துகிலேந்திளமுலையுமென்வசமல்லவே. 4

258 சுற்றிநின்றாயர்தழைகளிடச்
சுருள்பங்கிநேத்திரத்தாலணிந்து
பற்றிநின்றாயர்கடைத்தலையே
பாடவுமாடக்கண்டேனன்றிப்பின்
மற்றொருவர்க்கென்னைப்பேசலொட்டேன்
மாலிருஞ்சோலையெம்மாயற்கல்லால்
கொற்றவனுக்கிவளாமென்றெண்ணிக்
கொடுமின்கள்கொடீராகில்கோழம்பமே. 5

259 சிந்துரமிலங்கத்தன்திருநெற்றிமேல்
திருத்தியகோறம்புந்திருச்சுழலும்
அந்தரமுழவத்தண்தழைக்காவின்கீழ்
வருமாயரோடுடன்வளைகோல்வீச
அந்தமொன்றில்லாதவாயப்பிள்ளை
யறிந்தறிந்திவ்வீதிபோதுமாகில்
பந்துகொண்டானென்றுவளைத்துவைத்துப்
பவளவாய்முறுவலுங்காண்போந்தோழீ. 6

260 சாலப்பன்னிரைப்பின்னேதழைக்காவின்கீழ்த்
தன்திருமேனிநின்றொளிதிகழ
நீலநன்னறுங்குஞ்சிநேத்திரத்தாலணிந்து
பல்லாயர்குழாநடுவே
கோலச்செந்தாமரைக்கண்மிளிரக்
குழலூதியிசைபாடிக்குனித்தாயரோ
டாலித்துவருகின்றவாயப்பிள்ளை
யழகுகண்டென்மகளயர்க்கின்றதே. 7

261 சிந்துரப்பொடிக்கொண்டுசென்னியப்பித்
திருநாமமிட்டங்கோரிலையந்தன்னால்
அந்தரமின்றித்தன்னெறிபங்கியை
யழகியநேத்திரத்தாலணிந்து

இந்திரன்போல்வருமாயப்பிள்ளை
யெதிர்நின்றங்கினவளையிழவேலென்னச்
சந்தியில்நின்றுகண்டீர்நங்கைதன்
துகிலொடுசரிவளைகழல்கின்றதே. 8

262 வலங்காதின்மேல்தோன்றிப்பூவணிந்து
மல்லிகைவனமாலைமௌவல்மாலை
சிலிங்காரத்தால்குழல்தாழவிட்டுத்
தீங்குழல்வாய்மடுத்தூதியூதி
அலங்காரத்தால்வருமாயப்பிள்ளை
யழகுகண்டென்மகளாசைப்பட்டு
விலங்கிநில்லாதெதிர்நின்றுகண்டீர்
வெள்வளைகழன்றுமெய்மெலிகின்றதே. 9

263 விண்ணின்மீதமரர்கள்விரும்பித்தொழ
மிறைத்தாயர்பாடியில்வீதியூடே
கண்ணன்காலிப்பின்னேயெழுந்தருளக்
கண்டிளவாய்க்கன்னிமார்காமுற்ற
வண்ணம்வண்டமர்பொழிற்புதுவையர்கோன்
விட்டுசித்தன்சொன்னமாலைபத்தும்
பண்ணின்பம்வரப்பாடும்பத்தருள்ளார்
பரமானவைகுந்தநண்ணுவரே. 10

தழைகளும் வல்லி சுரிகை குன்று சுற்றி சிந்துரம் சால
சிந்துரப்பொடி வலம் விண்ணின்மீது அட்டு.

---

5. அட்டுக்குவி

கோவர்த்தனகிரியைக் குடையாவெடுத்தல்

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

264 அட்டுக்குவிசோற்றுப்பருப்பதமுந்
தயிர்வாவியும்நெய்யளறுமடங்கப்
பொட்டத்துற்றுமாரிப்பகைபுணர்த்த
பொருமாகடல்வண்ணன்பொறுத்தமலை

வட்டத்தடங்கண்மடமான்கன்றினை
வலைவாய்ப்பற்றிக்கொண்டுகுறமகளிர்
கொட்டைத்தலைப்பால்கொடுத்துவளர்க்குங்
கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. 1

265 வழுவொன்றுமில்லாச்செய்கைவானவர்கோன்
வலிப்பட்டுமுனிந்துவிடுக்கப்பட்ட
மழைவந்தெழுநாள்பெய்துமாத்தடுப்ப
மதுசூதனெடுத்துமறித்தமலை
இழவுதரியாததோரீற்றுப்பிடி
யிளஞ்சீயந்தொடர்ந்துமுடுகுதலும்
குழவியிடைக்காலிட்டெதிர்ந்துபொருங்
கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. 2

266 அம்மைத்தடங்கண்மடவாய்ச்சியரு
மானாயருமாநிரையுமலறி
எம்மைச்சரணேன்றுகொள்ளென்றிரப்ப
இலங்காழிக்கையெந்தையெடுத்தமலை
தம்மைச்சரணென்றதம்பாவையரைப்
புனமேய்கின்றமானினங்காண்மினென்று
கொம்மைப்புயக்குன்றர்சிலைகுனிக்குங்
கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. 3

267 கடுவாய்ச்சினவெங்கட்களிற்றினுக்குக்
கவளமெடுத்துக்கொடுப்பானவன்போல்
அடிவாயுறக்கையிட்டெழப்பறித்திட்
டமரர்பெருமான்கொண்டுநின்றமலை
கடல்வாய்ச்சென்றுமேகங்கவிழ்ந்திறங்கிக்
கதுவாய்ப்படநீர்முகந்தேறியெங்குங்
குடவாய்ப்படநின்றுமழைபொழியுங்
கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே 4

268 வானத்திலுள்ளீர்வலியீருள்ளீரே
லறையோவந்துவாங்குமினென்பவன்போல்
ஏனத்துருவாகியஈசனெந்தை
யிடவனெழவாங்கியெடுத்தமலை

கானக்களியானைதன்கொம்பிழந்து
கதுவாய்மதஞ்சோரத்தன்கையெடுத்துக்
கூனற்பிறைவேண்டியண்ணாந்துநிற்குங்
கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. 5

269 செப்பாருடையதிருமாலவன்றன்
செந்தாமரைக்கைவிரலைந்தினையும்
கப்பாகமடுத்துமணிநெடுந்தோள்
காம்பாகக்கொடுத்துக்கவித்தமலை
எப்பாடும்பரந்திழிதெள்ளருவி
யிலங்குமணிமுத்துவடம்பிறழக்
குப்பாயமெனநின்றுகாட்சிதருங்
கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. 6

270 படங்கள்பலவுமுடைப்பாம்பரையன்
படர்பூமியைத்தாங்கிக்கிடப்பவன்போல்
தடங்கைவிரலைந்தும்மலரவைத்துத்
தாமோதரன்தாங்குதடவரைதான்
அடங்கச்சென்றிலங்கையையீடழித்த
வனுமன்புகழ்பாடித்தங்குட்டன்களைக்
குடங்கைக்கொண்டுமந்திகள்கண்வளர்த்துங்
கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. 7

271 சலமாமுகிற்பல்கணப்போர்க்களத்துச்
சரமாரிபொழிந்தெங்கும்பூசலிட்டு
நலிவானுறக்கேடகங்கோப்பவன்போல்
நாராயணன்முன்முகங்காத்தமலை
இலைவேய்குரம்பைத்தவமாமுனிவ
ரிருந்தார்நடுவேசென்றணார்சொறியக்
கொலைவாய்ச்சினவேங்கைகணின்றுறங்குங்
கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. 8

272 வன்பேய்முலையுண்டதோர்வாயுடையன்
வன்றூணெனநின்றதோர்வன்பரத்தைத்
தன்பேரிட்டுக்கொண்டுதரணிதன்னில்
தாமோதரன்றாங்குதடவரைதான்

முன்பேவழிகாட்டமுசுக்கணங்கள்
முதுகிற்பெய்துதம்முடைக்குட்டன்களைக்
கொம்பேற்றியிருந்துகுதிபயிற்றுங்
கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. 9

273 கொடியேறுசெந்தாமரைக்கைவிரல்கள்
கோலமுமழிந்திலவாடிற்றில
வடிவேறுதிருவுகிர்நொந்துமில
மணிவண்ணன்மலையுமோர்சம்பிரதம்
முடியேறியமாமுகிற்பல்கணங்கள்
முன்னெற்றிநரைத்தனபோலவெங்கும்
குடியேறியிருந்துமழைபொழியுங்
கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. 10

274 அரவிற்பள்ளிகொண்டரவந்துரந்திட்
டரவப்பகையூர்தியவனுடைய
குரவிற்கொடிமுல்லைகணின்றுறங்குங்
கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடைமேல்
திருவிற்பொலிமறைவாணர்புத்தூர்த்
திகழ்பட்டர்பிரான்சொன்னமாலைபத்தும்
பரவுமனநன்குடைப்பத்தருள்ளார்
பரமானவைகுந்தநண்ணுவரே. 11

அட்டு வழு அம்மை கடு வானத்தில் செப்பாடு படங்கள்
சலம் வன்பேய் கொடி அரவில் நாவலம்.

6. நாவலம்

கண்ணன் குழலூதல்

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

275 நாவலம்பெரியதீவினில்வாழும்
நங்கைமீர்களிதோரற்புதங்கேளீர்
தூவலம்புரியுடையதிருமால்
தூயவாயிற்குழலோசைவழியே

கோவலர்சிறுமியரிளங்கொங்கை
குதுகலிப்பவுடலுளவிழ்ந்தெங்குங்
காவலுங்கடந்துகயிறுமாலையாகி
வந்துகவிழ்ந்துநின்றனரே. 1

276 இடவணரையிடத்தோளொடுசாய்த்
திருகைகூடப்புருவம்நெரிந்தேறக்
குடவயிறுபடவாய்கடைகூடக்
கோவிந்தன்குழல்கொடூதினபோது
மடமயில்களொடுமான்பிணைபோலே
மங்கைமார்கள்மலர்க்கூந்தலவிழ
உடைநெகிழவோர்கையாற்றுகில்பற்றி
யொல்கியோடரிக்கணோடநின்றனரே. 2

277 வானிளவரசுவைகுந்தக்குட்டன்
வாசுதேவன்மதுரைமன்னன்நந்த
கோனிளவரசுகோவலர்குட்டன்
கோவிந்தன்குழல்கொடூதினபோது
வானிளம்படியர்வந்துவந்தீண்டி
மனமுருகிமலர்க்கண்கள்பனிப்பத்
தேனளவுசெறிகூந்தலவிழச்
சென்னிவேர்ப்பச்செவிசேர்த்துநின்றனரே. 3

278 தேனுகன்பிலம்பன்காளியனென்னுந்
தீப்பப்பூடுகளடங்கவுழக்கிக்
கானகம்படியுலாவியுலாவிக்
கருஞ்சிறுக்கன்குழலூதினபோது
மேனகையொடுதிலோத்தமையரம்பை
யுருப்பசியரவர்வெள்கிமயங்கி
வானகம்படியில்வாய்திறப்பின்றி
யாடல்பாடலவைமாறினர்தாமே. 4

279 முன்னரசிங்கமதாகியவுணன்
முக்கியத்தைமுடிப்பான்மூவுலகில்
மன்னரஞ்சமதுசூதனன்வாயில்
குழலினோசைசெவியைப்பற்றிவாங்க

நன்னரம்புடைய தும்புருவோடு
நாரதனுந் தந்தம் வீணை மறந்து
கின்னரமிதுனங்களுந் தந்தம்
கின்னரந் தொடுகிலோமென்றனரே. 5

280 செம்பெருந்தடங்கண்ணன் திரடோளன்
தேவகி சிறுவன் தேவர்கள் சிங்கம்
நம்பரமனிந்நாள் குழலூதக்
கேட்டவர்களிடருற்றன கேளீர்
அம்பரந்திரியுங் காந்தப்பரெல்லா
மமுதகீதவலையாற் சுருக்குண்டு
நம்பரமன்றென்று நாணிமயங்கி
நைந்து சோர்ந்து கைம்மறித்து நின்றனரே. 6

281 புவியுள் நான் கண்டதோரற்புதங்கேளீர்
பூணிமேய்க்குமிளங்கோவலர் கூட்டத்
தவையுள் நாகத்தணையான் குழலூத
அமரலோகத்தளவுஞ் சென்றிசைப்ப
அவியுணா மறந்து வானவரெல்லா
மாயர்பாடி நிறையப்புகுந்தீண்டிச்
செவியுளின்சுவை கொண்டு மகிழ்ந்து
கோவிந்தனைத் தொடர்ந்தென்றும் விடாரே. 7

282 சிறுவிரல்கள் தடவிப்பரிமாறச்
செங்கண் கோடச் செய்யவாய் கொப்பளிப்பக்
குறுவெயர்ப்புருவங் கூடலிப்பக்
கோவிந்தன் குழல்கொடூதினபோது
பறவையின் கணங்கள் கூடுதுறந்து
வந்து சூழ்ந்து படுகாடுகிடப்பக்
கறவையின் கணங்கள் கால்பரப்பிட்டுக்
கவிழ்ந்திறங்கிச் செவியாட்டகில்லாவே. 8

283 திரண்டெழுதழைமழைமுகில்வண்ணன்
செங்கமலமலர்சூழ்வண்டினம்போலே
சுருண்டிருண்டகுழல் தாழ்ந்தமுகத்தா
னூதுகின்றகுழலோசைவழியே

மருண்டுமான்கணங்கள்மேய்கைமறந்து
மேய்ந்தபுல்லும்கடைவாய்வழிசோர
இரண்டுபாடும்துலுங்காப்புடைபெயரா
வெழுதுசித்திரங்கள்போலநின்றனவே.

284 கருங்கண்தோகைமயிற்பீலியணிந்து
கட்டிநன்குடுத்தபீதகவாடை
அருங்கலவுருவினாயர்பெருமா
னவனொருவன்குழலூதினபோது
மரங்கள்நின்றுமதுதாரைகள்பாயும்
மலர்கள்வீழும்வளர்கொம்புகள்தாழும்
இரங்குங்கூம்புந்திருமால்நின்றநின்ற
பக்கம்நோக்கியவைசெய்யுங்குணமே. 10

285 குழலிருண்டுசுருண்டேறியகுஞ்சிக்
கோவிந்தனுடையகோமளவாயில்
குழல்முழைஞ்சுகளினூடுகுமிழ்த்துக்
கொழித்திழிந்தவமுதப்புனல்தன்னைக்
குழல்முழவம்விளம்புபுதுவைக்கோன்
விட்டுசித்தன்விரித்ததமிழ்வல்லார்
குழலைவென்றகுளிர்வாயினராகிச்
சாதுகோட்டியுள்கொள்ளப்படுவாரே. 11

நாவலம் இட வான் தேனுகன் முன் செம் புவியுள் சிறு திரண்டு கரும் குழல் ஐய.

7. ஐயபுழுதி

மாயவன்மேல் மகள் மாலுறுமகிழ்வு தாயவள் கூறல்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

286 ஐயபுழுதியுடம்பளைந்திவள்பேச்சுமலந்தலையாய்ச்
செய்யநூலின்சிற்றாடைசெப்பனுடுக்கவும்வல்லளல்லள்

கையினிற்சிறுதூதையோடிவள்முற்றிற்பிரிந்துமிலள்
பையரவணைப்பள்ளியானொடுகைவைத்திவள்வருமே. 1

287 வாயிற்பல்லுமெழுந்திலமயிருமுடிகூடிற்றில
சாய்விலாதகுறுந்தலைச்சிலபிள்ளைகளோடிணங்கித்
தீயிணக்கிணங்காடிவந்திவள்தன்னன்னசெம்மைசொல்லி
மாயன்மாமணிவண்ணன்மேலிவள்மாலுறுகின்றாளே. 2

288 பொங்குவெண்மணற்கொண்டுசிற்றிலும்முற்றத்திழைக்கலுறில்
சங்குசக்கரம்தண்டுவாள்வில்லுமல்லதிழைக்கலுறாள்
கொங்கையின்னம்குவிந்தெழுந்திலகோவிந்தனோடிவளைச்
சங்கையாகியென்னுள்ளம்நாள்தொறுந்தட்டுளுப்பாகின்றதே. 3

289 ஏழைபேதையோர்பாலகன்வந்தென்பெண்மகளையெள்கித்
தோழிமார்பலர்கொண்டுபோய்ச்செய்தகூழ்ச்சியையார்க்குரைக்
ஆழியானென்னுமாழமோழையிற்பாய்ச்சியகப்படுத்தி [கேன்
மூழையுப்பறியாததென்னும்மூதுரையுமிலளே. 4

290 நாடுமூருமறியவேபோய்நல்லதுழாயலங்கல்
சூடிநாரணன்போமிடமெல்லாஞ்சோதித்துழிதருகின்றாள்
கேடுவேண்டுகின்றார்பலருளர்கேசவனோடிவளைப்
பாடுகாவலிடுமினென்றென்றுபார்தடுமாறினதே. 5

291 பட்டங்கட்டிப்பொற்றோடுபெய்திவள்பாடகமுஞ்சிலம்பும்
இட்டமாகவளர்த்தெடுத்தேனுக்கென்னோடிருக்கலுறாள்
பொட்டப்போய்ப்புறப்பட்டுநின்றிவள்பூவைப்பூவண்ணாவென்னும்
வட்டவார்குழல்மங்கைமீரிவள்மாலுறுகின்றாளே 6

292 பேசவுந்தரியாதபெண்மையிற்பேதையேன்பேதையிவள்
கூசமின்றிநின்றார்கள்தம்மெதிர்கோல்கழிந்தான்மூழையாய்க்
கேசவாவென்றுங்கேடிலீயென்றுங்கிஞ்சுகவாய்மொழியாள்
வாசவார்குழல்மங்கைமீரிவள்மாலுறுகின்றாளே. 7

293 காறைபூணுங்கண்ணாடிகாணுந்தன்கையில்வளைகுலுக்கும்
கூறையுடுக்குமயர்க்குந்தன்கொவ்வைச்செவ்வாய்திருத்தும்
தேறித்தேறிநின்றாயிரம்பேர்த்தேவன்திறம்பிதற்றும்
மாறில்மாமணிவண்ணன்மேலிவள்மாலுறுகின்றாளே. 8

294 கைத்தலத்துள்ளமாடழியக்கண்ணாலங்கள்செய்திவளை
வைத்துவைத்துக்கொண்டென்னவாணியம்நம்மைவடுப்படுத்தும்
செய்த்தலையெழுநாற்றுப்போலவன்செய்வனசெய்துகொள்ள
மைத்தடமுகில்வண்ணன்பக்கல்வளரவிடுமின்களே. 9

295 பெருப்பெருத்தகண்ணாலங்கள்செய்துபேணிநம்மில்லத்துள்ளே
இருத்துவானெண்ணிநாமிருக்கவிவளுமொன்றெண்ணுகின்றாள்
மருத்துவப்பதம்நீங்கினாளென்னும்வார்த்தைபடுவதன்முன்
ஒருப்படுத்திடுமினிவளையுலகளந்தானிடைக்கே. 10

296 ஞாலமுற்றுமுண்டாலிலைத்துயில்நாராயணனுக்கிவள்
மாலதாகிமகிழ்ந்தனளென்றுதாயுரைசெய்ததனைக்
கோலமார்பொழில்சூழ்புதுவையர்கோன்விட்டுசித்தன்சொன்ன
மாலைபத்தும்வல்லவர்கட்கில்லைவருதுயரே. 11

ஐய வாயில் பொங்கு ஏழை நாடு பட்டம் பேச காறை
கைத்தலத்து பெரு ஞாலம் நல்லது.

---

8. நல்லதோர்தாமரை

மாயவன் பின்வழிசென்ற மகளைத் தாயவளுன்னிய தகுதல்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

297 நல்லதோர்தாமரைப்பொய்கைநாண்மலர்மேற்பனிசோர
அல்லியுந்தாதுமுதிர்ந்திட்டழகழிந்தாலொத்ததாலோ
இல்லம்வெறியோடிற்றாலோவென்மகளையெங்குங்காணேன்
மல்லரையட்டவன்பின்போய்மதுரைப்புறம்புக்காள்கொலோ. 1

298 ஒன்றுமறிவொன்றில்லாதவுருவறைக்கோபாலர்தங்கள்
கன்றுகால்மாறுமாபோலேகன்னியிருந்தாளைக்கொண்டு
நன்றுங்கிறிசெய்துபோனான்நாராயணன்செய்ததீமை
என்றுமெமர்கள்குடிக்கோரேச்சுக்கொலாயிடுங்கொலோ. 2

299 குமரிமணஞ்செய்துகொண்டுகோலஞ்செய்தில்லத்திருத்தித்
தமரும்பிறருமறியத்தாமோதரற்கென்றுசாற்றி
அமரர்பதியுடைத்தேவியரசாணியைவழிபட்டுத்
துமிலமெழப்பறைகொட்டித்தோரணம்நாட்டிடுங்கொலோ. 3

300 ஒருமகள் தன்னையுடையேன் உலகம்நிறைந்தபுகழால்
திருமகள்போலவளர்த்தேன் செங்கண்மால் தான்கொண்டுபோனான்
பெருமகளாய்க்குடிவாழ்ந்து பெரும்பிள்ளைபெற்றவசோதை
மருமகளைக்கண்டுகந்து மணாட்டுப்புறஞ்செய்யுங்கொலோ. 4

301 தம்மாமன்நந்தகோபாலன் தழீஇக்கொண்டென்மகள் தன்னைச்
செம்மாந்திரேயென்றுசொல்லிச் செழுங்கயற்கண்ணுஞ்செவ்வாயும்
கொம்மைமுலையும்இடையும் கொழும்பணைத்தோள்களுங்கண்டிட்டு
இம்மகளைப்பெற்றதாயர் இனித்தரியாரென்னுங்கொலோ. 5

302 வேடர்மறக்குலம்போலே வேண்டிற்றுச்செய்தென்மகளைக்
கூடியகூட்டமேயாகக் கொண்டுகுடிவாழுங்கொலோ
நாடுநகருமறிய நல்லதோர்கண்ணாலஞ்செய்து
சாடிறப்பாய்ந்தபெருமான் தக்கவாகைப்பற்றுங்கொலோ. 6

303 அண்டத்தமரர்பெருமான் ஆழியானின்றென்மகளைப்
பண்டப்பழிப்புக்கள்சொல்லிப் பரிசறவாண்டிடுங்கொலோ
கொண்டுகுடிவாழ்க்கைவாழ்ந்து கோவலப்பட்டங்கவித்துப்
பண்டைமணாட்டிமார்முன்னே பாதுகாவல்வைக்குங்கொலோ. 7

304 குடியிற்பிறந்தவர்செய்யும் குணமொன்றுஞ்செய்திலனந்தோ
நடையொன்றுஞ்செய்திலன்நங்காய் நந்தகோபன்மகன்கண்ணன்
இடையிருபாலும்வணங்க இளைத்திளைத்தென்மகளேங்கிக்
கடைகயிறேபற்றிவாங்கிக் கைதழும்பேறிடுங்கொலோ. 8

305 வெண்ணிறத்தோய்தயிர்தன்னை வெள்வரைப்பின்முன்னெழுந்து
கண்ணுறங்காதேயிருந்து கடையவுந்தான்வல்லள்கொலோ
ஒண்ணிறத்தாமரைச்செங்கண் உலகளந்தானென்மகளைப்
பண்ணறையாப்பணிகொண்டு பரிசறவாண்டிடுங்கொலோ. 9

306 மாயவன்பின்வழிசென்று வழியிடைமாற்றங்கள்கேட்டு
ஆயர்கள்சேரியிலும்புக்கு அங்குத்தைமாற்றமுமெல்லாம்
தாயவள்சொல்லியசொல்லைத் தண்புதுவைப்பட்டன்சொன்ன
தூயதமிழ்ப்பத்தும்வல்லார் தூமணிவண்ணனுக்காளரே. 10

நல்லது ஒன்றும் குமரி ஒரு தம்மாமன் வேடர் அண்டத்து
குடியில் வெண்ணிறம் மாயவன் என்னுதன்.

9. என்னாதன்

நந்தன்மதலையைக் காகுத்தனை நவின்று உந்திபறத்தல்

கலித்தாழிசை

307 என்னாதன்தேவிக்கன்றின்பப்பூவீயாதாள்
தன்னாதன்காணவேதண்பூமரத்தினை
வன்னாதப்புள்ளால்வலியப்பறித்திட்ட [பாடிப்பற.
என்னாதன்வன்மையைப்பாடிப்பறவெம்பிரான்வன்மையைப் 1

308 என்வில்வலிகண்டுபோவென்றெதிர்வந்தான்
தன்வில்லினோடுந்தவத்தையெதிர்வாங்கி
முன்வில்வலித்துமுதுபெண்ணுயிருண்டான் [பாடிப்பற.
தன்வில்லின்வன்மையைப்பாடிப்பறதாசரதிதன்மையைப் 2

309 உருப்பிணிநங்கையைத்தேரேற்றிக்கொண்டு
விருப்புற்றங்கேகவிரைந்தெதிர்வந்து
செருக்குற்றான்வீரஞ்சிதையத்தலையைச் [பாடிப்பற.
சிரைத்திட்டான்வன்மையைப்பாடிப்பறதேவகிசிங்கத்தைப்.

310 மாற்றுத்தாய்சென்றுவனம்போகேயென்றிட
ஈற்றுத்தாய்பின்தொடர்ந்தெம்பிரானென்றழக்
கூற்றுத்தாய்சொல்லக்கொடியவனம்போன
சீற்றமிலாதானைப்பாடிப்பறசீதைமணாளனைப்பாடிப்பற. 4

311 பஞ்சவர்தூதனாய்ப்பாரதங்கைசெய்து
நஞ்சுமிழ்நாகங்கிடந்தநற்பொய்கைபுக்கு
அஞ்சப்பணத்தின்மேற்பாய்ந்திட்டருள்செய்த
அஞ்சனவண்ணனைப்பாடிப்பறவசோதைதன்சிங்கத்தைப்பாடிப்பற.

312 முடியொன்றிமூவுலகங்களுமாண்டுன்
னடியேற்கருளென்றவன்பின்தொடர்ந்த
படியில்குணத்துப்பரதநம்பிக்கன்
றடிநிலையீந்தானைப்பாடிப்பறவயோத்தியர்கோமானைப்பாடிப்பற. 6

313 காளியன்பொய்கைகலங்கப்பாய்ந்திட்டவன்
நீள்முடியைந்திலும்நின்றுநடஞ்செய்து

மீளவவனுக்கருள்செய்தவித்தகன்
தோள்வலிவீரமேபாடிப்பறதூமணிவண்ணனைப்பாடிப்பற.

314 தார்க்கிளந்தம்பிக்கரசீந்துதண்டகம்
நூற்றவள்சொற்கொண்டுபோகிநுடங்கிடைச்
சூர்ப்பணகாவைச்செவியொடுமூக்கவள் [பற.
ஆர்க்கவரிந்தானைப்பாடிப்பறவயோத்திக்கரசனைப்பாடிப்

315 மாயச்சகடமுதைத்துமருதிறுத்து
ஆயர்களோடுபோயாநிரைகாத்தணி
வேயின்குழலூதிவித்தகனாய்நின்ற [பற.
ஆயர்களேற்றினைப்பாடிப்பறவாநிரைமேய்த்தானைப்பாடிப்

316 காரார்கடலையடைத்திட்டிலங்கைபுக்கு
ஓராதான்பொன்முடியொன்பதோடொன்றையும்
நேராவவன்றம்பிக்கேநீளரசீந்த [பற.
ஆராவமுதனைப்பாடிப்பறவயோத்தியர்வேந்தனைப்பாடிப்

தரவுகொச்சகக்கலிப்பா

317 நந்தன்மதலையைக்காகுத்தனைநவின்று
உந்திபறந்தவொளியிழையார்கள்சொல்
செந்தமிழ்த்தென்புதுவைவிட்டுசித்தன்சொல்
ஐந்தினோடைந்தும்வல்லார்க்கல்லலில்லையே. 11

என்னாதன் என்வில் உருப்பிணி மாற்று பஞ்சவர் முடி
காளியன் தார்க்கு மாய காரார் நந்தன் நெறிந்த.

10. நெறிந்தகருங்குழல்

சீதைக்கு அனுமன் தெரிந்துரைத்த அடையாளம்

தரவுகொச்சகக்கலிப்பா

318 நெறிந்தகருங்குழல்மடவாய்நின்னடியேன்விண்ணப்பம்
செறிந்தமணிமுடிச்சனகன்சிலையிறுத்துநினைக்கொணர்ந்து

தறிந்தரசுகளைகட்டவருந்தவத்தோனிடைவிலங்கச்
செறிந்தசிலைகொடுதவத்தைச்சிதைத்ததுமோரடையாளம்.

319 அல்லியம்பூமலர்க்கோதாயடிபணிந்தேன்விண்ணப்பம்
சொல்லுகேன்கேட்டருளாய் துணைமலர்க்கண்மடமானே
எல்லியம்போதினிதிருத்தலிருந்ததோரிடவகையில்
மல்லிகைமாமாலைகொண்டங்கார்த்ததுமோரடையாளம். 2

320 கலக்கியமாமனத்தனளாய்க்கைகேசிவரம்வேண்ட
மலக்கியமாமனத்தனனாய்மன்னவனும்மறாதொழியக்
குலக்குமராகாடுறையப்போவென்றுவிடைகொடுப்ப
இலக்குமணன்றன்னொடுமங்கேகியதோரடையாளம். 3

321 வாரணிந்தமுலைமடவாய்வைதேவீவிண்ணப்பம்
தேரணிந்தவயோத்தியர்கோன்பெருந்தேவீகேட்டருளாய்
கூரணிந்தவேல்வலவன்குகனோடுங்கங்கைதனில்
சீரணிந்ததோழமைக்கொண்டதுமோரடையாளம். 4

322 மானமருமென்னோக்கிவைதேவீவிண்ணப்பம்
கானமருங்கல்லதர்போய்க்காடுறைந்தகாலத்துத்
தேனமரும்பொழிற்சாரற்சித்திரகூடத்திருப்பப்
பான்மொழியாய்பரதநம்பிபணிந்ததுமோரடையாளம். 5

323 சித்திரகூடத்திருப்பச்சிறுகாக்கைமுலைதீண்ட
அத்திரமேகொண்டெறியஅனைத்துலகுந்திரிந்தோடி
வித்தகனேயிராமாவோநின்னபயமென்றழைப்ப
அத்திரமேயதன்கண்ணையறுத்ததுமோரடையாளம். 6

324 மின்னொத்தநுண்ணிடையாய்மெய்யடியேன்விண்ணப்பம்
பொன்னொத்தமானொன்றுபுகுந்தினிதுவிளையாட
நின்னன்பின்வழிநின்றுசிலைபிடித்தெம்பிரானேகப்
பின்னேயங்கிலக்குமணன்பிரிந்ததுமோரடையாளம். 7

325 மைத்தகுமாமலர்க்குழலாய்வைதேவீவிண்ணப்பம்
ஒத்தபுகழ்வானரக்கோனுடனிருந்துநினைத்தேட
அத்தகுசீரயோத்தியர்கோனடையாளமிவைமொழிந்தான்
இத்தகையால்அடையாளமீதவன்கைம்மோதிரமே. 8

326 திக்குநிறைபுகழாளன் தீவேள்விச்சென்றநாள்
மிக்கபெருஞ்சவைநடுவேவில்லிறுத்தான்மோதிரங்கண்
டொக்குமாலடையாளமனுமானென்றுச்சிமேல்
வைத்துக்கொண்டுகந்தனளால்மலர்க்குழலாள்சீதையுமே.

327 வாராருமுலைமடவாள்வைதேவிதனைக்கண்டு
சீராரும்திறலனுமன்தெரிந்துரைத்தவடையாளம்
பாராரும்புகழ்ப்புதுவைப்பட்டர்பிரான்பாடல்வல்லார்
ஏராரும்வைகுந்தத்திமையவரோடிருப்பாரே. 10

நெறிந்த அல்லி கலக்கிய வாரணி மான் சித்திரகூடத்து
மின் மைத்தகு திக்கு வாராரும் கதிர்.

நான்காம் பத்து

1. கதிராயிரம்

மாயனைக்கண்ட சுவடுரைத்தல்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

328 கதிராயிரமிரவிகலந்தெறித்தாலொத்தநீண்முடியன்
எதிரில்பெருமையிராமனையிருக்குமிடம்நாடுதிரேல்
அதிரும்கழற்பொருதோளிரணியனாகம்பிளந்தரியாய்
உதிரமளைந்தகையோடிருந்தானையுள்ளவாகண்டாருளர். 1

329 நாந்தகஞ்சங்குதண்டுநாணொலிச்சார்ங்கந்திருச்சக்கரம்
ஏந்துபெருமையிராமனையிருக்குமிடம்நாடுதிரேல்
காந்தள்முகிழ்விரற்சீதைக்காகிக்கடுஞ்சிலைசென்றிறுக்க
வேந்தர்தலைவன்சனகராசன்றன்வேள்வியிற்கண்டாருளர்.

330 கொலையானைக்கொம்புபறித்துக்கூடலர்சேனைபொருதழியச்
சிலையால்மராமரமெய்ததேவனைச்சிக்கெனநாடுதிரேல்
தலையால்குரக்கினந்தாங்கிச்சென்றுதடவரைகொண்டடைப்ப
அலையார்கடற்கரைவீற்றிருந்தானையங்குத்தைக்கண்டாருளர். 3

331 தோயம்பரந்தநடுவுசூழலிற்றொல்லைவடிவுகொண்ட
மாயக்குழவியதனைநாடுறில்வம்மின்சுவடுரைக்கேன்
ஆயர்மடமகள்பின்னைக்காகியடல்விடையேழினையும்
வீயப்பொருதுவியர்த்துநின்றானைமெய்ம்மையேகண்டாருளர். 4

332 நீரேறுசெஞ்சடைநீலகண்டனுநான்முகனும்முறையால்
சீரேறுவாசகஞ்செய்யநின்றதிருமாலைநாடுதிரேல்
வாரேறுகொங்கையுருப்பிணியைவலியப்பிடித்துக்கொண்டு
தேரேற்றிச்சேனைநடுவுபோர்செய்யச்சிக்கெனக்கண்டாருளர். 5

333 பொல்லாவடிவுடைப்பேய்ச்சிதுஞ்சப்புணர்முலைவாய்மடுக்க
வல்லானைமாமணிவண்ணனைமருவுமிடம்நாடுதிரேல்
பல்லாயிரம்பெருந்தேவிமாரொடுபௌவமெறிதுவரை
எல்லாருஞ்சூழச்சிங்காசனத்தேயிருந்தானைக்கண்டாருளர்.

334 வெள்ளைவிளிசங்குவெஞ்சுடர்த்திருச்சக்கரமேந்துகையன்
உள்ளவிடம்வினவிலுமக்கிறைவம்மின்சுவடுரைக்கேன்
வெள்ளைப்புரவிக்குரக்குவெல்கொடித்தேர்மிசைமுன்புநின்று
கள்ளப்படைத்துணையாகிப்பாரதங்கைசெய்யக்கண்டாருளர். 7

335 நாழிகைகூறிட்டுக்காத்துநின்றஅரசர்கள்தம்முகப்பே
நாழிகைபோகப்படைபொருதவன்தேவகிதன்சிறுவன்
ஆழிகொண்டன்றிரவிமறைப்பச்சயத்திரதன்றலையைப்
பாழிலுருளப்படைபொருதவன்பக்கமேகண்டாருளர். 8

336 மண்ணும்மலையும்மறிகடல்களும்மற்றும்யாவுமெல்லாம்
திண்ணம்விழுங்கியுமிழ்ந்ததேவனைச்சிக்கெனநாடுதிரேல்
எண்ணற்கரியதோரேனமாகியிருநிலம்புக்கிடந்து
வண்ணக்கருங்குழல்மாதரோடுமணந்தானைக்கண்டாருளர்.

337 கரியமுகிற்புரைமேனிமாயனைக்கண்டசுவடுரைத்துப்
புரவிமுகஞ்செய்துசெந்நெலோங்கிவிளைகழனிப்புதுவைத்
திருவிற்பொலிமறைவாணன்பட்டர்பிரான்சொன்னமாலைபத்தும்
பரவுமனமுடைப்பத்தருள்ளார்பரமனடிசேர்வர்களே. 10

கதிர் நாந்தகம் கொலை தோயம் நீரேறு பொல்லா வெள்ளை
நாழிகை மண்ணும். கரிய அலம்பா.

2. அலம்பாவெருட்டா

திருமாலிருஞ்சோலைமலை

கலிநிலைத்துறை

338 அலம்பாவெருட்டாக்கொன்று திரியுமரக்கரைக்
குலம்பாழ்படுத்துக்குலவிளக்காய்நின்றகோன்மலை
சிலம்பார்க்கவந்து தெய்வமகளிர்களாடுஞ்சீர்ச்
சிலம்பாறுபாயுந்தென்திருமாலிருஞ்சோலையே. 1

339 வல்லாளன்றோளும்வாளரக்கன்முடியுந்தங்கை
பொல்லாதமூக்கும்போக்குவித்தான்பொருந்துமலை
எல்லாவிடத்திலுமெங்கும்பரந்துபல்லாண்டொலி
செல்லாநிற்குஞ்சீர்த்தென்திருமாலிருஞ்சோலையே. 2

340 தக்கார்மிக்கார்களைச்சஞ்சலஞ்செய்யுஞ்சலவரைத்
தெக்காநெறியேபோக்குவிக்குஞ்செல்வன்பொன்மலை
எக்காலமுஞ்சென்றுசேவித்திருக்குமடியரை
அக்கானெறியைமாற்றுந்தண்மாலிருஞ்சோலையே. 3

341 ஆனாயர்கூடியமைத்தவிழவையமரர்தங்
கோனார்க்கொழியக்கோவர்த்தனத்துச்செய்தான்மலை
வானாட்டினின்றுமாமலர்க்கற்பகத்தொத்திழி
தேனாறுபாயுந்தென்திருமாலிருஞ்சோலையே 4

342 ஒருவாரணம்பணிகொண்டவன்பொய்கையிற்கஞ்சன்ற
னொருவாரணமுயிருண்டவன்சென்றுறையுமலை
கருவாரணந்தன்பிடிதுறந்தோடக்கடல்வண்ணன்
திருவாணைகூறத்திரியுந்தண்மாலிருஞ்சோலையே. 5

343 ஏவிற்றுச்செய்வானேன்றெதிர்ந்துவந்தமல்லரைச்
சாவத்தகர்த்தசாந்தணிதோட்சதுரன்மலை
ஆவத்தனமென்றமரர்களுநன்முனிவரும்
சேவித்திருக்குந்தென்திருமாலிருஞ்சோலையே. 6

344 மன்னர்மறுகமைத்துனன்மார்க்கொருதேரின்மேல்
முன்னங்குநின்றுமோழையெழுவித்தவன்மலை

கொன்னவில்கூர்வேற்கோனெடுமாறன்றென்கூடற்கோன்
தென்னன்கொண்டாடுந்தென்றிருமாலிருஞ்சோலையே. 7

345 குறுகாதமன்னரைக்கூடுகலக்கிவெங்கானிடைச்
சிறுகானெறியேபோக்குவிக்குஞ்செல்வன்பொன்மலை
அறுகால்வரிவண்டுகளாயிரநாமஞ்சொல்லிச்
சிறுகாலைப்பாடுந்தென்றிருமாலிருஞ்சோலையே. 8

346 சிந்தப்புடைத்துச்செங்குருதிகொண்டுபூதங்கள்
அந்திப்பலிகொடுத்தாவத்தனஞ்செய்யப்பன்மலை
இந்திரகோபங்களெம்பெருமான்கனிவாயொப்பான்
சிந்தும்புறவிற்றென்றிருமாலிருஞ்சோலையே. 9

347 எட்டுத்திசையுமெண்ணிறந்தபெருந்தேவிமார்
விட்டுவிளங்கவீற்றிருந்தவிமலன்மலை
பட்டிப்பிடிகள்பகடுரிஞ்சிச்சென்றுமாலைவாய்த்
தெட்டித்திளைக்குந்தென்றிருமாலிருஞ்சோலையே. 10

348 மருதப்பொழிலணிமாலிருஞ்சோலைமலைதன்னைக்
கருதியுறைகின்றகார்க்கடல்வண்ணனம்மான்றன்னை
விரதங்கொண்டேத்தும்வில்லிபுத்தூர்விட்டுசித்தன்சொல்
கருதியுரைப்பவர்கண்ணன்கழலிணைகாண்பர்களே. 11

அலம்பா வல்லாளன் தக்கார் ஆனாயர் ஒரு ஏவிற்று மன்னர்
குறுகாத சிந்த எட்டு மருத உருப்பிணி.

---

3. உருப்பிணிநங்கை

திருமாலிருஞ்சோலைமலை

கலிநிலைத்துறை

349 உருப்பிணிநங்கைதன்னைமீட்பான்தொடர்ந்தோடிச்சென்ற
உருப்பனையோட்டிக்கொண்டிட்டுறைத்திட்டவுறைப்பன்மலை
பொருப்பிடைக்கொன்றைநின்றுமுறியாழியுங்காசுங்கொண்டு
விருப்பொடுபொன்வழங்கும்வியன்மாலிருஞ்சோலையதே. 1

350 கஞ்சனுங்காளியனுங்களிறுமருதுமெருதும்
வஞ்சனையின்மடியவளர்ந்தமணிவண்ணன்மலை
நஞ்சுமிழ்நாகமெழுந்தணவிநளிர்மாமதியைச்
செஞ்சுடர்நாவளைக்குந்திருமாலிருஞ்சோலையதே. 2

351 மன்னுநரகன்றன்னைச்சூழ்போகிவளைத்தெறிந்து
கன்னிமகளிர்தம்மைக்கவர்ந்தகடல்வண்ணன்மலை
புன்னைசெருந்தியொடுபுனவேங்கையுங்கோங்கும்நின்று
பொன்னரிமாலைகள்சூழ்பொழில்மாலிருஞ்சோலையதே. 3

352 மாவலிதன்னுடையமகன்வாணன்மகளிருந்த
காவலைக்கட்டழித்ததனிக்காளைகருதுமலை
கோவலர்கோவிந்தனைக்குறமாதர்கள்பண்குறிஞ்சிப்
பாவொலிபாடிநடம்பயில்மாலிருஞ்சோலையதே. 4

353 பலபலநாழஞ்சொல்லிப்பழித்தசிசுபாலன்றன்னை
அலவலைமைதவிர்த்தவழகனலங்காரன்மலை
குலமலைகோலமலைகுளிர்மாமலைகொற்றமலை
நிலமலைநீண்டமலைதிருமாலிருஞ்சோலையதே. 5

354 பாண்டவர்தம்முடையபாஞ்சாலிமறுக்கமெல்லாம்
ஆண்டங்குநூற்றுவர்தம்பெண்டிர்மேல்வைத்தவப்பன்மலை
பாண்டகுவண்டினங்கள்பண்கள்பாடிமதுப்பருகத்
தோண்டலுடையமலைதொல்லைமாலிருஞ்சோலையதே. 6

355 கனங்குழையாள்பொருட்டாக்கணைபாரித்தரக்கர்தங்கள்
இனங்கழுவேற்றுவித்தவெழிற்றோளெம்மிராமன்மலை
கனங்கொழிதெள்ளருவிவந்துசூழ்ந்தகன்ஞாலமெல்லாம்
இனங்குழுவாடுமலையெழில்மாலிருஞ்சோலையதே. 7

356 எரிசிதறுஞ்சரத்தாலிலங்கையினைத்தன்னுடைய
வரிசிலைவாயிற்பெய்துவாய்க்கோட்டந்தவிர்த்துகந்த
அரையனமருமலையமரரொடுகோனுஞ்சென்று
திரிசுடர்சூழுமலைதிருமாலிருஞ்சோலையதே. 8

357 கோட்டுமண்கொண்டிடந்துகுடங்கையின்மண்கொண்டளந்து
மீட்டுமதுண்டுமிழ்ந்துவிளையாடுவிமலன்மலை

ஈட்டியபல்பொருள்களெம்பிரானுக்கடியுறையென்
றோட்டருந்தண்சிலம்பாறுடைமாலிருஞ்சோலையதே. 9

358 ஆயிரந்தோள்பரப்பிமுடியாயிரமின்னிலக
ஆயிரம்பைந்தலையவனந்தசயனனாளுமலை
ஆயிரமாறுகளுஞ்சுனைகள்பலவாயிரமும்
ஆயிரம்பூம்பொழிலுமுடைமாலிருஞ்சோலையதே. 10

359 மாலிருஞ்சோலையென்னும் மலையையுடையமலையை
நாலிருமூர்த்திதன்னைநால்வேதக்கடலமுதை
மேலிருங்கற்பகத்தைவேதாந்தவிழுப்பொருளின்
மேலிருந்தவிளக்கைவிட்டுசித்தன்விரித்தனவே. 11

உருப்பிணி கஞ்சன் மன்னு மாவலி பலபல பாண்டவர் கணம்
எரி கோட்டு ஆயிரம் மாலி நாவகாரியம்

---

4. நாவகாரியம்

திருக்கோட்டியூர்

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

360 நாவகாரியஞ்சொல்லிலாதவர்நாடொறும்விருந்தோம்புவார்
தேவகாரியஞ்செய்துவேதம்பயின்றுவாழ்திருக்கோட்டியூர்
மூவர்காரியமுந்திருத்துமுதல்வனைச்சிந்தியாதவப்
பாவகாரிகளைப்படைத்தவனெங்ஙனம்படைத்தான்கொலோ.

361 குற்றமின்றிக்குணம்பெருக்கிக்குருக்களுக்கனுகூலராய்ச்
செற்றமொன்றுமிலாதவண்கையினார்கள்வாழ்திருக்கோட்டியூர்
துற்றியேழுலகுண்டதூமணிவண்ணன்றன்னைத்தொழாதவர்
பெற்றதாயர்வயிற்றினைப்பெருநோய்செய்வான்பிறந்தார்களே. 2

362 வண்ணநன்மணியும்மரகதமுமழுத்திநிழலெழுந்
திண்ணைசூழ்திருக்கோட்டியூர்த்திருமாலவன்றிருநாமங்கள்
எண்ணக்கண்டவிரல்களாலிறைப்பொழுதுமெண்ணகிலாதுபோய்
உண்ணக்கண்டதமூத்தைவாய்க்குக்கவளமுந்துகின்றார்களே. 3

363 உரகமெல்லணையான்கையிலுறைசங்கம்போன்மடவன்னங்கள்
நிரைகணம்பரந்தேறுஞ்செங்கமலவயற்றிருக்கோட்டியூர்

நரகநாசனைநாவிற்கொண்டழையாதமானிடசாதியர்
பருகுநீருமுடுக்குங்கூறையும்பாவம்செய்தனதான்கொலோ. 4

364 ஆமையின்முதுகத்திடைக்குதிகொண்டுதூமலர்சாடிப்போய்த்
தீமைசெய்திளவாளைகள்விளையாடுநீர்த்திருக்கோட்டியூர்
நேமிசேர்தடங்கையினானைநினைப்பிலாவலிநெஞ்சுடைப்
பூமிபாரங்களுண்ணுஞ்சோற்றினைவாங்கிப்புல்லைத்திணிமினே. 5

365 பூதமைந்தொடுவேள்வியைந்துபுலன்களைந்துபொறிகளால்
ஏதமொன்றுமிலாதவண்கையினார்கள்வாழ்திருக்கோட்டியூர்
நாதனைநரசிங்கனைநவின்றேத்துவார்களுழக்கிய
பாததூளிபடுதலாலிவ்வுலகம்பாக்கியஞ்செய்ததே. 6

366 குருந்தமொன்றொசித்தானொடுஞ்சென்றுகூடியாடிவிழாச்செய்து
திருந்துநான்மறையோரிராப்பகலேத்திவாழ்திருக்கோட்டியூர்
கருந்தடமுகில்வண்ணனைக்கடைக்கொண்டுகைதொழும்பத்தர்கள்
இருந்தவூரிலிருக்குமானிடரெத்தவங்கள்செய்தார்கொலோ! 7

367 நளிர்ந்தசீலன்நயாசலனபிமானதுங்கனைநாடொறும்
தெளிந்தசெல்வனைச்சேவகங்கொண்டசெங்கண்மால்திருக்கோட்டியூர்
குளிர்ந்துறைகின்றகோவிந்தன்குணம்பாடுவாருள்ளநாட்டினுள்
விளைந்ததானியமுமிராக்கதர்மீதுகொள்ளகிலார்களே. 8

368 கொம்பினார்பொழில்வாய்க்குயிலினங்கோவிந்தன்குணம்பாடுசீர்ச்
செம்பொனார்மதிள்சூழ்செழுங்கழனியுடைத்திருக்கோட்டியூர்
நம்பனைநரசிங்கனைநவின்றேத்துவார்களைக்கண்டக்கால்
எம்பிரான்றனசின்னங்களிவரிவரென்றாசைகடீர்வனே. 9

369 காசின்வாய்க்கரம்விற்கிலுங்கரவாதுமாற்றிலிசோறிட்டுத்
தேசவார்த்தைபடைக்கும்வண்கையினார்கள்வாழ்திருக்கோட்டியூர்
கேசவாபுருடோத்தமாகிளர்சோதியாய்குறளாவென்று
பேசுவாரடியார்களெந்தம்மைவிற்கவும்பெறுவார்களே. 10

370 சீதநீர்புடைசூழ்செழுங்கழனியுடைத்திருக்கோட்டியூர்
ஆதியானடியாரையுமடிமையின்றித்திரிவாரையும்
கோதில்பட்டர்பிரான்குளிர்புதுவைமன்விட்டுசித்தன்சொல்
ஏதமின்றியுரைப்பவர்களிருடீகேசனுக்காளரே. 11

நாவகாரியம் குற்றம் வண்ணம் உரகம் ஆமை பூதம் குருந்தம் நளிர்ந்த கொம்பின் காசின் சீதநீர் ஆசைவாய்.

5. ஆசைவாய்.

எல்லையின் மாயனை யேத்தும்பேறு

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

371 ஆசைவாய்ச்சென்றசிந்தையராகி
யன்னையத்தனென்புத்திரர்பூமி
வாசவார்குழலாளென்றுமயங்கி
மாளுமெல்லைக்கண்வாய்திறவாதே
கேசவாபுருடோத்தமாவென்றுங்
கேழலாகியகேடிலீயென்றும்
பேசுவாரவரெய்தும்பெருமை
பேசுவான்புகில்நம்பரமன்றே. 1

372 சீயினாற்செறிந்தேறியபுண்மேற்
செற்றலேறிக்குழம்பிருந்தெங்கும்
ஈயினாலரிப்புண்டுமயங்கி
யெல்லைவாய்ச்சென்றுசேர்வதன்முன்னம்
வாயினானமோநாரணாவென்று
மத்தகத்திடைக்கைகளைக்கூப்பிப்
போயினாற்பின்னையித்திசைக்கென்றும்
பிணைக்கொடுக்கிலும்போகவொட்டாரே. 2

373 சோர்வினாற்பொருள்வைத்ததுண்டாகிற்
சொல்லுசொல்லென்றுசுற்றுமிருந்து
ஆர்வினவிலும்வாய்திறவாதே
யந்தகாலமடைவதன்முன்னம்
மார்வமென்பதோர்கோயிலமைத்து
மாதவனென்னுந்தெய்வத்தைநாட்டி
ஆர்வமென்பதோர்பூவிடவல்லார்க்
கரவதண்டத்திலுய்யலுமாமே. 3

374 மேலெழுந்ததோர்வாயுக்கிளர்ந்து
மேன்மிடற்றினையுள்ளெழவாங்கிக்
காலுங்கையும்விதிர்விதிர்த்தேறிக்
கண்ணுறக்கமதாவதன்முன்னம்

மூலமாகியவொற்றையெழுத்தை
மூன்றுமாத்திரையுள்ளெழவாங்கி
வேலைவண்ணனைமேவுதிராகில்
விண்ணகத்தினின்மேவலுமாமே. 4

375 மடிவழிவந்துநீர்புலன்சோர
வாயிலட்டியகஞ்சியுமீண்டே
கடைவழிவாரக்கண்டமடைப்பக்
கண்ணுறக்கமதாவதன்முன்னம்
தொடைவழியும்மைநாய்கள்கவரா
சூலத்தாலும்மைப்பாய்வதுஞ்செய்யார்
இடைவழியினீர்கூறையுமிழவீ
ிருடீகேசனென்றேத்தவல்லீரே. 5

376 அங்கம்விட்டவையைந்துமகற்றி
யாவிமூக்கினிற்சோதித்தபின்னைச்
சங்கம்விட்டவர்கையைமறித்துப்
பையவேதலைசாய்ப்பதன்முன்னம்
வங்கம்விட்டுலவுங்கடற்பள்ளி
மாயனைமதுசூதனைமார்பில்
தங்கவிட்டுவைத்தாவதோர்கருமஞ்
சாதிப்பார்க்கென்றுஞ்சாதிக்கலாமே. 6

377 தென்னவன்றமர்செப்பமிலாதார்
சேவதக்குவார்போலப்புகுந்து
பின்னும்வன்கயிற்றாற்பிணித்தெற்றிப்
பின்முன்னாக்கிழுப்பதன்முன்னம்
இன்னவனினையானென்றுசொல்லி
யெண்ணியுள்ளத்திருளறநோக்கி
மன்னவன்மதுசூதனனென்பார்
வானகத்துமன்றாடிகடாமே. 7

378 கூடிக்கூடியுற்றார்களிருந்து
குற்றநிற்கநற்றங்கள்பறைந்து
பாடிப்பாடியோர்பாடையிலிட்டு
நரிப்படைக்கொருபாகுடம்போலே

கோடிமுடியெடுப்ப தன்முன்னங்
கொளத்துவமுடைக்கோவிந்தனோடு
கூடியாடியுள்ளத்தானாற்
குறிப்பிடங்கடந்துய்யலுமாமே. 8

379 வாயொருபக்கம்வாங்கிவலிப்ப
வார்ந்தநீர்க்குழிக்கண்கள்மிழற்றத்
தாயொருபக்கந்தந்தையொருபக்கந்
தாரமுமொருபக்கமலற்றத்
தீயொருபக்கஞ்சேர்வதன்முன்னஞ்
செங்கண்மாலொடுஞ்சிக்கெனச்சுற்ற
மாயொருபக்கம்நிற்கவல்லார்கட்
கரவதண்டத்திலுய்யலுமாமே. 9

380 செத்துப்போவதோர்போதுநினைந்து
செய்யுஞ்செய்கைகள்தேவபிரான்மேல்
பத்தராயிறந்தார்பெறும்பேற்றைப்
பாழித்தோள்விட்டுசித்தன்புத்தூர்க்கோன்
சித்தம்நன்கொருங்கித்திருமாலைச்
செய்தமாலையிவைபத்தும்வல்லார்
சித்தம்நன்கொருங்கித்திருமால்மேற்
சென்றசிந்தைபெறுவார்தாமே. 10

ஆசைவாய் சீ சோர்வு மேல் மடி அங்கம் தென்னவன்
கூடி வாய் செத்து காசு.

6. காசுங்கறையுடை

நாரணனும் நந்தனர்க்கிடு நலம்

கலிநிலைத்துறை

381 காசுங்கறையுடைக்கூறைக்குமங்கோர்கற்றைக்கு
மாசையினாலங்கவத்தப்பேரிடுமாதர்காள்
கேசவன்பேரிட்டுநீங்கள்தேனித்திருமினோ
நாயகன்நாரணன்தம்மன்னைநரகம்புகாள். 1

382 அங்கொருகூறையரைக்குடுப்பதனாசையால்
மங்கியமானிடசாதிப்பேரிடுமாதர்காள்
செங்கணெடுமால்சிரீதராவென்றழைத்தக்கால்
நங்கைகாள்நாரணன்தம்மன்னைநரகம்புகாள். 2

383 உச்சியிலெண்ணெயுஞ்சுட்டியும்வளையுமுகந்து
எச்சம்பொலிந்தீர்காளென்செய்வான்பிறர்பேரிட்டீர்
பிச்சைபுக்காகிலுமெம்பிரான்திருநாமமே
நச்சுமின்நாரணன்தம்மன்னைநரகம்புகாள். 3

384 மானிடசாதியிற்றோன்றிற்றோர்மானிடசாதியை
மானிடசாதியின்பேரிட்டான்மறுமைக்கில்லை
வானுடைமாதவாகோவிந்தாவென்றழைத்தக்கால்
நானுடைநாரணன்தம்மன்னைநரகம்புகாள். 4

385 மலமுடையூத்தையிற்றோன்றிற்றோர்மலவூத்தையை
மலமுடையூத்தையின்பேரிட்டான்மறுமைக்கில்லை
குலமுடைக்கோவிந்தாகோவிந்தாவென்றழைத்தக்கால்
நலமுடைநாரணன்தம்மன்னைநரகம்புகாள். 5

386 நாடுநகருமறியநாட்டுமானிடப்பேரிட்டுக்
கூடியழுங்கிக்குழியில்வீழ்ந்துவழுக்காதே
சாடிறப்பாய்ந்ததலைவாதாமோதராவென்று
நாடுமின்நாரணன்தம்மன்னைநரகம்புகாள். 6

387 மண்ணிற்பிறந்துமண்ணாகும்மானிடப்பேரிட்டங்
கெண்ணமொன்றின்றியிருக்குமேழைமனிசர்காள்
கண்ணுக்கினியகருமுகில்வண்ணனாமமே
நண்ணுமின்நாரணன்தம்மன்னைநரகம்புகாள். 7

388 நம்பிபிம்பியென்றுநாட்டுமானிடப்பேரிட்டால்
நம்பும்பிம்புமெல்லாம்நாலுநாளிலழுங்கிப்போம்
செம்பெருந்தாமரைக்கண்ணன்பேரிட்டழைத்தக்கால்
நம்பிகாள்நாரணன்தம்மன்னைநரகம்புகாள். 8

389 ஊத்தைக்குழியிலமுதம்பாய்வதுபோலுங்கள்
மூத்திரப்பிள்ளையையென்முகில்வண்ணன்பேரிட்டுக்

கோத்துக்குழைத்துக்குணலையாடித்திரிமினோ
நாத்தகுநாரணன்தம்மன்னைநரகம்புகாள். 9

390 சீரணிமால்திருநாமமேயிடத்தேற்றிய
வீரணிதொல்புகழ்விட்டுசித்தன்விரித்த
ஓரணியொண்டமிழொன்பதோடொன்றும்வல்லவர்
பேரணிவைகுந்தத்தென்றும்பேணியிருப்பரே. 10

காசும் அங்கொரு உச்சி மாணிட மல நாடு மண் நம்பி
ஊத்தை சீரணி தங்கை.

---

7. தங்கையைமூக்கும்

கங்கையின் கரைமேற் கண்டமென்னுந்திருப்பதி

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

391 தங்கையைமூக்குந்தமையனைத்தலையுந்
தடிந்தவெந்தாசரதிபோய்
எங்குந்தன்புகழாவிருந்தரசாண்ட
வெம்புருடோத்தமனிருக்கை
கங்கைகங்கையென்றவாசகத்தாலே
கடுவினைகளைந்திடுகிற்கும்
கங்கையின்கரைமேற்கைதொழநின்ற
கண்டமென்னுங்கடிநகரே. 1

392 சலம்பொதியுடம்பின்தழலுமிழ்பேழ்வாய்ச்
சந்திரன்வெங்கதிரஞ்ச
மலர்ந்தெழுந்தணவுமணிவண்ணவுருவின்
மால்புருடோத்தமன்வாழ்வு
நலந்திகழ்சடையான்முடிக்கொன்றைமலரும்
நாரணன்பாதத்துழாயுங்
கலந்திழிபுனலாற்புகர்படுகங்கைக்
கண்டமென்னுங்கடிநகரே. 2

393 அதிர்முகமுடையவலம்புரிகுமிழ்த்தி
யழலுமிழாழிகொண்டெறிந்தங்

கெதிர்முகவசுரர்தலைகளையிடறு
மெம்புருடோத்தமனிருக்கை
சதுமுகன்கையிற்சதுப்புயன்றாளிற்
சங்கரன்சடையினிற்றங்கிக்
கதிர்முகமணிகொண்டிழிபுனற்கங்கைக்
கண்டமென்னுங்கடிநகரே. 3

394 இமையவரிறுமாந்திருந்தரசாள
வேற்றுவந்தெதிர்பொருசேனை
நமபுரம்நணுகநாந்தகம்விசிறு
நம்புருடோத்தமனகர்தான்
இமவந்தந்தொடங்கியிருங்கடலளவு
மிருகரையுலகிரைத்தாடக்
கமையுடைப்பெருமைக்கங்கையின்கரைமேற்
கண்டமென்னுங்கடிநகரே. 4

395 உழுவதோர்படையுமுலக்கையும்வில்லு
மொண்சுடராழியுஞ்சங்கும்
மழுவொடுவாளும்படைக்கலமுடைய
மால்புருடோத்தமன்வாழ்வு
எழுமையுங்கூடியீண்டியபாவ
மிறைப்பொழுதளவினிலெல்லாம்
கழுவிடும்பெருமைக்கங்கையின்கரைமேற்
கண்டமென்னுங்கடிநகரே. 5

396 தலைப்பெய்துகுமுறிச்சலம்பொதிமேகஞ்
சலசலபொழிந்திடக்கண்டு
மலைப்பெருங்குடையான்மறைத்தவன்மதுரை
மால்புருடோத்தமன்வாழ்வு
அலைப்புடைத்திரைவாயருந்தவமுனிவ
ரவபிரதங்குடைந்தாடக்
கலப்பைகள்கொழிக்குங்கங்கையின்கரைமேற்
கண்டமென்னுங்கடிநகரே. 6

397 விற்பிடித்திறுத்துவேழத்தைமுருக்கி
மேலிருந்தவன்றலைசாடி

மற்பொருதெழப்பாய்ந்தரையனையுதைத்த
மால்புருடோத்தமன்வாழ்வு
அற்புதமுடையவைராவதமதமு
மவரிளம்பிடியரொண்சாந்தும்
கற்பகமலருங்கலந்திழிகங்கைக்
கண்டமென்னுங்கடிநகரே. 7

398 திரைபொருகடல்சூழ்திண்மதிட்டுவரை
வேந்துதன்மைத்துனன்மார்க்காய்
அரசனையவியவரசினையருளு
மரிபுருடோத்தமனமர்வு
நிரைநிரையாகநெடியனயூபம்
நிரந்தரமொழுக்குவிட்டிரண்டு
கரைபுரைவேள்விப்புகைகமழ்கங்கைக்
கண்டமென்னுங்கடிநகரே. 8

399 வடதிசைமதுரைசாளக்கிராமம்
வைகுந்தந்துவரையயோத்தி
இடமுடைவதரியிடவகையுடைய
வெம்புருடோத்தமனிருக்கை
தடவரையதிரத்தரணிவிண்டிடியத்
தலைப்பற்றிக்கரைமரஞ்சாடிக்
கடலினைக்கலங்கக்கடுத்திழிகங்கைக்
கண்டமென்னுங்கடிநகரே. 9

400 மூன்றெழுத்ததனைமூன்றெழுத்ததனால்
மூன்றெழுத்தாக்கிமூன்றெழுத்தை
ஏன்றுகொண்டிருப்பார்க்கிரக்கநன்குடைய
வெம்புருடோத்தமனிருக்கை
மூன்றடிநிமிர்த்துமூன்றினிற்றோன்றி
மூன்றினின்மூன்றுருவானான்
கான்றடம்பொழில்சூழ்கங்கையின்கரைமேற்
கண்டமென்னுங்கடிநகரே. 10

401 பொங்கொலிகங்கைக்கரைமலிகண்டத்
துறைபுருடோத்தமனடிமேல்

வெங்கலிநலியாவில்லிபுத்தூர்க்கோன்
விட்டுசித்தன்விருப்புற்றுத்
தங்கியவன்பாற்செய்தமிழ்மாலை
தங்கியநாவுடையார்க்குக்
கங்கையிற்றிருமால்கழலிணைக்கீழே
குளித்திருந்தகணக்காமே. 11

*தங்கை சலம் அதிர் இமையவர் உழு தலை வில் திரை வட-
மூன்று பொங்கு மாதவ.*

---

8. மாதவத்தோன்.

திருவரங்கம்—1

தரவுகொச்சகக்கலிப்பா

402 மாதவத்தோன்புத்திரன்போய்மறிகடல்வாய்மாண்டானை
ஓதுவித்ததக்கணையாவுருவுருவேகொடுத்தானூர் [யெங்கும்
தோதவத்தித்தூய்மறையோர்துறைபடியத்துளும்பி
போதில்வைத்ததேன்சொரியும்புனலரங்கமென்பதுவே. 1

403 பிறப்பகத்தேமாண்டொழிந்தபிள்ளைகளைநால்வரையும்
இறைப்பொழுதிற்கொணர்ந்துகொடுத்தொருப்படுத்தவுறைப்பனூர்
மறைப்பெருந்தீவளர்த்திருப்பார்வருவிருந்தையளித்திருப்பார்
சிறப்புடையமறையவர்வாழ்திருவரங்கமென்பதுவே. 2

404 மருமகன்றன்சந்ததியையுயிர்மீட்டுமைத்துனன்மார்
உருமகத்தேவீழாமேகுருமுகமாய்க்காத்தானூர்
திருமுகமாய்ச்செங்கமலந்திருநிறமாய்க்கருங்குவளை
பொருமுகமாய்நின்றலரும்புனலரங்கமென்பதுவே. 3

405 கூன்றொழுத்தைசிதகுரைப்பக்கொடியவள்வாய்க்கடியசொற்கேட்
டீன்றெடுத்ததாயரையுமிராச்சியமுமாங்கொழியக்
கான்றொடுத்தநெறிபோகிக்கண்டகரைக்களைந்தானூர்
தேன்றொடுத்தமலர்ச்சோலைத்திருவரங்கமென்பதுவே. 4

406 பெருவரங்களவைபற்றிப்பிழக்குடையவிராவணனை
உருவரங்கப்பொருதழித்திவ்வுலகினைக்கண்பெறுத்தானூர்

குரவரும்பக்கோங்கலரக்குயில்கூவுங்குளிர்பொழில்சூழ்
திருவரங்கமென்பதுவேயென்திருமால்சேர்விடமே. 5

407 கீழுலகிலசுரர்களைக்கிழங்கிருந்துகிளராமே
ஆழிவிடுத்தவருடையகருவழித்தவழிப்பனூர்
தாழைமடலூடுரிஞ்சித்தவளவண்ணப்பொடியணிந்து
யாழினிசைவண்டினங்களாளம்வைகுமரங்கமே. 6

408 கொழுப்புடையசெழுங்குருதிகொழித்திழிந்துகுமிழ்த்தெறியப்
பிழக்குடையவசுரர்களைப்பிணம்படுத்தபெருமானூர்
தழுப்பரியசந்தனங்கள்தடவரைவாயீர்த்துக்கொண்டு
தெழிப்புடையகாவிரிவந்தடிதொழுஞ்சீரரங்கமே. 7

409 வல்லெயிற்றுக்கேழலுமாய்வாளெயிற்றுச்சீயமுமாய்
எல்லையில்லாத்தரணியையுமவுணனையுமிடந்தானூர்
எல்லியம்போதிருஞ்சிறைவண்டெம்பெருமான்குணம்பாடி
மல்லிகைவெண்சங்கூதுமதிளரங்கமென்பதுவே. 8

410 குன்றாடுகொழுமுகில்போற்குவளைகள்போற்தரைகடல்போல்
நின்றாடுகணமயில்போல்நிறமுடையநெடுமாலூர்
குன்றாடுபொழில்நுழைந்துகொடியிடையார்முலையணவி
மன்றாடுதென்றலுலாமதிளரங்கமென்பதுவே. 9

411 பருவரங்களவைபற்றிப்படையாலித்தெழுந்தானைச்
செருவரங்கப்பொருதழித்ததிருவாளன்திருப்பதிமேல்
திருவரங்கத்தமிழ்மாலைவிட்டுசித்தன்விரித்தனகொண்
டிருவரங்கமெரித்தானையேத்தவல்லாரடியோமே. 10

மாதவ பிறப்பு மருமகன் கூன் பெரு சீழ் கொழுப்பு வல்லெயிறு குன்று பரு மரவடி.

---

9. மரவடியை.

திருவரங்கம்—2

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

412 மரவடியைத்தம்பிக்குவான்பணையம்
வைத்துப்போய்வானோர்வாழச்

செருவுடைய திசைக்கருமந் திருத்திவந்
துலகாண்ட திருமால்கோயில்
திருவடிதன் திருவுருவுந் திருமங்கை
மலர்க்கண்ணுங் காட்டிநின்று
உருவுடைய மலர்நீலங் காற்றாட்ட
வோசலிக்கு மொளியரங்கமே. 1

413 தன்னடியார் திறத்தகத்துத் தாமரையா
ளாகிலுஞ் சிதகுரைக்குமேல்
என்னடியா ரதுசெய்யார் செய்தாரேல்
நன்றுசெய் தாரென்பர்போலும்
மன்னுடைய விபீடணற்கா மதிளிலங்கைத்
திசைநோக்கி மலர்க்கண் வைத்த
என்னுடைய திருவரங்கற் கன்றியும்
மற்றொருவர்க் காளாவரே? 2

414 கருளுடைய பொழில்மருதுங்
கதக்களிறும் பிலம்பனையுங் கடியமாவும்
உருளுடைய சகடரையும் மல்லரையு
முடையவிட் டோசைகேட்டான்
இருளகற்று மெறிகதிரோன் மண்டலத்தூ
டேற்றிவைத் தேணிவாங்கி
அருள்கொடுத் திட்டடியவரை யாட்கொள்வா
னமருமூ ரணியரங்கமே. 3

415 பதினாறா மாயிரவர் தேவிமார்
பணிசெய்யத் துவரையென்னு
மதிளுயக ராகிவீற் றிருந்த
மணவாளர் மன்னுகோயில்
புதுநாண்மலர்க் கமலமெம் பெருமான்
பொன்வயிற்றிற் பூவேபோல்வான்
பொதுநாயகம் பாவித்திறுமாந்து
பொற்சாய்க்கும் புனலரங்கமே. 4

416 ஆமையாய்க் கங்கையாய் ஆழ்கடலா
யவனியாய் அருவரைகளாய்

நான்முகனாய்நான்மறையாய்வேள்வியாயத்
தக்கணையாய்த்தானுமானான்
சேமமுடைநாரதனார்சென்றுசென்று
துதித்திறைஞ்சக்கிடந்தான்கோயில்
பூமருவிப்புள்ளினங்கள்புள்ளரையன்
புகழ்குழறும்புனலரங்கமே. 5

417 மைத்துனன்மார்காதலியைமயிர்முடிப்பித்
தவர்களையேமன்னராக்கி
உத்தரைதன்சிறுவனையும்முய்யக்கொண்ட
வுயிராளனுறையுங்கோயில்
பத்தர்களும்பகவர்களும்பழமொழிவாய்
முனிவர்களும்பரந்தநாடும்
சித்தர்களுந்தொழுதிறைஞ்சத்
திசைவிளக்காய்நிற்கின்றதிருவரங்கமே. 6

418 குறட்பிரமசாரியாய்மாவலியைக்
குறும்பதக்கியரசுவாங்கி
இறைப்பொழுதிற்பாதாளங்கலவிருக்கை
கொடுத்துகந்தவெம்மான்கோயில்
எறிப்புடையமணிவரைமேலிளஞாயி
றெழுந்தாற்போலரவணையின்வாய்ச்
சிறப்புடையபணங்கள்மிசைச்செழுமணிகள்
விட்டெறிக்குந்திருவரங்கமே. 7

419 உரம்பற்றியிரணியனையுகிர்நுதியா
லொள்ளியமார்புறைக்கவூன்றிச்
சிரம்பற்றிமுடியிடியக்கண்பிதுங்க
வாயலரத்தெழித்தான்கோயில்
உரம்பெற்றமலர்க்கமலமுலகளந்த
சேவடிபோலுயர்ந்துகாட்ட
வரம்புற்றகதிர்ச்செந்நெல்தாள்சாய்த்துத்
தலைவணக்குந்தண்ணரங்கமே. 8

420 தேவுடையமீனமாயாமையா
யேனமாயரியாய்க்குறளாய்

மூவுருவிலிராமனாய்க்கண்ணனாய்க்
கற்கியாய்முடிப்பான்கோயில்
சேவலொடுபெடையன்னஞ்
செங்கமலமலரேறியூசலாடிப்
பூவணைமேல்துதைந்தெழுசெம்
பொடியாடிவிளையாடும்புனலரங்கமே. 9

421 செருவாளும்புள்ளாளன்மண்ணாளன்
செருச்செய்யும்நாந்தகமென்னு
மொருவாளன்மறையாளனோடாத
படையாளன்விழுக்கையாள
னிரவாளன்பகலாளனென்னையாள
னேழுலகப்பெரும்புரவாளன்
திருவாளனினிதாகத்திருக்கண்கள்
வளர்கின்றதிருவரங்கமே. 10

422 கைந்நாகத்திடர்கடிந்தகனலாழிப்
படையுடையான்கருதுங்கோயில்
தென்னாடும்வடநாடுந்தொழநின்ற
திருவரங்கத்திருப்பதியின்மேல்
மெய்ந்நாவன்மெய்யடியான்விட்டுசித்தன்
விரித்ததமிழுரைக்கவல்லா
ரெஞ்ஞான்றுமெம்பெருமானிணையடிக்கீ
ழிணைபிரியாதிருப்பர்தாமே. 11

மரவடி தன் கருள் பதினாறு ஆமை மைத்துனன் குறள்
உரம் தேவு செரு கைந்நாக துப்பு.

---

10. துப்புடையாரை

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

423 துப்புடையாரையடைவதெல்லாஞ்
சோர்விடத்துத்துணையாவரென்றே

யொப்பிலேனாகிலும்நின்னடைந்தே
னானைக்குநீயருள்செய்தமையால்
எய்ப்பென்னைவந்துநலியும்போ
தங்கேதுநானுன்னைநினைக்கமாட்டேன்
அப்போதைக்கிப்போதேசொல்லிவைத்தே
னரங்கத்தரவணைப்பள்ளியானே. 1

424 சாமிடத்தென்னைக்குறிக்கொள்கண்டாய்
சங்கொடுசக்கரமேந்தினானே
நாமடித்தென்னையனேகதண்டஞ்
செய்வதாநிற்பர்நமன்றமர்கள்
போமிடத்துன்றிறத்தெத்தனையும்
புகாவண்ணம்நிற்பதோர்மாயைவல்லை
ஆமிடத்தேயுன்னைச்சொல்லிவைத்தே
னரங்கத்தரவணைப்பள்ளியானே. 2

425 எல்லையில்வாசல்குறுகச்சென்றா
லெற்றிநமன்றமர்பற்றும்போது
நில்லுமினென்னவுபாயமில்லை
நேமியுஞ்சங்குமேந்தினானே
சொல்லலாம்போதேயுன்னாமமெல்லாம்
சொல்லினேனென்னைக்குறிக்கொண்டென்றும்
அல்லற்படாவண்ணங்காக்கவேண்டு
மரங்கத்தரவணைப்பள்ளியானே. 3

426 ஒற்றைவிடையனும்நான்முகனும்
முன்னையறியாப்பெருமையோனே
முற்றவுலகெல்லாம்நீயேயாகி
மூன்றெழுத்தாயமுதல்வனேயோ
அற்றதுவாணாளிவற்கென்றெண்ணி
யஞ்சநமன்றமர்பற்றலுற்ற
அற்றைக்குநீயென்னைக்காக்கவேண்டு
மரங்கத்தரவணைப்பள்ளியானே. 4

427 பையரவினணைப்பாற்கடலுள்
பள்ளிகொள்கின்றபரமமூர்த்தி

உய்யவுலகுபடைக்கவேண்டி
யுந்தியில்தோற்றினாய்நான்முகனை
வையமனிசரைப்பொய்யென்றெண்ணிக்
காலனையுமுடனேபடைத்தாய்
ஐயவினியென்னைக்காக்கவேண்டு
மரங்கத்தரவணைப்பள்ளியானே. 5

428 தண்ணனவில்லைநமன்றமர்கள்
சாலக்கொடுமைகள்செய்யாநிற்பர்
மண்ணொடுநீருமெரியுங்காலும்
மற்றுமாகாசமுமாகிநின்றாய்
எண்ணலாம்போதேயுன்னாமமெல்லா
மெண்ணினேனென்னைக்குறிக்கொண்டென்றும்
அண்ணலேநீயென்னைக்காக்கவேண்டு
மரங்கத்தரவணைப்பள்ளியானே. 6

429 செஞ்சொல்மறைப்பொருளாகிநின்ற
தேவர்கணாயகனேயெம்மானே
எஞ்சலிலென்னுடையின்னமுதே
யேழுலகுமுடையாயென்னப்பா
வஞ்சவுருவினமன்றமர்கள்
வலிந்துநலிந்தென்னைப்பற்றும்போது
அஞ்சலமென்றென்னைக்காக்கவேண்டு
மரங்கத்தரவணைப்பள்ளியானே. 7

430 நானேதுமுன்மாயமொன்றறியேன்
நமன்றமர்பற்றிநலிந்திட்டிந்த
ஊனேபுகேயென்றுமோதும்போதங்
குன்னைநானொன்றுநினைக்கமாட்டேன்
வானேய்வானவர்தங்களீசா
மதுரைப்பிறந்தமாமாயனேயென்
ஆனாய்நீயென்னைக்காக்கவேண்டு
மரங்கத்தரவணைப்பள்ளியானே. 8

431 குன்றெடுத்தாநிரைகாத்தவாயா
கோநிரைமேய்த்தவனேயெம்மானே

அன்றுமுதலின்றறுதியா
　　வாதியஞ்சோதிமறந்தறியேன்
நன்றுங்கொடியநமன்றமர்கள்
　　நலிந்துவலிந்தென்னைப்பற்றும்போது
அன்றங்குநீயென்னைக்காக்கவேண்டு
　　மரங்கத்தரவணைப்பள்ளியானே. 9

432 மாயவனைமதுசூதனனை
　　மாதவனைமறையோர்களேத்தும்
ஆயர்களேற்றினையச்சுதனை
　　யரங்கத்தரவணைப்பள்ளியானை
வேயர்புகழ்வில்லிபுத்தூர்மன்
　　விட்டுசித்தன்சொன்னமாலைபத்தும்
தூயமனத்தனராகிவல்லார்
　　தூமணிவண்ணனுக்காளர்தாமே. 10

துப்பு சாமிடம் எல்லை ஒற்றை பை தண்ணன செஞ்சொல்
நரன் குன்று மாய வாக்கு.

ஐந்தாம்பத்து

1. வாக்குத்தூய்மை

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

433 வாக்குத்தூய்மையிலாமையினாலே
　　மாதவாவுன்னைவாய்க்கொள்ளமாட்டேன்
நாக்குநின்னையல்லாலறியாது
　　நானதஞ்சுவனென்வசமன்று
மூர்க்குப்பேசுகின்றானிவனென்று
　　முனிவாயேலுமென்னாவினுக்காற்றேன்
காக்கைவாயிலுங்கட்டுரைகொள்வர்
　　காரணாகருளக்கொடியானே. 1

434 சழக்குநாக்கொடுபுன்கவிசொன்னேன்
　　சங்குசக்கரமேந்துகையானே

பிழைப்பராகிலுந்தம்மடியார்சொற்
பொறுப்பதுபெரியோர்கடன்றே
விழிக்குங்கண்ணிலேனின்கண்மற்றல்லால்
வேறொருவரோடென்மனம்பற்றாது
உழைக்கோர்புள்ளிமிகையன்றுகண்டா
யூழியேழுலகுண்டுமிழ்ந்தானே. 2

435 நன்மைதீமைகளொன்றுமறியேன்
நாரணாவென்னுமித்தனையல்லால்
புன்மையாலுன்னைப்புள்ளுவம்பேசிப்
புகழ்வானன்றுகண்டாய்திருமாலே
உன்னுமாறுன்னையொன்றுமறியே
னோவாதேநமோநாரணாவென்பன்
வன்மையாவதுன்கோயிலில்வாழும்
வைட்டணவனென்னும்வன்மைகண்டாயே. 3

436 நெடுமையாலுலகேழுமளந்தாய்
நின்மலாநெடியாயடியேனைக்
குடிமைகொள்வதற்கையுறவேண்டா
கூறைசோறிவைவேண்டுவதில்லை
அடிமையென்னுமக்கோயின்மையாலே
யங்கங்கேயவைபோதருங்கண்டாய்
கொடுமைக்கஞ்சனைக்கொன்றுநின்தாதை
கோத்தவன்றளைகோள்விடுத்தானே. 4

437 தோட்டமில்லவளாத்தொழுவோடை
துடவையுங்கிணறுமிவையெல்லாம்
வாட்டமின்றியுன்பொன்னடிக்கீழே
வளைப்பகம்வகுத்துக்கொண்டிருந்தேன்
நாட்டுமானிடத்தோடெனக்கரிது
நச்சுவார்பலர்கேழலொன்றாகிக்
கோட்டுமண்கொண்டகொள்கையினானே
குஞ்சரம்வீழக்கொம்பொசித்தானே. 5

438 கண்ணநான்முகனைப்படைத்தானே
காரணாகரியாயடியேனான்

உண்ணாநாள்பசியாவதொன்றில்லை
யோவாதேநமோநாரணாவென்று
எண்ணாநாளுமிருக்கெசுச்சாம
வேதநாண்மலர்கொண்டுனபாதம்
நண்ணாநாளவைதத்துறுமாகி
லன்றெனக்கவைபட்டினிநாளே. 6

439 வெள்ளைவெள்ளத்தின்மேலொருபாம்பை
மெத்தையாகவிரித்ததன்மேலே
கள்ளநித்திரைகொள்கின்றமார்க்கங்
காணலாங்கொலென்றாசையினாலே
உள்ளஞ்சோரவுகந்தெதிர்விம்மி
யுரோமகூபங்களாய்க்கண்ணநீர்கள்
துள்ளஞ்சோரத்துயிலணைகொள்ளேன்
சொல்லாயானுன்னைத்தத்துறுமாறே. 7

440 வண்ணமால்வரையேகுடையாக
மாரிகாத்தவனேமதுசூதா
கண்ணனேகரிகோள்விடுத்தானே
காரணாகளிறட்டபிரானே
எண்ணுவாரிடரைக்களைவானே
யேத்தரும்பெருங்கீர்த்தியினானே
நண்ணிநானுன்னைநாடொறுமேத்தும்
நன்மையேயருள்செய்யெம்பிரானே. 8

441 நம்பனேநவின்றேத்தவல்லார்கள்
நாதனேநரசிங்கமதானாய்
உம்பர்கோனுலகேழுமளந்தா
யூழியாயினாயாழிமுன்னேந்திக்
கம்பமாகரிகோள்விடுத்தானே
காரணாகடலைக்கடைந்தானே
எம்பிரானென்னையாளுடைத்தேனே
யேழையேனிடரைக்களையாயே. 9

442 காமர்தாதைகருதலர்சிங்கங்
காணவினியகருங்குழற்குட்டன்

வாமனனென்மரதகவண்ணன்
மாதவன்மதுசூதனன்றன்னைச்
சேமநன்கமரும்புதுவையர்கோன்
விட்டுசித்தன்வியன்தமிழ்பத்தும்
நாமமென்றுநவின்றுரைப்பார்கள்
நண்ணுவாரொல்லைநாரணனுலகே. 10

வாக்கு சழக்கு நன்மை நெடுமை தோட்டம் கண்ணு
வெள்ளை வண்ண நம்பன் காமர் நெய்

2. நெய்க்குடத்தை

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

443 நெய்க்குடத்தைப்பற்றியேறுமெறும்புகள்போனிரந்தெங்கும்
கைக்கொண்டுநிற்கின்றநோய்காள்காலம்பெறவுய்யப்போமின்
மெய்க்கொண்டுவந்துபுகுந்துவேதப்பிரானார்கிடந்தார்
பைக்கொண்டபாம்பணையோடும்பண்டன்றுபட்டினங்காப்பே. 1

444 சித்திரகுத்தனெழுத்தால்தென்புலக்கோன்பொறியொற்றி
வைத்தவிலச்சினைமாற்றித்தூதுவரோடியொளித்தார்
முத்துத்திரைக்கடற்சேர்ப்பன்மூதறிவாளர்முதல்வன்
பத்தர்க்கமுதனடியேன்பண்டன்றுபட்டினங்காப்பே. 2

445 வயிற்றில்தொழுவைப்பிரித்துவன்புலச்சேவையதக்கிக்
கயிற்றுமக்காணிகழித்துக்காலிடைப்பாசங்கழற்றி,
எயிற்றிடைமண்கொண்டவெந்தையிராப்பகலோதுவித்தென்னைப்
பயிற்றிப்பணிசெய்யக்கொண்டான்பண்டன்றுபட்டினங்காப்பே. 3

446 மங்கியவல்வினைநோய்காளுமக்குமோர்வல்வினைகண்டீர்
இங்குப்புகேன்மின்புகேன்மினெளிதன்றுகண்டீர்புகேன்மின்
சிங்கப்பிரானவனெம்மான்சேருந்திருக்கோயில்கண்டீர்
பங்கப்படாதுய்யப்போமின்பண்டன்றுபட்டினங்காப்பே. 4

447 மாணிக்குறளுருவாயமாயனையென்மனத்துள்ளே
பேணிக்கொணர்ந்துபுகுதவைத்துக்கொண்டேன்பிறிதின்றி
மாணிக்கப்பண்டாரங்கண்டீர்வலிவன்குறும்பர்களுள்ளீர்
பாணிக்கவேண்டாநடமின்பண்டன்றுபட்டினங்காப்பே. 5

448 உற்றவுறுபிணிநோய்காளுமக்கொன்றுசொல்லுகேன்கேண்மின்
பெற்றங்கள்மேய்க்கும்பிரானார்பேணுந்திருக்கோயில்கண்டீர்
அற்றமுரைக்கின்றேனின்னமாழ்வினைகாளுமக்கிங்கோர்
பற்றில்லைகண்டீர்நடமின்பண்டன்றுபட்டினங்காப்பே. 6

449 கொங்கைச்சிறுவரையென்னும்பொதும்பினில்வீழ்ந்துவழுக்கி
அங்கோர்முழையினிற்புக்கிட்டழுந்திக்கிடந்துழல்வேனை
வங்கக்கடல்வண்ணனம்மான்வல்வினையாயினமாற்றிப்
பங்கப்படாவண்ணஞ்செய்தான்பண்டன்றுபட்டினங்காப்பே. 7

450 ஏதங்களாயினவெல்லாமிறங்கலிடுவித்தென்னுள்ளே
பீதகவாடைப்பிரானார்பிரமகுருவாகிவந்து
போதிற்கமலவன்னெஞ்சம்புகுந்துமென்சென்னித்திடரில்
பாதவிலச்சினைவைத்தார்பண்டன்றுபட்டினங்காப்பே. 8

451 உறகலுறகலுறகலொண்சுடராழியேசங்கே
அறவெறிநாந்தகவாளேயழகியசார்ங்கமேதண்டே
இறவுபடாமலிருந்தவெண்மருலோகபாலீர்காள்
பறவையரையாவுறகல்பள்ளியறைகுறிக்கொண்மின். 9

452 அரவத்தமளியினோடுமழகியபாற்கடலோடும்
அரவிந்தப்பாவையுந்தானுமகம்படிவந்துபுகுந்து
பரவைத்திரைபலமோதப்பள்ளிகொள்கின்றபிரானைப்
பரவுகின்றான்விட்டுசித்தன்பட்டினங்காவற்பொருட்டே. 10

நெய் சித்திர வயிற்றில் மங்கிய மாணி உற்ற கொங்கை
ஏதம் உறகல் அரவ துக்க.

---

3. துக்கச்சுழலை

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

453 துக்கச்சுழலையைச்சூழ்ந்துகிடந்தவலையையறப்பறித்துப்
புக்கினிற்புக்குன்னைக்கண்டுகொண்டேனினிப்போகவிடுவதுண்டே
மக்களறுவரைக்கல்லிடைமோதவிழந்தவள்தன்வயிற்றிற்
சிக்கெனவந்துபிறந்துநின்றாய்திருமாலிருஞ்சோலையெந்தாய். 1

454 வளைத்துவைத்தேனினிப்போகலொட்டேனுன்றனிந்திரஞாலங்களா
லொளித்திடில்நின்திருவாணைகண்டாய்நீயொருவர்க்கும்மெய்யனல்லை

யளித்தெங்கும்நாடுநகரமுந்தம்முடைத்தீவினைதீர்க்கலுற்றுத்
தெளித்துவலஞ்செய்யுந்தீர்த்தமுடைத்திருமாலிருஞ்சோலை
[யெந்தாய். 2

455 உனக்குப்பணிசெய்திருக்குந்தவமுடையேனினிப்போயொருவன்
தனக்குப்பணிந்துகடைத்தலைநிற்கைநின்சாயையழிவுகண்டாய்
புனத்தினைக்கிள்ளிப்புதுவவிக்காட்டியுன்பொன்னடிவாழ்கவென்று
இனக்குறவர்புதியதுண்ணுமெழின்மாலிருஞ்சோலையெந்தாய். 3

456 காதம்பலவுந்திரிந்துழன்றேற்கங்கோர்நிழலில்லைநீருமில்லையுன்
பாதநிழலல்லால்மற்றோருயிர்ப்பிடம்நானெங்குங்காண்கின்றிலேன்
தூதுசென்றாய்குருபாண்டவர்க்காயங்கோர்பொய்ச்சுற்றம்பேசிச்
[சென்று
பேதஞ்செய்தெங்கும்பிணம்படுத்தாய்திருமாலிருஞ்சோலையெந்தாய்.

457 காலுமெழாகண்ணநீருநில்லாவுடல்சோர்ந்துநடுங்கிக்குரல்
மேலுமெழாமயிர்க்கூச்சுமறாவெனதோள்களும்வீழ்வொழியா
மாலுகளாநிற்குமென்மனமேயுன்னைவாழத்தலைப்பெய்திட்டேன்
சேலுகளாநிற்கும்நீள்சுனைசூழ்திருமாலிருஞ்சோலையெந்தாய். 5

458 எருத்துக்கொடியுடையானும்பிரமனுமிந்திரனும்மற்றும்
ஒருத்தருமிப்பிறவியென்னும்நோய்க்குமருந்தறிவாருமில்லை
மருத்துவனாய்நின்றமாமணிவண்ணாமறுபிறவிதவிரத்
திருத்தியுன்கோயிற்கடைப்புகப்பெய்திருமாலிருஞ்சோலையெந்தாய்.

459 அக்கரையென்னுமனத்தக்கடலுளழுந்தியுன்பேரருளால்
இக்கரையேறியிளைத்திருந்தேனையஞ்சேலென்றுகைகவியாய்
சக்கரமுந்தடக்கைகளுங்கண்களும்பீதகவாடையொடும்
செக்கர்நிறத்துச்சிவப்புடையாய்திருமாலிருஞ்சோலையெந்தாய். 7

460 எத்தனைகாலமுமெத்தனையூழியுமின்றொடுநாளையென்றே [டேன்
இத்தனைகாலமும்போய்க்கிறிப்பட்டேனினியுன்னைப்போகலொட்
மைத்துனன்மார்களைவாழ்வித்துமாற்றலர்நூற்றுவரைக்கெடுத்தாய்
சித்தம்நின்பாலதறிதியன்றேதிருமாலிருஞ்சோலையெந்தாய். 8

461 அன்றுவயிற்றிற்கிடந்திருந்தேயடிமைசெய்யலுற்றிருப்பன்
இன்றுவந்திங்குன்னைக்கண்டுகொண்டேனினிப்போகவிடுவதுண்டே
சென்றங்குவாணனையாயிரந்தோளுந்திருச்சக்கரமதனால்
தென்றித்திசைதிசைவீழச்செற்றாய்திருமாலிருஞ்சோலையெந்தாய். 9

462 சென்றுலகங்குடைந்தாடுஞ்சுனைத்திருமாலிருஞ்சோலைதன்னுள்
நின்றபிரானடிமேலடிமைத்திறம்நேர்படவிண்ணப்பஞ்செய்

பொன்றிகழ்மாடம்பொலிந்துதோன்றும்புதுவைக்கோன்விட்டுசித்
ஒன்றினோடொன்பதும்பாடவல்லாருலகமளந்தான்தமரே. [தன்

துக்க வளைத்து உனக்கு காதம் காலும் எருத்து அக்கரை
எத்தனை அன்று சென்று சென்னி.

---

4. சென்னியோங்கு

இதயத்துக்கோவலன் கோயில்கொண்டமை

கலிவிருத்தம்

463 சென்னியோங்குதண்திருவேங்கடமுடையாயுலகு
தன்னைவாழநின்றநம்பீ தாமோதராசதிரா [றிக்கொண்டு
என்னையுமென்னுடைமையையுமுன்சக்கரப்பொறியொற்
நின்னருளேபுரிந்திருந்தேனினியென்திருக்குறிப்பே. 1

464 பறவையேறுபரம்புருடாநீயென்னைக்கைக்கொண்டபின்
பிறவியென்னுங்கடலும்வற்றிப்பெரும்பதமாகின்றதால்
இறவுசெய்யும்பாவக்காடுதீக்கொளீஇவேகின்றதால் [தே.
அறிவையென்னுமமுதவாறுதலைப்பற்றிவாய்க்கொண்ட

465 எம்மனாவென்குலதெய்வமேயென்னுடையநாயகனே
நின்னுளேனாய்ப்பெற்றநன்மையிவ்வுலகினிலார்பெறுவார்
நம்மன்போலவீழ்த்தமுக்கும்நாட்டிலுள்ளபாவமெல்லாம்
சும்மெனாதேகைவிட்டோடித்தூறுகள்பாய்ந்தனவே. 3

466 கடல்கடைந்தமுதங்கொண்டுகலசத்தைநிறைத்தாற்போ
லுடலுருகிவாய்திறந்துமடுத்துன்னைநிறைத்துக்கொண்டேன்
கொடுமைசெய்யுங்கூற்றமுமென்கோலாடிகுறுகப்பெறா
தடவரைத்தோள்சக்கரபாணீசார்ங்கவிற்சேவகனே. 4.

467 பொன்னைக்கொண்டுரைகல்மீதேநிறமெழவுரைத்தாற்போ
லுன்னைக்கொண்டென்னாவகம்பால்மாற்றின்றியுரைத்துக்கொண்டே
னுன்னைக்கொண்டென்னுள்வைத்தேனென்னையுமுன்னிலிட்டே
னென்னப்பாவென்னிருடீகேசாவென்னுயிர்க்காவலனே. 5

468 உன்னுடையவிக்கிரமமொன்றொழியாமலெல்லா
மென்னுடையநெஞ்சகம்பால்சுவர்வழியெழுதிக்கொண்டேன்

மன்னடங்கமழுவலங்கைக்கொண்டவிராமநம்பீ
என்னிடைவந்தெம்பெருமானினியெங்குப்போகின்றதே.

469 பருப்பதத்துக்கயல்பொறித்தபாண்டியர்குலபதிபோல்
திருப்பொலிந்தசேவடியென்சென்னியின்மேற்பொறித்தாய்
மருப்பொசித்தாய்மல்லடர்த்தாயென்றென்றுன்வாசகமே
உருப்பொலிந்தநாவினேனையுனக்குரித்தாக்கினையே. 7

470 அனந்தன்பாலுங்கருடன்பாலுமைதுநொய்தாகவைத்தென்
மனந்தனுள்ளேவந்துவைகிவாழச்செய்தாயெம்பிரான்
நினைந்தென்னுள்ளேநின்றுநெக்குக்கண்களசும்பொழுக
நினைந்திருந்தேசிரமந்தீர்ந்தேனேமிநெடியவனே. 8

471 பனிக்கடலிற்பள்ளிகோளைப்பழகவிட்டோடிவந்தென்
மனக்கடலில்வாழவல்லமாயமணாளநம்பீ
தனிக்கடலேதனிச்சுடரேதனியுலகேயென்றென்று
வுனக்கிடமாயிருக்கவென்னையுனக்குரித்தாக்கினையே. 9

472 தடவரைவாய்மிளிர்ந்துமின்னுந்தவளநெடுங்கொடிப் போல்
சுடரொளியாய்நெஞ்சினுள்ளேதோன்றுமென்சோதிநம்பீ
வடதடமும்வைகுந்தமும்மதிள் துவராவதியு
மிடவகைகளிகழ்ந்திட்டென்பாலிடவகைகொண்டனையே.

473 வேயர்தங்கள்குலத்துதித்தவிட்டுசித்தன்மனத்தே
கோயில்கொண்டகோவலனைக்கொழுங்குளிர்முகில்வண்ணனை
யாயரேற்றையமரர்கோவையந்தணர்தமமுதத்தினைச்
சாயைபோலப்பாடவல்லார்தாமுமணுக்கர்களே. 11

சென்னி பறவை எம்மனை கடல் பொன்னை உன் பருப்ப
தம் அனந்தன் பனி தடவரை வேயர் மார்கழி.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியாழ்வார் திருமொழி ஸம்பூர்ணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

சூடிக்கொடுத்த நாச்சியாரருளிச்செய்த

திருப்பாவை

இயற்றரவிணைக் கொச்சகக்கலிப்பா

474 மார்கழித்திங்கள்மதிநிறைந்தநன்னாளால்
நீராடப்போதுவீர்போதுமினோநேரிழையீர்
சீர்மல்குமாய்ப்பாடிச்செல்வச்சிறுமீர்காள்
கூர்வேல்கொடுந்தொழிலன்நந்தகோபன்குமரன்
ஏரார்ந்தகண்ணியசோதையிளஞ்சிங்கம்
கார்மேனிச்செங்கண்கதிர்மதியம்போல்முகத்தான்
நாராயணனேநமக்கேபறைதருவான்
பாரோர்புகழப்படிந்தேலோரெம்பாவாய். 1

475 வையத்துவாழ்வீர்காள்நாமும்நம்பாவைக்குச்
செய்யுங்கிரிசைகள்கேளீரோபாற்கடலுள்
பையத்துயின்றபரமனடிபாடி
நெய்யுண்ணோம்பாலுண்ணோம்நாட்காலேநீராடி
மையிட்டெழுதோம்மலரிட்டுநாமுடியோம்
செய்யாதனசெய்யோந்தீக்குறளைசென்றோதோம்
ஐயமும்பிச்சையுமாந்தனையுங்கைகாட்டி
உய்யுமாறெண்ணியுகந்தேலோரெம்பாவாய். 2

476 ஓங்கியுலகளந்தவுத்தமன்பேர்பாடி
நாங்கள்நம்பாவைக்குச்சாற்றிநீராடினால்
தீங்கின்றிநாடெல்லாந்திங்கள்மும்மாரிபெய்து
ஓங்குபெருஞ்செந்நெலூடுகயலுகளப்
பூங்குவளைப்போதிற்பொறிவண்டுகண்படுப்பத்
தேங்காதேபுக்கிருந்துசீர்த்தமுலைபற்றி
வாங்கக்குடம்நிறைக்கும்வள்ளற்பெரும்பசுக்கள்
நீங்காதசெல்வம்நிறைந்தேலோரெம்பாவாய். 3

477 ஆழிமழைக்கண்ணாவொன்றுநீகைகரவேல்
ஆழியுட்புக்குமுகந்துகொடார்த்தேறி
ஊழிமுதல்வனுருவம்போல்மெய்கறுத்துப்
பாழியந்தோளுடைப்பற்பநாபன்கையில்
ஆழிபோல்மின்னிவலம்புரிபோல்நின்றதிர்ந்து
தாழாதேசார்ங்கமுதைத்தசரமழைபோல்
வாழ்வுலகினிற்பெய்திடாய்நாங்களும்
மார்கழிநீராடமகிழ்ந்தேலோரெம்பாவாய். 4

478 மாயனைமன்னுவடமதுரைமைந்தனைத்
தூயபெருநீர்யமுனைத்துறைவனை
ஆயர்குலத்தினிற்றோன்றுமணிவிளக்கைத்
தாயைக்குடல்விளக்கஞ்செய்ததாமோதரனைத்
தூயோமாய்வந்துநாந்தூமலர்தூவித்தொழுது
வாயினாற்பாடிமனத்தினாற்சிந்திக்கப்
போயபிழையும்புகுதருவாநின்றனவும்
தீயினிற்றூசாகுஞ்செப்பேலோரெம்பாவாய். 5

479 புள்ளுஞ்சிலம்பினகாண்புள்ளரையன்கோயிலில்
வெள்ளைவிளிசங்கின்பேரரவங்கேட்டிலையோ
பிள்ளாயெழுந்திராய்பேய்முலைநஞ்சுண்டு
கள்ளச்சகடங்கலக்கழியக்காலோச்சி
வெள்ளத்தரவிற்றுயிலமர்ந்தவித்தினை
உள்ளத்துக்கொண்டுமுனிவர்களும்யோகிகளும்
மெள்ளவெழுந்து அரியென்றபேரரவம்
உள்ளம்புகுந்து குளிர்ந்தேலோரெம்பாவாய். 6

480 கீசுகீசென்றெங்குமானைச்சாத்தங்கலந்து
பேசினபேச்சரவங்கேட்டிலையோபேய்ப்பெண்ணே
காசும்பிறப்புங்கலகலப்பக்கைபேர்த்து
வாசநறுங்குழலாய்ச்சியர் மத்தினால்
ஓசைபடுத்த தயிரரவங்கேட்டிலையோ
நாயகப்பெண்பிள்ளாய் நாராயணன்மூர்த்தி
கேசவனைப்பாடவுநீகேட்டேகிடத்தியோ
தேசமுடையாய் திறவேலோரெம்பாவாய். 7

481 கீழ்வானம்வெள்ளென்றெருமைசிறுவீடு
மேய்வான்பரந்தனகாண்மிக்குள்ளபிள்ளைகளும்
போவான்போகின்றாரைப்போகாமற்காத்துன்னைக்
கூவான்வந்துநின்றோங்கோதுகலமுடைய
பாவாயெழுந்திராய்பாடிப்பறைகொண்டு
மாவாய்பிளந்தானை மல்லரைமாட்டிய
தேவாதிதேவனைச் சென்றுநாம்சேவித்தால்
ஆவாவென்றாராய்ந்தருளேலோரெம்பாவாய். 8

482 தூமணிமாடத்துச்சுற்றும்விளக்கெரியத்
தூபங்கமழத் துயிலணைமேற்கண்வளரும்
மாமான்மகளே மணிக்கதவந்தாள்திறவாய்
மாமீரவளையெழுப்பீரோ வும்மகள்தான்
ஊமையோ வன்றிச்செவிடோ வனந்தலோ
ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ
மாமாயன்மாதவன் வைகுந்தனென்றென்று
நாமம்பலவும் நவின்றேலோரெம்பாவாய். 9

483 நோற்றுச்சுவர்க்கம் புகுகின்றவம்மனாய்
மாற்றமுந்தாராரோவாசல்திறவாதார்
நாற்றத்துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப்பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின்வாய்வீழ்ந்த கும்பகரணனும்
தோற்றுமுனக்கே பெருந்துயில்தான்தந்தானோ
ஆற்றவனந்தலுடையா யருங்கலமே
தேற்றமாய்வந்து திறவேலோரெம்பாவாய். 10

484 கற்றுக்கறவைக் கணங்கள்பலகறந்து
செற்றார்திறலழியச் சென்றுசெருச்செய்யும்
குற்றமொன்றில்லாத கோவலர்தம்பொற்கொடியே
புற்றரவல்குற் புனமயிலே போதராய்
சுற்றத்துத்தோழிமாரெல்லாரும்வந்துநின்
முற்றம்புகுந்து முகில்வண்ணன்பேர்பாடச்
சிற்றாதேபேசாதே செல்வப்பெண்டாட்டிநீ
எற்றுக்குறங்கும்பொருளேலோரெம்பாவாய், 11

485 கனைத்திளங்கற்றெருமை கன்றுக்கிரங்கி
நினைத்துமுலைவழியே நின்றுபால்சோர
நனைத்தில்லஞ்சேறாக்கும் நற்செல்வன் தங்காய்
பனித்தலைவீழ நின்வாசற்கடைபற்றிச்
சினத்தினால்தென்னிலங்கைக் கோமானைச்செற்ற
மனத்துக்கினியானைப் பாடவும்நீவாய்திறவாய்
இனித்தானெழுந்திராயீதென்னபேருறக்கம்
அனைத்தில்லத்தாருமறிந்தேலோரெம்பாவாய். 12

486 புள்ளின்வாய்கீண்டானைப்பொல்லாவரக்கனைக்
கிள்ளிக்களைந்தானைக் கீர்த்திமைபாடிப்போய்ப்
பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம்புக்கார்
வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்றுப்
புள்ளுஞ்சிலம்பினகாண் போதரிக்கண்ணினாய்
குள்ளக்குளிரக் குடைந்துநீராடாதே
பள்ளிக்கிடத்தியோ பாவாய் நீநன்னாளால்
கள்ளந்தவிர்ந்து கலந்தேலோரெம்பாவாய். 13

487 உங்கள் புழைக்கடைத்தோட்டத்துவாவியுட்
செங்கழுநீர்வாய்நெகிழ்ந்தாம்பல்வாய்கூம்பினகாண்
செங்கற்பொடிக்கூறை வெண்பற்றவத்தவர்
தங்கள்திருக்கோயில் சங்கிடுவான்போதந்தார்
எங்களைமுன்னமெழுப்புவான்வாய்பேசும்
நங்காயெழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்
சங்கொடுசக்கரமேந்துந்தடக்கையன்
பங்கயக்கண்ணானைப் பாடேலோரெம்பாவாய். 14

488 எல்லே யிளங்கிளியே யின்னமுறங்குதியோ
சில்லென்றழையேன்மின் நங்கைமீர்போதர்கின்றேன்
வல்லையுன்கட்டுரைகள் பண்டேயுன்வாயறிதும்
வல்லீர்கள்நீங்களே நானேதானாயிடுக
ஒல்லைநீபோதாயுனக்கென்னவேறுடையை
எல்லாரும்போந்தாரோ போந்தார்போந்தெண்ணிக்கொள்
வல்லானைக்கொன்றானை மாற்றாரைமாற்றழிக்க
வல்லானை மாயனைப்பாடேலோரெம்பாவாய். 15

489 நாயகனாய்நின்ற நந்தகோபனுடைய
கோயில்காப்பானே கொடித்தோன்றும் தோரண
வாயில்காப்பானே மணிக்கதவந்தாள்திறவாய்
ஆயர்சிறுமியரோமுக்கு அறைபறை
மாயன்மணிவண்ணன் நென்னலேவாய்நேர்ந்தான்
தூயோமாய்வந்தோம் துயிலெழப்பாடுவான்
வாயால்முன்னமுன்னம் மாற்றாதேயம்மா நீ
நேயநிலைக்கதவம் நீக்கேலோரெம்பாவாய். 16

490 அம்பரமேதண்ணீரே சோறேயறஞ்செய்யும்
எம்பெருமான் நந்தகோபாலாவெழுந்திராய்
கொம்பனார்க்கெல்லாங்கொழுந்தே குலவிளக்கே
எம்பெருமாட்டியசோதாயறிவுறாய்
அம்பரமூடறுத்தோங்கியுலகளந்த
உம்பர்கோமானே யுறங்காதெழுந்திராய்
செம்பொற்கழலடிச் செல்வா பலதேவா
உம்பியும்நீயுமுறங்கேலோரெம்பாவாய். 17

491 உந்துமதகளிற்றனோடாததோள்வலியன்
நந்தகோபாலன்மருமகளே நப்பின்னாய்
கந்தங்கமழுங்குழலீ கடைதிறவாய்
வந்தெங்குங்கோழியழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேற்பல்காற்குயிலினங்கள்கூவினகாண்
பந்தார்விரலி யுன்மைத்துனன்பேர்பாட
செந்தாமரைக்கையாற் சீரார்வளையொலிப்ப
வந்துதிறவாய் மகிழ்ந்தேலோரெம்பாவாய். 18

492 குத்துவிளக்கெரியக்கோட்டுக்காற்கட்டில்மேல்
மெத்தென்றபஞ்சசயனத்தின்மேலேறி
கொத்தலர்பூங்குழல் நப்பின்னைகொங்கைமேல்
வைத்துக்கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்
மைத்தடங்கண்ணினாய் நீயுன்மணாளனை
எத்தனைபோதுந்துயிலெழவொட்டாய்காண்
எத்தனையேலும் பிரிவாற்றகில்லாயால்
தத்துவமன்று தகவேலோரெம்பாவாய். 19

493 முப்பத்துமூவரமரர்க்குமுன்சென்று
கப்பந்தவிர்க்குங்கலியே துயிலெழாய்
செப்பமுடையாய் திறலுடையாய்செற்றார்க்கு
வெப்பங்கொடுக்கும்விமலா துயிலெழாய்
செப்பன்னமென்முலைச்செவ்வாய்ச்சிறுமருங்குல்
நப்பின்னைநங்காய் திருவே துயிலெழாய்
உக்கமுந்தட்டொளியுந்தந்துன்மணாளனை
இப்போதேயெம்மைநீராட்டேலோரெம்பாவாய். 20

494 ஏற்றகலங்களெதிர்பொங்கிமீதளிப்ப
மாற்றாதேபால்சொரியும்வள்ளற்பெரும்பசுக்கள்
ஆற்றப்படைத்தான்மகனேயறிவுறாய்
ஊற்றமுடையாய்பெரியாயுலகினில்
தோற்றமாய்நின்றசுடரே துயிலெழாய்
மாற்றாருனக்குவலிதொலைந்துன்வாசற்கண்
ஆற்றாதுவந்துன்னடிபணியுமாபோலே
போற்றியாம்வந்தோம்புகழ்ந்தேலோரெம்பாவாய். 21

495 அங்கண்மாஞாலத்தரசரபிமான
பங்கமாய்வந்துநின்பள்ளிக்கட்டிற்கீழே
சங்கமிருப்பார்போல்வந்துதலைப்பெய்தோம்
கிங்கிணிவாய்ச்செய்ததாமரைப்பூப்போலே
செங்கண்சிறுச்சிறிதேயெம்மேல்விழியாவோ
திங்களுமாதித்தியனுமெழுந்தாற்போல்
அங்கணிரண்டுங்கொண்டெங்கள்மேல்நோக்குதியேல்
எங்கள்மேற்சாபமிழிந்தேலோரெம்பாவாய். 22

496 மாரிமலைமுழைஞ்சில்மன்னிக்கிடந்துறங்கும்
சீரியசிங்கமறிவுற்றுத்தீவிழித்து
வேரிமயிர்பொங்கவெப்பாடும்பேர்ந்துதறி
மூரிநிமிர்ந்துமுழங்கிப்புறப்பட்டுப்
போதருமாபோலேநீபூவைப்பூவண்ணாவுன்
கோயினின்றிங்ஙனேபோந்தருளிக் கோப்புடைய
சீரியசிங்காசனத்திருந்துயாம்வந்த
காரியமாராய்ந்தருளேலோரெம்பாவாய். 23

497 அன்றிவ்வுலகமளந்தாயடிபோற்றி
சென்றங்குத்தென்னிலங்கைசெற்றாய் திறல்போற்றி
பொன்றச்சகடமுதைத்தாய்புகழ்போற்றி
கன்றுகுணிலாவெறிந்தாய்கழல்போற்றி
குன்றுகுடையாவெடுத்தாய்குணம்போற்றி
வென்றுபகைகெடுக்குநின்கையில்வேல்போற்றி
என்றென்றுன்சேவகமேயேத்திப்பறைகொள்வான்
இன்றுயாம்வந்தோமிரங்கேலோரெம்பாவாய். 24

498 ஒருத்திமகனாய்ப்பிறந்தோரிரவில்
ஒருத்திமகனாயொளித்துவளரத்
தரிக்கிலானாகித்தான் தீங்குநினைந்த
கருத்தைப்பிழைப்பித்துக்கஞ்சன்வயிற்றில்
நெருப்பென்னநின்றநெடுமாலேயுன்னை
அருத்தித்துவந்தோம்பறைதருதியாகில்
திருத்தக்கசெல்வமுஞ்சேவகமும்யாம்பாடி
வருத்தமுந்தீர்ந்துமகிழ்ந்தேலோரெம்பாவாய் 25

499 மாலேமணிவண்ணாமார்கழிநீராடுவான்
மேலையார்செய்வனகள்வேண்டுவனகேட்டியேல்
ஞாலத்தையெல்லாம்நடுங்கமுரல்வன
பாலன்னவண்ணத்துன்பாஞ்சசன்னியமே
போல்வனசங்கங்கள்போய்ப்பாடுடையனவே
சாலப்பெரும்பறையேபல்லாண்டிசைப்பாரே
கோலவிளக்கேகொடியேவிதானமே
ஆலினிலையாயருளேலோரெம்பாவாய். 26

500 கூடாரைவெல்லுஞ்சீர்க்கோவிந்தாவுன்றன்னைப்
பாடிப்பறைகொண்டுயாம்பெறுசம்மானம்
நாடுபுகழும்பரிசினால்நன்றாகச்
சூடகமேதோள்வளையேதோடேசெவிப்பூவே
பாடகமேயென்றனையபல்கலனும்யாமணிவோம்
ஆடையுடுப்போமதன்பின்னேபாற்சோறு
மூடநெய்பெய்துமுழங்கைவழிவாரக்
கூடியிருந்துகுளிர்ந்தேலோரெம்பாவாய். 27

501 கறவைகள்பின்சென்றுகானஞ்சேர்ந்துண்போம்
அறிவொன்றுமில்லாதவாய்க்குலத்துன்றன்னைப்
பிறவிபெறுந்தனைபுண்ணியம்யாமுடையோம்
குறைவொன்றுமில்லாதகோவிந்தாவுன்றன்னோ
டுறவேல்நமக்கிங்கொழிக்கவொழியாது
அறியாதபிள்ளைகளோமன்பினாலுன்றன்னைச்
சிறுபேரழைத்தனவுஞ்சீறியருளாதே
இறைவாநீதாராய்பறையேலோரெம்பாவாய். 28

502 சிற்றஞ்சிறுகாலேவந்துன்னைச்சேவித்துன்
பொற்றாமரைபடியேபோற்றும்பொருள்கேளாய்
பெற்றம்மேய்த்துண்ணுங்குலத்திற்பிறந்தநீ
குற்றேவலெங்களைக்கொள்ளாமற்போகாது
இற்றைப்பறைகொள்வானன்றுகாண்கோவிந்தா
எற்றைக்குமேழேழ்பிறவிக்குமுன்றன்னோ
டுற்றோமேயாவோமுனக்கேநாமாட்செய்வோம்
மற்றைநங்காமங்கள்மாற்றேலோரெம்பாவாய். 29

503 வங்கக்கடல்கடைந்தமாதவனைக்கேசவனைத்
திங்கட்டிருமுகத்துச்சேயிழையார்சென்றிறைஞ்சி
அங்கப்பறைகொண்டவாற்றையணிபுதுவைப்
பைங்கமலத்தண்டெரியற்பட்டர்பிரான்கோதை
சங்கத்தமிழ்மாலைமுப்பதுந்தப்பாமே [சொன்ன
இங்கிப்பரிசுரைப்பாரீரிரண்டுமால்வரைத்தோள்
செங்கட்டிருமுகத்துச்செல்வத்திருமாலால்
எங்குந்திருவருள்பெற்றின்புறுவரெம்பாவாய். 30

மார்கழி வையம் ஓங்கி ஆழி மாயன் புள்ளும் கீசு கீழ்வானம்
தூமணி நோற்று கற்று கனைத்து புள்ளின் உங்கள் எல்லே
நாயகன் அம்பரம் உந்து குத்து முப்பத்து ஏற்ற அங்கண் மாரி
அன்று ஒருத்தி மாலே கூடாரை கறவை சிற்றம் வங்கம் தை.

சூடிக்கொடுத்தநாச்சியாரருளிச்செய்தநாச்சியார்திருமொழி

1. தையொருதிங்கள்

கண்ணற்குவகுத்திடென்றுகாமனைப்பணிதல்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

504 தையொருதிங்களுந்தரைவிளக்கித்
தண்மண்டலமிட்டுமாசிமுன்னாள்
ஐயநுண்மணற்கொண்டுதெருவணிந்து
அழகினுக்கலங்கரித்தனங்கதேவா
உய்யவுமாங்கொலோவென்றுசொல்லி
உன்னையுமும்பியையுந்தொழுதேன்
வெய்யதோர்தழலுமிழ்சக்கரக்கை
வேங்கடவற்கென்னைவிதிக்கிற்றியே. 1

505 வெள்ளைநுண்மணற்கொண்டுதெருவணிந்து
வெள்வரைப்பதன்முன்னந்துறைபடிந்து
முள்ளுமில்லாச்சுள்ளியெரிமடுத்து
முயன்றுன்னைநோற்கின்றேன்காமதேவா
கள்ளவிழ்பூங்கணைதொடுத்துக்கொண்டு
கடல்வண்ணனென்பதோர்பேரெழுதிப்
புள்ளினைவாய்பிளந்தானென்பதோ
ரிலக்கினிற்புகவென்னையெய்கிற்றியே. 2

506 மத்தநன்னறுமலர்முருக்கமலர்கொண்டு
முப்போதுமுன்னடிவணங்கித்
தத்துவமிலியென்றுநெஞ்செரிந்து
வாசகத்தழித்துன்னைவைதிடாமே
கொத்தலர்பூங்கணைதொடுத்துக்கொண்டு
கோவிந்தனென்பதோர்பேரெழுதி
வித்தகன்வேங்கடவாணனென்னும்
விளக்கினிற்புகவென்னைவிதிக்கிற்றியே. 3

507 சுவரிற்புராணநின்பேரெழுதிச்
சுறவநற்கொடிக்களுந்துரங்கங்களும்
கவரிப்பிணாக்களுங்கருப்புவில்லுங்
காட்டித்தந்தேன்கண்டாய்காமதேவா

அவரைப்பிராயந்தொடங்கியென்று
மாதரித்தெழுந்தவென் தடமுலைகள்
துவரைப்பிரானுக்கேசங்கற்பித்துத்
தொழுதுவைத்தேனொல்லைவிதிக்கிற்றியே. 4

508 வானிடைவாழுமவ்வானவர்க்கு
மறையவர்வேள்வியில்வகுத்தவவி
கானிடைத்திரிவதோர்நரிபுகுந்து
கடப்பதுமோப்பதுஞ்செய்வதொப்ப
ஊனிடையாழிசங்குத்தமற்கென்
றுன்னித்தெழுந்தவென் தடமுலைகள்
மானிடவர்க்கென்றுபேச்சுப்படில்
வாழகில்லேன்கண்டாய்மன்மதனே. 5

509 உருவுடையாரிளையார்கணல்லார்
ஓத்துவல்லார்களைக்கொண்டுவைகல்
தெருவிடையெதிர்கொண்டுபங்குனிநாள்
திருந்தவேநோற்கின்றேன்காமதேவா
கருவுடைமுகில்வண்ணன் காயாவண்ணன்
கருவிளைபோல்வண்ணன் கமலவண்ணத்
திருவுடைமுகத்தினிற்றிருக்கண்களால்
திருந்தவேநோக்கெனக்கருள்கண்டாய். 6

510 காயுடைநெல்லொடுகரும்பமைத்துக்
கட்டியரிசியவலமைத்து
வாயுடைமறையவர்மந்திரத்தால்
மன்மதனேயுன்னைவணங்குகின்றேன்
தேயமுன்னளந்தவன் திரிவிக்கிரமன்
திருக்கைகளாலென்னைத்தீண்டும்வண்ணம்
சாயுடைவயிறுமென் தடமுலையும்
தரணியில்தலைப்புகழ்தரக்கிற்றியே. 7

511 மாசுடையுடம்பொடுதலையுலறி
வாய்ப்புறம்வெளுத்தொருபோதுமுண்டு
தேசுடைத்திறலுடைக்காமதேவா
நோற்கின்றநோன்பினைக்குறிக்கொள்கண்டாய்

பேசுவதொன்றுண்டிங்கெம்பெருமான்
பெண்மையைத் தலையுடைத்தாக்கும்வண்ணம்
கேசவநம்பியைக் கால்பிடிப்பா
ளென்னுமிப்பேறெனக்கருள்கண்டாய். 8

512 தொழுதுமுப்போதுமுன்னடிவணங்கித்
தூமலர்தூய்த்தொழுதேத்துகின்றேன்
பழுதின்றிப்பார்க்கடல்வண்ணனுக்கே
பணிசெய்துவாழப்பெறாவிடில்நான்
அழுதழுதலமந்தம்மாவழங்க
ஆற்றவுமதுவுனக்குறைக்குங்கண்டாய்
உழுவதோரெருத்தினைநுகங்கொடுபாய்ந்
தூட்டமின்றித்துரந்தாலொக்குமே. 9

513 கருப்புவில்மலர்க்கணைக்காமவேளைக்
கழலிணைபணிந்தங்கோர்கரியலற
மருப்பினையொசித்துப்புள்வாய்பிளந்த
மணிவண்ணற்கென்னைவகுத்திடென்று
பொருப்பன்னமாடம்பொலிந்துதோன்றும்
புதுவையர்கோன்விட்டுசித்தன்கோதை
விருப்புடையின்றமிழ்மாலைவல்லார்
விண்ணவர்கோனடிநண்ணுவரே. 10

தை வெள்ளை மத்தம் சுவர் வான் உரு காய் மாசு தொழுது கருப்பு நாமம்.

2. நாமமாயிரம்

சிறுமியர்மாயனைத்தஞ்சிற்றில்சிதையேலெனல்
எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

514 நாமமாயிரமேத்தநின்றநாராயணாநரனேயுன்னை
மாமிதன்மகனாகப்பெற்றாலெமக்குவாதைதவிருமே
காமன்போதருகாலமென்றுபங்குனிநாள்கடைபாரித்தோம்
தீமைசெய்யுஞ்சிரீதராவெங்கள்சிற்றில்வந்துசிதையேலே 1

515 இன்றுமுற்றுமுதுகுநோவவிருந்திழைத்தவிச்சிற்றிலை
நன்றுங்கண்ணுறநோக்கிநாங்கொளுமார்வந்தன்னைத்தணிகிடாய்.

அன்றுபாலகனாகியாலிலைமேற்றுயின்றவெம்மாதியாய்
என்றுமுன்றனக்கெங்கள்மேலிரக்கமெழாததெம்பாவமே. 2

516 குண்டுநீருறைகோளரீமதயானைகோள்விடுத்தாயுன்னைக்
கண்டுமாலுறுவோங்களைக்கடைக்கண்களாலிட்டுவாதியேல்
வண்டனுண்மணல்தெள்ளியாம்வளைக்கைகளாற்சிரமப்பட்டோம்
தெண்டிரைக்கடற்பள்ளியாயெங்கள்சிற்றில்வந்துசிதையேலே. 3

517 பெய்யுமாமுகில்போல்வண்ணாவுன்றன்பேச்சுஞ்செய்கையுமெங்களை
மையலேற்றிமயக்கவுன்முகம்மாயமந்திரந்தான்கொலோ
நொய்யர்பிள்ளைகளென்பதற்குன்னைநோவநாங்களுரைக்கிலோம்
செய்யதாமரைக்கண்ணினாயெங்கள்சிற்றில்வந்துசிதையேலே. 4

518 வெள்ளைநுண்மணற்கொண்டுசிற்றில்விசித்திரப்படவீதிவாய்த்
தெள்ளிநாங்களிழைத்தகோலமழித்தியாகிலுமுன்றன்மேல்
உள்ளமோடியுருகலல்லாலுரோடமொன்றுமிலோங்கண்டாய்
கள்ளமாதவாகேசவாவுன்முகத்தனகண்களல்லவே. 5

519 முற்றிலாதபிள்ளைகளோம்முலைபோந்திலாதோமைநாடொறும்
சிற்றில்மேலிட்டுக்கொண்டுநீசிறிதுண்டுதிண்ணெனநாமது
கற்றிலோங்கடலையடைத்தரக்கர்குலங்களைமுற்றவுஞ்
செற்றிலங்கையைப்பூசலாக்கியசேவகாவெம்மைவாதியேல். 6

520 பேதநன்கறிவார்களோடிவைபேசினாற்பெரிதின்சுவை
யாதுமொன்றறியாதபிள்ளைகளோமைநீநலிந்தென்பயன்
ஓதமாகடல்வண்ணாவுன்மணவாட்டிமாரொடுசூழறும்
சேதுபந்தந்திருத்தினாயெங்கள்சிற்றில்வந்துசிதையேலே.

521 வட்டவாய்ச்சிறுதூதையோடுசிறுசுளகும்மணலுங்கொண்
டிட்டமாவிளையாடுவோங்களைச்சிற்றிலீடழித்தென்பயன்
தொட்டுதைத்துநலியேல்கண்டாய்சுடர்ச்சக்கரங்கையிலேந்தினாய்
கட்டியுங்கைத்தாலின்னாமையறிதியேகடல்வண்ணனே. 8

522 முற்றத்தூடுபுகுந்துநின்முகங்காட்டிப்புன்முறுவல்செய்து
சிற்றிலோடெங்கள்சிந்தையுஞ்சிதைக்கக்கடவையோகோவிந்தா
முற்றமண்ணிடந்தாவிவிண்ணுறநீண்டளந்துகொண்டாயெம்மைப்
பற்றிமெய்ப்பிணக்கிட்டக்காலிந்தப்பக்கம்நின்றவரென்சொல்லார்

523 சீதைவாயமுதமுண்டாயெங்கள்சிற்றில்நீசிதையேலென்று
வீதிவாய்விளையாடுமாயர்சிறுமியர்மழலைச்சொல்லை

வேதவாய்த்தொழிலார்கள்வாழ்வில்லிபுத்தூர்மன்விட்டுசித்தன்றன்
கோதைவாய்த்தமிழ்வல்லவர்குறைவின்றிவைகுந்தஞ்சேர்வரே. 10

நாமம் இன்று குண்டு பெய் வெள்ளை முற்றிலாத பேதம் வட்ட. முற்ற சீதை கோழி

---

3. கோழியழைப்பதன்முன்னம்

கன்னியரோடுகண்ணன்விளையாடல்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

524 கோழியழைப்பதன்முன்னங்குடைந்துநீராடுவான்போந்தோம்
ஆழியஞ்செல்வனெழுந்தானரவணைமேற்பள்ளிகொண்டாய்
ஏழைமையாற்றவும்பட்டோமினியென்றும்பொய்கைக்குவாரோம்
தோழியும்நானுந்தொழுதோந்துகிலைப்பணித்தருளாயே. 1

525 இதுவென்புகுந்ததிங்கந்தோவிப்பொய்கைக்கெவ்வாறுவந்தாய்
மதுவின்றுழாய்முடிமாலேமாயனேயெங்களமுதே
விதியின்மையாலதுமாட்டோம்வித்தகப்பிள்ளாய்விரையேல்
குதிகொண்டரவினடித்தாய்குருந்திடைக்கூறைபணியாய். 2

526 எல்லேயீதென்னவிளையாட்டெம்மனைமார்காணிலொட்டார்
பொல்லாங்கீதென்றுகருதாய்பூங்குருந்தேறியிருத்தி
வில்லாலிலங்கையழித்தாய்நீவேண்டியதெல்லாந்தருவோம்
பல்லாருங்காணாமேபோவோம்பட்டைப்பணித்தருளாயே. 3

527 பரக்கவிழித்தெங்கும்நோக்கிப்பலர்குடைந்தாடுஞ்சுனையில்
அரக்கநில்லாக்கண்ணநீர்கள் அலமருகின்றவாபாராய்
இரக்கமேலொன்றுமிலாதாயிலங்கையழித்தபிரானே
குரக்கரசாவதறிந்தோங்குருந்திடைக்கூறைபணியாய். 4

528 காலைக்கதுவிடுகின்றகயலொடுவாளைவிரவி
வேலைப்பிடித்தென்னைமார்களோட்டிலென்னவிளையாட்டோ
கோலச்சிற்றாடைபலவுங்கொண்டுநீயேறியிராதே
கோலங்கரியபிரானேகுருந்திடைக்கூறைபணியாய். 5

529 தடத்தவிழ்தாமரைப்பொய்கைத்தாள்களெங்காலைக்கதுவ
விடத்தேளெறிந்தாலேபோலவேதனையாற்றவும்பட்டோம்
குடத்தையெடுத்தேறவிட்டுக்கூத்தாடவல்லவெங்கோவே
படிற்றையெல்லாந்தவிர்ந்தெங்கள்பட்டைப்பணித்தருளாயே. 6

530 நீரிலேநின்றயர்க்கின்றோம்நீதியல்லாதனசெய்தாய்
ஊரகஞ்சாலவுஞ்சேய்த்தாலூழியெல்லாமுணர்வானே
ஆர்வமுனக்கேயுடையோமம்மனைமார்காணிலொட்டார்
போரவிடாயெங்கள்பட்டைப்பூங்குருந்தேறியிராதே.

531 மாமிமார்மக்களேயல்லோம்மற்றுமிங்கெல்லாரும்போந்தார்
தூமலர்க்கண்கள்வளரத்தொல்லையிராத்துயில்வானே
சேமமேலன்றிதுசாலச்சிக்கெனநாமிதுசொன்னோம்
கோமளவாயர்கொழுந்தேகுருந்திடைக்கூறைபணியாய். 8

532 கஞ்சன்வலைவைத்தவன்றுகாரிருளெல்லிற்பிழைத்து
நெஞ்சுதுக்கஞ்செய்யப்போந்தாய்நின்றவிக்கன்னியரோமை
அஞ்சவுரப்பாளசோதையாணாடவிட்டிட்டிருக்கும்
வஞ்சகப்பேய்ச்சிபாலுண்டமசிமையிலீகூறைதாராய். 9

533 கன்னியரோடெங்கள்நம்பிகரியபிரான்விளையாட்டைப்
பொன்னியல்மாடங்கள்சூழ்ந்தபுதுவையர்கோன்பட்டன்கோதை
இன்னிசையாற்சொன்னமாலையீரைந்தும்வல்லவர்தாம்போய்
மன்னியமாதவனோடுவைகுந்தம்புக்கிருப்பாரே. 10

கோழி இது எல்லே பரக்க காலை நடத்து நீர் மாமி
கஞ்சன் கன்னி தெள்ளியார்.

---

4. தெள்ளியார்பலர்

கூடலிழைத்தல்

கலிவிருத்தம்

534 தெள்ளியார்பலர்கைதொழுந்தேவனார்
வள்ளல்மாலிருஞ்சோலைமணாளனார்
பள்ளிகொள்ளுமிடத்தடிகொட்டிடக்
கொள்ளுமாகில்நீ கூடிடுகூடலே. 1

535 காட்டில்வேங்கடம்கண்ணபுரநகர்
வாட்டமின்றிமகிழ்ந்துறைவாமனன்
ஓட்டராவந்தென்கைபற்றித்தன்னொடும்
கூட்டமாகில்நீகூடிடுகூடலே. 2

536 பூமகன்புகழ்வானவர்போற்றுதற்
காமகனணிவாணுதல்தேவகி
மாமகன்மிகுசீர்வசுதேவர்தம்
கோமகன்வரில் கூடிடுகூடலே. 3

537 ஆய்ச்சிமார்களுமாயருமஞ்சிடப்
பூத்தநீள்கடம்பேறிப்புகப்பாய்ந்து
வாய்த்தகாளியன்மேல்நடமாடிய
கூத்தனார்வரில்கூடிடுகூடலே. 4

538 மாடமாளிகைசூழ்மதுரைப்பதி
நாடிநந்தெருவின்நடுவேவந்திட்
டோடைமாமதயானையுதைத்தவன்
கூடுமாகில்நீகூடிடுகூடலே. 5

539 அற்றவன்மருதம்முறியநடை
கற்றவன்கஞ்சனைவஞ்சனையிற்
செற்றவன்திகழும்மதுரைப்பதி
கொற்றவன்வரில்கூடிடுகூடலே. 6

540 அன்றின்னாதனசெய்சிசுபாலனும்
நின்றநீள்மருதுமெருதும்புள்ளும்
வென்றிவேல்விறற்கஞ்சனும்வீழமுன்
கொன்றவன்வரில்கூடிடுகூடலே. 7

541 ஆவலன்புடையார்தம்மனத்தன்றி
மேவலன்விரைசூழ்துவராபதிக்
காவலன்கன்றுமேய்த்துவிளையாடும்
கோவலன்வரில்கூடிடுகூடலே. 8

542 கொண்டகோலக்குறளுருவாய்ச்சென்று
பண்டுமாவலிதன்பெருவேள்வியில்
அண்டமும்நிலனுமடியொன்றினால்
கொண்டவன்வரில்கூடிடுகூடலே. 9

543 பழகுநான்மறையின்பொருளாய்மத
மொழுகுவாரணமுய்யவளித்தவெம்
அழகனாரணியாய்ச்சியர்சிந்தையுள்
குழகனார்வரில்கூடிடுகூடலே. 10

544 ஊடல்கூடலுணர்தல் புணர்தலை
நீடுநின்றநிறைபுகழாய்ச்சியர்
கூடலைக் குழற்கோதைமுன்கூறிய
பாடல்பத்தும்வல்லார்க்கில்லைபாவமே. 11

தெள்ளிய காட்டில் பூமகன் ஆய்ச்சி மாடம் அற்றவன் அன்று
ஆவல் கொண்ட பழகு ஊடல் மன்னு.

---

5. மன்னுபெரும்புகழ்

குயிற்பத்து

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

545 மன்னுபெரும்புகழ்மாதவன்மாமணி
வண்ணன்மணிமுடிமைந்தன்
தன்னையுகந்ததுகாரணமாகவென்
சங்கிழக்கும்வழக்குண்டே
புன்னைகுருக்கத்திஞாழல்செருந்திப்
பொதும்பினில்வாழுங்குயிலே
பன்னியெப்போதுமிருந்துவிரைந்தென்
பவளவாயன்வரக்கூவாய். 1

546 வெள்ளைவிளிசங்கிடங்கையிற்கொண்ட
விமலனெனக்குருக்காட்டான்
உள்ளம்புகுந்தென்னைநைவித்துநாளு
முயிர்ப்பெய்துகூத்தாட்டுக்காணுங்
கள்ளவிழ்செண்பகப்பூமலர்கோதிக்
களித்திசைபாடுங்குயிலே
மெள்ளவிருந்துமிழற்றிமிழற்றாதென்
வேங்கடவன்வரக்கூவாய். 2

547 மாதலிதேர்முன்புகோல்கொள்ளமாய
னிராவணன்மேற்சரமாரி
தாய்தலையற்றற்றுவீழத்தொடுத்த
தலைவன்வரவெங்குங்காணேன்

போதலர்காவிற்புதுமணம்நாறப்
பொறிவண்டின்காமரங்கேட்டுன்
காதலியோடுடன்வாழ்குயிலேயென்
கருமாணிக்கம்வரக்கூவாய். 3

548 என்புருகியினவேல்நெடுங்கண்க
ளிமைபொருந்தாபலநாளும்
துன்பக்கடல்புக்குவைகுந்தனென்பதோர்
தோணிபெறாதுழல்கின்றேன்
அன்புடையாரைப்பிரிவுறுநோயது
நீயுமறிதிகுயிலே
பொன்புரைமேனிக்கருளக்கொடியுடைப்
புண்ணியனைவரக்கூவாய். 4

549 மென்னடையன்னம்பரந்துவிளையாடும்
வில்லிபுத்தூருறைவான்றன்
பொன்னடிகாண்பதோராசையினாலென்
பொருகயற்கண்ணிணைதுஞ்சா
இன்னடிசிலொடுபாலமுதூட்டி
எடுத்தவென்கோலக்கிளியை
உன்னொடுதோழமைகொள்ளுவன்குயிலே
உலகளந்தான்வரக்கூவாய். 5

550 எத்திசையுமமரர்பணிந்தேத்து
மிருடீகேசன்வலிசெய்ய
முத்தன்னவெண்முறுவல்செய்யவாயு
முலையுமழகழிந்தேனான்
கொத்தலர்காவில்மணித்தடங்கண்படை
கொள்ளுமிளங்குயிலேயென்
தத்துவனைவரக்கூகிற்றியாகிற்
றலையல்லால்கைம்மாறிலேனே. 6

551 பொங்கியபாற்கடற்பள்ளிகொள்வானைப்
புணர்வதோராசையினாலென்
கொங்கைகிளர்ந்துகுமைத்துக்குதுகலித்
தாவியையாகுலஞ்செய்யும்

அங்குயிலேயுனக்கென்னமறைந்துறை
வாழியுஞ்சங்குமொண்தண்டுந்
தங்கியகையவனைவரக்கூவில்நீ
சாலத்தருமம்பெறுதி. 7

552 சார்ங்கம்வளையவலிக்குந்தடக்கைச்
சதுரன்பொருத்தமுடையன்
நாங்களெம்மிலிருந்தொட்டியகச்சங்கம்
நானுமவனுமறிதும்
தேங்கனிமாம்பொழிற்செந்தளிர்கோதுஞ்
சிறுகுயிலேதிருமாலை
யாங்குவிரைந்தொல்லைக்கூகிற்றியாகி
லவனைநான்செய்வனகாணே. 8

553 பைங்கிளிவண்ணன்சிரீதரனென்பதோர்
பாசத்தகப்பட்டிருந்தேன்
பொங்கொளிவண்டிரைக்கும்பொழில்வாழ்குயி
லேகுறிக்கொண்டிதுநீகேள்
சங்கொடுசக்கரத்தான்வரக்கூவுதல்
பொன்வளைகொண்டுதருத
லிங்குள்ளகாவினில்வாழக்கருதி
லிரண்டத்தொன்றேல்திண்ணம்வேண்டும். 9

554 அன்றுலகமளந்தானையுகந்து
அடிமைக்கணவன்வலிசெய்யத்
தென்றலுந்திங்களுமூடறுத்தென்னை
நலியுமுறைமையறியே
னென்றுமிக்காவிலிருந்திருந்
தென்னைத்ததைத்தாதேநீயுங்குயிலே
யின்றுநாராயணனைவரக்கூவாயே
லிங்குத்தைநின்றுந்துரப்பன். 10

555 விண்ணுறநீண்டடிதாவியமைந்தனை
வேற்கண்மடந்தைவிரும்பிக்
கண்ணுறவென்கடல்வண்ணனைக்கூவு
கருங்குயிலேயென்றமாற்றம்

பண்ணுறுநான்மறையோர்புதுவைமன்னன்
பட்டர்பிரான்கோதைசொன்ன
நண்ணுறுவாசகமாலைவல்லார்நமோ
நாராயணாயவென்பாரே. 11

மன்னு வெள்ளை மாதலி என்பு மென்னடை எத்திசை
பொங்கிய சார்ங்கம் பைங்கிளி அன்று விண் வாரணம்.

6. வாரணமாயிரம்

(மாயவனை மணஞ்செய்யக்கண்ட
கனாவைத் தலைவி தோழிக்குக் கூறுதல்)

556 வாரணமாயிரஞ்சூழவலஞ்செய்து
நாரணநம்பிநடக்கின்றானென்றெதிர்
பூரணபொற்குடம்வைத்துப்புறமெங்கும்
தோரணநாட்டக்கனாக்கண்டேன்தோழீநான். 1

557 நாளைவதுவைமணமென்றுநாளிட்டுப்
பாளைகமுகுபரிசுடைப்பந்தற்கீழ்
கோளரிமாதவன்கோவிந்தனென்பானோர்
காளைபுகுதக்கனாக்கண்டேன்தோழீநான். 2

558 இந்திரனுள்ளிட்டதேவர்குழாமெல்லாம்
வந்திருந்தென்னைமகட்பேசிமந்திரித்து
மந்திரக்கோடியுடுத்திமணமாலை
யந்தரிசூட்டக்கனாக்கண்டேன்தோழீநான். 3

559 நாற்றிசைத்தீர்த்தங்கொணர்ந்துநனிநல்கிப்
பார்ப்பனச்சிட்டர்கள்பல்லாரெடுத்தேத்திப்
பூப்புனைகண்ணிப்புனிதனோடென்றன்னைக்
காப்புநாண்கட்டக்கனாக்கண்டேன்தோழீநான். 4

560 கதிரொளிதீபங்கலசமுடனேந்திச்
சதிரிளமங்கையர்தாம்வந்தெதிர்கொள்ள
மதுரையார்மன்னனடிநிலைதொட்டெங்கும்
மதிரப்புகுதக்கனாக்கண்டேன்தோழீநான். 5

561 மத்தளங்கொட்டவரிசங்கம்நின்றூத
முத்துடைத்தாமம்நிரைதாழ்ந்தபந்தற்கீழ்

மைத்துனன்நம்பிமதுசூதன்வந்தென்னைக்
கைத்தலம்பற்றக்கனாக்கண்டேன்தோழீநான். 6

562 வாய்நல்லார்நல்லமறையோதிமந்திரத்தாற்
பாசிலைநாணற்படுத்துப்பரிதிவைத்துக்
காய்சினமாகளிறன்னானென்கைபற்றித்
தீவலஞ்செய்யக்கனாக்கண்டேன்தோழீநான். 7

563 இம்மைக்குமேழேழ்பிறவிக்கும்பற்றாவான்
நம்மையுடையவன்நாராயணன்நம்பி
செம்மையுடையதிருக்கையாற்றாள்பற்றி
அம்மிமிதிக்கக்கனாக்கண்டேன்தோழீநான். 8

564 வரிசிலைவாண்முகத்தென்னைமார்தாம்வந்திட்
டெரிமுகம்பாரித்தென்னைமுன்னேநிறுத்தி
யரிமுகனச்சுதன்கைம்மேலென்கைவைத்துப்
பொரிமுகந்தட்டக்கனாக்கண்டேன்தோழீநான். 9

565 குங்குமமப்பிக்குளிர்சாந்தமட்டித்து
மங்கலவீதிவலஞ்செய்துமணநீ
ரங்கவனோடுமுடன்சென்றங்கானைமேல்
மஞ்சனமாட்டக்கனாக்கண்டேன்தோழீநான் 10

566 ஆயனுக்காகத்தான்கண்டகனாவினை
வேயர்புகழ்வில்லிபுத்தூர்க்கோன்கோதைசொல்
தூயதமிழ்மாலையீரைந்தும்வல்லவர்
வாயுநன்மக்களைப்பெற்றுமகிழ்வரே. 11

வாரணம் நாளை இந்திரன் நாற்றிசை கதிர் மத்தளம் வாய் இம்மை வரிசிலை குங்குமம் ஆயன் கருப்பூரம்.

7. கருப்பூரம் நாறுமோ.

(பாஞ்சசன்னியத்தைப் பதுமநாபனோடுஞ் சுற்றமாக்கல்)
கலிவிருத்தம்.

567 கருப்பூரம்நாறுமோகமலப்பூநாறுமோ
திருப்பவளச்செவ்வாய்தான்தித்தித்திருக்குமோ
மருப்பொசித்தமாதவன்றன்வாய்ச்சுவையுநாற்றமும்
விருப்புற்றுக்கேட்கின்றேன்சொல்லாழிவெண்சங்கே. 1

568 கடலிற்பிறந்துகருதாதுபஞ்சசன
னுடலில்வளர்ந்துபோயூழியான்கைத்தலத்
திடரிற் குடியேறித்தீயவசுரர்
நடலைப்படமுழங்குந்தோற்றத்தாய்நற்சங்கே. 2

569 தடவரையின்மீதேசரற்காலசந்திர
னிடையுவாவில்வந்தெழுந்தாலேபோல்நீயும்
வடமதுரையார்மன்னன்வாசுதேவன்கையிற்
குடியேறிவீற்றிருந்தாய்கோலப்பெருஞ்சங்கே. 3

570 சந்திரமண்டலம்போற்றாமோதரன்கையி
லந்தரமொன்றின்றியேறியவன்செவியில்
மந்திரங்கொள்வாயேபோலும்வலம்புரியே
யிந்திரனுமுன்னோடுசெல்வத்துக்கேலானே. 4

571 உன்னோடுடனேயொருகடலில்வாழ்வாரை
இன்னாரினையாரென்றெண்ணுவாரில்லைகாண்
மன்னாகிநின்றமதுசூதன்வாயமுதம்
பன்னாளுமுண்கின்றாய்பாஞ்சசன்னியமே. 5

572 போய்த்தீர்த்தமாடாதேநின்றபுணர்மருதஞ்
சாய்த்தீர்த்தான்கைத்தலத்தேயேறிக்குடிகொண்டு
சேய்த்தீர்த்தமாய்நின்றசெங்கண்மால்தன்னுடைய
வாய்த்தீர்த்தம்பாய்ந்தாடவல்லாய்வலம்புரியே. 6

573 செங்கமலநாண்மலர்மேல்தேனுகருமன்னம்போற்
செங்கட்கருமேனிவாசுதேவனுடைய
அங்கைத்தலமேறியன்னவசஞ்செய்யுஞ்
சங்கரையாவுன்செல்வஞ் சாலவழகியதே. 7

574 உண்பதுசொல்லிலுலகளந்தான்வாயமுதங்
கண்படைகொள்ளிற்கடல்வண்ணன்கைத்தலத்தே
பெண்படையாருன்மேற்பெரும்பூசல்சாற்றுகின்றார்
பண்பலசெய்கின்றாய்பாஞ்சசன்னியமே. 8

575 பதினாறாமாயிரவர்தேவிமார்பார்த்திருப்ப
மதுவாயிற்கொண்டாற்போல்மாதவன்றன்வாயமுதம்

பொதுவாகவுண்பதனைப்புக்குநீயுண்டக்கால்
சிதையாரோவுன்னோடு செல்வப்பெருஞ்சங்கே. 9

576 பாஞ்சசன்னியத்தைப்பற்பநாபனோடும்
வாய்ந்தபெருஞ்சுற்றமாக்கியவண்புதுவை
யேய்ந்தபுகழ்ப்பட்டர்பிரான்கோதைதமிழீரைந்தும்
ஆய்ந்தேத்தவல்லாரவருமணுக்கரே. 10

கருப்பூரம் கடல் தடவரை சந்திர உன்னோடு
போய் செங்கமலம் உண்பது பதினாறு பாஞ்ச விண்.

---

8. விண்ணீலமேலாப்பு

மேகவிடுதூது

தரவுகொச்சகக்கலிப்பா.

577 விண்ணீலமேலாப்புவிரித்தாற்போல்மேகங்காள்
தெண்ணீர்பாய்வேங்கடத்தென்திருமாலும்போந்தானே
கண்ணீர்கள்முலைக்குவட்டில்துளிசோரச்சோர்வேனை
பெண்ணீர்மையீடழிக்குமிது தமக்கோர்பெருமையே. 1

578 மாமுத்தநிதிசொரியும்மாமுகில்காள்வேங்கடத்துச்
சாமத்தின்நிறங்கொண்டதாளாளன்வார்த்தையென்னே
காமத்தீயுள்புகுந்துகதுவப்பட்டிடைக்கங்குல்
ஏமத்தோர்தென்றலுக்கிங்கிலக்காய்நானிருப்பேனே. 2

579 ஒளிவண்ணம்வளைசிந்தையுறக்கத்தோடிவையெல்லாம்
எளிமையாலிட்டென்னையீடழியப்போயினவால்
குளிரருவிவேங்கடத்தென்கோவிந்தன்குணம்பாடி
அளியத்தமேகங்காளாவிகாத்திருப்பேனே. 3

580 மின்னாகத்தெழுகின்றமேகங்காள்வேங்கடத்துத்
தன்னாகத்திருமங்கைதங்கியசீர்மார்வர்க்கு
என்னாகத்திளங்கொங்கைவிரும்பித்தாம்நாடோறும்
பொன்னாகம்புல்குதற்கென்புரிவுடைமைசெப்புமினே. 4

581 வான்கொண்டுகிளர்ந்தெழுந்தமாமுகில்காள்வேங்கடத்துத்
தேன்கொண்டமலர்சிதறத்திரண்டேறிப்பொழிவீர்காள்

ஊன்கொண்டவள்ளுகிராலிரணியனையுடலிடந்தான்
தான்கொண்டசரிவளைகள்தருமாகிற்சாற்றுமினே. 5

582 சலங்கொண்டுகிளர்ந்தெழுந்ததண்முகில்காள்மாவலியை
நிலங்கொண்டான்வேங்கடத்தேநிரந்தேறிப்பொழிவீர்காள்
உலங்குண்டவிளங்கனிபோலுள்மெலியப்புகுந்தென்னை
நலங்கொண்டநாரணற்கென்னடலைநோய்செப்புமினே. 6

583 சங்கமாகடல்கடைந்தான்தண்முகில்காள்வேங்கடத்துச்
செங்கண்மால்சேவடிக்கீழடிவீழ்ச்சிவிண்ணப்பம்
கொங்கைமேற்குங்குமத்தின்குழம்பழியப்புகுந்தொருநாள்
தங்குமேலென்னாவிதங்குமென்றுரையீரே. 7

584 கார்காலத்தெழுகின்றகார்முகில்காள்வேங்கடத்துப்
போர்காலத்தெழுந்தருளிப்பொருதவனார்பேர்சொல்லி
நீர்காலத்தெருக்கினம்பழவிலைபோல்வீழ்வேனை
வார்காலத்தொருநாள்தம்வாசகந்தந்தருளாரே. 8

585 மதயானைபோலெழுந்தமாமுகில்காள்வேங்கடத்தைப்
பதியாகவாழ்வீர்காள்பாம்பணையான்வார்த்தையென்னே
கதியென்றுந்தானாவான்கருதாதோர்பெண்கொடியை
வதைசெய்தானென்னுஞ்சொல்வையகத்தார்மதியாரே. 9

586 நாகத்தினணையானைநன்னுதலாள்நயந்துரைசெய்
மேகத்தைவேங்கடக்கோன்விடுதூதில்விண்ணப்பம்
போகத்தில்வழுவாதபுதுவையர்கோன்கோதைதமிழ்
ஆகத்துவைத்துரைப்பாரவரடியாராகுவரே. 10

விண் மா ஒளி மின் வான் சலம் சங்கம் கார் மத நாக
சிந்துரம்.

9. சிந்துரச்செம்பொடி

கலிநிலைத்துறை

587 சிந்துரச்செம்பொடிப்போல்திருமாலிருஞ்சோலையெங்கும்
இந்திரகோபங்களேயெழுந்தும்பரந்திட்டனவால்

மந்தரம்நாட்டியன்றுமதுரக்கொழுஞ்சாறுகொண்ட
சுந்தரத்தோளுடையான்சுழலையில்நின்றுய்துங்கொலோ.

588 போர்க்களிறுபொருமாலிருஞ்சோலையம்பூம்புறவில்
தார்க்கொடிமுல்லைகளுந்தவளநகைகாட்டுகின்ற
கார்க்கொள்படாக்கள்நின்றுகழறிச்சிரிக்கத்தரியே
னார்க்கிடுகோதோழீயவன்தார்செய்தபூசலையே. 2

589 கருவிளையொண்மலர்காள்காயாமலர்காள்திருமா
லுருவொளிகாட்டுகின்றீரெனக்குய்வழக்கொன்றுரையீர்
திருவிளையாடுதிண்டோள்திருமாலிருஞ்சோலைநம்பி
வரிவளையில்புகுந்துவந்திபற்றும்வழக்குளதே. 3

590 பைம்பொழில்வாழ்குயில்காள்மயில்காளொண்கருவிளைகாள்
வம்பக்களங்கனிகாளவண்ணப்பூவைநறுமலர்காள
ஐம்பெரும்பாதகர்காளணிமாலிருஞ்சோலைநின்ற
எம்பெருமானுடையநிறமுங்களுக்கென்செய்வதே. 4

591 துங்கமலர்ப்பொழில்சூழ்திருமாலிருஞ்சோலைநின்ற
செங்கட்கருமுகிலின்திருவுருப்போல்மலர்மேல்
தொங்கியவண்டினங்காள்தொகுபூஞ்சுனைகாள்சுனையில்
தங்குசெந்தாமரைகாளெனக்கோர்சரண்சாற்றுமினே. 5

592 நாறுநறும்பொழில்மாலிருஞ்சோலைநம்பிக்குநான்
நூறுதடாவில்வெண்ணெய்வாய்நேர்ந்துபராவிவைத்தேன்
நூறுதடாநிறைந்தவக்காரவடிசில்சொன்னேன்
ஏறுதிருவுடையானின்றுவந்திவைகொள்ளுங்கொலோ. 6

593 இன்றுவந்தித்தனையுமமுதுசெய்திடப்பெறில்நா
னொன்றுநூறாயிரமாக்கொடுத்துப்பின்னுமாளுஞ்செய்வன்
தென்றல்மணங்கமழுந்திருமாலிருஞ்சோலைதனுள்
நின்றபிரானடியேன்மனத்தேவந்துநேர்படிலே. 7

594 காலையெழுந்திருந்துகரியகுருவிக்கணங்கள்
மாலின்வரவுசொல்லிமருள்பாடுதல்மெய்ம்மைகொலோ
சோலைமலைப்பெருமான்துவராபதியெம்பெருமான்
ஆலினிலைப்பெருமானவன்வார்த்தையுரைக்கின்றவே. 8

595 கோங்கலரும்பொழில்மாலிருஞ்சோலையில்கொன்றைகள்மேல்
தூங்குபொன்மாலைகளோடுடனாய்நின்றுதூங்குகின்றேன்

பூங்கொள்திருமுகத்துமடுத்தூதியசங்கொலியும்
சார்ங்கவில்நாணொலியுந்தலைப்பெய்வதெஞ்ஞான்றுகொலோ.

596 சந்தொடுகாரகிலுஞ்சுமந்துதடங்கள்பொருது
வந்திழியுஞ்சிலம்பாறுடைமாலிருஞ்சோலைநின்ற
சுந்தரனைச்சுரும்பார்குழற்கோதைதொகுத்துரைத்த
செந்தமிழ்பத்தும்வல்லார்திருமாலடிசேர்வர்களே. 10

சிந்துரம் போர் கருவிளை பைம்பொழில் துங்க நாறு
இன்று காலை கோங்கு சந்து கார்க்கோடல்.

---

10. கார்க்கோடற்பூக்காள்.

கலிநிலைத்துறை.

597 கார்க்கோடற்பூக்காள்கார்க்கடல்வண்ணனெம்மேலும்மைப்
போர்க்கோலஞ்செய்துபோரவிடுத்தவனெங்குற்றான்
ஆர்க்கோவினிநாம்பூசலிடுவதணிதுழாய்த்
தார்க்கோடுநெஞ்சந்தன்னைப்படைக்கவல்லேனந்தோ. 1

598 மேற்றோன்றிப்பூக்காள்மேலுலகங்களின்மீதுபோய்
மேற்றோன்றுஞ்சோதிவேதமுதல்வர்வலங்கையின்
மேற்றோன்றுமாழியின்வெஞ்சுடர்போலச்சுடாதெம்மை
மாற்றோலைப்பட்டவர்கூட்டத்துவைத்துக்கொள்கிற்றிரே. 2

599 கோவைமணாட்டிநீயுன்கொழுங்கனிகொண்டெம்மை
ஆவிதொலைவியேல்வாயழகர்தம்மையஞ்சுதும்
பாவியேன்றோன்றிப்பாம்பணையார்க்குந்தம்பாம்புபோல்
நாவுமிரண்டுளவாய்த்துநாணிலியேனுக்கே. 3

600 முல்லைப்பிராட்டிநீயுன்முறுவல்கள்கொண்டெம்மை
அல்லல்விளைவியேலாழிநங்காயுன்னடைக்கலங்
கொல்லையரக்கியைமூக்கரிந்திட்டகுமரனார்
சொல்லும்பொய்யானால்நானும்பிறந்தமைபொய்யன்றே. 4

601 பாடுங்குயில்காளீதென்னபாடல்நல்வேங்கட
நாடர்நமக்கொருவாழ்வுதந்தால்வந்துபாடுமின்

ஆடுங்கருளக்கொடியுடையார்வந்தருள்செய்து
கூடுவராயிடிற்கூவிநும்பாட்டுக்கள்கேட்டுமே. 5

602 கணமாமயில்காள்கண்ணபிரான்திருக்கோலம்போன்
றணிமாநடம்பயின்றாடுகின்றீர்க்கடிவீழ்கின்றேன்
பணமாடரவணைப்பற்பலகாலமும்பள்ளிகொள்
மணவாளர்நம்மைவைத்தபரிசிதுகாண்மினே. 6

603 நடமாடித்தோகைவிரிக்கின்றமாமயில்காளும்மை
நடமாட்டங்காணப்பாவியேனானோர்முதலிலேன்
குடமாடுகூத்தன்கோவிந்தன்கோமிறைசெய்தெம்மை
உடைமாடுகொண்டானுங்களுக்கினியொன்றுபோதுமே. 7

604 மழையேமழையேமண்புறம்பூசியுள்ளாய்நின்று
மெழுகூற்றினாற்போலூற்றுநல்வேங்கடத்துள்நின்ற
அழகப்பிரானார்தம்மையென்னெஞ்சத்தகப்படத்
தழுவநின்றென்னைத்ததைத்துக்கொண்டூற்றவும்வல்லையே.

605 கடலேகடலேயுன்னைக்கடைந்துகலக்குறுத்து
உடலுள்புகுந்துநின்றூறலறுத்தவர்க்கென்னையும்
உடலுள்புகுந்துநின்றூறலறுக்கின்றமாயர்க்கென்
நடலைகளெல்லாம்நாகணைக்கேசென்றுரைத்தியே. 9

606 நல்லவென்தோழிநாகணைமிசைநம்பரர்
செல்வர்பெரியர்சிறுமானிடவர்நாம்செய்வதென்
வில்லிபுதுவைவிட்டுசித்தர்தங்கள்தேவரை
வல்லபரிசுவருவிப்பரேலதுகாண்டுமே. 10

கார் மேல் கோவை முல்லை பாடும் கணம் நடமாடி மழை
கடலே நல்ல தாம்.

---

11. தாமுகக்கும்

கலிவிருத்தம்

607 தாமுகக்குந்தங்கையிற்சங்கமேபோலாவோ
யாமுகக்குமெங்கையிற்சங்கமுமேந்திழையீர்

தீமுகத்து நாகணைமேற் சேருந் திருவரங்கர்
ஆமுகத்தை நோக்காரா லம்மனே யம்மனே. 1

608 எழிலுடைய வம்மனைமீ ரென்னரங்கத் தின்னமுதர்
குழலழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழில்
எழுகமலப் பூவழக ரெம்மானா ரென்னுடைய
கழல்வளையைத் தாமுங் கழல்வளையே யாக்கினரே. 2

609 பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகு
மங்காதுஞ் சோராமே யாள்கின்ற வெம்பெருமான்
செங்கோ லுடைய திருவரங்கச் செல்வனா
ரெங்கோல் வளையா லிடர்தீர்வ ராகாதே. 3

610 மச்சணி மாட மதிளரங்கர் வாமனனார்
பச்சைப் பசுந்தேவர் தாம்பண்டு நீரேற்ற
பிச்சைக் குறையாகி யென்னுடைய பெய்வளைமே
லிச்சை யுடையரே லித்தெருவே போதாரே. 4

611 பொல்லாக் குறளுருவாய்ப் பொற்கையில் நீரேற்று
எல்லா வுலகு மளந்துகொண்ட வெம்பெருமான்
நல்லார்கள் வாழும் நளிரரங்க நாகணையா
னில்லாதோங் கைப்பொருளு மெய்துவா னொத்துளனே. 5

612 கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரிநீர்
செய்ப்புரள வோடுந் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்றார்க்கு மெய்தாது நான்மறையின் [ரே.
சொற்பொருளாய் நின்றாரென் மெய்ப்பொருளுங் கொண்டா

613 உண்ணா துறங்கா தொலிகடலை யூடறுத்துப்
பெண்ணாக்கை யாப்புண்டு தாமுற்ற பேதெல்லாம்
திண்ணார் மதிள்சூழ் திருவரங்கச் செல்வனார்
எண்ணாதே தம்முடைய நன்மைகளே யெண்ணுவரே. 7

614 பாசி தூர்த்துக் கிடந்த பார்மகட்குப் பண்டொருநாள்
மாசுடம்பில் நீர்வாரா மானமிலாப் பன்றியாம்
தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார்
பேசி யிருப்பனகள் பேர்க்கவும் பேராவே. 8

615 கண்ணாலங் கோடித்துக் கன்னிதன்னைக் கைப்பிடிப்பான்
திண்ணார்ந் திருந்த சிசுபாலன் தேசழிந்து

அண்ணாந்திருக்கவேயாங்கவளைக்கைப்பிடித்த
பெண்ணாளன்பேணுமூர்பேருமரங்கமே. 9

616 செம்மையுடையதிருவரங்கர்தாம்பணித்த
மெய்ம்மைப்பெருவார்த்தைவிட்டுசித்தர்கேட்டிருப்பர்
தம்மையுகப்பாரைத்தாமுகப்பரென்னுஞ்சொல்
தம்மிடையேபொய்யானால்சாதிப்பாராரினியே. 10

தாம் எழில் பொங்கு மச்சு பொல்லா கை உண்ணாது பாசி கண்ணாலம் செம்மை மற்று.

---

12. மற்றிருந்தீர்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

617 மற்றிருந்தீர்கட்கறியலாகா
மாதவனென்பதோரன்புதன்னை
உற்றிருந்தேனுக்குரைப்பதெல்லா
மூமையரோடுசெவிடர்வார்த்தை
பெற்றிருந்தாளையொழியவேபோய்ப்
பேர்த்தொருதாயில்வளர்ந்தநம்பி
மற்பொருந்தாமற்களமடைந்த
மதுரைப்புறத்தென்னையுய்த்திடுமின். 1

618 நாணியினியோர்கருமமில்லை
நாலயலாருமறிந்தொழிந்தார்
பாணியாதென்னைமருந்துசெய்து
பண்டுபண்டாக்கவுறுதிராகில்
மாணியுருவாயுலகளந்த
மாயனைக்காணில்தலைமறியும்
ஆணையால்நீரென்னைக்காக்கவேண்டி
லாய்ப்பாடிக்கேயென்னையுய்த்திடுமின். 2

619 தந்தையுந்தாயுமுற்றாருநிற்கத்
தனிவழிபோயினாளென்னுஞ்சொல்லு

வந்தபின்னைப்பழிகாப்பரிது
மாயவன்வந்துருக்காட்டுகின்றான்
கொந்தளமாக்கிப்பரக்கழித்துக்
குறும்புசெய்வானோர்மகனைப்பெற்ற
நந்தகோபாலன்கடைத்தலைக்கே
நள்ளிருட்கணென்னையுய்த்திடுமின். 3

620 அங்கைத்தலத்திடையாழிகொண்டா
னவன்முகத்தன்றிவிழியேனென்று
செங்கச்சுக்கொண்டுகண்ணாடையார்த்துச்
சிறுமானிடவரைக்காணில்நாணும்
கொங்கைத்தலமிவைநோக்கிக்காணீர்
கோவிந்தனுக்கல்லால்வாயில்போகா
இங்குத்தைவாழ்வையொழியவேபோய்
யமுனைக்கரைக்கென்னையுய்த்திடுமின். 4

621 ஆர்க்குமென்னோயிதறியலாகா
தம்மனைமீர்துழதிப்படாதே
கார்க்கடல்வண்ணனென்பானொருவன்
கைகண்டயோகம்தடவத்தீரும்
நீர்க்கரைநின்றகடம்பையேறிக்
காளியனுச்சியில்நட்டம்பாய்ந்து
போர்க்களமாகநிருத்தஞ்செய்த
பொய்கைக்கரைக்கென்னையுய்த்திடுமின். 5

622 கார்த்தண்முகிலுங்கருவிளையுங்
காயாமலருங்கமலப்பூவும்
ஈர்த்திடுகின்றனவென்னைவந்திட்
டிருடீகேசன்பக்கல்போகேயென்று
வேர்த்துப்பசித்துவயிறசைந்து
வேண்டடிசிலுண்ணும்போதீதென்று
பார்த்திருந்துநெடுநோக்குக்கொள்ளும்
பத்தவிலோசனத்துய்த்திடுமின். 6

623 வண்ணந்திரிவும்மனங்குழைவும்
மானமிலாமையும்வாய்வெளுப்பும்

உண்ணலுறாமையுமுள்மெலிவும்
ஓதநீர்வண்ணனென்பானொருவன்
தண்ணந்துழாயென்னும்மாலைகொண்டு
சூட்டத்தணியும்பிலம்பன்தன்னைப்
பண்ணழியப்பலதேவன்வென்ற
பாண்டிவடத்தென்னையுய்த்திடுமின். 7

624 கற்றினம்மேய்க்கிலும்மேய்க்கப்பெற்றான்
காடுவாழ்சாதியுமாகப்பெற்றான்
பற்றியுரலிடையாப்புமுண்டான்
பாவிகாளுங்களுக்கேச்சுக்கொலோ
கற்றனபேசிவசையுணாதே
காலிகளுய்யமழைதடுத்துக்
கொற்றக்குடையாகவேந்திநின்ற
கோவர்த்தனத்தென்னையுய்த்திடுமின். 8

625 கூட்டிலிருந்துகிளியெப்போதுங்
கோவிந்தாகோவிந்தாவென்றழைக்கும்
ஊட்டக்கொடாதுசெறுப்பனாகில்
உலகளந்தானென்றுயரக்கூவும்
நாட்டில்தலைப்பழியெய்தியுங்கள்
நன்மையிழந்துதலையிடாதே
சூட்டுயர்மாடங்கள்சூழ்ந்துதோன்றும்
துவராபதிக்கென்னையுய்த்திடுமின். 9

626 மன்னுமதுரைதொடக்கமாக
வண்டுவராபதிதன்னளவும்
தன்னைத்தமருய்த்துப்பெய்யவேண்டித்
தாழ்குழலாள்துணிந்ததுணிவை
பொன்னியல்மாடம்பொலிந்துதோன்றும்
புதுவையர்கோன்விட்டுசித்தன்கோதை
இன்னிசையாற்சொன்னசெஞ்சொல்மாலை
ஏத்தவல்லார்க்கிடம்வைகுந்தமே. 10

மற்று நாணி தந்தை அங்கை ஆர்க்கும் கார்த்தண் வண்ணம் கற்றினம் கூட்டில் மன்னு கண்ணன்.

13. கண்ணனென்னும்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

627 கண்ணனென்னுங்கருந்தெய்வங்காட்சிப்பழகிக்கிடப்பேனைப்
புண்ணிற்புளிப்பெய்தாற்போலப்புறநின்றழகுபேசாதே
பெண்ணின்வருத்தமறியாதபெருமானரையிற்பீதக
வண்ணவாடைகொண்டென்னைவாட்டந்தணியவீசீரே. 1

628 பாலாலிலையில்துயில்கொண்டபரமன்வலைப்பட்டிருந்தேனை
வேலால்துன்னம்பெய்தாற்போல்வேண்டிற்றெல்லாம்பேசாதே
கோலால்நிரைமேய்த்தாயனாய்க்குடந்தைக்கிடந்தகுடமாடி [டீரே.
நீலார்தண்ணந்துழாய்கொண்டென்னெறிமென்குழல்மேல்சூட்

629 கஞ்சைக்காய்ந்தகருவில்லிகடைக்கணென்னுஞ்சிறைக்கோலால்
நெஞ்சூடுருவவேவுண்டுநிலையுந்தளர்ந்துநைவேனை
அஞ்சேலென்னானவனொருவனவன்மார்பணிந்தவன்மாலை
வஞ்சியாதேதருமாகில்மார்விற்கொணர்ந்துபுரட்டீரே. 3

630 ஆரேயுலகத்தாற்றுவாராயர்பாடிகவர்ந்துண்ணும்
காரேறுழக்கவுழக்குண்டுதளர்ந்தும்முறிந்துங்கிடப்பேனை
ஆராவமுதமனையான்றனமுதவாயிலூறிய
நீர்தான்கொணர்ந்துபுலராமேபருக்கியிளைப்பைநீக்கீரே. 4

631 அழிலுந்தொழிலுமுருக்காட்டானஞ்சேலென்னானவனொருவன்
தழுவிமுழுவிப்புகுந்தென்னைச்சுற்றிச்சுழன்றுபோகானேல்
தழையின்பொழில்வாய்நிரைப்பின்னேநெடுமாலூதிவருகின்ற
குழலின்தொளைவாய்நீர்கொண்டுகுளிரமுகத்துத்தடவீரே. 5

632 நடையொன்றில்லாவுலகத்துநந்தகோபன்மகனென்னும்
கொடியகடியதிருமாலால்குளப்புக்கூறுகொளப்பட்டுப் [டில்.
புடையும்பெயரகில்லேனான்போட்கன்மிதித்தவடிப்பாட்
பொடித்தான்கொணர்ந்துபூசீர்கள்போகாவுயிரென்னுடம்பையே. 6

633 வெற்றிக்கருளக்கொடியான்றன்மீமீதாடாவுலகத்து
வெற்றவெறிதேபெற்றதாய்வேம்பேயாகவளர்த்தாளே
குற்றமற்றமுலைதன்னைக்குமரன்கோலப்பணைத்தோளோ
டற்றகுற்றமவைதீரவணையவமுக்கிக்கட்டீரே. 7

634 உள்ளேயுருகிநைவேனைஉளளோவிலளோவென்னாத [கால்
கொள்ளைகொள்ளிக்குறும்பனைக்கோவர்த்தனனைக்கண்டக்
கொள்ளும்பயனொன்றில்லாதகொங்கைதன்னைக்கிழங்கோடும்
அள்ளிப்பறித்திட்டவன்மார்விலெறிந்தென்னழலைத்தீர்வேனே. 8

635 கொம்மைமுலைகளிடர்தீரக்கோவிந்தற்கோர்குற்றேவல்
இம்மைப்பிறவிசெய்யாதேயினிப்போய்ச்செய்யுந்தவந்தானென்
செம்மையுடையதிருமார்விற்சேர்த்தானேலுமொருநான்று
மெய்ம்மைசொல்லிமுகநோக்கிவிடைதான்தருமேல்மிகநன்றே. 9

636 அல்லல்விளைத்தபெருமானையாயர்பாடிக்கணிவிளக்கை
வில்லிபுதுவைநகர்நம்பிவிட்டுசித்தன்வியன்கோதை
வில்லைத்தொலைத்தபுருவத்தாள்வேட்கையுற்றுமிகவிரும்பும்
சொல்லைத்துதிக்கவல்லார்கள்துன்பக்கடலுள்துவளாரே. 10

கண்ணன் பால் கஞ்சை ஆரே அழில் நடை வெற்றி
உள்ளே கொமமை அல்லல் பட்டி.

---

14. பட்டிமேய்ந்து

விருந்தாவனத்தே பரமனைக் கண்டமை

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

637 பட்டிமேய்ந்தோர்காரேறுபலதேவற்கோர்கீழ்க்கன்றாய்
இட்டீறிட்டுவிளையாடியிங்கேபோதக்கண்டீரே
இட்டமானபசுக்களையினிதுமறித்துநீரூட்டி
விட்டுக்கொண்டுவிளையாடவிருந்தாவனத்தேகண்டோமே. 1

638 அனுங்கவென்னைப்பிரிவுசெய்துஆயர்பாடிகவர்ந்துண்ணும்
குணுங்குநாறிக்குட்டேற்றைக்கோவர்த்தனனைக்கண்டீரே
கணங்களோடுமின்மேகங்கலந்தாற்போல வனமாலை
மினுங்கநின்றுவிளையாடவிருந்தாவனத்தேகண்டோமே. 2

639 மாலாய்ப்பிறந்தநம்பியைமாலேசெய்யும்மணாளனை
ஏலாப்பொய்களுரைப்பானையிங்கேபோதக்கண்டீரே
மேலாற்பரந்தவெயில்காப்பான்வினதைசிறுவன்சிறகென்னும்
மேலாப்பின்கீழ்வருவானைவிருந்தாவனத்தேகண்டோமே. 3

640 காரத்தண்கமலக்கண்ணென்னும்நெடுங்கயிறுபடுத்தியென்னை
ஈர்த்துக்கொண்டுவிளையாடுமீசன்றன்னைக்கண்டீரே

போர்த்தமுத்தின்குப்பாயப்புகர்மால்யானைக்கன்றேபோல்
வேர்த்துநின்றுவிளையாடவிருந்தாவனத்தேகண்டோமே. 4

641 மாதவனென்மணியினைவலையிற்பிழைத்தபன்றிபோல்
ஏதுமொன்றுங்கொளத்தாராவீசன்றன்னைக்கண்டீரே
பீதகவாடையுடைதாழப்பெருங்கார்மேகக்கன்றேபோல்
வீதியாரவருவானைவிருந்தாவனத்தேகண்டோமே. 5

642 தருமமறியாக்குறும்பனைத்தன்கைச்சார்ங்கமதுவேபோல்
புருவவட்டமழகியபொருத்தமிலியைக்கண்டீரே
உருவுகரிதாய்முகஞ்செய்தாயுதயப்பருப்பதத்தின்மேல்
விரியுங்கதிரேபோல்வானைவிருந்தாவனத்தேகண்டோமே. 6

643 பொருத்தமுடையநம்பியைப்புறம்போலுள்ளுங்கரியானைக்
கருத்தைப்பிழைத்துநின்றவக்கருமாமுகிலைக்கண்டீரே
அருத்தித்தாராகணங்களாலாரப்பெருகுவானம்போல்
விருத்தம்பெரிதாய்வருவானைவிருந்தாவனத்தேகண்டோமே. 7

644 வெளியசங்கொன்றுடையானைப்பீதகவாடையுடையானை
அளிநன்குடையதிருமாலையாழியானைக்கண்டீரே [மேல்
களிவண்டெங்குங்கலந்தாற்போற்கமழ்பூங்குழல்கள்தடந்தோள்
மிளிரநின்றுவிளையாடவிருந்தாவனத்தேகண்டோமே. 8

645 நாட்டைப்படையென்றயன்முதலாத்தந்தநளிர்மாமலருந்தி
வீட்டைப்பண்ணிவிளையாடும்விமலன்றன்னைக்கண்டீரே
காட்டைநாடித்தேனுகனுங்களிறும்புள்ளுமுடன்மடிய
வேட்டையாடிவருவானைவிருந்தாவனத்தேகண்டோமே. 9

646 பருந்தாட்களிற்றுக்கருள்செய்தபரமன்றன்னைப்பாரின்மேல்
விருந்தாவனத்தேகண்டமைவிட்டுசித்தன்கோதைசொல்
மருந்தாமென்றுதம்மனத்தேவைத்துக்கொண்டுவாழ்வார்கள்
பெருந்தாளுடையபிரானடிக்கீழ்ப்பிரியாதென்றுமிருப்பாரே. 10

பட்டி அனுங்க மால் கார்த்தண் மாதவன் தருமம்
பொருத்தம் வெளிய நாட்டை பருந்தாள் இருள்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்
நாச்சியார் திருமொழி ஸம்பூர்ணம்

குலசேகரப்பெருமாள் அருளிச்செய்த
பெருமாள் திருமொழி

1. இருளிரியச்சுடர்மணிகள்

திருவரங்கன் காட்சியைக் காமுறல்

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

647 இருளிரியச்சுடர்மணிகளிமைக்கும்நெற்றி
யினத்துத்தியணிபணமாயிரங்களார்ந்த
அரவரசப்பெருஞ்சோதியனந்தனென்னு
மணிவிளங்குமுயர்வெள்ளையணையைமேவித்
திருவரங்கப்பெருநகருள்தெண்ணீர்ப்பொன்னி
திரைக்கையாலடிவருடப்பள்ளிகொள்ளும்
கருமணியைக்கோமளத்தைக்கண்டுகொண்டென்
கண்ணிணைகளென்றுகொலோகளிக்குநாளே. 1

648 வாயோரீரைஞ்ஞூறுதுதங்களார்ந்த
வளையுடம்பினழனாகமுமிழ்ந்தசெந்தீ
வீயாதமலர்ச்சென்னிவிதானமேபோல்
மேன்மேலும்மிகவெங்கும்பரந்ததன்கீழ்க்
காயாம்பூமலர்ப்பிறங்கலன்னமாலைக்
கடியரங்கத்தரவணையிற்பள்ளிகொள்ளும்
மாயோனைமணத்தூணேபற்றிநின்றென்
வாயாரவென்றுகொலோவாழ்த்துநாளே. 2

649 எம்மாண்பினயனான்குநாவினாலு
மெடுத்தேத்தியீரிரண்டுமுகமுங்கொண்டு
எம்மாடுமெழிற்கண்களெட்டினோடுந்
தொழுதேத்தியினிதிறைஞ்சநின்றசெம்பொன்
அம்மான்றன்மலர்க்கமலக்கொப்பூழ்தோன்ற
வணியரங்கத்தரவணையிற்பள்ளிகொள்ளும்
அம்மான்றனடியிணைக்கீழலர்களிட்டங்
கடியவரோடென்றுகொலோவணுகுநாளே. 3

650 மாவினைவாய்பிளந்துகந்தமாலைவேலை
வண்ணனையென்கண்ணனைவன்குன்றமேந்தி
ஆவினையன்றுயக்கொண்டவாயரேற்றை
யமரர்கள்தந்தலைவனையந்தமிழினின்பப்.

பாவினையவ்வடமொழியைப்பற்றற்றார்கள்
பயிலரங்கத்தரவணையிற்பள்ளிகொள்ளும்
கோவினைநாவுறவழுத்தியென்றன்கைகள்
கொய்ம்மலர்தூயென்றுகொலோகூப்புநாளே. 4

651 இணையில்லாவின்னிசையாழ்கெழுமியின்பத்
தும்புருவுநாரதனுமிறைஞ்சியேத்தத்
துணையில்லாத்தொன்மறைநூற்றோத்திரத்தால்
தொன்மலர்க்கணயன்வணங்கியோவாதேத்த
மணிமாடமாளிகைகள்மல்குசெல்வ
மதிளரங்கத்தரவணையிற்பள்ளிகொள்ளும்
மணிவண்ணனம்மானைக்கண்டுகொண்டென்
மலர்ச்சென்னியென்றுகொலோவணங்குநாளே. 5

652 அளிமலர்மேலயனரனிந்திரனோடேனை
யமரர்கள்தங்குழுவுமரம்பையரும்மற்றும்
தெளிமதிசேர்முனிவர்கள்தங்குழுவுமுந்தித்
திசைதிசையில்மலர்தூவிச்சென்றுசேரும்
களிமலர்சேர்பொழிலரங்கத்துரகமேறிக்
கண்வளருங்கடல்வண்ணர்கமலக்கண்ணும்
ஒளிமதிசேர்திருமுகமுங்கண்டுகொண்டென்
னுள்ளமிகவென்றுகொலோவுருகுநாளே. 6

653 மறந்திகழுமனமொழித்துவஞ்சமாற்றி
ஐம்புலன்களடக்கியிடர்ப்பாரத்துன்பம்
துறந்திருமுப்பொழுதேத்தியெல்லையில்லாத்
தொன்னெறிக்கண்ணிலைநின்றதொண்டரான
அறந்திகழுமனத்தவர்தங்கதியைப்பொன்னி
யணியரங்கத்தரவணையிற்பள்ளிகொள்ளும்
நிறந்திகழுமாயோனைக்கண்டென்கண்கள்
நீர்மல்கவென்றுகொலோநிற்குநாளே. 7

654 கோலார்ந்தநெடுஞ்சார்ங்கங்கூனற்சங்கம்
கொலையாழிகொடுந்தண்டுகொற்றவொள்வாள்
காலார்ந்தகதிக்கருடனென்னும்வென்றிக்
கடும்பறவையிவையனைத்தும்புறஞ்சூழ்காப்பச்

சேலார்ந்தநெடுங்கழனிசோலைசூழ்ந்த
திருவரங்கத்தரவணையிற்பள்ளிகொள்ளும்
மாலோனைக்கண்டின்பக்கலவியெய்தி
வல்வினையேனென்றுகொலோவாழுநாளே. 8

655 தூராதமனக்காதற்றொண்டர்தங்கள்
குழாங்குழுமித்திருப்புகழ்கள்பலவும்பாடி
ஆராதமனக்களிப்போடழுதகண்ணீர்
மழைசோரநினைந்துருகியேத்திநாளும்
சீரார்ந்தமுழவோசைபரவைகாட்டுந்
திருவரங்கத்தரவணையிற்பள்ளிகொள்ளும்
போராழியம்மானைக்கண்டுதுள்ளிப்
பூதலத்திலென்றுகொலோபுரளுநாளே. 9

656 வன்பெருவானகமுய்யவமரருய்ய
மண்ணுய்யமண்ணுலகில்மனிசருய்யத்
துன்பமிகுதுயரகலவயர்வொன்றில்லாச்
சுகமவளரவகமகிழுந்தொண்டர்வாழ
அன்பொடுதென்றிசைநோக்கிப்பள்ளிகொள்ளு
மணியரங்கன்திருமுற்றத்தடியார்தங்கள்
இன்பமிகுபெருங்குழுவுகண்டியானு
மிசைந்துடனேயென்றுகொலோவிருக்குநாளே. 10

657 திடர்விளங்குகரைப்பொன்னிநடுவுபாட்டுத்
திருவரங்கத்தரவணையிற்பள்ளிகொள்ளும்
கடல்விளங்குகருமேனியம்மான்றன்னைக்
கண்ணாரக்கண்டுகக்குங்காதல்தன்னால்
குடைவிளங்குவிறற்றானைக்கொற்றவொள்வாள்
கூடலர்கோன்கொடைக்குலசேகரன்சொற்செய்த
நடைவிளங்குதமிழ்மாலைபத்தும்வல்லார்
நலந்திகழ்நாரணனடிக்கீழ்நண்ணுவாரே. 11

இருள் வாய் எம்மாண்பின் மாவினை இணை அளி மறம்
கோல் தூராத வன்பெரு திடர் தேட்டு

2. தேட்டருந்திறல்

திருவரங்கனடியார்க்கடிமையிலீடுபாடு
எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

658 தேட்டருந்திறல்தேனினைத்தென்னரங்கனைத்திருமாதுவாழ்
வாட்டமில்வனமாலைமார்வனைவாழ்த்திமால்கொள்சிந்தையராய்
ஆட்டமேவியலர்ந்தழைத்தயர்வெய்துமெய்யடியார்கள்தம்
ஈட்டங்கண்டிடக்கூடுமேலதுகாணுங்கண்பயனாவதே. 1

659 தோடுலாமலர்மங்கைதோளிணைதோய்ந்ததுஞ்சுடர்வாளியால்
நீடுமாமரஞ்செற்றதும்நிறைமேய்த்ததும்இவையேநினைந்
தாடிப்பாடியரங்கவோவென்றழைக்குந்தொண்டரடிப்பொடி
ஆடநாம்பெறிற்கங்கைநீர்குடைந்தாடும்வேட்கையென்னாவதே. 2

660 ஏறடர்த்ததும்ஏனமாய்நிலங்கீண்டதும்முன்னிராமனாய்
மாறடர்த்ததும்மண்ணளந்ததுஞ்சொல்லிப்பாடிவண்பொன்னிப்பே
ராறுபோல்வருங்கண்ணநீர்கொண்டரங்கன்கோயிற்றிருமுற்றம்
சேறுசெய்தொண்டர்சேவடிச்செழுஞ்சேறென்சென்னிக்கணிவனே

661 தோய்த்ததண்தயிர்வெண்ணெய்பாலுடனுண்டலும்உடன்றாய்ச்சிகண்
டார்த்ததோளுடையெம்பிரானென்னரங்கனுக்கடியார்களாய்
நாத்தழும்பெழநாரணாவென்றழைத்துமெய்தழும்பத்தொழு
தேத்தியின்புறுந்தொண்டர்சேவடியேத்திவாழ்த்துமென்னெஞ்சமே. 4

662 பொய்சிலைக்குரலேற்றெருத்தமிறுத்துப்போரரவீர்த்தகோன்
செய்சிலைச்சுடர்சூழொளித்திண்ணமாமதிள்தென்னரங்கனாம்
மெய்சிலைக்கருமேகமொன்றுதம்நெஞ்சினின்றுதிகழப்போய்
மெய்சிலிர்ப்பவர்தம்மையேநினைந்தென்மனம்மெய்சிலிர்க்குமே. 5

663 ஆதியந்தமனந்தமற்புதமானவானவர்தம்பிரான்
பாதமாமலர்சூடும்பத்தியிலாதபாவிகளுய்ந்திடத்
தீதில்நன்னெறிகாட்டியெங்குந்திரிந்தரங்கனெம்மானுக்கே [சமே.
காதல்செய்தொண்டர்க்கெப்பிறப்பிலுங்காதல்செய்யுமென்னெஞ்

664 காரினம்புரைமேனிநற்கதிர்முத்தவெண்ணகைச்செய்யவாய்
ஆரமார்வனரங்கனென்னுமரும்பெருஞ்சுடரொன்றினைச்
சேருநெஞ்சினராகிச்சேர்ந்துகசிந்திழிந்தகண்ணீர்களால்
வாரநிற்பவர்தாளிணைக்கொருவாரமாகுமென்னெஞ்சமே. 7

665 மாலையுற்றகடற்கிடந்தவன்வண்டுகிண்டுநறுந்துழாய்
மாலையுற்றவரைப்பெருந்திருமார்வனைமலர்க்கண்ணனை

மாலையுற்றெழுந்தாடிப்பாடித்திரிந்தரங்கனெம்மானுக்கே
மாலையுற்றிடுந்தொண்டர்வாழ்வுக்குமாலையுற்றதென்னெஞ்சமே. 8

666 மொய்த்துக்கண்பனிசோரமெய்கள்சிலிர்ப்பவேங்கியிளைத்துநின்
றெய்த்துக்கும்பிடுநட்டமிட்டெழுந்தாடிப்பாடியிறைஞ்சியென்
னத்தனச்சனரங்கனுக்கடியார்களாகியவனுக்கே
பித்தராமவர்பித்தரல்லர்கள்மற்றையார்முற்றும்பித்தரே. 9

667 அல்லிமாமலர்மங்கைநாதனரங்கன்மெய்யடியார்கள்தம்
எல்லையிலடிமைத்திறத்தினிலென்றுமேவுமனத்தனாம்
கொல்லிகாவலன்கூடல்நாயகன்கோழிக்கோன்குலசேகரன்
சொல்லினின்றமிழ்மாலைவல்லவர்தொண்டர்தொண்டர்களாவரே.

தேட்டு தோடு ஏறு, தோய்த்த பொய் ஆதி காரினம் மாலை மொய்த்து அல்லி மெய்.

3. மெய்யில் வாழ்க்கை

அழகியமணவாளன் விஷயம்

கலிவிருத்தம்

668 மெய்யில்வாழ்க்கையைமெய்யெனக்கொள்ளுமிவ்
வையந்தன்னொடுங்கூடுவதில்லையா
னையனேயரங்காவென்றழைக்கின்றேன்
மையல்கொண்டொழிந்தேனென்றன்மாலுக்கே. 1

669 நூலினேரிடையார்திறத்தேநிற்கும்
ஞாலந்தன்னொடுங்கூடுவதில்லையான்
ஆலியாஅழையாஅரங்காவென்று
மாலெழுந்தொழிந்தேனென்றன்மாலுக்கே. 2

670 மாரனார்வரிவெஞ்சிலைக்காட்செய்யும்
பாரினாரொடுங்கூடுவதில்லையான்
ஆரமார்வனரங்கனனந்தனன்
நாரணன்னரகாந்தகன்பித்தனே. 3

671 உண்டியேயுடையேயுகந்தோடுமிம்
மண்டலத்தொடுங்கூடுவதில்லையான்

அண்டவாணனரங்கன்வன்பேய்முலை
யுண்டவாயன்றனுன்மத்தன்காண்மினே. 4

672 தீதினன்னெறிநிற்கவல்லாதுசெய்
நீதியாரொடுங்கூடுவதில்லையா
னாதியாயனரங்கனந்தாமரைப்
பேதைமாமணவாளன்றன்பித்தனே. 5

673 எம்பரத்தரல்லாரொடுங்கூடல
னும்பர்வாழ்வையொன்றாகக்கருதிலன்
தம்பிரானமரர்க்கரங்கநக
ரெம்பிரானுக்கெழுமையும்பித்தனே. 6

674 எத்திறத்திலும்யாரொடுங்கூடுமச்
சித்தந்தன்னைத்தவிர்த்தனன்செங்கண்மா
லத்தனேயரங்காவென்றழைக்கின்றேன்
பித்தனாயொழிந்தேனெம்பிரானுக்கே. 7

675 பேயரேயெனக்குயாவரும்யானுமோர்
பேயனேயெவர்க்குமிதுபேசியென்
ஆயனேயரங்காவென்றழைக்கின்றேன்
பேயனாயொழிந்தேனெம்பிரானுக்கே. 8

676 அங்கையாழியரங்கனடியிணைத்
தங்குசிந்தைத்தனிப்பெரும்பித்தனாய்க்
கொங்கர்கோன்குலசேகரன்சொன்னசொல்
இங்குவல்லவர்க்கேதமொன்றில்லையே. 9

மெய் நூல் மாரன் உண்டி தீதில் எம்பரத்தர் எத்திறம்
பேயர் அங்கை ஊன்.

---

4. ஊனேறுசெல்வம்

திருவேங்கடமுடையான் விஷயம்

தரவுகொச்சகக்கலிப்பா

677 ஊனேறுசெல்வத்துடற்பிறவியான்வேண்டே
னானேறேழ்வென்றானடிமைத்திறமல்லாற்

கூனேறுசங்கமிடத்தான்றன்வேங்கடத்துக்
கோனேரிவாழுங்குருகாய்ப்பிறப்பேனே. 1

678 ஆனாதசெல்வத்தரம்பையர்கடற்சூழ
வானாளுஞ்செல்வமுமண்ணரசும்யான்வேண்டேன்
தேனார்பூஞ்சோலைத்திருவேங்கடச்சுனையில்
மீனாய்ப்பிறக்கும்விதியுடையேனாவேனே. 2

679 பின்னிட்டசடையானும்பிரமனுமிந்திரனுந்
துன்னிட்டுப்புகலரியவைகுந்தநீள்வாசல்
மின்வட்டச்சுடராழிவேங்கடக்கோன்றானுமிழும்
பொன்வட்டிற்பிடித்துடனேபுகப்பெறுவேனாவேனே. 3

680 ஒண்பவளவேலையுலவுதண்பாற்கடலுட்
கண்டுயிலுமாயோன்கழலிணைகள்காண்பதற்குப்
பண்பகரும்வண்டினங்கள்பண்பாடும்வேங்கடத்துச்
செண்பகமாய்நிற்குந்திருவுடையேனாவேனே. 4

681 கம்பமதயானைக்கழுத்தகத்தின்மேலிருந்து
இன்பமருஞ்செல்வமுமிவ்வரசும்யான்வேண்டே
னெம்பெருமானீசனெழில்வேங்கடமலைமேல்
தம்பகமாய்நிற்குந்தவமுடையேனாவேனே. 5

682 மின்னனையநுண்ணிடையாருருப்பசியுமேனகையும்
அன்னவர்தம்பாடலொடுமாடலவையாதரியேன்
தென்னவெனவண்டினங்கள்பண்பாடும்வேங்கடத்து
ளன்னனையபொற்குவடாமருந்தவத்தேனாவேனே. 6

683 வானாளுமாமதிபோல்வெண்குடைக்கீழ்மன்னவர்தங்
கோனாகிவீற்றிருந்துகொண்டாடுஞ்செல்வறியேன்
தேனார்பூஞ்சோலைத்திருவேங்கடமலைமேற்
கானாறாய்ப்பாயுங்கருத்துடையேனாவேனே. 7

684 பிறையேறுசடையானும்பிரமனுமிந்திரனும்
முறையாயபெருவேள்விக்குறைமுடிப்பான்மறையானான்
வெறியார்தண்சோலைத்திருவேங்கடமலைமேல்
நெறியாய்க்கிடக்கும்நிலையுடையேனாவேனே. 8

685 செடியாயவல்வினைகள் தீர்க்குந்திருமாலே
நெடியானேவேங்கடவாநின்கோயிலின்வாச
லடியாரும்வானவருமரம்பையருங்கிடந்தியங்கும்
படியாய்க்கிடந்துன்பவளவாய்காண்பேனே. 9

686 உம்பருலகாண்டு ஒருகுடைக்கீழுருப்பசிதன்
அம்பொற்கலையல்குல்பெற்றாலுமாதரியேன்
செம்பவளவாயான்றிருவேங்கடமென்னு
மெம்பெருமான்பொன்மலைமேலேதேனுமாவேனே. 10

687 மன்னியதண்சாரல்வடவேங்கடத்தான்றன்
பொன்னியலுஞ்சேவடிகள்காண்பான்புரிந்திறைஞ்சிக்
கொன்னவிலுங்கூர்வேற்குலசேகரன்சொன்ன
பன்னியநூற்றமிழ்வல்லார்பாங்காயபத்தர்களே. 11

ஊன் ஆனாத பின் ஒண் கம்பம் மின் வான் பிறை
செடி உம்பர் மன்னிய தரு.

---

5. தருதுயரந்தடாயேல்

வித்துவக்கோட்டம்மான் விஷயம்

தரவுகொச்சகக்கலிப்பா

688 தருதுயரந்தடாயேலுன்சரணல்லாற்சரணில்லை
விரைகுழுவும்மலர்ப்பொழில்சூழ்வித்துவக்கோட்டம்மானே
யரிசினத்தாலீன்றதாயகற்றிடினுமற்றவள்தன்
அருள்நினைந்தேயழுங்குழவியதுவேபோன்றிருந்தேனே. 1

689 கண்டாரிகழ்வனவேகாதலன்றான்செய்திடினுங்
கொண்டானையல்லாலறியாக்குலமகள்போல்
விண்டோய்மதிள்புடைசூழ்வித்துவக்கோட்டம்மாநீ
கொண்டாளாயாகிலுமுன்குரைகழலேகூறுவனே. 2

690 மீனோக்கும்நீள்வயல்சூழ்வித்துவக்கோட்டம்மாவென்
பானோக்காயாகிலுமுன்பற்றல்லாற்பற்றில்லேன்
தானோக்காதெத்துயரஞ்செய்திடினுந்தார்வேந்தன்
கோனோக்கிவாழுங்குடிபோன்றிருந்தேனே. 3

691 வாளாலறுத்துச்சுடினுமருத்துவன்பால்
மாளாதகாதல்நோயாளன்போல்மாயத்தால்
மீளாத்துயர்தரினும்வித்துவக்கோட்டம்மாநீ
யாளாவுனதருளேபார்ப்பனடியேனே. 4

692 வெங்கட்டிண்களிறடர்த்தாய்வித்துவக்கோட்டம்மானே
யெங்குப்போயுய்கேனுன்னிணையடியேயடையலலா
லெங்கும்போய்க்கரைகாணாதெறிகடல்வாய்மீண்டேயும்
வங்கத்தின்கூம்பேறும்மாப்பறவைபோன்றேனே. 5

693 செந்தழலேவந்தழலைச்செய்திடினுஞ்செங்கமலம்
அந்தரஞ்சேர்வெங்கதிரோற்கல்லாலலராவால்
வெந்துயர்வீட்டாவிடினும்வித்துவக்கோட்டம்மாவுன்
அந்தமில்சீர்க்கல்லாலகங்குழையமாட்டேனே. 6

694 எத்தனையும்வான்மறந்தகாலத்தும்பைங்கூழ்கள்
மைத்தெழுந்தமாமுகிலேபார்த்திருக்குமற்றவைபோல்
மெய்த்துயர்வீட்டாவிடினும்வித்துவக்கோட்டம்மாவென்
சித்தமிகவுன்பாலேவைப்பனடியேனே. 7

695 தொக்கிலங்கியாறெல்லாம்பரந்தோடித்தொடுகடலே
புக்கன்றிப்புறம்நிற்கமாட்டாதமற்றவைபோல்
மிக்கிலங்குமுகில்நிறத்தாய்வித்துவக்கோட்டம்மாவுன்
புக்கிலங்குசீரல்லாற்புக்கிலன்காண்புண்ணியனே. 8

696 நின்னையேதான்வேண்டிநீள்செல்வம்வேண்டாதான்
தன்னையேதான்வேண்டுஞ்செல்வம்போல்மாயத்தால்
மின்னையேசேர்திகிரிவித்துவக்கோட்டம்மா
நின்னையேதான்வேண்டிநிற்பனடியேனே. 9

697 வித்துவக்கோட்டம்மாநீவேண்டாயேயாயிடினும்
மற்றாரும்பற்றில்லேனென்றவனைத்தாள்நயந்த
கொற்றவேல்தானைக்குலசேகரன்சொன்ன
நற்றமிழ்பத்தும்வல்லார்நண்ணார்நரகமே. 10

தரு கண்டார் மீனுக்கு வாளால் வெங்கண் செந்தழல்
எத்தனை தொக்கு நின்னை வித்து ஏர்.

6. ஏர்மலர்ப்பூங்குழல்

ஆய்ச்சியரூடியமலனையேள்கல்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

698 ஏர்மலர்ப்பூங்குழலாயர்மாத
ரெனைப்பலருள்ளவிவ்வூரி லுன்றன்
மார்வுதழுவுதற்காசையின்மை
யறிந்தறிந்தேயுன்றன்பொய்யைக்கேட்டுக்
கூர்மழைபோற்பனிக்கூதலெய்திக்
கூசிநடுங்கியமுனையாற்றில்
வார்மணற்குன்றிற்புலரநின்றேன்
வாசுதேவாவுன்வரவுபார்த்தே. 1

699 கெண்டையொண்கண்மடவாளொருத்தி
கீழையகத்துத்தயிர்கடையக்
கண்டொல்லைநானுங்கடைவனென்று
கள்ளவிழியைவிழித்துப்புக்கு
வண்டமர்பூங்குழல்தாழ்ந்துலாவ
வாண்முகம்வேர்ப்பச்செவ்வாய்துடிப்பத்
தண்டயிர்நீகடைந்திட்டவண்ணம்
தாமோதராமெய்யறிவன்நானே. 2

700 கருமலர்க்கூந்தலொருத்திதன்னைக்
கடைக்கணித்தாங்கேயொருத்திதன்பால்
மருவிமனம்வைத்துமற்றொருத்திக்
குரைத்தொருபேதைக்குப்பொய்குறித்துப்
புரிகுழல்மங்கையொருத்திதன்னைப்
புணர்தியவளுக்கும்மெய்யனல்லை
மருதிறுத்தாயுன்வளர்த்தியூடே
வளர்கின்றதாலுன்றன்மாயைதானே. 3

701 தாய்முலைப்பாலிலமுதிருக்கத்
தவழ்ந்துதளர்நடையிட்டுச்சென்று
பேய்முலைவாய்வைத்துநஞ்சையுண்டு
பித்தனென்றேபிறரேசநின்றாய்

ஆய்மிகுகாதலொடுயானிருப்ப
யான்விடவந்தவென்றூதியோடே
நீமிகுபோகத்தைநன்குகந்தா
யதுவுமுன்கோரம்புக்கேற்குமன்றே. 4

702 மின்னொத்தநுண்ணிடையாளைக்கொண்டு
வீங்கிருள்வாயென்றன்வீதியூடே
பொன்னொத்தவாடைகுக்கூடலிட்டுப்
போகின்றபோதுநான்கண்டுநின்றேன்
கண்ணுற்றவளைநீகண்ணாலிட்டுக்
கைவிளிக்கின்றதுங்கண்டேநின்றே
னென்னுக்கவளைவிட்டிங்குவந்தா
யின்னமங்கேநடநம்பிநீயே. 5

703 மற்பொருதோளுடைவாசுதேவா
வல்வினையேன்றுயில்கொண்டவாறே
யிற்றையிரவிடையேமத்தென்னை
யின்னணைமேலிட்டகன்றுநீபோ
யற்றையிரவுமோர்பிற்றைநாளு
மரிவையரோடுமணைந்துவந்தா
யெற்றுக்குநீயென்மருங்கில்வந்தா
யெம்பெருமானீயெழுந்தருளே. 6

704 பையரவின்னணைப்பள்ளியினாய்
பண்டையோமல்லோம்நாம்நீயுகக்கும்
மையரியொண்கண்ணினாருமல்லோம்
வைகியெஞ்சேரிவரவொழிநீ
செய்யவுடையுந்திருமுகமுஞ்
செங்கனிவாயுங்குழலுங்கண்டு
பொய்யொருநாட்பட்டதேயமையும்
புள்ளுவம்பேசாதேபோகுநம்பீ. 7

705 என்னைவருகவெனக்குறித்திட்
டினமலர்முல்லையின்பந்தர்நீழல்
மன்னியவளைப்புணரப்புக்கு
மற்றென்னைக்கண்டுழறாநெகிழ்ந்தாய்

பொன்னிறவாடையைக்கையிற்றாங்கிப்
பொய்யச்சங்காட்டிநீபோதியேலு
மின்னமென்கையகத்தீங்கொருநாள்
வருதியேலென்சினந்தீர்வன்நானே. 8

706 மங்கலநல்வனமாலைமார்பி
லிலங்கமயில்தழைப்பீலிசூடிப்
பொங்கிளவாடையரையிற்சாத்திப்
பூங்கொத்துக்காதிற்புணரப்பெய்து
கொங்குநறுங்குழலார்களோடு
குழைந்துகுழலினிதூதிவந்தா
யெங்களுக்கேயொருநாள்வந்தூத
வுன்குழலின்னிசைபோதராதே. 9

707 அல்லிமலர்த்திருமங்கைகேள்வன்
றன்னைநயந்திளவாய்ச்சிமார்கள்
எல்லிப்பொழுதினிலேமத்தூடி
யெள்கியுரைத்தவுரையதனைக்
கொல்லிநகர்க்கிறைகூடற்கோமான்
குலசேகரனின்னிசையின்மேவிச்
சொல்லியவின்தமிழ்மாலைபத்துஞ்
சொல்லவல்லார்க்கில்லைதுன்பந்தானே. 10

ஏர் செண்டை கரு தாய் மின் மற்பொரு பையரவின் என்னை மங்கலம் அல்லி ஆலை.

---

7. ஆலைநீள்கரும்பு

மால்வளர்பிள்ளை செய்வன காணாத்
தேவகி புலம்பல்

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

708 ஆலைநீள்கரும்பன்னவன்தாலோ
வம்புயத்தடங்கண்ணினன் தாலோ
வேலைநீர்நிறத்தன்னவன் தாலோ
வேழப்போதகமன்னவன்தாலோ

ஏலவார்குழலென்மகன்தாலோ
வென்றென்றுன்னையென்வாயிடைநிறையத்
தாலொலித்திடுந்திருவினையில்லாத்
தாயரிற்கடையாயினதாயே. 1

709 வடிக்கொளஞ்சனமெழுதுசெம்மலர்க்கண்
மருவிமேலினிதொன்றினைநோக்கி
முடக்கிச்சேவடிமலர்ச்சிறுகருந்தாள்
பொலியுநீர்முகிற்குழவியேபோல
அடக்கியாரச்செஞ்சிறுவிரலனைத்தும்
அங்கையோடணைந்தாணையிற்கிடந்த
கிடக்கைகண்டிடப்பெற்றிலேனந்தோ
கேசவாகெடுவேன்கெடுவேனே. 2

710 முந்தைநன்முறையன்புடைமகளிர்
முறைமுறைதந்தங்குறங்கிடையிருத்தி
யெந்தையேயென்தன்குலப்பெருஞ்சுடரே
யெழுமுகிற்கணத்தெழில்கவரேறே
உந்தையாவனென்றுரைப்பநின்செங்கேழ்
விரலினுங்கடைக்கண்ணினுங்காட்ட
நந்தன்பெற்றனன்நல்வினையில்லா
நங்கள்கோன்வசுதேவன்பெற்றிலனே. 3

711 களிநிலாவெழில்மதிபுரைமுகமுங்
கண்ணனேதிண்கைமார்வுந்திண்டோளுந்
தளிர்மலர்க்கருங்குழற்பிறையதுவுந்
தடங்கொள்தாமரைக்கண்களும்பொலிந்த
இளமையின்பத்தையின்றென்றன்கண்ணாற்
பருகுவேற்கிவள்தாயெனநினைந்த
அளவில்பிள்ளைமையின்பத்தையிழந்த
பாவியேனெனதாவிநில்லாதே. 4

712 மருவுநின்திருநெற்றியிற்சுட்டி
யசைதரமணிவாயிடைமுத்தந்
தருதலுமுன்றன்தாதையைப்போலும்
வடிவுகண்டுகொண்டுள்ளமுள்குளிர

விரலைச்செஞ்சிறுவாயிடைச்சேர்த்து
வெகுளியாய்நின்றுரைக்குமவ்வுரையுந்
திருவிலேனொன்றும்பெற்றிலேனெல்லாந்
தெய்வநங்கையசோதைபெற்றாளே. 5

713 தண்ணந்தாமரைக்கண்ணனேகண்ணா
தவழ்ந்தெழுந்துதளர்ந்ததோர்நடையால்
மண்ணிற்செம்பொடியாடிவந்தென்றன்
மார்வில்மன்னிடப்பெற்றிலேனந்தோ
வண்ணச்செஞ்சிறுகைவிரலனைத்தும்
வாரிவாய்க்கொண்டவடிசிலின்மிச்சி
லுண்ணப்பெற்றிலேனோகொடுவினையே
னென்னையென்செய்யப்பெற்றதெம்மோயே. 6

714 குழகனேயென்றன்கோமளப்பிள்ளாய்
கோவிந்தாவென்குடங்கையில்மன்னி
ஒழுகுபேரெழிலிளஞ்சிறுதளிர்போ
லொருகையாலொருமுலைமுகநெருடா
மழலைமென்னகையிடையிடையருளா
வாயிலேமுலையிருக்கவென்முகத்தே
எழில்கொள்நின்திருக்கண்ணிணைநோக்கந்
தன்னையுமிழந்தேனிழந்தேனே. 7

715 முழுதும்வெண்ணெயளைந்துதொட்டுண்ணும்
முகிழிளஞ்சிறுத்தாமரைக்கையும்
எழில்கொள்தாம்புகொண்டடிப்பதற்கெள்கு
நிலையும்வெண்டயிர்தோய்ந்தசெவ்வாயும்
அழுகையுமஞ்சிநோக்குமந்நோக்கும்
அணிகொள்செஞ்சிறுவாய்நெளிப்பதுவுந்
தொழுகையுமிவைகண்டவசோதை
தொல்லையின்பத்திறுதிகண்டாளே. 8

716 குன்றினாற்குடைகவித்ததுங்கோலக்
குரவைகோத்ததுங்குடமாட்டுங்
கன்றினால்விளவெறிந்ததுங்காலாற்
காளியன்றலைமிதித்ததுமுதலா

வென்றிசேர்பிள்ளை நல்விளையாட்ட
மனைத்திலுமங்கென்னுள்ளமுள்குளிர
வொன்றுங்கண்டிடப்பெற்றிலேனடியேன்
காணுமாறினியுண்டெனிலருளே. 9

717 வஞ்சமேவியநெஞ்சுடைப்பேய்ச்சி
வரண்டுநார்நரம்பெழக்கரிந்துக்க
நஞ்சமார்தருசுழிமுலையந்தோ
சுவைத்துநீயருள்செய்துவளர்ந்தாய்
கஞ்சன்நாள்கவர் கருமுகிலெந்தாய்
கடைப்பட்டேன்வெறிதேமுலைசுமந்து
தஞ்சமேலொன்றிலேனுய்ந்திருந்தேன்
தக்கதேநல்லதாயைப்பெற்றாயே. 10

718 மல்லைமாநகர்க்கிறையவன்றன்னை
வான்செலுத்திவந்தீங்கணைமாயத்
தெல்லையில்பிள்ளைசெய்வனகாணத்
தெய்வத்தேவகிபுலம்பியபுலம்பல்
கொல்லிகாவலன்மாலடிமுடிமேற்
கோலமாம்குலசேகரன்சொன்ன
நல்லிசைத்தமிழ்மாலைவல்லார்கள்
நண்ணுவாரொல்லைநாரணனுலகே. 11

ஆலை வடி முந்தை களி மருவு தண்ணம் குழகன்
முழுதும் குன்று வஞ்சம் மல்லை மன்னு.

---

8. மன்னுபுகழ்

கண்ணபுரத்தோளிர் காகுத்தன் தாலாட்டு

தரவுகோச்சகக்கலிப்பா

719 மன்னுபுகழ்க்கௌசலைதன்மணிவயிறுவாய்த்தவனே
தென்னிலங்கைக்கோன்முடிகள்சிந்துவித்தாய்செம்பொன்சேர்
கன்னிநன்மாமதிள்புடைசூழ்கணபுரத்தென்கருமணியே
யென்னுடையவின்னமுதே இராகவனே தாலேலோ. 1

720 புண்டரிகமலரதன்மேற்புவனியெல்லாம்படைத்தவனே
திண்டிறலாள்தாடகைதன்னுரமுருவச்சிலைவளைத்தாய்
கண்டவர்தம்மனம்வழங்குங்கணபுரத்தென்கருமணியே
யெண்டிசையுமாளுடையாய் இராகவனே தாலேலோ. 2

721 கொங்குமலிகருங்குழலாள் கௌசலைதன்குலமதலாய்
தங்குபெரும்புகழ்ச்சனகன் றிருமருகா தாசரதீ
கங்கையிலுந்தீர்த்தமலிகணபுரத்தென்கருமணியே
யெங்கள்குலத்தின்னமுதே இராகவனே தாலேலோ. 3

722 தாமரைமேலயனவனைப்படைத்தவனே தயரதன்றன்
மாமதலாய்மைதிலிதன்மணவாளா வண்டினங்கள்
காமரங்களிசைபாடுங்கணபுரத்தென்கருமணியே
ஏமருவுஞ்சிலைவலவா இராகவனே தாலேலோ. 4

723 பாராளும்படர்செல்வம்பரதநம்பிக்கேயருளி
ஆராவன்பிளையவனோடருங்கானமடைந்தவனே
சீராளும்வரைமார்பா திருக்கண்ணபுரத்தரசே
தாராளும்நீண்முடியென் தாசரதீ தாலேலோ. 5

724 சுற்றமெல்லாம்பின்றொடரத்தொல்கானமடைந்தவனே
அற்றவர்கட்கருமருந்தே அயோத்திநகர்க்கதிபதியே
கற்றவர்கள்தாம்வாழுங்கணபுரத்தென்கருமணியே
சிற்றவைதன்சொற்கொண்ட சீராமா தாலேலோ. 6

725 ஆலினிலைப்பாலகனாய் அன்றுலகமுண்டவனே
வாலியைக்கொன்றரசிளையவானரத்துக்களித்தவனே
காலின்மணிகரையலைக்குங்கணபுரத்தென்கருமணியே
ஆலிநகர்க்கதிபதியே அயோத்திமனே தாலேலோ. 7

726 மலையதனாலணைகட்டிமதிளிலங்கையழித்தவனே
யலைகடலைக்கடைந்தமரர்க்கமுதருளிச்செய்தவனே
கலைவலவர்தாம்வாழுங்கணபுரத்தென்கருமணியே
சிலைவலவா சேவகனே சீராமா தாலேலோ. 8

727 தளையவிழுநறுங்குஞ்சித்தயரதன்றன்குலமதலாய்
வளையவொருசிலையதனால்மதிளிலங்கையழித்தவனே

களைகழுநீர்மருங்கலருங்கணபுரத்தென்கருமணியே
யிளையவர்கட்கருளுடையாய் இராகவனே தாலேலோ. 9

728 தேவரையுமசுரரையுந்திசைகளையும்படைத்தவனே
யாவரும்வந்தடிவணங்கவரங்கநகர்த்துயின்றவனே
காவிரிநன்னதிபாயுங்கணபுரத்தென்கருமணியே
ஏவரிவெஞ்சிலைவலவா இராகவனே தாலேலோ. 10

729 கன்னிநன்மாமதிள்புடைசூழ்கணபுரத்தென்காகுத்தன்
தன்னடிமேற்றாலேலோவென்றுரைத்ததமிழ்மாலை
கொன்னவிலும்வேல்வலவன்குடைக்குலசேகரன்சொன்ன
பன்னியநூல்பத்தும்வல்லார்பாங்காயபத்தர்களே. 11

மன்னு புண்டரிகம் கொங்கு தாமரை பார் சுற்றம் ஆலின் மலை தளை தேவரை கன்னி வன்றாள்.

---

9. வன்றாளினிணை

தயரதன் புலம்பல்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

730 வன்றாளினிணைவணங்கிவளநகரந்
தொழுதேத்தமன்னனாவான்
நின்றாயையரியணைமேலிருந்தாயை
நெடுங்கானம்படரப்போகு
வென்றாளெம்மிராமாவோ
வுனைப்பயந்தகைகேசிதன்சொற்கேட்டு
நன்றாகநானிலத்தையாள்வித்தேன்
நன்மகனேயுன்னைநானே. 1

731 வெவ்வாயேன்வெவ்வுரைகேட்டிருநிலத்தை
வேண்டாதேவிரைந்துவென்றி
மைவாயகளிறொழிந்துதேரொழிந்து
மாவொழிந்துவனமேமேவி
நெய்வாயவேல்நெடுங்கண்ணேரிழையு
மிளங்கோவும்பின்புபோக

எவ்வாறுநடந்தனையெம்மிராமாவோ
எம்பெருமானென்செய்கேனே. 2

732 கொல்லணைவேல்வரிநெடுங்கட்கௌசலைதன்
குலமதலாய்குனிவில்லேந்தும்
மல்லணைந்தவரைத்தோளாவல்வினையேன்
மனமுருக்கும்வகையேகற்றாய்
மெல்லணைமேல்முன்துயின்றாய்
இன்றினிப்போய்வியன்கானமரத்தினீழல்
கல்லணைமேற்கண்டுயிலக்கற்றனையோ
காகுத்தாகரியகோவே. 3

733 வாபோகுவாவின்னம்வந்தொருகாற்
கண்டுபோமலராள்கூந்தல்
வேய்போலுமெழிற்றோளிதன்பொருட்டா
விடையோன்றன்வில்லைச்செற்றாய்
மாபோகுநெடுங்கானம்வல்வினையேன்
மனமுருக்கும்மகனேயின்று
நீபோகவென்னெஞ்சமிருபிளவாய்ப்
போகாதேநிற்குமாறே. 4

734 பொருந்தார்கைவேனுதிபோற்
பரல்பாயமெல்லடிக்கள்குருதிசோர
விரும்பாதகான்விரும்பிவெயிலுறைப்ப
வெம்பசிநோய்கூரவின்று
பெரும்பாவியேன்மகனேபோகின்றாய்
கேகயர்கோன்மகளாய்ப்பெற்ற
அரும்பாவிசொற்கேட்டவருவினையே
னென்செய்கேனந்தோயானே. 5

735 அம்மாவென்றுகந்தழைக்குமார்வச்சொற்
கேளாதேயணிசேர்மார்வ
மென்மார்வத்திடையழுந்தத்தழுவாதே
முழுசாதேமோவாதுச்சி
கைம்மாவின்னடையன்னமென்னடையுங்
கமலம்போல்முகமுங்காணு

தெம்மானையென்மகனையிழந்திட்ட
விழிதகையேனிருக்கின்றேனே. 6

736 பூமருவுநறுங்குஞ்சிபுன்சடையாப்
புனைந்துபூந்துகில்சேரல்குல்
காமரெழில்விழலுடுத்துக்கலனணியா
தங்கங்களழகுமாறி
ஏமருதோளென்புதல்வன்யானின்று
செலத்தக்கவனந்தான்சேர்தல்
தூமறையீரிதுதகவோசுமந்திரனே
வசிட்டனேசொல்லீர்நீரே. 7

737 பொன்பெற்றாரெழில்வேதப்புதல்வனையுந்
தம்பியையும்பூவைபோலும்
மின்பற்றாநுண்மருங்குல்மெல்லியலென்
மருகியையும்வனத்திற்போக்கி
நின்பற்றாநின்மகன்மேற்பழிவிளைத்திட்
டென்னையும்நீள்வானிற்போக்க
என்பெற்றாய்கைகேசியிருநிலத்தி
லினிதாகவிருக்கின்றாயே. 8

738 முன்னொருநாள்மழுவாளிசிலைவாங்கி
யவன்றவத்தைமுற்றுஞ்செற்றாய்
உன்னையுமுன்னருமையையுமுன்மோயின்
வருத்தமுமொன்றாகக்கொள்ளா
தென்னையுமென்மெய்யுரையும்மெய்யாகக்
கொண்டுவனம்புக்கவெந்தாய்
நின்னையேமகனாகப்பெறப்பெறுவே
னேழ்பிறப்பும்நெடுந்தோள்வேந்தே. 9

739 தேனகுமாமலர்க்கூந்தற்கௌசலையுஞ்
சுமித்திரையுஞ்சிந்தைநோவக்
கூனுருவின்கொடுந்தொழுத்தைசொற்கேட்ட
கொடியவள்தன்சொற்கொண்டின்று
கானகமேமிகவிரும்பிநீதுறந்த
வளநகரைத்துறந்துநானும்

வானகமேமிகவிரும்பிப்போகின்றேன்
மனுகுலத்தார்தங்கள்கோவே. 10

740 ஏரார்ந்தகருநெடுமாலிராமனாய்
வனம்புக்கவதனுக்காற்றாத்
தாரார்ந்ததடவரைத்தோள்தயரதன்றான்
புலம்பியவப்புலம்பல்தன்னைக்
கூரார்ந்தவேல்வலவன்கோழியர்கோன்
குடைக்குலசேகரன்சொற்செய்த
சீரார்ந்ததமிழ்மாலையிவைவல்லார்
தீநெறிக்கண்செல்லார்தாமே. 11

வன்றாள் வெவ்வாய் கொல்லணை வாபோகு பொருந்தார் அம்மா பூபொன் முன் தேன் ஏரார் அங்கண்.

---

10. அங்கணெடுமதிள்

ஸ்ரீராமாயண ஸாரம்

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

741 அங்கணெடுமதிள்புடைசூழயோத்தியென்னு
மணிநகரத்துலகனைத்தும்விளக்குஞ்சோதி
வெங்கதிரோன்குலத்துக்கோர்விளக்காய்த்தோன்றி
விண்முழுதுமுயக்கொண்டவீரன்றன்னைச்
செங்கணெடுங்கருமுகிலையிராமன்றன்னைத்
தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
எங்கள்தனிமுதல்வனையெம்பெருமான்றன்னை
யென்றுகொலோகண்குளிரக்காணுநாளே. 1

742 வந்தெதிர்ந்ததாடகைதனுரத்தைக்கீறி
வருகுருதிபொழிதரவன்கணையொன்றேவி
மந்திரங்கொள்மறைமுனிவன்வேள்விகாத்து
வல்லரக்கருயிருண்டமைந்தன்காண்மின்
செந்தளிர்வாய்மலர்நகைசேர்செழுந்தண்சோலைத்
தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்

அந்தணர்களொருமூவாயிரவரேத்த
வணிமணியாசனத்திருந்தவம்மான்றானே. 2

743 செவ்வரிநற்கருநெடுங்கட்சீதைக்காகிச்
சினவிடையோன்சிலையிறுத்துமழுவாளேந்தி
வெவ்வரிநற்சிலைவாங்கிவென்றிகொண்டு
வேல்வேந்தர்பகைதடிந்தவீரன்றன்னைத்
தெவ்வரஞ்சுநெடும்புரிசையுயர்ந்தபாங்கர்த்
தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
எவ்வரிவெஞ்சிலைத்தடக்கையிராமன்றன்னை
யிறைஞ்சுவாரிணையடியேயிறைஞ்சினேனே. 3

744 தொத்தலர்பூஞ்சுரிகுழற்கைகேசிசொல்லால்
தொன்னகரந்துறந்துதுறைக்கங்கைதன்னைப்
பத்தியுடைக்குகன்கடத்தவனம்போய்ப்புக்குப்
பரதனுக்குப்பாதுகமுமரசுமீந்து
சித்திரகூடத்திருந்தான்றன்னையின்று
தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
எத்தனையுங்கண்குளிரக்காணப்பெற்ற
விருநிலத்தார்க்கிமையவர்நேரொவ்வார்தாமே. 4

745 வலிவணக்குவரைநெடுந்தோள்விராதைக்கொன்று
வண்டமிழ்மாமுனிகொடுத்தவரிவில்வாங்கிக்
கலைவணக்குநோக்கரக்கிமூக்கைநீக்கிக்
கரனோடுதூடணன்றனுயிரைவாங்கிச்
சிலைவணக்கிமான்மரியவெய்தான்றன்னைத்
தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
தலைவணக்கிக்கைகூப்பியேத்தவல்லார்
திரிதலால்தவமுடைத்துத்தரணிதானே. 5

746 தனமருவுவைதேகிபிரியலுற்றுத்
தளர்வெய்திச்சடாயுவைவைகுந்தத்தேற்றி
வனமருவுகவியரசன்காதல்கொண்டு
வாலியைக்கொன்றிலங்கைநகரரக்கர்கோமான்
சினமடங்கமாருதியாற்சுடுவித்தானைத்
தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்

இனிதமர்ந்தவம்மானையிராமன்றன்னை
யேத்துவாரிணையடியேயேத்தினேனே. 6

747 குரைகடலையடலம்பால்மறுகவெய்து
குலைகட்டிமறுகரையையதனாலேறி
எரிநெடுவேலரக்கரொடுமிலங்கைவேந்த
னின்னுயிர்கொண்டவன்றம்பிக்கரசுமீந்து
திருமகளோடினிதமர்ந்தசெல்வன்றன்னைத்
தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
அரசமர்ந்தானடிசூடுமரசையல்லா
லரசாகவெண்ணேன்மற்றரசுதானே. 7

748 அம்பொனெடுமணிமாடவயோத்தியெய்தி
யரசெய்தியகத்தியன்வாய்த்தான்முன்கொன்றான்
தன்பெருந்தொல்கதைகேட்டுமிதிலைச்செல்வி
யுலகுய்யத்திருவயிறுவாய்த்தமக்கள்
செம்பவளத்திரள்வாய்த்தன்சரிதைகேட்டான்
தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
எம்பெருமான்றன்சரிதைசெவியாற்கண்ணாற்
பருகுவோமின்னமுதமதியோமன்றே. 8

749 செறிதவச்சம்புகன்றன்னைச்சென்றுகொன்று
செழுமறையோனுயிர்மீட்டுத்தவத்தோனீந்த
நிறைமணிப்பூணணியுங்கொண்டிலவணன்றன்னைத்
தம்பியால்வானேற்றிமுனிவன்வேண்டத்
திறல்விளங்குமிலக்குமனைப்பிரிந்தான்றன்னைத்
தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
உறைவானைமறவாதவுள்ளந்தன்னை
யுடையோமற்றுறுதுயரமடையோமன்றே. 9

750 அன்றுசராசரங்களைவைகுந்தத்தேற்றி
யடலரவப்பகையேறியசுரர்தம்மை
வென்றிலங்குமணிநெடுந்தோள்நான்குந்தோன்ற
விண்முழுதுமெதிர்வரத்தன்றாமமேவிச்
சென்றினிதுவீற்றிருந்தவம்மான்றன்னைத்
தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்

என்றுநின்றானவனிவனென்றேத்திநாளு
மிறைஞ்சுமினோவெப்பொழுதுந்தொண்டீர்நீரே. 10

751 தில்லைநகர்த்திருச்சித்திரகூடந்தன்னுள்
திறல்விளங்குமாருதியோடமர்ந்தான்றன்னை
எல்லையில்சீர்த்தயரதன்றன்மகனாய்த்தோன்றிற்
றதுமுதலாத்தன்னுலகம்புக்கதீறாக்
கொல்லியலும்படைத்தானைக்கொற்றவொள்வாள்
கோழியர்கோன்குடைக்குலசேகரன்சொற்செய்த
நல்லியலின்றமிழ்மாலைபத்தும்வல்லார்
நலந்திகழ்நாரணனடிக்கீழ்நண்ணுவாரே. 11

அங்கண் வந்து செவ்வரி தொத்து வலி தனம் குறை அம் பொன் செறி அன்று தில்லை பூநிலாய.

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்.

பெருமாள்திருமொழி ஸம்பூர்ணம்.

திருமழிசைப்பிரான் அருளிச்செய்த்

திருச்சந்த விருத்தம்

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

752 பூநிலாயவைந்துமாய்ப்புனற்கணின்றநான்குமாய்த்
தீநிலாயமூன்றுமாய்ச்சிறந்தகாலிரண்டுமாய்
மீநிலாயதொன்றுமாகிவேறுவேறுதன்மையாய்
நீநிலாயவண்ணநின்னையார்நினைக்கவல்லரே. 1

753 ஆறுமாறுமாறுமாயோரைந்துமைந்துமைந்துமாய்
ஏறுசீரிரண்டுமூன்றுமேழுமாறுமெட்டுமாய்
வேறுவேறுஞானமாகிமெய்யினோடுபொய்யுமாய்
ஊறொடோசையாயவைந்துமாயவாயமாயனே. 2

754 ஐந்துமைந்துமைந்துமாகியல்லவற்றுளாயுமாய்
ஐந்துமூன்றுமொன்றுமாகிநின்றவாதிதேவனே
ஐந்துமைந்துமைந்துமாகியந்தரத்தணைந்துநின்
றைந்துமைந்துமாயநின்னையாவர்காணவல்லரே. 3

755 மூன்றுமுப்பதாறினோடோரைந்துமைந்துமைந்துமாய்
மூன்றுமூர்த்தியாகிமூன்றுமூன்றுமூன்றுமூன்றுமாய்த்
தோன்றுசோதிமூன்றுமாய்த்துளக்கமில்விளக்கமாய்
என்னெஞ்சினுள்புகுந்ததென்கொலோவெம்மீசனே. 4

756 நின்றியங்குமொன்றலாவுருக்கடோறுமாவியா
யொன்றியுள்கலந்துநின்றநின்னதன்மையின்னதென்
றென்றும்யார்க்குமெண்ணிறந்தவாதியாய்நின்னுந்திவா
யன்றுநான்முகற்பயந்தவாதிதேவனல்லையே. 5

757 நாகமேந்துமேருவெற்பைநாகமேந்துமண்ணினை
நாகமேந்துமாகமாகமாகமேந்துவார்புனல்
மாகமேந்துமங்குல்தீயோர்வாயுவைந்தமைந்துகாத்
தேகமேந்திநின்றநீர்மைநின்கணேயியன்றதே. 6

758 ஒன்றிரண்டுமூர்த்தியாயுறக்கமோடுணர்ச்சியாய்
ஒன்றிரண்டுகாலமாகிவேலைஞாலமாயினாய்

ஒன்றிரண்டுதீயுமாகியாயனாயமாயனே
ஒன்றிரண்டுகண்ணினானுமுன்னையேத்தவல்லனே. 7

759 ஆதியானவானவர்க்குமண்டமாயவப்புறத்
தாதியானவானவர்க்குமாதியானவாதிநீ
ஆதியானவானவாணரந்தகாலம்நீயுரைத்தி
ஆதியானகாலநின்னையாவர்காணவல்லரே. 8

760 தாதுலாவுகொன்றைமாலைதுன்னுசெஞ்சடைச்சிவன்
நீதியால்வணங்குபாதநின்மலாநிலாயசீர்
வேதவாணர்கீதவேள்விநீதியானகேள்வியார்
நீதியால்வணங்குகின்றநீர்மைநின்கணின்றதே. 9

761 தன்னுளேதிரைத்தெழுந்தரங்கவெண்டடங்கடல்
தன்னுளேதிரைத்தெழுந்தடங்குகின்றதன்மைபோல்
நின்னுளேபிறந்திறந்துநிற்பவுந்திரிபவும்
நின்னுளேயடங்குகின்றநீர்மைநின்கணின்றதே. 10

762 சொல்லினாற்றொடர்ச்சிநீசொலப்படும்பொருளுநீ
சொல்லினாற்சொலப்படாதுதோன்றுகின்றசோதிநீ
சொல்லினாற்படைக்கநீபடைக்கவந்துதோன்றினார்
சொல்லினாற்சுருங்கநின்குணங்கள்சொல்லவல்லரே. 11

763 உலகுதன்னைநீபடைத்தியுள்ளொடுக்கிவைத்திமீண்
டுலகுதன்னுளேபிறத்தியோரிடத்தையல்லையால்
உலகுநின்னொடொன்றிநிற்கவேறுநிற்றியாதலால்
உலகில்நின்னையுள்ளசூழல்யாவருள்ளவல்லரே. 12

764 இன்னையென்றுசொல்லலாவதில்லையாதுமிட்டிடைப்
பின்னைகேள்வனென்பருன்பிணக்குணர்ந்தபெற்றியோர்
பின்னையாயகோலமோடுபேருமூருமாதியும்
நின்னையார்நினைக்கவல்லர்நீர்மையால்நினைக்கிலே. 13

765 தூய்மையோகமாயினாய்துழாயலங்கல்மாலையாய்
ஆமையாகியாழ்கடற்றுயின்றவாதிதேவநின்
நாமதேயமின்னதென்னவல்லமல்லவாகிலும்
சாமவேதகீதனாயசக்ரபாணியல்லையே. 14

766 அங்கமாறும்வேதநான்குமாகிநின்றவற்றுளே
தங்குகின்றதன்மையாய்தடங்கடற்பணத்தலைச்
செங்கணாகணைக்கிடந்தசெல்வமல்குசீரினாய்
சங்கவண்ணமன்னமேனிசார்ங்கபாணியல்லையே. 15

767 தலைக்கணத்துகட்குழம்புசாதிசோதிதோற்றமாய்
நிலைக்கணங்கள்காணவந்துநிற்றியேலும்நீடிரும்
கலைக்கணங்கள்சொற்பொருட்கருத்தினால்நினைக்கொணா
மலைக்கணங்கள்போலுணர்த்துமாட்சிநின்றன்மாட்சியே. 16

768 ஏகமூர்த்திமூன்றுமூர்த்திநாலுமூர்த்திநன்மைசேர் [யாய்
போகமூர்த்திபுண்ணியத்தின்மூர்த்தியெண்ணில்மூர்த்தி
நாகமூர்த்திசயனமாய்நலங்கடற்கிடந்துமே
லாகமூர்த்தியாயவண்ணமென்கொலாதிதேவனே. 17

769 விடத்தவாயொராயிரமிராயிரங்கண்வெந்தழல்
விடுத்துவீள்விலாதபோகமிக்கசோதிதொக்கசீர்
தொடுத்துமேல்விதானமாயபௌவநீரராவணைப்
படுத்தபாயற்பள்ளிகொள்வதென்கொல்வேலைவண்ணனே .

770 புள்ளதாகிவேதநான்குமோதினாயதன்றியும்
புள்ளின்வாய்பிளந்துபுட்கொடிப்பிடித்தபின்னரும்
புள்ளையூர்தியாதலாலதென்கொல்மின்கொணேமியாய்
புள்ளின்மெய்ப்பகைக்கடற்கிடத்தல்காதலித்ததே. 19

771 கூசமொன்றுமின்றிமாசுணம்படுத்துவேலைநீர்
பேசநின்றதேவர்வந்துபாடமுன்கிடந்ததும்
பாசநின்றநீரில்வாழுமாமையானகேசவா
ஏசவன்றுநீகிடந்தவாறுகூறுதேறவே. 20

772 அரங்கனேதரங்கநீர்கலங்கவன்றுகுன்றுசூழ்
மரங்கடேயமாநிலங்குலுங்கமாசுணஞ்சுலாய்
நெருங்கநீகடைந்தபோதுநின்றசூரரென்செய்தார்
குரங்கையாளுகந்தவெந்தைகூறுதேறவேறிதே. 21

773 பண்டுமின்றுமேலுமாயோர்பாலனாகிஞாலமே
ழுண்டுமண்டியாலிலைத்துயின்றவாதிதேவனே

வண்டுகிண்டுதண்டுழாயலங்கலாய்கலந்தசீர்ப்
புண்டரீகபாவைசேருமார்பபூமிநாதனே. 22

774 வானிறத்தொர்சீயமாய்வளைந்தவாளெயிற்றவன்
ஊனிறத்துகிர்த்தலமழுத்தினாயுலாயசீர்
நாணிறத்தவேதநாவர்நல்லயோகினால்வணங்கு
பானிறக்கடற்கிடந்தபற்பநாபனல்லையே. 23

775 கங்கைநீர்பயந்தபாதபங்கயத்தெம்மண்ணலே
அங்கையாழிசங்குதண்டுவில்லும்வாளுமேந்தினாய்
சிங்கமாயதேவதேவதேனுலாவுமென்மலர்
மங்கைமன்னிவாழுமார்பவாழிமேனிமாயனே. 24

776 வரத்தினிற்சிரத்தைமிக்கவாளெயிற்றுமற்றவன்
உரத்தினிற்கரத்தைவைத்துகிர்த்தலத்தையூன்றினா
யிரத்திநீயிதென்னபொய்யிரந்தமண்வயிற்றுளே
கரத்தியுன்கருத்தையாவர்காணவல்லர்கண்ணனே. 25

777 ஆணினோடுபெண்ணுமாகியல்லவோடுநல்லவா
யூணொடோசையூறுமாகியொன்றலாதமாயையாய்ப்
பூணிபேணுமாயனாகிப்பொய்யினோடுமெய்யுமாய்க்
காணிபேணுமாணியாய்க்கரந்துசென்றகள்வனே. 26

778 விண்கடந்தசோதியாய்விளங்குஞானமூர்த்தியாய்ப்
பண்கடந்ததேசமேவுபாவநாசநாதனே
எண்கடந்தயோகினோடிரந்துசென்றுமாணியாய்
மண்கடந்தவண்ணநின்னையார்மதிக்கவல்லரே. 27

779 படைத்தபாரிடந்தளந்ததுண்டுமிழ்ந்துபௌவநீர்
படைத்தடைத்ததிற்கிடந்துமுன்கடைந்தபெற்றியோய்
மிடைத்தமாலிமாலிமான்விலங்குகாலனூர்புகப்
படைக்கலம்விடுத்தபல்படைத்தடக்கைமாயனே. 28

780 பரத்திலும்பரத்தையாதிபௌவநீரணைக்கிடந்
துரத்திலுமொருத்திதன்னைவைத்துகந்ததன்றியும்
நரத்திலும்பிறத்திநாதஞானமூர்த்தியாயினா
யொருத்தரும்நினாததன்மையின்னதென்னவல்லரே. 29

781 வானகமுமண்ணகமும்வெற்புமேழ்கடல்களும்
போனகஞ்செய்தாலிலைத்துயின்றபுண்டரீகனே
தேனகஞ்செய்தண்ணறும்மலர்த்துழாய்நன்மாலையாய்
கூனகம்புகத்தெறித்தகொற்றவில்லியல்லையே. 30

782 காலநேமிகாலனேகணக்கிலாதகீர்த்தியாய்
ஞாலமேழுமுண்டுபண்டோர்பாலனாயபண்பனே
வேலைவேவவில்வளைத்தவெல்சினத்தவீரநின்
பாலராயபத்தர்சித்தமுத்திசெய்யுமூர்த்தியே. 31

783 குரக்கினப்படைகொடுகுரைகடலின்மீதுபோய்
அரக்கரங்கரங்கவெஞ்சரந்துரந்தவாதிநீ
யிரக்கமண்கொடுத்தவற்கிரக்கமொன்றுமின்றியே
பரக்கவைத்தளந்துகொண்டபற்பபாதனல்லையே. 32

784 மின்னிறத்தெயிற்றரக்கன்வீழவெஞ்சரந்துரந்து
பின்னவற்கருள்புரிந்தரசளித்தபெற்றியோய்
நன்னிறத்தொரின்சொலேழைபின்னைகேள்வமன்னுசீர்ப்
பொன்னிறத்தவண்ணனாயபுண்டரீகனல்லையே. 33

785 ஆதியாதியாதிநீயொரண்டமாதியாதலால்
சோதியாதசோதிநீயதுண்மையில்விளங்கினாய்
வேதமாகிவேள்வியாகிவிண்ணினோடுமண்ணுமாய்
ஆதியாகியாயனாயமாயமென்னமாயமே. 34

786 அம்புலாவுமீனுமாகியாமையாகியாழியார்
தம்பிரானுமாகிமிக்கதன்புமிக்கதன்றியும்
கொம்பராவுநுண்மருங்குலாயர்மாதர்பிள்ளையாய்
எம்பிரானுமாயவண்ணமென்கொலோவெம்மீசனே. 35

787 ஆடகத்தபூண்முலையசோதையாய்ச்சிபிள்ளையாய்ச்
சாடுதைத்தோர்புள்ளதாவிகள்ளதாயபேய்மகள்
வீடவைத்தவெய்யகொங்கையையபாலமுதுசெய்
தாடகக்கைமாதர்வாயமுதமுண்டதென்கொலோ. 36

788 காய்த்தநீள்விளங்கனியுதிர்த்தெதிர்ந்தபூங்குருந்தஞ்
சாய்த்துமாபிளந்தகைத்தலத்தகண்ணனென்பரால்

ஆய்ச்சிபாலையுண்டுமண்ணையுண்டுவெண்ணெயுண்டுபின்
பேய்ச்சிபாலையுண்டுபண்டொரேனமாயவாமனா. 37

789 கடங்கலந்தவன்கரிமருப்பொசித்தொர்பொய்கைவாய்
விடங்கலந்தபாம்பின்மேனடம்பயின்றநாதனே
குடங்கலந்தகூத்தனாயகொண்டல்வண்ணதண்டுழாய்
வடங்கலந்தமாலைமார்பகாலநேமிகாலனே. 38

790 வெற்பெடுத்துவேலைநீர்கலக்கினாயதன்றியும்
வெற்பெடுத்துவேலைநீர்வரம்புகட்டிவேலைசூழ்
வெற்பெடுத்தவிஞ்சிசூழிலங்கைகட்டழித்தநீ
வெற்பெடுத்துமாரிகாத்தமேகவண்ணனல்லையே. 39

791 ஆனைகாத்தொரானைகொன்றதன்றியாயர்பிள்ளையாய்
ஆனைமேய்த்தியாநெயுண்டியன்றுகுன்றமொன்றினால்
ஆனைகாத்துமையரிக்கண்மாதரார்திறத்துமுன்
ஆனையன்றுசென்றடர்த்தமாயமென்னமாயமே. 40

792 ஆயனாகியாயர்மங்கைவேயதோள்விரும்பினாய்
ஆயநின்னையாவர்வல்லரம்பரத்தொடிம்பராய்
மாயமாயமாயைகொல்லதன்றிநீவகுத்தலும்
மாயமாயமாக்கினாயுன்மாயமுற்றுமாயமே. 41

793 வேறிசைந்தசெக்கர்மேனிநீறணிந்தபுன்சடைக்
கீறுதிங்கள்வைத்தவன்கைவைத்தவன்கபாலமிசை
ஊறுசெங்குருதியால்நிறைத்தகாரணந்தனை
ஏறுசென்றடர்த்தவீசபேசுகூசமின்றியே. 42

794 வெஞ்சினத்தவேழவெண்மருப்பொசித்துருத்தமா
கஞ்சனைக்கடிந்துமண்ணளந்துகொண்டகாலனே
வஞ்சனத்துவந்தபேய்ச்சியாவிபாலுள்வாங்கினா
யஞ்சனத்தவண்ணனாயவாதிதேவனல்லையே. 43

795 பாலினீர்மைசெம்பொனீர்மைபாசியின்பசும்புறம்
போலுநீர்மைபொற்புடைத்தடத்துவண்டுவிண்டுலா
நீலநீர்மையென்றிவைநிறைந்தகாலநான்குமாய்
மாலினீர்மைவையகம்மறைத்ததென்னநீர்மையே. 44

796 மண்ணுளாய்கொல்விண்ணுளாய்கொல்மண்ணுளேமயங்கிநின்
றெண்ணுமெண்ணகப்படாய்கொலென்னமாயைநின்றமர்
கண்ணுளாய்கொல்சேயைகொலனந்தன்மேற்கிடந்தவெம்
புண்ணியாபுனந்துழாயலங்கலம்புனிதனே. 45

797 தோடுபெற்றதண்டுழாயலங்கலாடுசென்னியாய்
கோடுபற்றியாழியேந்தியஞ்சிறைப்புள்ளூர்தியால்
நாடுபெற்றநன்மைநண்ணமில்லையேனுநாயினேன்
வீடுபெற்றிறப்பொடும்பிறப்பறுக்குமாசொலே. 46

798 காரொடொத்தமேனிநங்கள்கண்ணவிண்ணிணாதனே
நீரிடத்தராவணைக்கிடத்தியென்பரன்றியும்
ஓரிடத்தையல்லையெல்லையில்லையென்பராதலால்
சேர்விடத்தைநாயினேன்றெரிந்திறைஞ்சுமாசொலே. 47

799 குன்றினின்றுவானிருந்துநீள்கடற்கிடந்துமண்
ணொன்றுசென்றதொன்றையுண்டதொன்றிடந்துபன்றியாய்
நன்றுசென்றநாளவற்றுணல்லுயிர்படைத்தவர்க்
கன்றுதேவமைத்தளித்தவாதிதேவனல்லையே. 48

800 கொண்டைகொண்டகோதைமீதுதேனுலாவுகூனிகூ
னுண்டைகொண்டரங்கவோட்டியுள்மகிழ்ந்தநாதனூர்
நண்டையுண்டுநாரைபேரவாளைபாயநீலமே
அண்டைகொண்டுகெண்டைமேயுமந்தணீரரங்கமே. 49

801 வெண்டிரைக்கருங்கடல்சிவந்துவேவமுன்னொர்நாள்
திண்டிறற்சிலைக்கைவாளிவிட்டவீரர்சேருமூர்
எண்டிசைக்கணங்களுமிறைஞ்சியாடுதீர்த்தநீர்
வண்டிரைத்தசோலைவேலிமன்னுசீரரங்கமே. 50

802 சரங்களைத்துரந்துவில்வளைத்திலங்கைமன்னவன்
சிரங்கள்பத்தறுத்துதிர்த்தசெல்வர்மன்னுபொன்னிடம்
பரந்துபொன்னிரந்துநுந்திவந்தலைக்கும்வார்புன
லரங்கமென்பர்நான்முகத்தயன்பணிந்தகோயிலே. 51

803 பொற்றையுற்றமுற்றல்யானைபோரெதிர்ந்துவந்ததைப்
பற்றியுற்றுமற்றதன்மருப்பொசித்தபாகனூர்

சிற்றெயிற்றுமுற்றன்மூங்கில்மூன்றுதண்டரொன்றினர்
அற்றபற்றர்சுற்றிவாழுமந்தணீரரங்கமே. 52

804 மோடியோடிலச்சையாயசாபமெய்திமுக்கணான்
கூடுசேனைமக்களோடுகொண்டுமண்டிவெஞ்சமத்
தோடவாணனாயிரங்கரங்கழித்தவாதிமால்
பீடுகோயில்கூடுநீரரங்கமென்றபேரதே. 53

805 இலைத்தலைச்சரந்துரந்திலங்கைகட்டழித்தவன்
மலைத்தலைப்பிறந்திழிந்துவந்துநுந்துசந்தனங்
குலைத்தலைத்திறுத்தெறிந்தகுங்குமக்குழம்பினொ
டலைத்தொழுகுகாவிரியரங்கமேயவண்ணலே. 54

806 மன்னுமாமலர்க்கிழத்திவையமங்கைமைந்தனாய்ப்
பின்னுமாயர்பின்னைதோள்மணம்புணர்ந்ததன்றியும்
உன்னபாதமென்னசிந்தைமன்னவைத்துநல்கினாய்
பொன்னிசூழரங்கமேயபுண்டரீகனல்லையே. 55

807 இலங்கைமன்னனைந்தொடைந்துபைந்தலைநிலத்துகக்
கலங்கவன்றுசென்றுகொன்றுவென்றிகொண்டவீரனே
விலங்குநூலர்வேதநாவர்நீதியானகேள்வியார்
வலங்கொளக்குடந்தையுட்கிடந்தமாலுமல்லையே. 56

808 சங்குதங்குமுன்கைநங்கைகொங்கைதங்கலுற்றவன்
அங்கமங்கவன்றுசென்றடர்த்தெறிந்தவாழியான்
கொங்குதங்குவார்குழல்மடந்தைமார்குடைந்தநீர்
பொங்குதண்குடந்தையுட்கிடந்தபுண்டரீகனே. 57

809 மரங்கெடநடந்தடர்த்துமத்தயானைமத்தகத்
துரங்கெடப்புடைத்தொர்கொம்பொசித்துகந்தவுத்தமா
துரங்கம்வாய்பிளந்துமண்ணளந்தபாதவேதியர்
வரங்கொளக்குடந்தையுட்கிடந்தமாலுமல்லையே. 58

810 சாலிவேலிதண்வயல்தடங்கிடங்குபூம்பொழில்
கோலமாடநீடுதண்குடந்தைமேயகோவலா
காலநேமிவக்கரன்கரன்முரன்சிரம்மவை
காலனோடுகூடவிற்குனித்தவிற்கைவீரனே. 59

811 செழுங்கொழும்பெரும்பனிபொழிந்திடவுயர்ந்தவேய்
விழுந்துலர்ந்தெழுந்துவிண்புடைக்கும்வேங்கடத்துநின்
றெழுந்திருந்துதேன்பொருந்துபூம்பொழிற்றழைக்கொழுஞ்
செழுந்தடங்குடந்தையுட்கிடந்தமாலுமல்லையே. 60

812 நடந்தகால்கள்நொந்தவோநடுங்கஞாலமேனமா
யிடந்தமெய்குலுங்கவோவிலங்குமால்வரைச்சுரங்
கடந்தகால்பரந்தகாவிரிக்கரைக்குடந்தையுட்
கிடந்தவாறெழுந்திருந்துபேசுவாழிகேசனே. 61

813 கரண்டமாடுபொய்கையுட்கரும்பனைப்பெரும்பழம்
புரண்டுவீழவாளைபாய்குறுங்குடிநெடுந்தகாய்
திரண்டதோளிரணியன்சினங்கொளாகமொன்றையு
மிரண்டுகூறுசெய்துகந்தசிங்கமென்பதுன்னையே. 62

814 நன்றிருந்துயோகநீதிநண்ணுவார்கள்சிந்தையுட்
சென்றிருந்துதீவினைகள்தீர்த்ததேவதேவனே
குன்றிருந்தமாடநீடுபாடகத்துமூரகத்தும்
நின்றிருந்துவெஃகணைக்கிடந்ததென்னநீர்மையே. 63

815 நின்றதெந்தையூரகத்திருந்ததெந்தைபாடகத்
தன்றுவெஃகணைக்கிடந்ததென்னிலாதமுன்னெலாம்
அன்றுநான்பிறந்திலேன்பிறந்தபின்மறந்திலேன்
நின்றதும்மிருந்ததுங்கிடந்ததும்மென்னெஞ்சுளே. 64

816 நிற்பதும்மோர்வெற்பகத்திருப்புவிண்கிடப்பதும்
நற்பெருந்திரைக்கடலுள்நானிலாதமுன்னெலா
மற்புதன்னநந்தசய்யனாதிபூதன்மாதவன்
நிற்பதும்மிருப்பதுங்கிடப்பதும்மென்னெஞ்சுளே. 65

817 இன்றுசாதனின்றுசாதலன்றியாரும்வையகத்
தொன்றிநின்றுவாழ்தலின்மைகண்டுநீசரென்கொலோ
அன்றுபாரளந்தபாதபோதையொன்றிவானின்மேற்
சென்றுசென்றுதேவராயிருக்கிலாதவண்ணமே. 66

818 சண்டமண்டலத்தினூடுசென்றுவீடுபெற்றுமேல்
கண்டுவீடிலாதகாதலின்பநாளுமெய்துவீர்

புண்டரீகபாதபுண்யகீர்த்திநுஞ்செவிமடுத்
துண்டுநும்முறுவினைத்துயருணீங்கியுய்ம்மினோ. 67

819 முத்திறத்துவாணியத்திரண்டிலொன்றும்நீசர்கள்
மத்தராய்மயங்குகின்றதிட்டதில்லிறந்துபோந்
தெத்திறத்துமுய்வதோருபாயமில்லையுய்க்குறில்
தொத்திறுத்ததண்டுழாய்நன்மாலைவாழ்த்திவாழ்மினோ. 68

820 காணிலும்முருப்பொலார்செவிக்கினாதகீர்த்தியார்
பேணிலும்வரந்தரமிடுக்கிலாததேவரை
ஆணமென்றடைந்துவாழுமாதர்காளெம்மாதிபாற்
பேணிநும்பிறப்பெனும்பிணக்கறுக்ககிற்றிரே. 69

821 குந்தமோடுசூலம்வேல்கள்தோமரங்கள்தண்டுவாள்
பந்தமானதேவர்கள்பரந்துவானகம்முற
வந்தவாணனீரைஞ்ஞூறுதோள்களைத்துணித்தநாள்
அந்தவந்தவாகுலமமரரேயறிவரே. 70

822 வண்டுலாவுகோதைமாதர்காரணத்தினால்வெகுண்
டிண்டவாணனீரைஞ்ஞூறுதோள்களைத்துணித்தநாள்
முண்டனீறன்மக்கள்வெப்புமோடியங்கியோடிடக்
கண்டுநாணிவாணனுக்கிரங்கினானெம்மாயனே. 71

823 போதின்மங்கைபூதலக்கிழத்திதேவியன்றியும்
போதுதங்குநான்முகன்மகனவன்மகன்சொலில்
மாதுதங்குகூறனேறதூர்தியென்றுவேதநூ
லோதுகின்றதுண்மையல்லதில்லைமற்றுரைக்கிலே. 72

824 மரம்பொதச்சரந்துரந்துவாலிவீழமுன்னோர்நாள்
உரம்பொதச்சரந்துரந்தவும்பராளியெம்பிரான்
வரங்குறிப்பில்வைத்தவர்க்கலாதுவானமாளிலும்
நிரம்புநீடுபோகமெத்திறத்தும்யார்க்குமில்லையே. 73

825 அறிந்தறிந்துவாமனனடியிணைவணங்கினாற்
செறிந்தெழுந்தஞானமோடுசெல்வமுஞ்சிறந்திடும்
மறிந்தெழுந்ததெண்டிரையுண்மன்னுமாலைவாழ்த்தினாற்
பறிந்தெழுந்துதீவினைகள்பற்றறுதல்பான்மையே. 74

826 ஒன்றிநின்றுநற்றவஞ்செய்தூழியூழிதோறெலாம்
நின்றுநின்றவன்குணங்களுள்ளியுள்ளந்தூயராய்ச்
சென்றுசென்றுதேவதேவரும்பரும்பரும்பராய்
அன்றியெங்கள்செங்கண்மாலையாவர்காணவல்லரே. 75

827 புன்புலவழியடைத்தரக்கிலச்சினைசெய்து
நன்புலவழிதிறந்துஞானநற்சுடர்கொளீஇ
என்பிலெள்கிநெஞ்சுருகியுள்கனிந்தெழுந்ததோ
ரன்பிலன்றியாழியானையாவர்காணவல்லரே. 76

828 எட்டுமெட்டுமெட்டுமாயோரேழுமேழுமேழுமாய்
எட்டுமூன்றுமொன்றுமாகிநின்றவாதிதேவனை
எட்டினாயபேதமோடிறைஞ்சிநின்றவன்பெயர்
எட்டெழுத்துமோதுவார்கள்வல்லர்வானமாளவே. 77

829 சோர்விலாதகாதலாற்றொடக்கறாமனத்தராய்
நீரராவணைக்கிடந்தநின்மலனலங்கழல்
ஆர்வமோடிறைஞ்சிநின்றவன்பெயரெட்டெழுத்தும்
வாரமாகவோதுவார்கள்வல்லர்வானமாளவே. 78

830 பத்தினோடுபத்துமாயோரேழினோடோரொன்பதாய்ப்
பத்தினான்றிசைக்கணின்றநாடுபெற்றநன்மையாய்ப்
பத்தினாயதோற்றமோடோராற்றன்மிக்கவாதிபாற்
பத்தராமவர்க்கலாதுமுத்திமுற்றலாகுமே. 79

831 வாசியாகிநேசமின்றிவந்தெதிர்ந்ததேனுகன்
நாசமாகிநாளுலப்பநன்மைசேர்பனங்கனிக்கு
வீசிமேனிமிர்ந்ததோளிலில்லையாக்கினாய்கழற்
காசையாமவர்க்கலாலமரராகலாகுமே. 80

832 கடைந்தபாற்கடற்கிடந்துகாலநேமியைக்கடிந்
துடைந்தவாலிதன்றனக்குதவவந்திராமனாய்
மிடைந்தவேழ்மரங்களுமடங்கவெய்துவேங்கடம்
அடைந்தமாலபாதமேயடைந்துநாளுமுய்ம்மினோ. 81

833 எத்திறத்துமொத்துநின்றுயர்ந்துயர்ந்தபெற்றியோய்
முத்திறத்துமூரிநீரராவணைத்துயின்றநின்

பத்தூறுத்தசிந்தையோடுநின்றுபாசம்விட்டவர்க்
கெத்திறத்துமின்பமிங்குமங்குமெங்குமாகுமே. 82

834 மட்டுலாவுதண்டுழாயலங்கலாய்புலன்கழல்
விட்டுவீள்விலாதபோகம்விண்ணினண்ணியேறினு
மெட்டினோடிரண்டெனுங்கயிற்றினால்மனந்தனைக்
கட்டிவீடிலாதுவைத்தகாதலின்பமாகுமே. 83

835 பின்பிறக்கவைத்தனன்கொலன்றிநின்றுதன்கழற்
கன்புறைக்கவைத்தநாளறிந்தனன்கொலாழியான்
தன்திறத்தோரன்பிலாவறிவிலாதநாயினேன்
என்திறத்திலென்கொலெம்பிரான்குறிப்பில்வைத்ததே.

836 நச்சராவணைக்கிடந்தநாதபாதபோதினில்
வைத்தசிந்தைவாங்குவித்துநீங்குவிக்கநீயினம்
மெய்த்தன்வல்லையாதலாலறிந்தனன்நின்மாயமே
உய்த்துநின்மயக்கினில்மயக்கலென்னைமாயனே. 85

837 சாடுசாடுபாதனேசலங்கலந்தபொய்கைவா
யாடராவின்வன்பிடர்நடம்பயின்றநாதனே
கோடுநீடுகையசெய்யபாதம்நாளுமுள்ளினால்
வீடனாகமெய்செயாதவண்ணமென்கொல்கண்ணனே. 86

838 நெற்றிபெற்றகண்ணன்விண்ணினாதனோடுபோதின்மேல்
நற்றவத்துநாதனோடுமற்றுமுள்ளவானவர்
கற்றபெற்றியால்வணங்குபாதநாதவேதநின்
பற்றலாலோர்பற்றுமற்றதுற்றிலேனுரைக்கிலே. 87

839 வெள்ளைவேலைவெற்புநாட்டிவெள்ளெயிற்றராவளா
யள்ளலாக்கடைந்தவன்றருவரைக்கொராமையா
யுள்ளநோய்கள்தீர்மருந்துவானவர்க்களித்தவெம்
வள்ளலாரையன்றிமற்றோர்தெய்வம்நான்மதிப்பனே. 88

840 பார்மிகுத்தபாரமுன்னொழிச்சுவானருச்சுனன்
தேர்மிகுத்துமாயமாக்கிநின்றுகொன்றுவென்றிசேர்
மாரதர்க்குவான்கொடுத்துவையமைவர்பாலதாம்
சீர்மிகுத்தநின்னலாலோர்தெய்வம்நான்மதிப்பனே. 89

841 குலங்களாயவீரிரண்டிலொன்றிலும்பிறந்திலேன்
நலங்களாயநற்கலைகள்நாவிலுந்நவின்றிலேன்
புலன்களைந்தும்வென்றிலேன்பொறியிலேன்புனிதநின்
இலங்குபாதமன்றிமற்றோர்பற்றிலேனெம்மீசனே. 90

842 பண்ணுலாவுமென்மொழிப்படைத்தடங்கணாள்பொருட்
டெண்ணிலாவரக்கரைநெருப்பினால்நெருக்கினாய்
கண்ணலாலோர்கண்ணிலேன்கலந்தசுற்றம்மற்றிலே
னெண்ணிலாதமாயநின்னையென்னுள்நீக்கலென்றுமே. 91

843 விடைக்குலங்களேழடர்த்துவென்றிவேற்கண்மாதரார்
கடிக்கலந்ததோள்புணர்ந்தகாலியாயவேலைநீர்
படைத்தடைத்ததிற்கிடந்துமுன்கடைந்துநின்றனக்
கடைக்கலம்புகுந்தவென்னையஞ்சலென்னவேண்டுமே. 92

844 சுரும்பரங்குதண்டுழாய்துதைந்தலர்ந்தபாதமே
விரும்பிநின்றிறைஞ்சுவேற்கிரங்கரங்கவாணனே
கரும்பிருந்தகட்டியேகடற்கிடந்தகண்ணனே
இரும்பரங்கவெஞ்சரந்துரந்தவில்லிராமனே. 93

845 ஊனின்மேயவாவிநீயுறக்கமோடுணர்ச்சிநீ
ஆனின்மேயவைந்துநீயவற்றுணின்றதூய்மைநீ
வானினோடுமண்ணுநீவளங்கடற்பயனுநீ
யானுநீயதன்றியெம்பிரானுநீயிராமனே. 94

846 அடக்கரும்புலன்களைந்தடக்கியாசையாமவை
தொடக்கறுத்துவந்துநின்றொழிற்கணின்றவென்னைநீ
விடக்கருதிமெய்செயாதுமிக்கோராசையாக்கிலுங்
கடற்கிடந்தநின்னலாலோர்கண்ணிலேனெம்மண்ணலே. 95

847 வரம்பிலாதமாயமாயவையமேழுமெய்ம்மையே
வரம்பிலூழியேத்திலும்வரம்பிலாதகீர்த்தியாய்
வரம்பிலாதபல்பிறப்பறுத்துவந்துநின்கழல்
பொருந்துமாதிருந்தநீவரஞ்செய்புண்டரீகனே. 96

848 வெய்யவாழிசங்குதண்டுவில்லும்வாளுமேந்துசீர்க்
கையசெய்யபோதின்மாதுசேருமார்பநாதனே

ஐயிலாயவாக்கைநோயறுத்துவந்துநின்னடைந்-
துய்வதோருபாயம்நீயெனக்குநல்கவேண்டுமே. 97

849 மறந்துறந்துவஞ்சமாற்றியைம்புலன்களாசையுந்
துறந்துநின்கணாசையேதொடர்ந்துநின்றநாயினேன்
பிறந்திறந்துபேரிடர்ச்சுழிக்கணின்றுநீங்குமா
மறந்திடாதுமற்றெனக்குமாயநல்கவேண்டுமே. 98

850 காட்டிநான்செய்வல்வினைப்பயன்றனால்மனந்தனை
நாட்டிவைத்துநல்லவல்லசெய்யவெண்ணினாரெனக்
கேட்டதன்றியென்னதாவிபின்னைகேள்வநின்னொடும்
பூட்டிவைத்தவென்னைநின்னுள்நீக்கல்பூவைவண்ணனே. 99

851 பிறப்பினோடுபேரிடர்ச்சுழிக்கணின்றுநீங்குமஃ
திறப்பவைத்தஞானநீசரைக்கரைக்கொடேற்றுமா
பெறற்கரியநின்னபாதபத்தியானபாசனம்
பெறற்கரியமாயனேயெனக்குநல்கவேண்டுமே. 100

852 இரந்துரைப்பதுண்டுவாழியேமநீர்நிறத்தமா
வரந்தருந்திருக்குறிப்பில்வைத்ததாகின்மன்னுசீர்ப்
பரந்தசிந்தையொன்றிநின்றுநின்னபாதபங்கயம்
நிரந்தரம்நினைப்பதாகநீநினைக்கவேண்டுமே. 101

853 விள்விலாதகாதலால்விளங்குபாதபோதில்வைத்
துள்ளுவேனதூனநோயொழிக்குமாதெழிக்குநீர்ப்
பள்ளிமாயபன்றியாயவென்றிவீரகுன்றினால்
துள்ளுநீர்வரம்புசெய்ததோன்றலொன்றுசொல்லிடே. 102

854 திருக்கலந்துசேருமார்பதேவதேவதேவனே
இருக்கலந்தவேதநீதியாகிநின்றநின்மலா
கருக்கலந்தகாளமேகமேனியாயநின்பெயர்
உருக்கலந்தொழிவிலாதுரைக்குமாறுரைசெயே. 103

855 கடுங்கவந்தன்வக்கரன்கரன்முரன்சிரம்மவை
இடந்துகூறுசெய்தபல்படைத்தடக்கைமாயனே
கிடந்திருந்துநின்றியங்குபோதுநின்னபொற்கழல்
தொடர்ந்துமீள்விலாததோர்தொடர்ச்சிநல்கவேண்டுமே.

856 மண்ணையுண்டுமிழ்ந்துபின்னிரந்துகொண்டளந்தமண்
கண்ணுளல்லதில்லையென்றுவென்றகாலமாயினாய்
பண்ணைவென்றவின்சொல்மங்கைகொங்கைதங்குபங்கயக்
கண்ணநின்னவண்ணமல்லதில்லையெண்ணும்வண்ணமே.

857 கறுத்தெதிர்ந்தகாலநேமிகாலனோடுகூடவன்
றறுத்தவாழிசங்குதண்டுவில்லும்வாளுமேந்தினாய்
தொறுக்கலந்தவூனமஃதொழிக்கவன்றுகுன்றமுன்
பொறுத்தநின்புகழ்க்கலாலோர்நேசமில்லைநெஞ்சமே. 106

858 காய்சினத்தகாசிமன்னன்வக்கரன்பவுண்டிரன்
மாசினத்தமாலிமான்சுமாலிகேசிதேனுகன்
நாசமுற்றுவீழநாள்கவர்ந்தநின்கழற்கலால்
நேசபாசமெத்திறத்தும்வைத்திடேனெம்மீசனே. 107

859 கேடில்சீர்வரத்தனைக்கெடும்வரத்தயனரன்
நாடினோடுநாட்டமாயிரத்தனாடுநண்ணினும்
வீடதானபோகமெய்திவீற்றிருந்தபோதிலும்
கூடுமாசையல்லதொன்றுகொள்வனோகுறிப்பிலே. 108

860 சுருக்குவாரையின்றியேசுருங்கினாய்சுருங்கியும்
பெருக்குவாரையின்றியேபெருக்கமெய்துபெற்றியோய்
செருக்குவார்கள்தீக்குணங்கள்தீர்த்ததேவதேவனென்
றிருக்குவாய்முனிக்கணங்களேத்தயானுமேத்தினேன். 109

861 தூயனாயுமன்றியுஞ்சுரும்புலாவுதண்டுழாய்
